பஹுரூப் காந்தி

(பல ரூபங்களில் காந்தி)



தமிழாக்கம்

எம். ஆர். ராஜகோபாலன்

பஹுரூப் காந்தி

அனு பந்தோபாத்யாயா

தமிழாக்கம் :

எம். ஆர். ராஜகோபாலன்



ஜவஹர்லால் நேருஜியின் முன்னுரையுடன்

LSS

லெட்சுமி சேவா சங்கம், காந்திகிராமம்-624 302

தமிழ் நாடு

Title : பஹுரூப் காந்தி (Bahuroop Gandhi)
— a Tamil translation of Ms. Anu Bandyopadhyaya's English book 'Bahuroop Gandhi'

Translation by : M. R. Rajagopalan
Secretary
Gandhigram Trust
Gandhigram, Tamil Nadu

Year of Publication : 1999
No. of Copies : 2000

Published by : Lakshmi Seva Sangham, Gandhigram Press
— with the permession of the author
Anu bandyopadhyaya

Price : Rs. 30/-

Printed at : Lakshmi Seva Sangham, Gandhigram Press
Gandhigram - 624 302, Tamil Nadu
Phone : 0451 - 453347

பஹுரூப் காந்தி

பிரதம மந்திரியின் அலுவலகம்,
புது டில்லி.

முன்னுரை

இப் புத்தகம் சிறுவர்களுக்காக எழுதப்பட்டது. இருப்பினும் பெரியவர்களும் இப்புத்தகத்தைப் படித்துப் பயன் பெறலாம்.

காந்திஜி இப்போது புகழுடம்பு எய்திவிட்டார். காந்திஜியைக் கண்ணால் பார்த்திராதவர்கள், குறிப்பாக இளைய சமுதாயத்தினர் காந்திஜியை அரும்பெரும் செயல்களைப் புரிந்த மாமனிதர் என்றே எண்ணுகின்றனர். அவருடைய வாழ்விலும் ஒரு சராசரி மனிதனின் வாழ்வில் நிகழக்கூடிய சம்பவங்கள் நிகழ்ந்தன என்பதை எல்லோரும் இப்புத்தகத்தின் வாயிலாக அறியலாம்.

பலதரப்பட்ட எத்தனை விஷயங்களில் அவருக்கு ஆர்வம் இருந்தது. அதுவும் அளவுக்கப்பாற்பட்ட ஆர்வம் இருந்தது என்பதை இப்புத்தகம் எடுத்துக் காட்டுகிறது. எந்த விஷயத்திலும் காந்திஜி நுனிப்புல் மேயவில்லை. நாம் எந்த விஷயங்களை அற்ப விஷயங்கள், சாதாரண விஷயங்கள் என்று ஒதுக்கி விடுகிறோமோ, அவற்றில் அவர் முழுமனதுடன் ஈடுபாடு கொண்டிருந்தது அவரது மனிதநேயத்தைக் காட்டுகிறது. அதுவே காந்திஜியின் குணாதிசயம்.

காந்திஜி வெறும் அரசியல்வாதியாகவும் பொது வாழ்வில் ஈடுபட்ட மனிதராகவும் மட்டும் இருக்கவில்லை. பல்வேறு பணிகளில் எவ்வாறு ஈடுபட்டிருந்தார் என்பதை இப்புத்தகம் நமக்கு எடுத்துக் கூறுகிறது. இப்புத்தகத்தைப் படிப்பதன் மூலம் நாம் காந்திஜியின் மனப்பாங்கை நன்கு புரிந்து கொள்ள இயலும்.

புது டில்லி
மார்ச் 10, 1964.

ஜவஹர்லால் நேரு

நூலாசிரியரின் முன்னுரை

இப்புத்தகத்தின் கையெழுத்துப் பிரதி 1949ம் ஆண்டிலிருந்து என்வசம் இருந்து வந்துள்ளது. டி. ஜி. டெண்டுல்கர் அவர்களின் 'மகாத்மா' புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியை 1948ம் ஆண்டில் நான் படித்தேன் அப்போதுதான் நான் வங்காளத்தில் கஸ்தூர்பா மையத்தில் எனது பணியை முடித்துவிட்டு வந்திருந்தேன். நான் ஒரு கிராமத்தில் பணியாற்றினேன். என்னுடன் அங்கிருந்த பெண் பயிற்சியாளர்களுக்கு காந்திஜியைப் பற்றி எதுவுமே தெரிந்திருக்கவில்லை. அவர்கள் தினமும் ராட்டையில் நூல் நூற்றார்கள். காந்தி ஜெயந்தியையும் கொண்டாடினார்கள். சிலர் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைக்கும் சென்றிருந்தனர். இருப்பினும், காந்திஜி நம் நாட்டிற்காக என்னவெல்லாம் செய்தார் என்பது பற்றி அவர்கள் அறியவில்லை. என் கணிப்பு தவறாக இருக்கலாம். ஆனால், என் உணர்வு அப்படித்தான் இருந்தது.

இப்போதும் தினமும் நான் வாழ்க்கையில் சந்திக்கும் பல மனிதர்களைப் பற்றி அவ்வாறே உணர்கிறேன். அவர்களில் சிலர் படித்தவர்கள். உழைப்பை வெறுப்பவர்கள். நானே கூட உடல் உழைப்பை உயர்வாக எண்ணவில்லை. ஆனால், உடல் உழைப்பு எவ்வளவு கடினமானது என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் தினமும் எனது வேலைக்காரர்களுடன் சேர்ந்து நானும் சிறிதளவு உடலுழைப்பை மேற்கொள்கிறேன். கொஞ்சம் காசு செலவழிப்பதன் மூலம் பிறரது உழைப்பை நமக்காக பயன்படுத்திக் கொள்ளும் உரிமை நமக்குக் கிடைத்துவிடும் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ள நான் விரும்பவில்லை.

எத்தனையோ பேர்கள் குறிப்பிட்ட தொழில்களைத் தங்களது பிழைப்பிற்காகச் செய்து வருகின்றனர். காந்திஜியோ அதே தொழில்களை மனம் விரும்பி ஆர்வத்துடன் செய்து வந்தார் என்பதை இப்புத்தகத்தின் வாயிலாக மக்களுக்கு உணர்த்த நான் விரும்புகிறேன். சில சம்பவங்கள் வேண்டும் என்றே பலமுறைகள் எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. காந்திஜியைக் குருட்டுத்தனமாக ஆராதனை செய்பவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நான் விரும்பவில்லை. ஆனால், இன்றைய இளைஞர்களுக்கு காந்திஜி தேசபிதா மட்டும் அல்ல வேறுபல உருவங்களும் அவருக்கு இருந்தன என்பதை உணர்த்துவது எனது நோக்கம் ஆகும்.

இப்புத்தகத்தை இப்படி எழுதுவதற்கான எண்ணம் என்னுடையதே. நாட்டின் இளைஞர்களுக்காக இதை எழுதியுள்ளேன். இதிலுள்ள கருத்துக்கள் அனைத்துமே டி. ஜி. டெண்டுல்கர் அவர்களின் 'மகாத்மா' புத்தகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை. இந்தச் சிறுபுத்தகத்தைக் கொண்டுவருவதில் நான் அவருக்கு எவ்வளவு தூரம் கடன்பட்டிருக்கிறேன் என்பதை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. திரு. என். ஜி. ஜோக் அவர்கள் கையெழுத்துப் பிரதியை கவனத்துடன் படித்துத் திருத்தம் செய்து கொடுத்துள்ளார்கள். இந்த நூலில் உள்ள இருபது கட்டுரைகளை நேஷனல் ஹெரால்ட் பத்திரிகையில் தொடர் கட்டுரைகளாக வெளியிட்டதற்காக திரு. சலபதிராவ் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்புத்தகத்திற்குப் படங்களை வரைந்து கொடுத்த திரு. ஆர். கே. லக்ஷ்மன் அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகிறது.

இப்புத்தகத்திற்கு முன்னுரை அளித்த ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றி. இப்புத்தகத்தைப் படிக்கும் ஆயிரம் இளைஞர்களில் ஒருவராவது காந்திஜி செய்த ஏதாவது ஒரு பணியை மேற்கொண்டு செய்தால் அது எனக்கு மிக்க மகிழ்ச்சி அளிக்கும்.

— அனு பந்தோபாத்யாயா

அணிந்துரை

காந்தியடிகள் ஒரு சத்தியாகிரகி, சுதந்திரப் போராட்டத் தளபதி, சிறைவாசி என்பது உலகப் பிரசித்தம். அவர் ஒரு வக்கீல், நாவிதர், ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர், அச்சிடுபவர், செருப்புத் தைப்பவர் என்பதை அவரது தென்னாப்பிரிக்க வாழ்க்கை வெளிப்படுத்துகிறது. அவர் ஒரு நூற்பவர், நெசவாளி, விவசாயி, துப்புரவுத் தொழிலாளி, இயற்கை மருத்துவர், செவிலியர் இன்னோரன்ன பல அம்சங்களை அவரது இந்திய வாழ்க்கை வரலாறு வருணிக்கிறது. ஆனால், அவர் ஒரு கொள்ளைக்காரர், பிச்சைக்காரர், பாம்பாட்டி, ஏலம் விடுபவர், அர்ச்சகர், மோஸ்தர் முன்னோடி போன்ற பல அரிய அபூர்வ செய்திகளை இந்நூல் அழகுற சுவைபட தக்க ஆதாரங்களுடன் வருணித்து வாசகர்களை வியப்புறச் செய்கிறது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்நூலுக்கு அளித்துள்ள தமது முன்னுரையில், "நாம் எந்த விஷயங்களை அற்ப விஷயங்கள், சாதாரண விஷயங்கள் என்று ஒதுக்கிவிடுகிறோமோ, அவற்றில் அவர் முழுமனதுடன் ஈடுபாடு கொண்டிருந்தது அவரது மனித நேயத்தைக் காட்டுகிறது. அதுவே, காந்திஜியின் அற்புதமான குணாதிசயம்" என்று கூறியுள்ளதற்கு இந்நூல் கட்டியம் கூறுகிறது.

பரிணாம வளர்ச்சியில் சத்தியம் என்ற தெய்வீகத்தை நோக்கி அன்பு வழியில் சின்னது, பெரியது என்ற பாகுபாடின்றி மனித வாழ்க்கையில் எதிர்ப்படும் அனைத்து அம்சங்களிலும் முழு சிரத்தையோடுகூடிய கர்மயோகியாக, நம் கண்முன் அற்புத முன்னோடி அவதாரமாக காந்தியடிகள் வாழ்ந்து காட்டியுள்ளார் என்பதை சுவைமிக்க ஒரு புதினம்போல் இந்நூல் நமது உள்ளத்தை உயர்த்துகிறது என்று உறுதிபடக் கூறலாம்.

இதனை இனிய எளிய உரைநடையில் இலக்கியச் சுவையுடன் அளித்துள்ள சகோதரர் திரு எம். ஆர். ராஜகோபாலன் அவர்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகம் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறது. காந்திய சிந்தனை பதிந்த கருத்துச் சுவையுள்ள இலக்கியப் படைப்பில் தளராத ஆர்வமும் சிரத்தையுமுள்ள அவரது காந்திய இலக்கியப் பணி மென்மேலும் சிறக்க எல்லாம் வல்ல அன்னை பராசக்தி அருள்பாலிக்க வேணுமாய்ப் பிரார்த்தித்து எனது பணிவான பாராட்டைப் பதிவு செய்கிறேன்.

அன்புடன்

டாக்டர் வி. செல்வராஜ்

5–1–1999

தலைவர்,

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி,

மதுரை 625 020

மொழிபெயர்ப்பாளரின் குறிப்பு

டில்லிவாசியாகிய எனது நண்பர் திரு. அரவிந்த் குப்தா அவர்களது முழுநேரப் பணி பல்வேறு துறைகளில் புத்தகங்களைப் படிப்பது, கட்டுரைகள், புத்தகங்கள் எழுதுவது மற்றும் மொழி பெயர்ப்பதுதான். அவர், தான் படித்து ரசித்த புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளின் பிரதிகளை கடந்த 12 ஆண்டுகளாக எனக்கு அனுப்பி வருகிறார். அவ்வாறு அவர் அனுப்பிய நூல்களில் ஒன்றுதான் 'பஹுரூப் காந்தி' என்ற இந்த ஆங்கில நூலும்.

காந்திஜியின் வாழ்க்கையை மாறுபட்ட கோணத்தில் படம் பிடித்துக்காட்டும் இந்த நூலை ஒரே மூச்சில் படித்து முடித்து விட்டேன். காரணம் நூல் அவ்வளவு சுவையாக இருந்ததுதான். உடனேயே இந்த நூலைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும் என்ற உந்துதலும் எனக்கு ஏற்பட்டது. ஆனால், ஒரு சந்தேகம் — வேறு யாராவது இந்த நூலை முன்னமே தமிழில் மொழி பெயர்த்திருந்தால் எனது மொழிபெயர்ப்பு தேவையற்றதாகி விடும். ஆகவே, காந்தியம் பற்றி நன்குணர்ந்த பல மூத்த நண்பர்களிடம் இந்த நூலைப் பற்றி விசாரித்தபோது அவர்கள் யாரும் இதைப் படித்ததில்லை என்பதும், தமிழில் இந்த நூல் வெளியாகி இருக்கக்கூடிய சாத்தியக் கூறு இல்லை என்பதும் உறுதியாயிற்று.

இந்த மொழிபெயர்ப்பை நான் செய்து முடிப்பதற்கும் வெளியிடுவதற்கும் ஊக்கம் கொடுத்தவர்கள் மற்றும் உதவியவர்களின் பட்டியல் நீளமானது. ஒரு சிலரது பெயர்களை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன். முதற்கண் இப்புத்தகத்தின் பிரதியை எனக்கு அனுப்பிய திரு. அரவிந்த் குப்தா, இரண்டாவதாக, நான் தமிழில் காந்திஜி பற்றி எழுதிய கட்டுரைகளையும், மொழி பெயர்ப்புகளையும் பாராட்டி என்னை ஊக்குவித்த திரு. செல்வராஜ் அண்ணாச்சி அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகிறது. தவிர, அவர் தனது கிராமராஜ்யம் இதழில் இந்த நூலைத் தொடராக வெளியிட்டு வருகிறார். அதற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் இந்த மொழிபெயர்ப்பு நூலுக்கு ஒரு அழகிய அணிந்துரையும் வழங்கியுள்ளார். அதற்கும் எனது நன்றி உரித்தாகிறது.

காந்திகிராம அறக்கட்டளையில் என்னுடன் பணியாற்றும் சக ஊழியர்களும் என்னை ஊக்குவித்துள்ளனர். எனது தமிழ்க் கையெழுத்தைப் படித்து அதைத் தட்டச்சில் வடித்துக் கொடுத்த திருமதி அமராவதி மற்றும் செல்வி கவிதாவுக்கு எனது நன்றி. இப்புத்தகத்தின் முதல் அச்சுப்படிகளைப் (காலி ப்ரூஃப்) படித்துத் திருத்தம் செய்து கொடுத்த அச்சக நிர்வாகி திரு. ஜோசப் அவர்களுக்கும், காந்திகிராம அச்சக ஊழியர்களுக்கும் இதன் அட்டையை வடிவமைத்துக் கொடுத்த திரு. பரதன் அவர்களுக்கும் எனது நன்றி.

பள்ளி கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களும், காந்திய நிறுவனங்களிலும் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிலும் பணிபுரிவோர்கள் இந்த நூலைப் படித்து பயன் பெறலாம்.

அன்புடன்

காந்திகிராம அறக்கட்டளை — **எம். ஆர். ராஜகோபாலன்**
காந்திகிராமம் — செயலாளர்

உள்ளே

1

காந்திஜி ஒரு உழைப்பாளி

நிறைய கேஸ் கட்டுகள் உள்ள அந்த வக்கீல் தனது வாடிக்கையாளர்களிடம், "வழக்காடிப், பணத்தையும் நேரத்தையும் வீணாக்காதீர்கள். கோர்ட்டுக்கு அப்பால் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு உடன்பாடு செய்து கொள்ளுங்கள்" என்று புத்திமதி சொன்னார். ஓய்வு நேரங்களில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய, பாரசீக, புத்த மதங்களைச் சார்ந்த நூல்களைப் படித்தார். சான்றோர்கள் எழுதிய வேறு சில புத்தகங்களையும் படித்தார். இப்படிப்பட்ட நூல்களைப் படித்து சிந்தித்தபின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மனிதனும் சிறிதளவாவது உடல் உழைப்பில் ஈடுபட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். மூளைக்கு வேலை கொடுத்தால் மட்டும் போதாது. படித்தவர்கள், படிக்காதவர்கள் மருத்துவர்கள், வக்கீல்கள், நாவிதர்கள், துப்புறவுத் தொழிலாளர்கள், எல்லோருடைய பணிகளுக்கும் சமஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார்.

தனது வாழ்க்கை முறையைப் படிப்படியாக மாற்றிக் கொண்ட அவர், தன்னால் இயன்ற பணிகளை எல்லாம் செய்யத் தொடங்கினார். ஒரு ஆசிரமத்தைத் துவங்கி அதில் தனது நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் சேர்ந்து எளிமையான ஒரு சமூக வாழ்க்கை வாழவேண்டும் என்று அவர் முடிவு செய்தார். அவருடைய ஐரோப்பிய நண்பர்களும் ஆசிரம வாழ்க்கையில் பங்கேற்க விருப்பம் தெரிவித்தனர். அவர்கள் எல்லோருமே கடும் உழைப்பாளிகளாகவும் சுயதேவைப் பூர்த்தி விவசாயிகளாகவும் மாறி நிலங்களை உழுது பயிர்களைப் பராமரித்தனர். கூலிவேலைக்கு என்று யாரையுமே வைத்துக்கொள்ளவில்லை. அந்தப் பண்ணையில், இந்துக்களும், முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும், பாரசீகர்களும், பிராமணர்களும், பிராமணர் அல்லாதவர்களும், உழைப்பாளிகளும், வக்கீல்களும், வெள்ளையர்களும், "கருப்பர்களும்" ஒரு பெரிய குடும்பத்தின் அங்கத்தினர்களாக வாழ்ந்தனர். எல்லோருக்கும் பொதுவாகத் தயாரிக்கப்பட்ட உணவை, ஒன்றாக ஒரே அறையில் அமர்ந்து உண்டனர். குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் மாதம் ரூ. 40 செலவுக்காக வழங்கப்பட்டது. பாரிஸ்டரின் (வக்கீலின்) மாத வருமானம் ரூ. 4000க்கும் அதிகமாக இருந்தும் கூட அவருக்கும் மாதச் செலவுக்கு ரூ. 40 தான் அனுமதிக்கப்பட்டது. ஒரு கால அட்டவணையைத் தயாரித்து அதில் நாள் ஒன்றுக்கு ஆறு மணி நேரம் மட்டுமே ஓய்வுக்கு இடம் ஒதுக்கி, ஒரு கடினமான வாழ்க்கை முறையைத் தனதாக்கிக் கொண்டார் அவர்.

பண்ணையில் சிறியவீடு ஒன்று கட்டப்பட்டபோது கூரை மீது ஏறிய முதல் நபர் அவர்தான். முரட்டுத் துணியில் தைக்கப்பட்ட நீலநிறத்தில், நிறையப் பைகளுடன் கூடிய ஒரு பெரிய சட்டையை அவர் அணிந்திருந்தார். அப்பைகளில் பல்வேறு அளவுகளில் சிறிதும் பெரிதுமான ஆணிகளும் 'ஸ்க்ருக்'களும் நிறைந்திருந்தன. ஒரு பையிலிருந்து ஒரு சுத்தியல் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. ஒரு சிறிய ரம்பமும் துளைபோடும் கருவியும் அவரது பெல்ட்டில் தொங்கின. ஒவ்வொரு நாளும் கடும் வெயிலில் அவர் சுத்தியல் மற்றும் ரம்பத்துடன் உழைத்து வந்தார்.

ஒரு நாள் சாப்பாட்டிற்குப்பின் ஒரு புத்தக அலமாரியைத் தயாரிக்கத் தொடங்கினார். ஏழு மணி நேர கடுமையான உழைப்பிற்குப்பின் அறையின் கூரையைத் தொடும் அளவிற்கு உயரமான புத்தக அலமாரி தயார் ஆகிவிட்டது. தெருப் பக்கத்திலிருந்து ஆசிரமம் வரையிலான பாதையை சரளைக்கல் பரப்பி அமைக்க அவர் விரும்பினார். அதற்கு நிறைய செலவாகுமே என்று யோசித்தார். தினமும் காலை நேரத்தில் உலாவச் சென்று திரும்பும் சமயங்களில் கொஞ்சம் கொஞ்சமாக கற்களைச் சேமிக்கத் தொடங்கினார். மற்ற ஆசிரமவாசிகளும் அவருடைய உதாரணத்தைப் பின்பற்றி கற்களைக் கொண்டு வந்து குவித்தனர். குறுகிய காலத்திற்குள்ளாகவே சரளைக் கற்களினாலான பாதை தயாராகிவிட்டது. இப்படித்தான் அவர் மற்றவர்களை உடல் உழைப்பில் ஈடுபடுத்தினார். ஆசிரமத்தில் இருந்த சிறுவர் சிறுமியரும் தோட்டவேலை, சமையல், துப்புறவுப் பணி, தச்சுவேலை, தோல்பொருள்கள் பணி மற்றும் அச்சுக் கோர்த்தல் ஆகிய பணிகளில் பங்காற்றினர்.

கட்டிடத் தொழிலாளர்களையும், செருப்புத் தைப்பவர்களையும், தச்சர்களையும், கொல்லர்களையும், நாவிதர்களையும் நாம் தாழ்ந்தவர்களாகக் கருதி வருவதினால்தான் நமக்கு இப்படி ஒரு இழிநிலை ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறிவந்தார். ''இப்படி அவர்களைத் தாழ்ந்தவர்களாக நடத்துவதன் மூலம் அவர்களது பணிகளின் சிறப்பையும், மேன்மையையும், கலாச்சாரத்தையும் அவமதித்து விட்டோம். தொழில் வல்லுநர்களைத் தாழ்ந்தவர்களாகவும், பேனா பிடித்தவர்களை உயர்ந்தவர்களாகவும் கருதி நம்மிடம் நாமே அடிமைத்தனத்தை வளர்த்துக் கொண்டுவிட்டோம்'' என்றும் அவர் கூறிவந்தார்.

அதிகாலையில் எழுந்ததும் அவர் செய்த முதல்பணி, திரிகையில் கோதுமை மாவு அரைத்ததுதான். பிறகு, உடையணிந்து ஐந்து மைல்களுக்கு அப்பால் இருந்த தனது அலுவலகத்திற்குக் கால்நடையாகச் சென்றார். அவர் தனது தலை முடியைத் தானே திருத்திக் கொண்டார். தனது துணிகளைத் தானே துவைத்து உலர்த்தி இஸ்திரி போட்டு வைப்பார். ஆப்பிரிக்க கனிமச் சுரங்கங்களில் பணியாற்றிய சிலர் கொடிய உயிர்க்கொல்லி மற்றும் தொற்று நோயான பிளேக் நோயினால் பீடிக்கப்பட்டிருந்தனர். இரவெல்லாம் கண்விழித்து பிளேக் நோயாளிகளை அவர் கவனித்து வந்தார். குஷ்ட நோயாளிகளின் காயங்களைக் கழுவி வந்தார். கழிப்பறைகளைச் சுத்தம் செய்வது பற்றி அவர் வெட்கப்படவில்லை. சோம்பல், பயம், வெறுப்பு ஆகிய குணங்களை அவரிடம் காண முடியாது. தனது பத்திரிகைக்கான கட்டுரைகளை எழுதி தாமே தட்டச்சு எந்திரத்தில் டைப் செய்து, அச்சகம் சென்று அச்சுக் கோர்த்து, சமயத்தில் அச்சடிப்பவருடனும் சேர்ந்து அச்சடித்தும் வந்தார் அவர்! புத்தகங்களை பைண்டிங் செய்வது அவருக்கு கைவந்த கலை. கற்பனைத் திறன் படைத்த அந்தக் கைகள் ஆசிரியர் பக்கத்தை ஆர்வம் தூண்டும் விதத்தில் எழுதும்; கடிதங்களும் எழுதும்; ராட்டையில் நூல் நூற்கும்; தறியில் துணியை நெய்யும்; புதிய உணவுகளைத் தயாரிக்கும்; ஊசி நூல் கொண்டு துணிகளைத் தைக்கும்; பழங்களையும் காய்கறிகளையும் பயிரிட்டு வளர்க்கும், வயலில் ஏர் உழும்; கிணற்றிலிருந்து தண்ணீர் பாய்ச்சும்; ரம்பத்தைக் கையில் பிடித்து மர வேலைகள் செய்யும்; வண்டியிலிருந்து பாரத்தை இறக்கி வைக்கும்.

சிறையில் இருந்தபோது கடினமான தரையைக் கூட பிக்காசியைக் கொண்டு அவர் தோண்டி இருக்கிறார். ஒரு நாளில் ஒன்பது மணி நேரம் வரை கிழிந்த போர்வைகளைத் தைப்பார். சோர்வு வரும் போதெல்லாம், தனக்குப் பலத்தைத் தரும்படி அவர் கடவுளை வேண்டுவார். தனக்குத் தரப்பட்ட பணியைத் தன்னால் செய்ய இயலாமல் போகும் என்பது அவரால் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று.

தனது வாழ்வின் மேலான நிலையில் இருந்த சமயத்தில், கடைகளில் ஏதாவது சாமான்கள் வாங்குவதற்காக தினமும் 40 மைல்கள் அவர் நடந்திருக்கிறார். ஒரு தடவை 55 மைல்களும் அவர் நடந்துள்ளார். அவர் சுயசேவை செய்து வந்த காலத்தில்

காயமுற்ற போராளிகளை 30, 40 மைல்கள் தூரத்திற்கு ஸ்ட்ரெச்சரில் சுமந்து சென்றிருக்கிறார். தனது 78வது வயதில்கூட வாரக் கணக்கில் தினந்தோறும் 18 மணி நேரத்திற்கு, சில நாட்களில் 21 மணி நேரத்திற்கும் கூட அவர் பணிசெய்து வந்தார். அந்த வயதில் உடல் உழைப்பு அவருக்கு சற்று சிரமமாக இருந்தது. இருப்பினும் நூற்புப் பணியை அவர் தொடர்ந்து வந்தார். குளிர் காலத்தில் கூட பனி படர்ந்த கிராமச் சாலைகளில் வெறுங் காலுடன் மூன்று முதல் ஐந்து மைல்கள் வரை அவர் நடப்பது உண்டு. பணிகளைச் செய்வதில் அவருக்கிருந்த வியக்கத்தகு ஈடுபாடு மற்றும் திறமையைப் பாராட்டிய தென் ஆப்பிரிக்க நண்பர்கள் அவருக்குக் "கர்மவீரர்" என்ற பட்டத்தை அளித்தனர்.

கர்மவீரர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி 1869ம் ஆண்டு அக்டோபர் 2ம் தேதி பிறந்தார்.

இந்தியாவின் பொருளாதார, ஆன்மிக முன்னேற்றத்திற்குக் கையினால் நூற்பதும், கையினால் நெய்வதும் பெரிய உதவியை அளிக்கப் போகின்றன என்பதில் மாத்திரம் எனக்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை. விவசாயத்திற்குத் துணையாக இருக்கக் கூடிய சுலபமான கைத்தொழில் ஒன்று கோடிக்கணக்கான மக்களுக்கு இருந்தாக வேண்டும். பல்லாண்டுகளுக்கு முன்னால் நூல் நூற்பது கிராமத் தொழிலாக இருந்து வந்திருக்கிறது. கோடிக்கணக்கான மக்களைப் பட்டினியிலிருந்து பாதுகாக்க வேண்டுமாயின், அவர்களுடைய இல்லங்களில் திரும்பவும் ராட்டை இருப்பதைச் சாத்தியமான தாக்குவதோடு ஒவ்வொரு கிராமத்திற்கும் திரும்பவும் அதன் சொந்த நெசவாளரும் இருக்க வேண்டும்.

— யங் இந்தியா 21-7-1921

2

காந்திஜி ஒரு வழக்கறிஞர்

காந்திஜி தனது பதினெட்டாவது வயதில் 10–வது பாஸ் செய்தார். அதற்குப்பின், சட்டப் படிப்பிற்காக அவர் லண்டனுக்குச் சென்றார். அங்கு, இன்னர் டெம்பிள் கல்லூரியில் சேர்ந்ததும் சட்டப் பரீட்சைகளில் எளிதாக தேர்ச்சி பெற்று விடலாம் என்பதை அவர் உணர்ந்தார். புத்தகங்களின் குறிப்புகளை (நோட்ஸ்) இரண்டு மாதங்களுக்கு மட்டுமே படித்து, பலரும் பரீட்சைகளில் தேர்ச்சிபெற்று வந்தனர். இப்படிக் குறிப்புகளைப் படித்து பரீட்சையில் தேர்ச்சி அடைவதில் காந்திஜிக்கு உடன்பாடு இல்லை, ஏமாற்று வேலையை அவர் அறவே வெறுத்தார். பாடப் புத்தகங்களை பணம் செலவழித்து வாங்கி, நிறைய நேரத்தை அப்புத்தகங்களைப் படிப்பதில் செலவழித்து வந்தார். பொதுவான சட்டம் பற்றிய தடித்த புத்தகங்களை அவர் ஒன்பது மாதங்கள்வரை ஊக்கமாகப் படித்தார். ரோமன் சட்டங்களைச் சரியாகப் புரிந்துகொள்வதற்காக அவர் ரோமன் மொழியைக் கற்றார். அக்காலத்திய பாரிஸ்டர்கள் "டின்னர் பாரிஸ்டர்கள்" என்று அழைக்கப்பட்டார்கள். ஏனெனில் மூன்றாண்டுகளில் அவர்களுக்கு மொத்தம் 12 தேர்வு நிலைகள் இருந்தன. ஒவ்வொன்றிற்கும் ஆறு 'டின்னர்' (விருந்து சாப்பாடு) வீதம் மொத்தம் 72 டின்னர்களில் அவர்கள் ஆஜராக வேண்டி இருந்தது. செலவு அதிகமாகப் பிடிக்கும் இந்த டின்னர்களுக்கான தொகையை மாணவர்கள்தான் கட்டவேண்டும்.

காந்திஜிக்கு இதுபோன்ற விருந்துகளில் கலந்துகொள்ளும் அனுபவம் கிடையாது. மேலும் விருந்து சாப்பிட்டு ஒயின் அருந்துவதன் மூலம் ஒரு மனிதன் எப்படி சிறந்த பாரிஸ்டர் ஆகிவிட முடியும் என்று அவர் சிந்திக்கத் தொடங்கினார். அவர் சிந்தனை எப்படி இருப்பினும் அந்த 'டின்னர்'களில் கலந்து கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு இருந்தது. அவர் சுத்த சைவம் மதுபானப் பழக்கம் இல்லாதவர். அந்த டின்னர்களில் வழங்கப்படும் பல உணவு வகைகளை, அவர் தொடுவதில்லை. மதுவையும் அவர் அருந்துவதில்லை. இதன் காரணமாகவே (அவர் பங்கையும் சேர்த்து உள்ளே தள்ளுவதற்காக) பல சட்டப்படிப்பு மாணவர்கள் 'டின்னரில்' அவரது சகாவாக இருக்க விரும்பினர்.

இந்த விருந்துகளினாலும், படிப்புகளினாலும் காந்திஜியின் மனதில் குடிகொண்டிருந்த தயக்கமும் பயமும் அகலவில்லை. ஒரு வழக்கை நடத்துவதற்குத் தனது புத்தக அறிவை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றி அவர் சிந்திக்கத் தொடங்கினார். ஒரு ஆங்கிலேய வக்கீல் அவரை ஊக்குவிக்கும் விதத்தில் "நேர்மையும் உழைப்பும் ஒருவரை நல்ல வக்கீலாக்கி நன்கு பொருளீட்டுவதற்கு வழி செய்யும்" என்று கூறினார். "வழக்கின் அடிப்படை விபரங்கள் சட்டத்தின் முக்கால் பங்கு; கால் பங்கை சட்டம் தன்னைத் தானே பார்த்துக்கொள்ளும்" என்று கூறி, சரித்திரம் மற்றும் பொது அறிவு சம்பந்தப்பட்ட புத்தகங்களைப் படிக்கும்படி காந்திஜியை அவர் தூண்டினார். காந்திஜி அவரது அறிவுரையைப் பின்பற்றினார்.

சிறிது காலத்திற்கு இங்கிலாந்தில் தானும் ஒரு கெட்டிக்கார ஆங்கிலேய 'ஜென்டில்மேனாக' மாற முயற்சித்தார். ஆங்கிலத்தை சரியான முறையில் உச்சரிக்கவும், அதில் உரையாற்றவும், நாட்டியம் ஆடவும், வயலின் வாசிக்கவும், 'லேட்டஸ்ட் ஃபாஷன்'படி உடையணியவும் முயற்சிகளை மேற்கொண்டார். லண்டனிலிருந்த மிகவும் பிரசித்தி பெற்ற கடையிலிருந்து விலையுயர்ந்த சூட்டையும் கோட்டையும் வாங்கி அணிந்தார். கூடவே இரட்டை தங்கச் செயினுடன் கூடிய கைக்கடிகாரத்தையும் அவர் வாங்கி அணிந்து கொண்டார். விலை உயர்ந்த தொப்பிகளையும் 'டை'களையும் அவர் அணிந்தார். இளம் பெண்களுடன் நட்பு ஏற்படுத்திக் கொண்டார். படிப்படியாக மேம்போக்கான டாம்பீக வாழ்க்கைப் பாதையில் அவர் செல்லத் தொடங்கினார். சில மாதங்களுக்குப்பின் தனது முட்டாள்த் தனத்தை உணர்ந்தார். அவரது ஆடம்பர வாழ்க்கை காரணமாக அவருடைய மூத்த சகோதரருக்கு பணக் கஷ்டம் ஏற்பட்டது. தான் இங்கிலாந்திற்கு வந்திருப்பது படிப்பதற்குத் தானேயன்றி ஆங்கிலேயர்களைப் போல ஆடம்பர வாழ்க்கை வாழ்வதற்கு அல்ல என்று உணர்ந்த காந்திஜி உடனடியாகத் தனது வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டார். குறைந்த வாடகையில் ஒரு அறையை ஏற்பாடு செய்து கொண்டு, ஒரு ஸ்டவ் அடுப்பையும் வாங்கி, தனது காலை மற்றும் இரவு உணவைத் தானே சமைத்துக் கொள்ளத் தொடங்கினார். மதிய உணவிற்குக் குறைந்த விலையில் சாப்பாடு போடும் சைவ உணவகங்களுக்குச் சென்றார். பஸ் அல்லது டிராம் செலவை மிச்சம் பிடிப்பதற்காக தினந்தோறும் 10 மைல்கள் கால்நடையாகவே பயணம் செய்தார். காலம் சுழன்றது. 32 மாதங்கள் இங்கிலாந்தில் வாழ்ந்தபின் அவர் பாரிஸ்டர் பட்டம் பெற்றார். இரண்டு நாட்களுக்குப் பின் இந்தியாவுக்குத் திரும்புவதற்கு கப்பல் ஏறினார்.

இந்தியா திரும்பியதும் பம்பாய் நகரில் ஒரு வீட்டை வாடகைக்குப் பிடித்து, ஒரு சமையல்காரரையும் வேலைக்கு அமர்த்திக் கொண்டார். உயர்நீதி மன்றத்தில் தினந்தோறும் ஆஜராகி, வழக்குகள் எப்படி நடத்தப்படுகின்றன என்பதைக் கண்காணித்தார். நிறைய நேரத்தை கோர்ட்டின் நூலகத்திலும் செலவழித்தார். குறிப்பாக, இந்தியச் சட்டங்களைப் பற்றி நிறையப் புத்தகங்களை அவர் படித்தார்.

அவருடைய முதல் வழக்கு எளிமையானது. ரூ. 30 அவருக்குக் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டது. 22 வயதேயான இளம் வழக்கறிஞர், வாதம் செய்வதற்கு எழுந்து நின்றபோது பயத்தில் பேச்சு வரவில்லை. தலை சுற்றியது. நா வறண்டது. அவமான உணர்வுடன் நீதிமன்றத்திலிருந்து வெளியேறிவிட்டார். அதற்குப் பின், நீதிமன்றத்தில் எந்த வழக்கையும் அவர் மேற் கொள்ளவில்லை.

அவரது செலவுகள் கூடின. வருமானம் எதுவும் இல்லை. அவரால் விண்ணப்பங்களைச் சிறந்த முறையில் எழுத முடிந்தது. ஆனால், அது வக்கீல் செய்யவேண்டிய பணி அல்லவே! அதிலிருந்து வருமானமும் வரவில்லை. சோதனையான ஆறு மாதங்களுக்குப் பின் அவர் ராஜ்கோட்டுக்குத் திரும்பி, தனது மூத்த சகோதரர் மற்றும் அவரது குடும்பத்துடன் இணைந்து கொண்டார். அவருடைய அண்ணனுக்கு இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்றிருந்த தனது தம்பியின் வெற்றி மீதான எதிர்பார்ப்புகளும் நம்பிக்கையும் இருந்தன. ஆனாலும், அவருக்கு ஏமாற்றமே கிட்டியது. காந்திஜி மிகவும் மனம் வருந்தினார்.

ராஜ்கோட்டில் வேறொரு பிரச்சினையும் எழுந்தது. தன்னிடம் வழக்குகளைக் கொண்டுவரும் ஏஜெண்டுகளுக்குக் கமிஷன் தரவேண்டிய வழக்கம் அங்கு இருந்தது. அது தவறானது என்று கருதிய காந்திஜி, ஏஜெண்டுகளுக்குக் கமிஷன் தர மறுத்தார். அவருடைய அண்ணன் இது தவிர்க்க முடியாதது என்று அவருக்கு போதனை செய்து அவரை சம்மதிக்க வைத்தார். அப்போது, காந்திஜி மாதம் ரூ. 300 வரை சம்பாதித்தார். அவருக்கு அந்த வேலையும் அங்கு நிலவிய பொய்யும் புரட்டும் அறவே பிடிக்கவில்லை.

அதிர்ஷ்டவசமாக அப்போது அவருக்கு தென் ஆப்பிரிக்காவில் இருந்த ஒரு பணக்கார முஸ்லிம் வியாபாரியிடமிருந்து அழைப்பு வந்தது. அவருக்கு ரூ. 1575 ரொக்கமும் தென் ஆப்பிரிக்கா சென்று திரும்புவதற்கான கப்பல் பயண முதல்

வகுப்புக் கட்டணமும் வழங்கப்பட்டது. அழைப்பை ஏற்று அவர் கப்பலில் ஏறினார். தென் ஆப்பிரிக்காவில் மக்களின் வாழ்க்கை பற்றி அவருக்கு எதுவும் தெரியாது. ஸான்ஸிபார் துறைமுகத்தில் கப்பல் நின்றபோது இறங்கிச் சென்று அங்கு நீதி மன்றம் எப்படிச் செயல்படுகிறது என்பதைக் கண்டறிந்தார். அங்கு ஆவணங்கள் எப்படி சமர்ப்பிக்கப்படுகின்றன என்பதை அவரால் புரிந்துகொள்ள இயலவில்லை. அவர் ஆப்பிரிக்க பயணம் மேற்கொண்டதே, கணக்கு (அக்கவுண்ட்) சம்பந்தப்பட்ட வழக்குக்காகத்தான். அக்கவுண்ட் பற்றிய புத்தகம் ஒன்றை வாங்கி அவர் படிக்கத் தொடங்கினார்

டர்பனுக்கு வந்த மூன்றாவது நாள் அவர் நீதி மன்றத்தில் ஆஜர் ஆனார். நீதிபதி, காந்திஜி அணிந்திருந்த தலைப்பாகையை அகற்றும்படி கூறினார். அந்த உத்தரவிற்குக் கீழ்படிய மறுத்த காந்திஜி, நீதி மன்றத்தை விட்டு வெளியேறினார். தென் ஆப்பிரிக்க மண்ணில் காலடி எடுத்து வைத்தது முதற்கொண்டே அங்கு இந்தியர்கள் எப்படி வெள்ளையர்களால் கேவலமாக நடத்தப்படுகிறார்கள் என்பதை அவர் கவனித்து வந்தார். அவர் மீது "அழையா விருந்தாளி" மற்றும் "கூலி பாரிஸ்டர்" ஆகிய முத்திரைகள் குத்தப்பட்டன. அவமானத்தால் அவர் மனம் வெதும்பினார்.

தனது வாடிக்கையாளராகிய தாதா அப்துல்லாவிடமிருந்து அவரது வழக்கு பற்றிய விபரங்களைக் கேட்டறிந்தார். அது பற்றிய சட்டத்தையும் நன்கு படித்தறிந்தார். வாதி, பிரதிவாதி இருவரும் தொடர்ந்து வக்கீல்களுக்கு பில்(கட்டணம்) கொடுத்துக் கொண்டிருந்தால் ஓட்டாண்டிகளாகி விடுவார்கள் என்று அவருக்குப்பட்டது. தனது வாடிக்கையாளரின் செலவில் பணம் பண்ணவோ சமூகத்தில் அந்தஸ்து ஏற்படுத்திக் கொள்ளவோ அவர் விரும்பவில்லை. வாதி பிரதிவாதி இருவரையும் சமரசம் செய்து இணைத்து வைப்பதுதான் ஒரு வழக்கறிஞரின் தலையான கடமை என்று அவர் நம்பினார். அதனால் அவர் பிரதிவாதியைச் சந்தித்துப் பேச விரும்பினார். தாதா அப்துல்லா சற்று தயக்கம் காட்டியபோது "இந்த விஷயம் ரகசியமாகவே இருக்கும். யாருக்கும் தெரியவராது. அந்த ஆசாமியை சமரசம் செய்து கொள்ளும்படி நான் அறிவுறுத்துவேன்" என்று காந்திஜி கூறினார்.

காந்திஜியின் சமரச முயற்சிக்குப் பின்பும் வழக்கு ஒரு ஆண்டுவரை தொடர்ந்தது. ஒரு சிக்கலான வழக்கை வழக்கறிஞர்கள் எப்படி எல்லாம் இழுத்தடிக்கிறார்கள் என்பதை அறிவதற்கு காந்திஜிக்கு இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது.

அவர் சாட்சியங்களைத் தயார் செய்தார். வழக்கு இரு தரப்பினருக்கும் திருப்தி ஏற்படும் விதத்தில் முடிந்து விட்டது. இருப்பினும் இரு தரப்பிலும் சட்டச் சிக்கல்கள் பற்றிய வினாக்கள் எழுப்பப்பட்டு செலவு கூடியதை எண்ணும்போது காந்திஜிக்கு வெறுப்புதான் ஏற்பட்டது.

இதற்குப்பின், அவர் டர்பனில் தொடர்ந்து வழக்கறிஞராகப் பணி செய்தார். ஒரு நாள், பாலசுந்தரம் என்கிற ஒரு அடிமைத் தொழிலாளி கிழிந்த உடைகளுடனும் உடைந்த பற்களுடனும் அவரது அலுவலகத்திற்கு வந்தார். ஒரு வெள்ளைக்கார முதலாளி பாலசுந்தரத்தை அப்படி அடித்து உதைத்திருந்தார். காந்திஜி அவரை அமைதிப்படுத்தி, ஒரு வெள்ளைக்கார டாக்டரிடம் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்து, அவரது காயங்கள் பற்றிய மருத்துவச் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார். பாலசுந்தரத்திற்காக நீதிமன்றத்தில் வாதாடி, வெற்றி பெற்று, அவருக்கு வேறொரு இடத்தில் வேலையும் வாங்கித் தந்தார் காந்திஜி. இந்தியத் தொழிலாளர்களிடையே காந்திஜி மிகவும் பிரபலமாகிவிட்டார். "ஏழைப் பங்காளர்" என்று அவரது புகழ் இந்தியாவிலும் பரவியது. அதற்குப் பின் திக்கற்றவர்களுக்கு அவர் துணையாக விளங்கினார்.

ஒரு ஆண்டு அனுபவத்தில் காந்திஜியின் தன்னம்பிக்கை கூடியது. கொஞ்ச வாத விவாதங்களுக்குப் பின்பு இந்த "கூலி பாரிஸ்டர்" நேட்டால் நகர சுப்ரீம் கோர்ட்டில் வாதாட அனுமதிக்கப்பட்டார். அங்கிருந்த வெள்ளைக்கார உதவியாளர்கள் அவருக்கு வழக்குகளைத் தர மறுத்தார்கள். அவருடைய மனப்போக்கும் அவருக்குத் தடையாக அமைந்தது. வழக்கறிஞர்கள் பொய் பேசக் கூடாது என்ற கொள்கை காரணமாகவும் அவரிடம் வழக்குகள் வரவில்லை. எக்காரணம் கொண்டும் வழக்கின் வெற்றிக்காக பொய் பேசுவதில்லை. சாட்சிகளுக்குப் "பாடம்" (பொய் சாட்சியப் பயிற்சி) சொல்வதும் இல்லை. ஒரு வழக்கு தோற்றாலும் சரி, வெற்றி பெற்றாலும் சரி, அவர் ஒரே மாதிரியான கட்டணம்தான் வசூலித்தார். நிலுவையாக இருந்த கட்டணத்திற்காக வாடிக்கையாளர்களுக்கு அவர் நினைவூட்டுக் கடிதம் அனுப்புவதில்லை. தனது சொந்த, மான அவமானம் பற்றிய விஷயங்களுக்காக அவர் யார்மீதும் வழக்குத் தொடரவில்லை. நான்கு தடவைகள் தென் ஆப்பிரிக்காவில் அவர் தாக்கப்பட்டார். தன்னைத் தாக்கியவர்களை அவர் நீதிமன்றத்திற்கு இழுக்கவில்லை. இருபது ஆண்டுகள் தென் ஆப்பிரிக்காவில் அவர் வழக்கறிஞராகப் பணியாற்றிய காலத்தில் நூற்றுக்கணக்கான வழக்குகளை கோர்ட்டுக்கு வெளியே சமரசம் செய்து வைத்தார்.

ஒரு தடவை ஒரு வழக்கை நடத்தும்போது தனது வாடிக்கையாளர் நாணயமற்றவர் என்பதை உணர்ந்தார். வழக்கைத் தள்ளுபடி செய்ய நீதிபதியிடம் அவர் வேண்டினார். தனது வாடிக்கையாளரையும் பொய் வழக்குப் போட்டதற்காகக் கண்டித்தார். காந்திஜி, ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார். "நான் ஒரு இரண்டாம்தர வழக்கறிஞராகத்தான் எனது சட்டப் பணியைத் தொடங்கினேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் சத்தியப் பாதையிலிருந்து விலகமாட்டேன் என்பதை வாடிக்கையாளர்கள் உணர்ந்தபோது அவர்கள் என்னிடமே ஒட்டிக் கொண்டார்கள்." அவருடைய வாடிக்கையாளர்கள் அவரது நண்பர்களாகவும் சக ஊழியர்களாகவும் மாறினர். நேர்மைக்கு ஒரு ஒப்பற்ற உதாரணமாக விளங்கியதன் காரணமாக ஒரு தடவை ஒரு வாடிக்கையாளரை அவர் சிறை செல்வதிலிருந்து காப்பாற்றினார். அந்த வாடிக்கையாளர் பல பொருள்களை வரிக் கட்டாமல் கடத்தல் செய்து வந்தார். அவரது கௌரவத்திற்கு சவால் வந்தபோது, காந்திஜியிடம் அவர் உண்மையை ஒப்புக் கொண்டார். நீதிமன்றத்திலும் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு தண்டனையை ஏற்றுக் கொள்ளும்படி அவருக்கு காந்திஜி அறிவுரை வழங்கினார். கூடவே, அட்டார்னி ஜெனரலையும் சுங்கத்துறை அதிகாரியையும் சந்தித்து வழக்கு பற்றிய உண்மையான விபரங்களைக் கூறினார். காந்திஜி கொடுத்த தகவல்களை அப்படியே ஏற்றுக் கொண்ட அதிகாரிகள் அந்த வாடிக்கையாளருக்கு அபராதம் மட்டுமே விதித்தனர். சிறைத் தண்டனை வழங்கவில்லை. இந்த விவரம் அனைத்தையும் அச்சிட்டு அந்த வாடிக்கையாளர் தனது அலுவலகத்தில் எல்லோரது பார்வைக்கும் வைத்து விட்டார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், காந்திஜியின் வாடிக்கையாளருடைய கணக்குப் புத்தகங்களில் சில தவறுகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இது பற்றி காந்திஜியே எதிர்த் தரப்பினருக்குத் தகவல் கொடுத்துவிட்டு, வழக்கைத் தொடர்ந்து வாதாடினார். வழக்கை முறையாக வாதாடவில்லை என்று காந்திஜியை முதலில் கண்டித்த நீதிபதி, பிற்பாடு காந்திஜி பக்கமே தீர்ப்பு வழங்கினார். நீதிபதியே எதிர்த் தரப்பினரிடம் "இப்படி காந்திஜி தனது பக்கம் இருந்த தவறை ஒப்புக் கொண்டிராவிட்டால் என்ன செய்து இருப்பீர்கள்?" என்ற கேள்வியையும் கேட்டார்.

குறுக்கு விசாரணையிலும் அவர் கைதேர்ந்தவர். நீதிபதிகளும் ஏனைய வழக்கறிஞர்களும் காந்திஜிக்கு மரியாதை செலுத்தினர். நிறைய வெள்ளைக்கார வாடிக்கையாளர்களும்

காந்திஜியிடம் வந்தனர். இந்தியாவிலும் சரி, தென் ஆப்பிரிக்காவிலும் சரி, ஐரோப்பியர்களுக்கும் இந்தியர்களுக்கும் இடையே நடக்கும் வழக்குகளில் 99 சதவீதம் வழக்குகளில் இந்தியர்களுக்கு நியாயம் கிடைப்பதில்லை என்பதை காந்திஜி உணர்ந்திருந்தார். "கொடூரமான கொலைகளுக்காக எந்த ஆங்கிலேயருக்காவது கடுமையான தண்டனை இந்தியாவில் வழங்கப்பட்டுள்ளதா?" என்ற கேள்வியை காந்திஜி பல தடவை கேட்டு வந்தார். தென் ஆப்பிரிக்காவிலும் கறுப்பர்களிடம் வன்முறையைப் பிரயோகித்து துன்புறுத்திய வெள்ளையர்களுக்கு மிகவும் குறைவான தண்டனையே வழங்கப்பட்டது.

இவ்வாறு, கடுமையான நிபந்தனைகளுக்குட்பட்டுப் பணி செய்து சட்டத்தைப் பற்றி இழிவாகப் பேசியும் கூட காந்திஜிக்கு வழக்கறிஞர் பணியில் நல்ல வருமானம் வந்து கொண்டிருந்தது. தென் ஆப்பிரிக்காவில் அவர் 20 ஆண்டுகளுக்கு மேலாக பாரிஸ்டராகப் பணிபுரிந்தார். தொடக்க காலத்தில் நகரின் மையமான இடத்தில் வசதியான ஒரு வீட்டில் தங்கிப் பணியாற்றினார். அந்த வீடு, ஐரோப்பியப் பாணியில் வசதிகள் செய்யப்பட்டிருந்தது. ஞாயிற்றுக் கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் அவர் வீட்டில் பலருக்கும் விருந்து அளிக்கப்பட்டது. நண்பர்களுக்கும் உடன் பணியாற்றுபவர்களுக்கும் அவர் வீட்டில் இடம் அளிக்கப்பட்டு அது ஒரு சத்திரமாக விளங்கியது. அவருடைய அலுவலகம் அவர் வசித்த வீட்டிலிருந்து ஆறுமைல் தூரத்தில் இருந்தது. சில மாதங்கள் வரை அவர் சைக்கிளில் அலுவலகம் சென்று வந்தார். பிறகு, கால்நடையாகவே சென்றார். டிராம் வண்டிகளின் முன்வரிசைகளில் அக்காலகட்டத்தில் இந்தியர்கள் உட்கார அனுமதிக்கப்படாத காரணத்தால் அவர் டிராம் வண்டிகளில் ஏறுவதில்லை. அவர் முயற்சித்திருந்தால் அவருக்கு விசேஷ அனுமதி கிடைத்திருக்கும். அவர் தன்னை ஒரு ஏழைப் பங்காளனாகப் பாவித்து அங்கு வாழ்ந்து வந்த ஏழை இந்தியத் தொழிலாளர்களைப் போல எளிய வாழ்க்கை முறையையும் படிப்படியாக மேற்கொண்டார். அவரது 40வது வயதில் அவரது மாத வருமானம் சராசரியாக ரூ. 4000 ஆக இருந்தது. அந்தக் கட்டத்தில் அவர் தனது வழக்கறிஞர் பணியைத் துறந்தார். தன் வாழ்க்கையை பொதுஜன சேவைக்காக அர்ப்பணித்துக் கொண்டார். அவரிடம் இருந்த எல்லாப் பொருள்களும் சமுதாயத்திற்கு வழங்கப்பட்டன. அவர் ஒரு விவசாயப் பண்ணையைத் தொடங்கி உடல் உழைப்பின் மூலம் வாழத் தொடங்கினார்.

பல ஆண்டுகளுக்குப் பின்பு இந்தியாவில் வழக்கறிஞர்கள் நிறையக் கட்டணம் வசூலிப்பதை அவர் கண்டனம் செய்தார்.

கோர்ட் செலவுகளும் அளவுக்கு அதிகமாக இருப்பதாக அவர் கருதினார். "ஜனங்களின் ஏழ்மை நிலைக்கும் நீதிமன்றத்திற்கும் இடையே தூரம் அதிகமாக உள்ளது பற்றி அவர் வருந்தினார். ஒரு வழக்கறிஞர் மாதம் ரூ. 50,000 முதல் ரூ. 1,00,000 வரை சம்பாதிக்க முடிகிறது. ஆனால் சட்டத் தொழில் பணி சூதாட்டம் அல்ல. கோர்ட்டுகளும் வழக்கறிஞர்களும் இல்லாவிட்டால் நமது வாழ்க்கையில் நிம்மதி அதிகமாகவே இருக்கும். வழக்கறிஞரின் தொழிலே நெறியற்றது. பொய் சாட்சிகள் இரு தரப்பிலும் தயாரிக்கப்படுகின்றன. இவர்கள் பணத்திற்காக என்ன வேண்டுமானாலும் செய்வார்கள்." என்றெல்லாம் காந்திஜி கூறி வந்தார். ஜனங்களுக்கு அதிகச் செலவில்லாமல் நியாயம் கிடைக்க வேண்டுமானால் சட்டங்களில் அடிப்படை மாற்றங்கள் தேவை என்று காந்திஜி கூறி வந்தார். ஏழைகளுக்காக அவர் இலவசமாக வாதாடி வந்தார். பொது நலத்திற்கான வழக்குகளில் தனது அடிப்படைத் தேவைக்கான குறைந்த கட்டணத்தை மட்டுமே அவர் வசூலித்து வந்தார். நகராட்சிகள், ஏழை மக்களை அவர்களது குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றியபோது அவர் அந்த ஏழைகளுக்காக வாதாடி வந்தார். ஒவ்வொரு வழக்கையும் மிகவும் உழைத்துப் போராடியும்கூட கட்டணமாக ரூ. 150 மட்டுமே வசூலித்து வந்தார். அவர் எடுத்துக் கொண்ட 70 வழக்குகளில் ஒன்றில் மட்டுமே அவர் தோல்வியைச் சந்தித்தார். அந்த வருமானத்திலும் பாதியை அவர் ஒரு அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கிவிட்டார்.

தனது நாட்டு மக்கள் மனித உரிமைகளைப் பெற வேண்டும் என்பதற்காக அவர் அரசுக்கெதிரான ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார். அவர் தென் ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் பல தடவைகள், சிறையில் அடைக்கப்பட்டார். தென் ஆப்பிரிக்காவைப் பொருத்தவரை, எந்த நீதிமன்றத்தில் அவர் பத்தாண்டுகள் பாரிஸ்டராக வழக்காடினாரோ அதே நீதிமன்றத்தில் கைகளில் விலங்குடன் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டார். இந்தியாவில் சிறைத் தண்டனைக்குப்பின் வழக்கறிஞர்களுக்கான ரிஜிஸ்டரிலிருந்து அவரது பெயர் நீக்கப்பட்டது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நீதிமன்றங்களைப் புறக்கணித்து, பஞ்சாயத்து முறையை அமல்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தி வந்தார். அவரது அறைகூவலுக்கு இணங்கி பல பிரசித்திபெற்ற வழக்கறிஞர்கள் தங்களது பணியைத் துறந்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒருமுறை, அவர் ஒரு வழக்கறிஞர் சங்கத்தில் உரையாற்றியபோது தனது பெயர் வழக்கறிஞர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதைக் குறிப்பிட்டு, தான் சட்டத்தை மறந்து விட்டதாகக் கூறினார். அவர் பெரும்பாலும் சட்டத்தை விளக்கும் பணிக்கு பதிலாக சட்டத்தை உடைக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதையும் வழக்கறிஞர்களுக்கு எடுத்துரைத்தார்.

ராட்டையில் ஒவ்வொரு முறையும் நூலை இழுக்கும் போதெல்லாம் இந்தியாவின் ஏழைகளையே நான் எண்ணுகிறேன். இந்தியாவின் ஏழைகள் இன்று கடவுளிடம் நம்பிக்கையை இழந்து விட்டார்கள். நடுத்தர வகுப்பினரிடத்திலும் பணக்காரரிடத்திலும் இந்த நம்பிக்கையின்மை அதிகமாக இருக்கிறது. பசியின் கொடுமையால் பதைக்கிறவனுக்கு, வயிற்றை நிரப்புவதைத் தவிர வேறு எதையும் வேண்டாதவனுக்கு, வயிறு தான் அவன் கடவுள், எவன் அவனுக்குச் சோறு போடுகிறானோ அவனே அவனுக்கு ஆண்டவன். அவன் மூலம் அவன் கடவுளையும் காணக்கூடும். அத்தகையவர்களுக்கு, கை கால் நன்றாக இருப்பவர்களுக்கு, பிச்சை போடுகிறவன், தன்னையும் அவர்களையும் கேவலப்படுத்துபவனாகிறான். அவர்களுக்குத் தேவையானதெல்லாம் ஏதாவது ஒருவகைத் தொழில். கோடிக்கணக்கானவர்களுக்கு வேலை கொடுக்கும் தொழில், ராட்டை ஒன்று தான். ஆனால், ராட்டையின் சக்தியில் எனக்குள்ள நம்பிக்கையை இந்தியாவின் பாட்டாளி மக்களின் உள்ளத்தில் பிரசங்கம் செய்வதனால் புகுத்திவிட முடியாது; நானே நூற்பதனாலேயே அது முடியும். ஆகையால், நான் நூற்பதை ஒரு தவம் அல்லது புனிதமான சடங்கு என்று நான் விவரிக்கிறேன். ஏழைகள் பால் கொள்ளும் தூய, தீவிரமான அன்பு எங்கே இருக்கிறதோ அங்கே கடவுளும் இருக்கிறார் என்று நான் நம்புவதால், ராட்டையில் நூற்கும் ஒவ்வோர் இழை நூலிலும் கடவுளை நான் காண்கிறேன்.

— யங் இந்தியா 20-5-1926

3

காந்திஜி ஒரு தையல்காரர்

தென் ஆப்பிரிக்காவில் காந்திஜி வசித்த காலத்தில் அவருக்கு இரண்டு தடவை கடுங்காவல் தண்டனை வழங்கப் பட்டது. சில வாரங்கள் வரை அவர் நாள் ஒன்றுக்கு ஒன்பது மணி நேரம் கிழிந்த போர்வைகளையும், சட்டைகளுக்குப் பைகளையும் தைத்து வந்தார். அவருக்குத் தரப்பட்ட பணிகளை காலக் கெடுவுக்குள் முடித்துக் கொடுத்ததோடு அல்லாமல், மேலும் பணி வேண்டும் என்று கேட்பது அவரது வழக்கம்.

இந்தியச் சிறையில் சிலநாட்களுக்கு ஸிங்கர் தையல் எந்திரத்தில் தையல் வேலை செய்தார். சிறைப் பணிகளை அவர் தாமாகவே ஏற்றுக்கொண்டு செய்து வந்தார். மனிதர்களுக்கு வேலை கிடைக்காமல் செய்து வரும் எந்திரங்களுக்கு மனிதன் அடிமையாகி வருவதை அவர் எதிர்த்தார். மனித உழைப்பை அகற்றித் தேவையற்றதாக்கி விடும் எந்திரங்களை நாம் பயன் படுத்தக் கூடாது என்ற கருத்தை அவர் வலியுறுத்தி வந்தார். இந்தியாவைப் பொருத்தவரை கோடிக்கணக்கான மக்களுக்கு ஓய்வு நேரம் எப்போது கிடைக்கும் என்பது பிரச்சினை அல்ல; அவர்கள் பணி ஏதும் இன்றி ஓய்ந்து கிடக்கிறார்கள்; அந்த நேரத்தை எப்படிப் பயனுள்ள முறையில் செலவழிக்க முடியும் என்பது தான் பிரச்சினை. தையல் எந்திரத்திற்கு மட்டும் காந்திஜி விதிவிலக்கு அளித்தார். ஏனெனில் அது ஒரு பயனுள்ள கண்டுபிடிப்பு என்று அவர் எண்ணினார். தனது மனைவி ஊசியையும் நூலையும் வைத்துக் கொண்டு மணிக்கணக்கில் போராடுவதைப் பார்த்து, "அவள்மீது கொண்டிருந்த அன்பு காரணமாக ஒரு தையல் எந்திரத்தை ஸிங்கர் கண்டுபிடித்தார். அந்த எந்திரத்தின் பின்னணியில் அன்பு உள்ளது" என்று காந்திஜி கூறுவார்.

காந்திஜி ஒரு தடவை ஒரு ஆசிரமவாசியான பெண்மணிக்கு எழுதிய கடிதத்தில் "உனது சல்வார் கமீஸ் தைப்பது பற்றிக் கவலை கொள்ள வேண்டாம். அவற்றை என்னால் தயார்

செய்து விடமுடியும். ஒரு ஸிங்கர் எந்திரத்தை நாம் இரவல் வாங்குவோம். சில மணி நேரங்களில் உடுப்புகள் தயாராகி விடும்." தனது தையல் பணிபற்றி அவருக்கு மிகவும் பெருமை. அவரே துணியை வெட்டி தனது மனைவியின் ரவிக்கைகளைத் தைத்துவிடுவார். ராட்டையில் நூல் நூற்று, நூற்ற நூலைத் தறியில் நெய்து, அத்துணியைக் கொண்டு தனது சட்டையைத் தானே தைத்துக் கொள்வார். புகழ்பெற்ற தையல் வல்லுநர் களும், செருப்பு தயாரிப்பவர்களும் ஆசிரமவாசிகளுக்கு இலவச மாகப் பயிற்சி அளித்து வந்தனர்.

சம்பாரனில் விவசாயிகள் நியாயமற்ற, குறைந்த கூலியில் அவுரியைப் பயிரிடும்படி கட்டாயப்படுத்தப் பட்டபோது அதற்கெதிரான போராட்டத்தில் காந்திஜி ஈடுபட்டது நமக்குத் தெரிந்த விஷயம். அப்போது ஒரு ஆங்கிலேயப் பத்திரிகை யாளர், "காந்திஜி, கிராமத்து விவசாயிகளைக் கவர்வதற்காகவே மேலைநாட்டு உடைகளைத் துறந்து இந்திய உடையை அணிந்துள்ளார்" என்று கூறி அவரை அவமதித்தார். பதிலடி யாக காந்திஜி, "சுதேசிக் கொள்கையை ஏற்று சபதம் எடுத்தபின் நான் கையினால் நூற்று கையினால் நெய்து, என்னாலோ என் சகஊழியர்களாலோ தைக்கப்பட்ட துணியை மட்டுமே அணிவேன்", என்று பதில் கொடுத்தார்.

காந்திஜி சிறிது காலத்திற்குப்பின் சட்டையையும் துறந்து விட்டார். இடுப்பில் ஒரு அரையாடையை மட்டுமே அணிந்தார். அப்போதும் கூட, தனது கைக்குட்டை, துண்டு, அரையாடை ஆகியவற்றின் மூலைகளை அவர் தைத்து வந்தார். துணிகளைத் தைத்த வண்ணம் தனது செயலாளருக்குக் கடிதங்களையும் 'டிக்டேட்' செய்வார் காந்திஜி. ஆகாகான் அரண்மனையில் சிறைவாசம் செய்த சமயத்தில் சிறையின் மேற்பார்வையாளருக்கு பிறந்த நாள் பரிசாகக் கதர்க் கைக்குட்டைகளை காந்திஜி வழங்கினார். 74 வயதான காந்திஜி ஒவ்வொரு கைக்குட்டை யிலும் சிறையின் மேற்பார்வையாளரது இனிஷியல்களையும் பின்னல் (எம்ப்ராய்டரி) செய்திருந்தார்.

தனது மேற்பார்வையில் ஒரு பெண்மணியைத் தனது சால்வையைப் பல துண்டுக் கதர்த்துணிகளை இணைத்துத் தயாரித்து அளிக்கும்படி காந்திஜி கோரினார். பாரத நாட்டின்

ஏழைப் பங்காளர் என்ற முறையில் அந்தச் சால்வையை அணிந்து வட்டமேஜை மகாநாட்டிற்குப்பின் இங்கிலாந்து அரசி அளித்த விருந்தில் காந்திஜி கலந்து கொண்டார். அவருக்கு ஆடம்பரம் அறவே பிடிக்காது. அதே சமயம், கசங்கிய அல்லது கிழிந்த உடைகளை யாராவது அணிவதும் அவருக்குப் பிடிக்காது. ஒரு தடவை அவர் கலந்து கொண்ட கூட்டத்தில் அவரது சகாவின் மேலாடையில் ஒரு ஓட்டை காணப்பட்டது. அதைப் பார்த்த காந்திஜி அவருக்கு இப்படி ஒரு குறிப்பை அனுப்பினார்: "கிழிந்த உடைகளை அணிவது சோம்பலுக்கு அடையாளம். வெட்கப்பட வேண்டிய விஷயம். மாறாக, ஒட்டுத் தையலுடன் கூடிய துணியை அணிவது எளிமை அல்லது தியாகத்திற்கு உதாரணம். உங்களது மேலாடையில் உள்ள ஓட்டை அருவருப்பாக உள்ளது அது ஏழ்மையையோ எளிமையையோ காட்டவில்லை. மாறாக, அது காட்டுவது என்னவென்றால் உங்களுக்கு மனைவி இல்லை; அல்லது உங்கள் மனைவி மோசமானவள் அல்லது நீங்கள் ஒரு சோம்பேறி,"

நெல் குத்துவது, மாவரைப்பது போன்ற பண்டைக்கால முறைகளிடம் எனக்குத் தனி அபிமானம் ஒன்றும் கிடையாது. இன்று சோம்பலாயுள்ள கோடிக்கணக்கான கிராமவாசிகளுக்குக் கொடுக்கக் கூடிய வேலை வேறெதுவும் இல்லை என்பதால் தான் நான் அவற்றை ஆதரிக்கிறேன். கிராமவாசிகளை வாட்டும் பொருளாதார நெருக்கடியைத் தீர்த்தால் ஒழிய, கிராம முன்னேற்றம் சாத்தியமில்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே, வீணாகக் கழிக்கும் நேரத்தில் உபயோகமான ஒரு வேலையைச் செய்யும்படி கிராமவாசிகளைத் தூண்டுவதே பெரிய முன்னேற்ற வேலையாகும்.

— ஹரிஜன் 30 11-34

4

காந்திஜி ஒரு சலவைத் தொழிலாளி

பாரிஸ்டர் காந்தி சீரான முறையில் ஐரோப்பிய உடைகளுடன் கோர்ட்டுக்குச் சென்று வந்தார். தினந்தோறும் அவரது சட்டைக்குப் பொருந்தும் விதத்தில் காலரும் தேவைப்பட்டது. சட்டையை ஒவ்வொரு மூன்றாவது நாளும் அவர் மாற்றி வந்தார். சலவைக்கு அவர் நிறையப் பணம் செலவழிக்க வேண்டி வந்தது. சலவைத் தொழிலாளி, துணிகளைத் தாமதமாகவே கொண்டு வந்து கொண்டிருந்தார். இதனால், காந்திஜிக்கு நிறைய உடைகளை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. முப்பத்தாறு சட்டைகளும் காலர்களும் கூட சலவைத் தொழிலாளியின் தாமதத்திற்கு ஈடு கொடுக்க முடியவில்லை.

காந்திஜி தனது செலவுகளைக் குறைக்க எண்ணினார். ஒரு நாள், அவர் சலவைக்குத் தேவையான உபகரணங்களுடன் வீட்டிற்குத் திரும்பினார். துணிகளைச் சலவை செய்வது பற்றி ஒரு புத்தகத்தையும் வாங்கிப் படித்தார். இவ்வாறு தன்னைத் தயார் செய்து கொண்ட பின், துணிகளை வெளுக்க முனைந்தார் காந்திஜி. கஸ்தூர்பா, காந்திஜி செய்யும் பணியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க அனுமதிக்கப் படவில்லை. அவருக்கும் சலவைப் பயிற்சி அளிக்கப்பட்டது. காந்திஜியின் தினசரிப் பணிகளில் இன்னும் ஒரு வகை கூடியது. ஆனால், வேலைப் பளுவைப் பற்றி காந்திஜி எப்போதுமே மலைத்ததில்லை. சலவைத் தொழிலாளியின் "கொடுங்கோன்மையிலிருந்து" விடுதலை பெறுவது தான் அவருக்கு முக்கியமாகப் பட்டது. முதல் நாள், அவர் காலரைச் சலவை செய்து கஞ்சிபோட்டு உலர்த்தினார். அனுபவமின்மை காரணமாக இஸ்திரிப் பெட்டி சூடேறுவதற்கு முன்பாகவே, போதிய அழுத்தமும் தராமல் இஸ்திரி தேய்த்து விட்டார். அதிகச் சூடு அல்லது அழுத்தத்தில் துணி எரிந்துவிடும் என்று அவர் பயந்தார். அன்று நீதிமன்றத்திற்கு அந்தக் காலருடன்தான் அவர் சென்றார். கஞ்சி அதிகமாக இருந்ததால் காலர் அதிகமான விரைப்புடன் காணப்பட்டது. அவரது நண்பர்கள் அதைப் பார்த்து சிரித்தனர். காந்திஜி அதைப் பொருட்படுத்தவில்லை. "துணி வெளுப்பதில் எனக்கு இது முதல் அனுபவம். அதனால்தான், கஞ்சி சற்று அதிகமாகிவிட்டது. ஆனாலும் பரவாயில்லை. உங்களுக்கெல்லாம்

என்னைப் பார்த்து சிரிப்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது அல்லவா, அதுவே போதும்,'' என்றார் காந்திஜி.

''லாண்டரிகள் இல்லாமலா போய்விட்டன?'' என்று வினா எழுப்பினார் ஒரு நண்பர்.

''லாண்டரிகள் இருக்கின்றன. கட்டணம் தான் அதிகமாக உள்ளது. ஒரு காலரை வெளுப்பதற்கு அவர்கள் கேட்கும் கட்டணத்தில் இன்னொரு காலரே வாங்கிவிடலாம். மேலும் நாம் சலவைத் தொழிலாளியின் தயவில் இருக்க நேரிடுகிறது. எனது துணிகளை நானே சலவை செய்து கொள்வதையே நான் விரும்புகிறேன்," என்று காந்திஜி விடையளித்தார். சிறிது காலத்திற்குள் காந்திஜி ஒரு சிறந்த சலவைத் தொழிலாளியாகவும் உருவெடுத்து விட்டார்.

காந்திஜியின் குருவான கோகலே, ஒரு தடவை அவருடன் தங்கி இருந்தார். கோகலே ஒரு விருந்தில் கலந்து கொள்ள வேண்டி இருந்தது. அவரது கழுத்துப் பட்டி கசங்கி இருந்தது' காந்திஜி அவரிடம், "நான் அதை இஸ்திரி போட்டுத் தரட்டுமா?'. என்று கேட்டார். கோகலேயோ "உனது வழக்காடும் திறமை யில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஆனால் சலவை-இஸ்திரி விஷயத்தில் நம்பிக்கை இல்லை. நீ அதைச் சரியாக செய்யா விட்டால் என்ன ஆகும்?'' என்று பதில் கொடுத்தார். காந்திஜி பிடிவாதமாக அந்தக் கழுத்துப்பட்டியை இஸ்திரி செய்து கொடுத்தார். கோகலேக்கு காந்திஜியின் பணி திருப்தி அளித்தது. காந்திஜிக்கு அதில் மிக்க மகிழ்ச்சி. "இனிமேல் எனக்கு யாருடைய சான்றிதழும் தேவை இல்லை! கோகலேயே என் பணியில் திருப்தி அடைந்து விட்டாரே!" என்று கூறினார் காந்திஜி.

தென் ஆப்பிரிக்காவில் காந்திஜி நிறுவிய ஆசிரமங்களில் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வந்தது. துணிகளை வெளுப்பதற் காகப் பெண்கள் நீரைத்தேடி வெகுதொலைவு நடக்க வேண்டி இருந்தது. அப்போது காந்திஜி அவர்களுக்கு உதவி வந்தார். கதர் உற்பத்தியின் ஆரம்ப கட்டத்தில் தயாராகிய புடவைகள் மிகவும் கனமாக இருக்கும். காந்திஜியின் விருப்பத்திற்கிணங்க பெண்கள் அவற்றை அணிந்தார்கள். ஆனால், அவற்றைத் துவைப்பதற்கு சிரமப்பட்டார்கள். காந்திஜி தாமே அவர்களது துணிகளைத் துவைத்துத்தர முன்வந்தார். பிறருடைய துணி களை வெளுத்துத் தருவது பற்றி அவர் சிறிதும் வெட்கமோ தயக்கமோ காட்டவில்லை. ஒருதடவை அவர் ஒரு தனவந்தரின் வீட்டில் விருந்தாளியாகத் தங்கி இருந்தார். குளியலறையில்

நுழைந்தபோது வெள்ளை வேஷ்டி ஒன்று தரையில் கிடப்பதைப் பார்த்தார். தனது துணிகளுடன் சேர்ந்து அதையும் அவர் துவைத்து உலர்த்திவிட்டார். "வெள்ளைத் துணிகளை நல்ல சூரிய வெளிச்சத்தில் உலர்த்தினால் தான் அவை பளிச்சிடும், கிருமிகளும் அழிந்து போகும்" என்று காந்திஜி கூறிவந்தார். அந்த தனவந்தருக்கு சங்கடமாகப் போய்விட்டது. "பாபுஜி, ஏன் இப்படிச் செய்தீர்கள்? என்று கேட்டார். "ஏன்? இதில் என்ன தவறு? குளியலறையில் கீழே கிடந்த அந்த வெள்ளைத் துணி அழுக்காகி இருக்கும் அதை நான் துவைத்து வைத்தேன். அழுக்குத் துணியை வெளுத்தது பற்றி நான் வெட்கம் அடைய தில்லை,'' என்று காந்திஜி கூறினார். காந்திஜிக்கு வெட்கம் ஏற்படவில்லை. ஆனால் அந்த தனவந்தருக்கு ஏற்பட்டது.

முதுமைப் பருவத்திலும் கூட சிறைவாசத்தின்போது, தனது அரையாடை, துண்டு, கைக்குட்டை ஆகியவற்றைத் தாமே சலவை செய்து, தனது சக ஊழியர்களுக்கு அந்த வாய்ப்பு அளிப்பதைத் தவிர்த்து வந்தார். ஆகாகான் அரண்மனையில் அன்னை கஸ்தூர்பாவின் இறுதி காலத்தில் அவரது கைக்குட்டை களை அண்ணலே துவைத்து வைப்பார்.

தனது உடைகளில் எப்போதுமே அவர் கவனம் செலுத்தி வந்தார். சிறுவனாக இருந்தபோதே தனது வேஷ்டி மற்ற சிறுவர் களின் வேஷ்டியைக் காட்டிலும் வெண்மையாக இருக்க வேண்டும் என்று எண்ணி நன்றாகத் துவைப்பார். கிணற்றில் தண்ணீர் இறைத்து துணிகளை அவர் வெளுப்பார். பிறரின் எளிமையை காந்திஜி பாராட்டுவார். ஆனால், அழுக்கான கசங்கிய உடைகளை அவர் வெறுத்தார். தனது அரையாடை, மேல்துணி, துண்டு ஆகியவற்றை அழுக்கு, கறை ஏதும் இன்றி மிகவும் சுத்தமாகவும், இஸ்திரி செய்தும் அவர் வைத்திருப்பார். தூய்மையின் மொத்த உருவமாக காந்திஜி விளங்கிவந்தார்.

5

காந்திஜி ஒரு முடிதிருத்துபவர்

காந்திஜி தென் ஆப்பிரிக்காவுக்கு வந்து ஒருவார காலம் ஆகி இருந்தது. அவரது பாரிஸ்டர் பணியின் நிமித்தம் அவர் வேறு ஒரு பெரிய ஊரில் ஓர் இரவு தங்க நேர்ந்தது. கோச் வண்டி ஓட்டியிடம் தன்னை அந்த ஊரின் பிரபலமான ஹோட்டலுக்கு இட்டுச் செல்லும்படி பணித்தார். ஹோட்டல் மானேஜரைச் சந்தித்து தங்குவதற்கு ஒரு அறை வேண்டும் என்று கேட்டார். அவரை ஏற இறங்க ஒருமுறை நோட்டம் விட்ட மானேஜர், அறை ஏதும் காலி இல்லை என்று கூறிவிட்டார். காந்திஜி, அவ்வூரில் அவருக்குத் தெரிந்த ஓர் இந்திய நண்பரின் கடையில் அன்றைய இரவுப் பொழுதைக் கழித்தார். அடுத்த நாள், அந்த நண்பரிடம் தனது ஹோட்டல் அனுபவத்தைக் கூறிய போது, அவர் "உங்களுக்கு ஹோட்டலில் இடம் கிடைக்கும் என்று எப்படி நம்பினீர்கள்?" என்று கேட்டார். "ஏன், ஹோட்டலில் ரூம் கேட்டதில் என்ன தவறு?" என்று காந்திஜியும் வியப்புடன் எதிர்க் கேள்வி கேட்டார். "எல்லாம் உங்களுக்குப் போகப் போகத் தெரிய வரும்," என்று அந்த நண்பரும் கூறினார். இந்தியர்களுக்கு தென் ஆப்பிரிக்காவில் இழைக்கப்பட்டு வந்த பல அநீதிகள், அவமானங்கள் பற்றி காந்திஜி கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிந்து கொண்டார். அவர் ஓடும் ரயிலிலிருந்து அடிக்கப்பட்டு, உதைக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். தெருவில் நடந்து செல்லும் போது கூட கன்னத்தில் அறையும் உதையும் அவருக்குக் கிடைத்தன. அப்போதும் அவருக்கு வெள்ளையர்கள், ஏன் கறுப்பர்களை வெறுக்கிறார்கள், துன்புறுத்துகிறார்கள் என்பது புரியவில்லை. "எல்லோருமே ஒரே கடவுளின் குழந்தைகள்தானே! கிறிஸ்தவ மதமும் அன்பைத்தானே போதிக்கிறது" என்றெல்லாம் சிந்தித்தார் அவர்.

ஒருநாள் முடிவெட்டிக் கொள்வதற்காக ஒரு முடிதிருத்தும் சலைக்கு அவர் சென்றார். அங்கிருந்த வெள்ளைய முடிதிருத்துபவர் "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று காந்திஜியைக் கேட்டார்.

"நான் முடிதிருத்திக் கொள்ள வந்திருக்கிறேன்," என்றார் காந்திஜி.

"மன்னிக்க வேண்டும். நான் உங்களுக்கு முடிதிருத்த முடியாது. நான் கறுப்பர்களுக்கு முடிதிருத்தத் தொடங்கினால் வெள்ளையர்கள் என்னிடம் வரமாட்டார்கள்."

இந்த அவமதிப்பை காந்திஜியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதையே மனதில் எண்ணி எண்ணிப் புலம்புவதாலோ, செய்தித்தாளுக்குக் கடிதம் எழுதுவதாலோ பிரச்சினை தீரப் போவதில்லை. நாம் பிறரைச் சார்ந்திருத்தல் கூடாது. நமது தேவைகளை நாமே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும், என்றெல்லாம் சிந்தித்த காந்திஜி, கடைக்குச் சென்று கத்தரிக் கோலை வாங்கி வந்தார். கண்ணாடி முன்பாக நின்று தானே தனது முடியைத் திருத்திக் கொண்டார். நிச்சயமாக அது ஒரு பாரிஸ்டர் செய்யக்கூடிய பணி அல்ல பின்னந் தலையைக் கரையான் அரித்த மாதிரி செய்துவிட்டார்! அதைப்பற்றி சிறிதும் கவலைப்படாமல் அடுத்தநாள் வழக்கம்போல் நீதிமன்றத்திற்குச் சென்றார். அவருடைய விசித்திரமான தலைமுடியைப் பார்த்து நண்பர்கள் வாய்விட்டுச் சிரித்தனர். ஒரு நண்பர் "உங்கள் தலைமுடிக்கு என்ன நேர்ந்தது?" என்று கேட்டே விட்டார். "எலிகள் கடித்து விட்டனவோ?" என்றும் கிண்டல் செய்தார். "இல்லை ஒரு வெள்ளைய முடிதிருத்துபவர் ஒரு கறுப்பனின் கறுப்பு முடியைக் கையால் தொட மாட்டேன் என்று கூறி விட்டார். அதனால் எப்படி ஆனாலும் சரி என்று எண்ணி, நானே எனது முடியைத் திருத்திக் கொண்டேன்," என்றார் காந்திஜி.

தனது 28வது வயதில் முடிதிருத்திக் கொள்வதில் இது காந்திஜியின் முதல் முயற்சி ஆகும். அதற்குப்பின் பல தடவைகள் அவர் கத்தரிக்கோலை பயன்படுத்தினார். காந்திஜியின் ஆசிரமவாசிகள் ஒருவர் முடியை மற்றவர் திருத்திக் கொண்டனர். காந்திஜி, ஆசிரம மாணவர்கள் எளியவாழ்க்கை முறையை மேற்கொள்ளவேண்டும் என்று விரும்பினார். ஆடம்பர வாழ்க்கை முறை, உடை, உணவு போன்றவை ஆசிரமத்தில் அனுமதிக்கப்படவில்லை. ஒரு தடவை ஞாயிற்றுக்கிழமையன்று காலை நேரத்தில் மாணவர்கள் குளிப்பதற்காகச் சென்று கொண்டிருந்தனர். காந்திஜி அவர்களை ஒவ்வொருவராகக் கூப்பிட்டு முடி திருத்தி விட்டார். காந்திஜி முடியை ஒட்டவெட்டிவிட்டது நிறையப் பேருக்குப் பிடிக்கவில்லை. ஒரு தடவை இரண்டு சிறுமிகளின் நீண்ட முடியைக்கூட அவர் திருத்திவிட்டார்.

தென் ஆப்பிரிக்கச் சிறைகளில் சீப்புகள் வழங்கப்படுவதில்லை. இரண்டுமாதம் அல்லது அதற்குமேலாக தண்டனை பெற்றவர்களின் முடி ஒட்டவெட்டப்பட்டது; மீசையும் மழிக்கப்

பட்டது. காந்திஜிக்கும், அவருடைய சகாக்களுக்கும் இவ்வழக்கத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டது. ஆனால், காந்திஜியோ சிறையின் வழக்கங்களை முற்றிலுமாக அனுபவிக்க விரும்பினார். தான் முடிதிருத்திக் கொள்ள விரும்புவதாக காந்திஜி எழுத்துமூலம் தெரிவித்ததை அடுத்து, அவருக்குக் கத்தரிக்கோல் வழங்கப்பட்டது. காந்திஜியும் அவரது ஒன்றிரண்டு நண்பர்களும் தினந்தோறும் இரண்டு மணி நேரத்திற்கு முடிதிருத்தும் பணி செய்துவந்தனர்.

அவர் ஆகாகான் சிறையில் இருந்தபோது ஒரு பெண்மணியும் அச்சிறையில் இருந்தார். "எனக்கு ஒரேயடியாக முடி உதிர்கிறது. நான், எனது முடியைத்திருத்திக் கொண்டு மருந்துகளைப் போட்டுக் கொள்ளட்டுமா?" என்று காந்திஜியிடம் அப்பெண்மணி கேட்டார். அவர் உடனேயே கத்தரிக்கோலைக் கொண்டுவரச் சொல்லி அப்பெண்மணிக்கு முடிதிருத்தி விட்டார். அப்போது அந்த முடிதிருத்திய மகாத்மாவின் வயது 75.

சுதேசி இயக்கத்தின்போது காந்திஜி வெளிநாட்டு ஷவரக் கத்திகளைத் தூக்கி எறிந்துவிட்டு இந்தியாவில் தயார் செய்த கத்திகளைப் பயன்படுத்தத் தொடங்கினார். கொஞ்சம் கொஞ்சமாக அதைக் கொண்டு முகத்தை மழித்துக் கொள்ளப் பயின்றார். சிறிது காலத்திற்குப்பின் கண்ணாடி, சோப்பு, பிரஷ் ஏதும் இல்லாமலேயே முகத்தை மழித்துக் கொள்ளவும் அவரால் முடிந்தது. அவர் இப்போது தாம் முடிதிருத்தும் பணியில் தேர்ச்சி பெற்றுவிட்டதாகக் கருதினார். ஒருமுறை ஒரு நாவிதருக்கு இப்படி ஒரு சான்றிதழையும் அளித்தார். "முன்னிலால் எனக்கு சிரத்தையுடன் நல்லமுறையில் முகத்தை மழித்து விட்டார். இதற்கு அவர் இந்தியாவில் தயாரித்த ஷவரக் கத்தியையே பயன்படுத்தினார். மேலும், சோப்பை உபயோகிக்கவில்லை". காந்திஜியின் பல நண்பர்களுக்கு இந்த ஏற்பாடு பிடித்துவிட்டது. முகத்தை மழித்துக் கொள்வது அவர்களுக்கு எளிதாகவும் திருப்தியாகவும் இருந்தது.

கிராமத்து நாவிதர்கள் அறுவை சிகிச்சை நிபுணர்கள் என்பது காந்திஜிக்குத் தெரியும். கொப்புளங்களை அறுப்பதிலோ, காலில் தைத்த முள்ளை வெளியே எடுப்பதிலோ அவர்கள் வல்லவர்கள். ஆனால், அவர்கள் அணியும் உடை அசுத்தமாக இருந்தது. அவர்களது உபகரணங்களும் துருப்பிடித்தவையாக இருந்தன.

ஒரு தடவை சேவாகிராமில் காந்திஜியின் ஒரு ஹரிஜன உதவியாளர் "நான் வார்தாவுக்குப் போகவேண்டும்" என்று

சொன்னார். காந்திஜி அங்கு எதற்காகப் போகவேண்டும் என்று கேட்டதற்கு "முகத்தை மழித்துக் கொள்வதற்காக" என்று பதில் கொடுத்தார்.

"இந்த கிராமத்திலேயே முகத்தை மழித்துக் கொள்ள முடியாதா?"

"ஜாதி இந்துக்கள் எனக்காக இப்பணியைச் செய்ய மாட்டார்கள். இந்த ஊரில் ஹரிஜன நாவிதர் யாரும் கிடையாது."

"அப்படியானால் அந்த இந்து நாவிதரிடம் நான் எப்படி முகத்தை மழித்துக் கொள்ளலாம்?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டார், காந்திஜி. உடனடியாக அந்த நாவிதரிடம் செல்வதை காந்திஜி நிறுத்திக் கொண்டார்.

காந்திஜி அடிக்கடி பல கிராமங்களுக்கு பயணம் செய்யும் சமயங்களில் அவருக்குத்தானே முகத்தை மழித்துக் கொள்ள நேரம் கிடைக்காத காரணத்தால் முடிதிருத்தகங்களுக்கு அவ்வப்போது காந்திஜி செல்வது உண்டு.

ஒரு கதர்ப் பயணத்தின்போது கதர் ஆடை அணிந்த நாவிதர் அவரது முகத்தை மழித்துவிட வேண்டும் என்று காந்திஜி விரும்பினார். உதவியாளர்கள் அப்படி ஒரு நாவிதரைத் தேடி இங்கும் அங்கும் ஓடினார்கள். காந்திஜி அவர்களிடம் சொல்வார் "நமது சுதேசி இயக்கத்தில் முடிதிருத்துபவர்களையும் சலவைத் தொழிலாளிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக முடிதிருத்துபவர்கள் சரியான அரட்டைக்கல்லிகள். சுதேசி இயக்கத்தின் நோக்கங்களையும் செய்திகளையும் பரப்புவதற்கு சரியான ஆட்கள்."

மற்றொரு சந்தர்ப்பத்தில், ஒரிஸ்ஸாவில் காந்திஜி முடிதிருத்துபவரின் வருகைக்காகக் காத்திருந்தார். முகத்தை மழிப்பதற்கான உபகரணங்களுடன் ஒரு பெண்மணி அங்கு தோன்றினார். அவர் காதில் பெரிய வளையங்களையும், மூக்கில் மூக்குத்தியும், கழுத்தில் நெக்லசும், காலில் கொலுசும், கைகளில் அரக்கு வளையல்களையும் அணிந்திருந்தார். காந்திஜி

அவரிடம் முதலில் கேட்டார் "நீங்கள்தான் எனது முகத்தை மழித்துவிடப் போகிறீர்களா?" என்று. அப்பெண்மணி "ஆம்" என்று சிரிப்புடன் தலையை ஆட்டிவிட்டு கத்தியைத் தீட்டத் தொடங்கினார். காந்திஜி மறுபடியும் கேட்டார் "நீங்கள் ஏன் இவ்வளவு ஆபரணங்களை அணிந்துள்ளீர்கள்? இவற்றால் உங்கள் அழகு கூடியதாகத் தெரியவில்லை. அவை அசிங்கமாகவும் அழுக்காகவும் உள்ளனவே!" என்று. அப்பெண்மணிக்கு அழுகை வந்துவிட்டது. "உங்களுக்கு எப்படிப் புரியவைப்பது, இப்பொன்னான சந்தர்ப்பத்திற்காக நான் இந்த நகைகளை இரவல் வாங்கி வந்திருப்பதை. ஒரு பெரிய மனிதனது முகத்தை மழிப்பதற்கு வரும்போது நகைகளை அணியாமல் வருவது முறையாகாதே," என்று கூறியவண்ணம் தன்பணியை அப்பெண்மணி செய்து முடித்தார். காந்திஜி அப்பெண்மணியிடம் கொடுத்த காசை அவர் காந்திஜியின் பாதங்களில் சமர்ப்பித்து அவரை வணங்கிவிட்டுச் சென்றுவிட்டார்.

இந்தியாவிடமும் மனித வர்க்கத்திடமும் அன்புள்ளவர்கள் தங்களுக்குத் தாங்களே கேட்டுக் கொள்ள வேண்டிய ஒரே கேள்வி, இந்தியாவின் படுமோசமான நிலையையும் துயரத்தையும் குறைப்பதற்கு அனுபவ சாத்தியமான சிறந்த முறை என்ன என்பது தான். மனிதனின் புத்தி நுட்பத்தினால் உருவாக்கப்படும் எந்த நீர்ப்பாசனத்திட்டமோ, விவசாய அபிவிருத்தித் திட்டமோ, இந்தியாவெங்கும் சிதறி வாழும் ஏராளமான மக்கள் தொகையினருக்கு நன்மை செய்து விடவோ, சதா வேலையில்லாதவர்களாக இருக்க நேர்ந்திருக்கும் மனித வர்க்கத்தின் பெருந்திரளுக்கு வேலை தேடிக் கொடுத்துவிடவோ முடியாது.

— யங் இந்தியா 15-9-1927

6

காந்திஜி ஒரு துப்புரவுத் தொழிலாளி

இளம் வயதில் காந்திஜி ராஜ்கோட்டில் வசித்து வந்த காலத்தில் அவரது வீட்டில் ஊக்கா என்ற பெயர் கொண்ட ஒரு துப்புரவுத் தொழிலாளி பணியாற்றி வந்தார். காந்திஜி ஊக்கா மீது பட்டுவிட்டால் உடனடியாக புத்லிபாய், காந்திஜியைக் குளித்துவிட்டு வரும்படி கூறுவது வழக்கம். தாய் சொல்லைத் தட்டாத காந்திஜிக்கு இந்த விஷயத்தில் மட்டும் சற்றுத் தயக்கம் ஏற்படும். தன் தாயுடன் "நான் ஏன் குளிக்க வேண்டும்?" என்று தர்க்கம் செய்யத் தொடங்குவார். ஊக்கா துப்புரவுப் பணி செய்கிறார். அழுக்குகளை அகற்றுகிறார். அவரைத் தொட்டதால் தீட்டு எப்படி வந்துவிடும்? நான் உங்களது வார்த்தையை மீறமாட்டேன். ராமாயணத்தில் ராமர் கீழ்ச் சாதியைச் சேர்ந்த குகனைக் கட்டி அணைத்துக் கொண்டாரே, ராமாயணத்தில் தப்பாகவா சொல்லி இருக்கிறார்கள்?" என்றெல்லாம் புத்லிபாயை கேள்விகளால் துளைத்தெடுத்து விடுவார் காந்திஜி. இந்தக் கேள்விகளுக்கு புத்லிபாயிடம் பதில் கிடைக்காது.

துப்புரவுத் தொழிலை காந்திஜி தென் ஆப்பிரிக்காவில் பயின்றார். அவருடைய நண்பர்கள் அவரைச் செல்லமாக "மகா துப்புரவாளர்" என்று அழைத்து வந்தனர். மூன்று ஆண்டுகள் வாசத்திற்குப்பின் தனது மனைவியையும் மகன்களையும் அழைத்துச் செல்வதற்காக அவர் இந்தியா திரும்பினார். அன்றைய பம்பாய் மாகாணத்தில் அப்போது பயங்கரமான பிளேக் நோய் பரவி இருந்தது. அந்த நோய் ராஜ்கோட்டிற்கும் பரவிவிடும் அபாயம் இருந்தது. காந்திஜி உடனடியாக ராஜ்கோட்டில் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளத் தாமாகவே முன்வந்தார். ஒவ்வொரு வீட்டையும் பார்வை இட்டு கழிப்பறையைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். துர்நாற்றத்துடனும் பூச்சி புழுக்களுடனும் ஆங்காங்கே தேங்கிக் கிடந்த சாக்கடைகள் அவருக்கு அருவருப்பை ஊட்டின. சில பணக்கார வீடுகளில்கூட பின்புறம் தேங்கிக் கிடந்த சாக்கடைகள் கழிப்பறையாகவும் பயன்படுத்தப்பட்டன. அவற்றிலிருந்து தாங்கமுடியாத துர்நாற்றம் வீசிற்று. அங்கு வசித்த மக்களுக்கு இதைப்பற்றி எவ்வித உணர்வும் இல்லை. தீண்டத்தகாதவர்களாக முத்திரை

குத்தப்பட்டிருந்த ஏழை மக்கள் வசிக்கும் பகுதி சுத்தமாக இருந்தது. அங்கு வசித்த மக்கள் காந்திஜியின் வார்த்தைகளை மதித்தனர். சிறுநீருக்கும் மலத்திற்கும் தனித்தனி வாளிகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற காந்திஜியின் அறிவுரை அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ராஜ்கோட்டில் காந்திஜியின் குடும்பம் எல்லோருக்கும் தெரிந்த பிரபலமான குடும்பங்களில் ஒன்று ஆகும். காந்திஜியின் தந்தையும் பாட்டனாரும் பக்கத்துப் பக்கத்து சமஸ்தானங்களில் திவானாகப் பணியாற்றி வந்தனர். கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு முன் ஒரு சமஸ்தானத்தின் முதல் மந்திரியின் மகன், ஊரில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கழிப்பறையைப் பார்வையிட்டது சாதாரண விஷயம் அன்று. தேவைப்பட்ட சமயங்களில் எல்லாம் மனத்திண்மையையும், துணிவையும் காட்டுவதற்கு காந்திஜி தயங்கியதே இல்லை. பல மேற்கத்திய பழக்க வழக்கங்களை காந்திஜி சாடி வந்தார். ஆனால், அவர் பல தடவைகளில், தான் சுத்தத்தையும் சுகாதாரத்தையும் மேலை நாட்டினரிடம் கற்றதாகக் கூறியுள்ளார். அம்மாதிரி ஒரு சுகாதாரச் சூழலை இந்தியாவில் அறிமுகப்படுத்த காந்திஜி விரும்பினார்.

தென் ஆப்பிரிக்காவிலிருந்து இரண்டாவது முறை இந்தியாவுக்கு வந்தபோது கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில் அவர் கலந்து கொண்டார். தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு இழைக்கப்பட்டுவந்த இன்னல்களை எடுத்துக் கூறுவதற்காக அவர் அங்கு வந்தார். அவர் கண்டது அங்கு நிலவிய வர்ணனைக்கு அப்பாற்பட்ட சுகாதாரச் சீர்கேட்டை! மகாநாட்டிற்கு வந்திருந்த சில பிரதிநிதிகள் தங்களது அறைக்கு வெளியே இருந்த வெராண்டாவையே கழிப்பறையாகப் பயன்படுத்தினர். அதுபற்றி யாரும் எவ்வித ஆட்சேபனையும் எழுப்பவில்லை! காந்திஜி இதைக் கடுமையாக ஆட்சேபித்தார். கட்சித் தொண்டர்களிடம் காந்திஜி வெராண்டாவை சுத்தம் செய்யும்படி கேட்டபோது, "இது தோட்டிகளின் பணி, எங்களது பணி அல்லவே," என்று கூறிவிட்டனர். காந்திஜி ஒரு துடைப்பத்தைக் கையில் எடுத்து, தாமே துப்புரவுப் பணியை மேற்கொண்டார். அப்போது அவர் மேலைநாட்டு உடைகளை அணிந்திருந்தார். காந்திஜி அந்த உடையுடன் தோட்டிவேலை செய்ததைக் கண்டு, தொண்டர்கள் ஆச்சரியத்துடன் வேடிக்கை பார்த்தார்கள்; ஆனால் ஒரு தொண்டர்கூட காந்திஜியுடன் சேர்ந்து துப்புரவுப் பணி செய்ய முன்வரவில்லை

பல ஆண்டுகளுக்குப் பின்பு காந்திஜி காங்கிரஸ் கட்சியின் பெருந் தலைவரானார். அப்போது, அவர் காங்கிரஸ் கூட்டங்கள் நடக்கும் இடங்களில் எல்லாம் ஒரு 'தோட்டிகள் குழு' அமைத்து துப்புரவுப் பணி ஆற்றிவந்தார். சில சந்தர்ப்பங்களில் பிராமணர்கள் தோட்டிகளாகப் பணியாற்றினர். ஹரிபுரா காங்கிரஸில் இரண்டாயிரம் ஆசிரியர்களும் மாணவர்களும் தோட்டிப் பணிக்காக விசேஷப் பயிற்சி பெற்று பணியாற்றினர். "தீண்டத் தகாதவர்கள்" என்று முத்திரை குத்தப்பட்ட சில நபர்கள்தான் துப்புரவுப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்பதை காந்திஜி ஒப்புக் கொள்ளவில்லை. தீண்டாமையை இந்தியாவிலிருந்து அகற்றுவதற்கே காந்திஜி பாடுபட்டு வந்தார்.

தென் ஆப்பிரிக்க வெள்ளையர்கள் இந்தியர்களை அவர்களது சுகாதாரக் குறைவான வாழ்க்கை முறைகளின் காரணமாகவே வெறுத்தனர். காந்திஜி இந்தியர்களின் வீடுகளுக்குச் சென்று சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பேணிக்காப்பதின் அவசியத்தைப் பற்றி வலியுறுத்தி வந்தார். இதுபற்றி பொதுக் கூட்டங்களிலும் பேசினார். பத்திரிகைகளிலும் கட்டுரைகள் எழுதி வந்தார். டர்பனில் காந்திஜியின் வீடு மேற்கத்தியப் பாணியில் அமைக்கப்பட்டிருந்தது. குளியலறையிலிருந்து தண்ணீர் வெளியேறுவதற்கான மார்க்கம் இல்லை. சிறுநீர் கழிப்பதற்கென்று பானைகள் பயன்படுத்தப்பட்டன. தன்னுடன் பணியாற்றிய குமாஸ்தாக்கள் பயன்படுத்திய சிறுநீர்ப் பானைகளை காந்திஜியே சில சமயங்களில் சுத்தம் செய்து வந்தார். ஒரு தடவை அவர் அன்னை கஸ்தூர்பாவை சிறுநீர்ப் பானையை சுத்தம் செய்து வைக்கும்படி பணித்தார். தனது மகன்களையும் அவர் அப்பணியில் பழக்கி இருந்தார். ஒருதடவை ஒரு கீழ்ச்சாதி ஊழியர் பயன்படுத்தியிருந்த சிறுநீர்ப் பானையை சுத்தம் செய்ய கஸ்தூர்பா தயங்கியபோது, காந்திஜி அவரைக் கண்டபடி திட்டி வீட்டைவிட்டு வெளியேறும்படி கூறிவிட்டார். காந்திஜியின் நெருங்கிய நண்பர்களே கூட அவர் சபர்மதி ஆசிரமத்தில் ஹரிஜனங்களை அனுமதித்ததைக் கண்டித்து அவரைப் புறக்கணித்தது உண்டு.

தென் ஆப்பிரிக்க சிறைவாசத்தின்போது காந்திஜி தாமாகவே கழிப்பறைகளை சுத்தம் செய்ய முன்வந்தார். அடுத்த தடவை சிறைச் சாலையில் துப்புரவுப் பணி காந்திஜிக்கு வழங்கப் பட்டது.

இருபது ஆண்டுகள் தென் ஆப்பிரிக்க வாசத்திற்குப் பின்பு தனது 46வது வயதில் 1915ம் ஆண்டு காந்திஜி தனது குழுவினருடன் இந்தியா திரும்பினார். அந்த ஆண்டு ஹரித்வாரில் கும்பமேளா நடந்தது. அங்கு காந்திஜியும் அவரது துப்புரவுப் படையும் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டது. அதே ஆண்டில் அவர் பூனாவில் இந்தியத் தொண்டர் கழகத்தின் அலுவலகத்திற்குச் சென்றார். அந்தக் குடியிருப்பில் இருந்தவர்கள் ஒரு நாள் காலை நேரத்தில் காந்திஜி கழிப்பறைகளைச் சுத்தம் செய்வதைக் கண்டனர். அவர்களுக்கு காந்திஜியின் இப்பணி சற்றும் பிடிக்கவில்லை. காந்திஜியோ இது போன்ற பணிகள்தான் நாட்டை சுயாட்சிக்கு இட்டுச் செல்லும் என்று நம்பினார்.

காந்திஜி பலதடவைகள் இந்தியா முழுவதையும் சுற்றிப் பார்த்திருக்கின்றார். அவர் சென்ற இடங்களில் எல்லாம் சுகாதாரக் கேட்டினைக் கண்டார். ரயில் நிலையங்களிலும் சத்திரம் சாவடிகளிலும் இருந்த சிறுநீர்கழிக்கும் இடங்களும் கழிப்பறைகளும் சகிக்க முடியாத துர்நாற்றத்துடன் சுத்தம் செய்யப்படாமல் இருந்தன. கிராமத்து சாலைகளும் சரியாக பராமரிக்கப்படாது இருந்தன. பல புனிதமான தீர்த்தஸ்தலங்களில் தண்ணீர் மிகவும் அசுத்தமாக இருந்தது பற்றி கவலைப்படாமல் ஜனங்கள் அவற்றில் மூழ்கி எழுந்ததை காந்திஜி கண்டார். நதிக்கரைகளை மக்களே அசுத்தம் செய்தனர். சலவைக்கல் தளத்துடன் அமைந்திருந்த காசி விசுவநாதர் கோயிலும் அசுத்தத்தின் உறைவிடமாகவே விளங்கியது. இவ்வளவு பெரிய புகழ்பெற்ற கோவில்களில் நுழைவதற்கு நாம் ஏன் அசுத்தம் நிறைந்த சந்து பொந்துகளின் வழியாகச் செல்ல வேண்டியுள்ளது என்று காந்திஜி வியப்படைவதுண்டு. ரயில் வண்டிகளிலும் பயணிகள் அசுத்தம் செய்து வந்தது பற்றி காந்திஜி மிகவும் வருந்தினார். இந்தியாவில் நிறையப்பேரிடம் செருப்பு அணியும் அளவிற்கு வசதி இல்லை. ஆனால், வெறுங்கால்களுடன் அவர்கள் அசுத்தம் நிறைந்த தெருக்களின் வழியாக நடந்து செல்ல வேண்டியுள்ளதே என்று காந்திஜி வருந்தினார். பம்பாய் போன்ற பெரிய நகரங்களில்கூட தெருக்களில் நடக்கும்போது வீடுகளிலிருந்து யாரும் தம்மீது துப்பி விடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுடன் தான் நடக்க முடிந்தது

பல நகராட்சிகள் காந்திஜியைப் பேசுவதற்கு அழைப்பது உண்டு. அக்கூட்டங்களில் எல்லாம் "நீங்கள் அகன்ற சாலைகளையும், அழகிய பூங்காக்களையும், ஒளி விளக்குகளையும்

அமைத்துள்ளது பற்றி உங்களைப் பாராட்டுகிறேன். ஆனால், சரியான முறையில் கழிப்பறைகளை அமைக்காமலும் தெருக்களை அசுத்தமாகவும் வைத்திருக்கும் நகராட்சிகள் நாட்டுக்குத் தேவை இல்லை" என்று உரையாற்றி வந்தார் காந்திஜி. நகராட்சிகள் தீர்க்கவேண்டிய தலையாய பிரச்சினை சுகாதாரச் சீர்கேடு தான். துப்புரவுப் பணியாளர்களின் வாழ்க்கை பற்றி நகராட்சிகள் அக்கறை காட்டுவதில்லை என்று காந்திஜி வருந்தினார்.

"நீங்களே கைகளில் துடைப்பத்தையும் வாளியையும் தூக்காதவரை உங்களது நகரங்களும் கிராமங்களும் அசுத்தமாகத்தான் இருக்கும்" என்று ஜனங்களிடம் காந்திஜி கூறி வந்தார். ஒரு மாதிரிப் பள்ளியைப் பார்வையிடச் சென்ற காந்திஜி ஆசிரியர்களிடம் "உங்கள் பள்ளி உண்மையிலேயே ஒரு மாதிரிப் பள்ளியாக விளங்க வேண்டுமானால் நீங்கள் மாணவர்களுக்குக் கல்வி புகட்டினால் மட்டும் போதாது, மாணவர்களைச் சிறந்த சமையல்காரர்களாகவும் துப்புரவுப் பணியாளர்களாகவும் உருவாக்க வேண்டும்" என்று கூறினார். மாணவர்களிடம் பேசும்போது "உங்களது சுற்றுப்புறத்தை நீங்கள்தான் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். ராணுவத்தில் சேர்ந்து போரில் வீரதீரச் செயல்களுக்காக அளிக்கப்படும் பதக்கத்தைக் காட்டிலும் ஒரு சிறந்த துப்புரவுப் பணியாளன் என்பதற்கான பதக்கம்தான் மேலானது" என்றார் காந்திஜி.

சபர்மதி ஆசிரமத்தின் பக்கத்துக் கிராமங்களில் வசித்த மக்கள் கழிவுகளை மண்ணால் மூடிவைப்பதற்கு மறுத்தனர். "இது தோட்டியின் வேலை. மனிதக் கழிவுகளைக் கண்ணால் பார்ப்பதோ, அதன் மீது மண்ணைப் போடுவதோ பாவச் செயல்" என்று கிராமவாசிகள் கூறினர். காந்திஜி கிராமங்களின் துப்புரவுப் பணியைத் தாமே முன்னின்று மேற்பார்வை செய்தார். நல்லதோர் முன் உதாரணமாக — தாமே கையில் துடைப்பத்தையும் வாளியையும் ஏந்தி பல நாட்கள் கிராமங்களில் துப்புரவுப் பணியை அவர் மேற்கொண்டார். நண்பர்களும் விருந்தினர்களும் அவருடன் சென்றனர். வாளிகளில் கழிவுகளையும் குப்பைகளையும் கொண்டுவந்து குழிகளில் புதைத்தனர். குப்பைகளை அகற்றுவதும் ஒரு அறிவியல் பாடம் என்றே காந்திஜி கருதினார்.

ஆசிரமத்தில் அனைத்து துப்புரவுப் பணிகளையும் ஆசிரமவாசிகளே மேற்கொண்டனர். காந்திஜி அவர்களை வழிநடத்தி வந்தார். வெவ்வேறு நாட்டினரும், வெவ்வேறு மதத்தினர், வெவ்வேறு ஜாதியினர், வெவ்வேறு நிறத்தினர் ஆசிரமத்தில் இருந்தனர்.

ஆசிரமத்தில் எங்குமே அசுத்தத்தைக் காணமுடியாது. எல்லாக் குப்பைகளும் பூமியில் புதைக்கப்பட்டன. காய்கறிகள் வெட்டிய பின் எஞ்சிய கழிவுகளும் சாப்பாட்டுக்குப்பின் எஞ்சிய கழிவுகளும் தனியாக ஒரு உரக் குழியில் போடப்பட்டன. மனிதக் கழிவுகளும் தனியாக புதைக்கப்பட்டு சிறிது காலத்திற்குப்பின் நல்ல உரமாகப் பயன்படுத்தப்பட்டது. கழிவு நீர் தோட்டத்திற்கு நீர்பாய்ச்சப் பயன்பட்டது. நிலையான சாக்கடை வாய்க்கால்கள் இல்லாமலேகூட ஆசிரமம் சுத்தமாகவும், ஈக்கள் மொய்க்காமலும் இருந்தது. துப்புரவுப் பணிகளைக் காந்திஜியும், சகஊழியர்களும் தாமே செய்து வந்தனர். வாளி, வாய்க்கால் போன்ற அமைப்பிலும் கழிப்பறைகளை காந்திஜி அமைத்திருந்தார். பெருமையுடன் எல்லோருக்கும் தனது கண்டுபிடிப்புகளை அவர் காட்டி வந்தார். ஏழைகளும் பணக்காரர்களும், தொண்டர்களும் தலைவர்களும், இந்தியர்களும் வெளிநாட்டினரும் எவ்விதப் பாகுபாடும் இன்றி அக்கழிப்பறைகளை பயன்படுத்தி வந்தனர். இந்தப் பரிசோதனையின் காரணமாக துப்புரவுப்பணி மீது இருந்த அருவருப்புணர்வு ஆசிரம ஊழியர்கள் மற்றும் பெண்களின் மனதிலிருந்து அகன்று விட்டது.

தனக்கு துப்புரவுப்பணி செய்யும் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் காந்திஜி மகிழ்ச்சி அடைந்தார். மக்களுடைய சுகாதாரத்தின் துலாக்கோல் அவர்கள் பயன்படுத்தும் கழிப்பறை தான் என்பது காந்திஜியின் கருத்து. தனது 76 வது வயதில் அவர் பெருமையுடன் இவ்வாறு குறிப்பிட்டார். "நான் பயன்படுத்தும் கழிப்பறை எவ்வித துர்நாற்றமும் இன்றி பரிசுத்தமாக இருக்கிறது. அதை நானே சுத்தம் செய்து வருகிறேன்." பலதடவைகளில் அவர் தன்னை ஒரு தோட்டி என்றே கூறிக்கொண்டார். ஒரு தோட்டியாகவே தாம் இருக்க விரும்புவதாகவும் கூறிவந்தார். மிகவும் ஆச்சாரம் பாராட்டிய இந்துக்களிடம் தன்னையும் மற்ற தீண்டத் தகாதவர்களை அவர்கள் ஒதுக்குவது போல ஒதுக்கிவைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

துப்புரவுப் பணியாளர்கள் வசிக்கும் இடங்களுக்கு அவர் அடிக்கடி விஜயம் செய்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்து வந்தார். அவர்கள் செய்யும் பணி மேலானது என்றும் அதுபற்றி தாழ்வு உணர்வு கொள்ளவேண்டாம் என்றும் அவர்களுக்கு அறிவுறுத்தி வந்தார். குடிப்பழக்கத்தையும், இறந்த பிராணிகளின் புலால் உண்ணும் பழக்கத்தையும் விட்டு விடும்படி அவர்களைக் கேட்டுக் கொள்வார். காந்திஜி துப்புரவுப் பணியாளர்களின் வேலை நிறுத்தத்தை அவர்

ஆதரிக்கவில்லை. அப்பணியாளர்கள் ஒருநாள்கூட தங்களது பணியைச் செய்யத் தவறக்கூடாது என்று கூறிவந்தார்.

ஒரு மாதிரித் துப்புரவுப் பணியாளர் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி அவர் ஹரிஜன் பத்திரிகையில் இவ்வாறு எழுதினார். "நல்லதொரு கழிப்பறை எப்படிக் கட்டப்பட வேண்டும்? எப்படி சுத்தம் செய்யப்பட வேண்டும் என்பது பற்றி அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். கழிவுகளிலிருந்து வீசும் துர்நாற்றத்தை எப்படி அகற்றுவது, அதற்காக எந்தப் பொருளை பயன்படுத்தவேண்டும் என்பதும் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். மலஜலத்தை எப்படி உரமாக மாற்றுவது என்பது அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும்" துப்புரவுப் பணி கட்டாயத்தின்பேரில் ஊதியத்திற்காகச் செய்யப்படும் பணி என்ற நிலையை மாற்றி அதை சமுதாயத்திற்கு அவசியமானதோர் பணி என்ற நிலைக்கு உயர்த்த வேண்டும் என்பது காந்திஜியின் அவா.

கதர்ப் பிரச்சாரத்திற்காக காந்திஜி சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த சமயத்தில் அவர் பேசுவதாக இருந்த ஒரு பொதுக் கூட்டத்தில் துப்புரவாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. காந்திஜிக்கு இவ்விஷயம் தெரியவந்ததும் கோபத்துடன் அவர் கூறினார். "உங்களுடைய பணமுடிப்புகளையும் பேச்சுக்களையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். நான் துப்புரவாளர்கள் வசிக்கும் இடத்திற்குச் சென்று பேசப் போகிறேன். விருப்பம் உள்ளவர்கள் அங்கே வரலாம்!"

காந்திஜி அமரராவதற்கு இரண்டு ஆண்டுகள் முன்பாக சிலநாட்கள் பம்பாய் மற்றும் டில்லி நகரங்களில் அவர் பங்கி காலனியில் (துப்புரவாளர்கள் வசிக்கும் குடியிருப்பில்) தங்கினார். அவர்கள் இருப்பது போன்ற இடத்திலேயே இருந்து அவர்கள் உண்ணும் உணவையே தாமும் உண்ண விரும்பினார். ஆனால், இதுபோன்ற பரிசோதனைகளைத் தாங்கும் வயது அல்லவே அது! அதன் காரணமாக சில சலுகைகள் அவர்மீது (தொண்டர்களால்) திணிக்கப்பட்டன.

காந்திஜி ஒருமுறை கவர்னர் ஜெனரலைச் சந்திப்பதற்காக சிம்லா சென்றார். தனது சக ஊழியர்களில் ஒருவரை முன்னதாகவே துப்புரவாளர்கள் வசிக்கும் குடியிருப்பிற்கு அனுப்பி இருந்தார். சகஊழியர், மிருகங்கள் வசிப்பதற்குகூட அக்குடியிருப்புக்கள் லாயக்கற்றவை என்று காந்திஜியிடம் தெரிவித்தார். அதைக்கேட்ட காந்திஜி சோகத்துடன் கூறினார் "இன்று நாம் துப்புரவுத் தொழிலாளிகளை மிருகங்களின் நிலைக்குத் தள்ளி விட்டோம். தனது தன்மானத்தை விற்று அவர்கள் சிறிதளவு

சம்பாதிக்கிறார்கள். ஒரு துப்புரவுத் தொழிலாளி உணவு அருந்தும்போது அவனைப் பார்! கழிப்பறைச் சுவர்களின் நிழலில், குப்பை கூளங்களுக்கிடையே கூனிக்குறுகிய வண்ணம் அமர்ந்து உணவு உண்கிறார். ஒருவரது இதயத்தைப் பிளப்பதற்கு இதுவே போதும்!" மனிதக் கழிவுகளைத் தலையில் சுமந்த வண்ணம் ஒரு துப்புரவுத் தொழிலாளி நடந்து செல்வதைப் பார்த்து காந்திஜி ரொம்பவும் சங்கடப் பட்டார். சில எளிய உபகரணங்களின் உதவியுடன் இதைத் தவிர்க்க இயலும் என்று அவர் கூறிவந்தார். அது ஒரு கலை. தன்மீது சிறிதுகூட அசிங்கம் படாவண்ணம் இப்பணியைச் செய்ய முடியும் என்றும் அவர் சொன்னார்.

ஒரு வெளிநாட்டவர் காந்திஜியிடம் ஒரு முறை "உங்களை ஒரு நாளுக்கு (மட்டும்) இந்நாட்டின் கவர்னர் ஜெனரலாக நியமித்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டதற்கு "கவர்னர் ஜெனரலுடைய மாளிகையின் அருகே அமைந்துள்ள துப்புரவுத் தொழிலாளிகளின் குடியிருப்பைச் சுத்தம் செய்வேன்" என்று காந்திஜி பதில் அளித்தார்.

"உங்களை மேலும் ஒருநாள் அப்பதவியில் நீட்டித்தால்?"

"மறுநாளும் அதே பணியைத்தான் செய்வேன்".

நூற்பின் சாத்தியங்களைக் குறித்து இப்பொழுது பார்ப்போம். ஒரு காலத்தில் இது இந்தியாவில் எல்லோரும் செய்யும் துணைத் தொழிலாக இருந்து வந்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். இக்கலையை கோடிக்கணக்கானவர்கள் இன்னும் மறந்து விடவில்லை. பல்லாயிரக் கணக்கானவர்களின் வீடுகளில் இன்னும் ராட்டை இருந்து வருகிறது. ஆகையால் எல்லையில்லா வகையில் உடனே விஸ்தரித்துவிடக் கூடியது. கையினால் நூற்பது தான். ஒரு நெசவாளருக்குப் போதுமான நூலை பத்து நூற்பாளர்கள் நூற்றுக் கொடுத்து விட முடியும். எனவே 90 லட்சம் நெசவாளருக்கு 9 கோடி பேர் நூற்க வேண்டும். அவர்களுக்கு நல்ல வருமானமும் கிடைக்கும்.

— யங் இந்தியா 11-11-1926

7

காந்திஜி ஒரு செருப்புத் தைப்பவர்

தனது 63வது வயதில் காந்திஜி வல்லபாய் பட்டேலுடன் எரவாடா சிறையில் இருந்தார். பட்டேலுக்கு ஒரு ஜோடி புதிய செருப்பு தேவைப்பட்டது. ஆனால், அத்தருணத்தில் சிறையில் செருப்பு தைப்பவர் யாரும் இல்லை. காந்திஜி சொன்னார்: "எனக்கு நல்ல தோல் கிடைத்தால் நானே உங்களுக்கு செருப்பு தைத்துக் கொடுத்து விடுவேன். வெகு காலத்திற்கு முன் கற்றுக்கொண்ட அத்தொழில் எனக்கு இன்னமும் நினைவு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். நான் ஒரு நல்ல செருப்புத் தைப்பவனாக இருந்தேன். சேவாபூரில் உள்ள கதர் ஆசிரமத்தின் மியூசியத்தில் நான் தைத்த செருப்புகளைக் காணலாம். நான் அந்த ஜோடி செருப்புகளை யாருக்காகவோ அனுப்பினேன். அந்த நபர் தன்னால் அச்செருப்புகளை அணிய முடியாது என்றும், ஒரு அழகுப் பொருளாகத்தான் வைத்துக் கொள்ள முடியும் என்றும் சொல்லிவிட்டார். டால்ஸ்டாய் பண்ணையில் இருந்தபோது நான் நிறைய செருப்புகளைத் தைத்திருக்கிறேன்."

1911ம் ஆண்டு தனது உறவினர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் "நான் இச்சமயம் எல்லா நேரங்களிலும் செருப்பு தைப்பதில் ஈடுபட்டுள்ளேன். நான் இவ்வேலையை முக்கியமானது என்று கருதுகிறேன். மேலும் எனக்கு இந்த வேலை பிடித்திருக்கிறது. இதுவரை 15 ஜதை செருப்புகள் தயாரித்து விட்டேன். உனக்கு புதிதாகச் செருப்புகள் தேவைப்பட்டால், செருப்பின் அளவுகளைக் குறிப்பிட்டு எனக்கு கடிதம் போடவும்" என்று எழுதி உள்ளார்.

அவருடைய நெருங்கிய ஜெர்மானிய நண்பராகிய கல்லன்பாக்கிடமிருந்து காந்திஜி செருப்புத் தைக்கும் தொழிலைக் கற்றார். காந்திஜி நிறையப் பேர்களுக்கு செருப்பு தைப்பதைக் கற்றுக் கொடுத்தார். அவருடைய சீடர்களில் சிலர் குருவை மிஞ்சிய விதத்தில் தேர்ச்சி பெற்றனர். அவர்கள் தைத்த செருப்புகள் பண்ணைக்கு வெளியே விற்பனை செய்யப்பட்டன. இந்தச் செருப்புகள் சாண்டல் வகையைச் சேர்ந்தவை இவற்றை நீண்டகால்சட்டை (பாண்ட்) போட்டவர்களும் அணியலாம். நீண்டகால்சட்டையுடன் பூட்சுகளுக்கு பதிலாக சாண்டல் அணியும் புதிய பாணி (பாஷன்) காந்திஜி காரணமாக தென்

ஆப்பிரிக்காவில் உருவாகியது. சாண்டல்கள் காற்றோட்டமாக இருந்ததால் கோடை காலங்களில் பூட்ஸைக் காட்டிலும் சௌகரியமாக இருந்தன.

காந்திஜியிடம் ஆலோசனை கேட்பதற்காக ஒருதடவை சர்தார் பட்டேலும் ஜவஹர்லால் நேருவும் சேவாகிராமத்திற்கு வந்திருந்தனர். அப்போது காந்திஜி பயிற்சியாளர்களுக்கு வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தார். "துண்டுகளை இப்படிப் பொருத்த வேண்டும்; தையல் இப்படிப் போடவேண்டும்; சில துண்டுகள் இப்படிக் குறுக்காக வைக்கப்படவேண்டும்; அடித்தோல் உடலின் முழு எடையையும் தாங்குவதால், சரியான முறையில் பொருத்தப்பட வேண்டும்" என்றெல்லாம் காந்திஜி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அம்மாணவர்கள், தாங்கள் தைத்திருந்த செருப்புகளின் குறைகளை அகற்றிக் கொண்டிருந் தனர். தலைவர்கள் கோபத்துடன் "இந்த பொன்னான நேரத்தை இப்பயிற்சியாளர்கள் பாழடிக்கிறார்களே" என்று அங்கலாய்த் தனர். காந்திஜியும் கோபத்துடன்; "அவர்கள் பாடம் கற்றுக் கொள்வதைக் குறைகூறாதீர்கள்! வேண்டுமானால் நீங்களும் நல்லஜோடி செருப்பு எப்படி செய்யப்படவேண்டும் என்பதைக் கற்றுக் கொள்ளலாம்" என்று கூறினார்.

வேறொரு சந்தர்ப்பத்தில் காந்திஜியும் அவரது சக ஊழியர் களும் இறந்துவிட்ட ஒரு காளைமாட்டின் உடல் கிராமத்தில் வசிக்கும் தோல் பதனிடும் தொழிலாளர்களால் எப்படி தோலுரிக் கப்படுகிறது என்பதைப் பக்கத்தில் இருந்து பார்த்தார்கள். பதனிடுபவர்கள் வெகுசீராக, தோலில் எவ்வித சேதாரமும் இன்றி மாட்டின் உடலைக் கீறி தோல் உரித்தனர். அவர்களது திறமையைக் கண்டு காந்திஜி வியந்தார். ஒரு தேர்ந்த அறுவைச் சிகிச்சை நிபுணரால்க்கூட இவ்வளவு சீராக இப்பணியைச் செய்ய இயலாது என்று காந்திஜியிடம் சிலர் கூறினர். காந்திஜியைப் பொருத்தவரை, மருத்துவப் படிப்பு படிக்கும் மாணவர்கள் அனைவருமே தோல்பதனிடும் தொழிலாளர்கள்தான். ஒரு மருத்துவரின் பணி மரியாதைக்குரியதாகக் கருதப்படுகிறது. ஆனால், ஒரு தோல் பதனிடுபவரின் பணி அருவெருக்கத்தக்க தாகக் கருதப்படுகிறது. தோல் பதனிடுபவர்கள் தீண்டத்தகாத வர்களாகவும் முத்திரை குத்தப்பட்டு ஒதுக்கப்படுகிறார்கள்.

காந்திஜி செருப்புத் தைப்பதுடன் நிறுத்திவிடவில்லை. தோல் பதனிடும் தொழிலிலும் தேர்ச்சி பெற விரும்பினார். வேறு என்னதான் செய்வது? உலகம் முழுவதிலும் நிறைய மனிதர்கள் தோலினாலான செருப்புகளையும் பூட்சுகளையும் அணிகின்றனர்

கள். இதற்காக நிறைய ஆடுமாடுகள் கொல்லப்படுகின்றன. காந்திஜியோ அஹிம்சையில் நம்பிக்கை வைப்பவர். மிகவும் நோயுற்றிருந்த தன் மனைவிக்கு வைத்தியர்கள் புலால் உணவு அவசியம் என்று கூறியபோதும், நோயுற்றிருந்த மகன்களுக்கு முட்டை தரவேண்டும் என்பதையும் மறுத்த அம் மகான் செருப்பு தைப்பதற்காக ஆடு மாடுகளைக் கொல்வதை எப்படி ஏற்றுக் கொள்வார்? ஆனாலும், அவருக்கு தோல் தேவைப்பட்டது.

இயற்கையாகவே மரணம் எய்திவிட்ட ஆடு மாடுகளின் தோலை மட்டும் பயன்படுத்த வேண்டும் என்று அவர் தீர்மானித்து விட்டார். இப்படிப்பட்ட தோலிலிருந்து தைக்கப் பட்ட காலணிகள் 'அஹிம்சைக் காலணிகள்' என்று அழைக்கப் பட்டன. இறந்து விட்ட பிராணிகளின் உடல்களைக் காட்டிலும் கொல்லப்பட்ட பிராணிகளின் உடலிலிருந்து தோலுரிப்பது எளிதாக இருந்தது. தோல் தொழிற்சாலைகள் அஹிம்சைத் தோலைத் தயாரிப்பது இல்லை. அதனால்தான், காந்திஜி தோல் பதனிடும் தொழிலைக் கற்பது அவசியம் ஆகிவிட்டது.

அந்தக் காலகட்டத்தில் ஆண்டுதோறும் ஒன்பது கோடி ரூபாய் பெறுமான பதனிடப்படாத தோல் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. மேலை நாடுகளில் அத்தோல் சீரான முறையில் பதனிடப்பட்டு, பல தோல் பொருட்களாக மாற்றப்பட்டு, அதன் மதிப்பு பலகோடி ரூபாய்களாக உயர்த்தப் பட்டு, இந்தியாவில் மீண்டும் இறக்குமதி செய்யப்பட்டது. இதன் காரணமாக ஏற்பட்ட நஷ்டம் பணத்தில் மட்டும் அல்ல. பல தோல் பதனிடுவோர் மற்றும் செருப்பு தைக்கும் தொழிலாளி கள் வேலைவாய்ப்புகளை இழந்து கொண்டிருந்தனர். நூல் நூற்போர் மற்றும் துணி நெய்வோர் போன்று தோல் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களும் வேலை இல்லாத காரணத்தால் பட்டினியை எதிர்நோக்கும் அபாயம் ஏற்பட்டிருந்தது.

தோல் பதனிடும் தொழில் ஏன் வெறுக்கத்தக்கதாகக் கருதப்படுகிறது என்று காந்திஜி சிந்திப்பது உண்டு. பழங் காலத்தில் அப்படி இருந்திராது. ஆனால், இன்றோ லட்சக் கணக்கான மனிதர்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் தலைமுறை தலைமுறையாக தீண்டத் தகாதவர் களாகக் கருதப்படுகின்றனர். மேல் ஜாதியினர் இவர்களை வெறுத்து ஒதுக்குகின்றனர். சமுதாயத்தில் இவர்களுக்குக் கல்வி அறிவோ, கலாச்சாரமோ, சுத்தம் சுகாதாரமோ மரியாதையோ எதுவுமே கிடையாது என்ற சூழ்நிலை நிலவுகிறது. தோல் பதனிடுபவர்களும், துப்புரவுத் தொழிலாளர்களும் செருப்புத்

தைப்பவர்களும் சமுதாயத்திற்கு அவசியமான முக்கியப் பணிகளைச் செய்து வருகின்றனர்; இருப்பினும், சாதி வேறுபாடு காரணமாக இவர்களது வாழ்க்கை பரிதாபத்திற்குரியதாகி விடுகிறது. பிற நாடுகளில் ஒரு மனிதன் தோல் பதனிடுவதின் காரணமாகவோ செருப்புத் தைப்பதின் காரணமாகவோ அவன் ஏழையாகவும் எழுத்தறிவில்லாதவனாகவும் தீண்டத் தகாதவனாகவும் ஆகிவிடுவதில்லை.

கிராமத் தொழில்களுக்குப் புனர்வாழ்வு கொடுப்பதற்காக காந்திஜி பொதுமக்களின் ஆதரவு வேண்டி பலவேண்டுகோள்கள் விடுத்தார். தோல்பதனிடும் தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களை கிராமத்தில் தோல் பதனிடுபவர்களுடன் இணைந்து அவர்களது பணியினை மேம்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். தொழில்நுட்பம் மேம்படுத்தப்பட்டால் இறந்த மிருகங்களின் புலால் உண்ணப்படும் பழக்கத்தைத் தவிர்த்து விடலாம் என்று காந்திஜி எண்ணினார். ஒரு இறந்த பசுமாடு தோல்பதனிடுபவரின் வீட்டிற்குக் கொண்டுவரப்படும்போது அவ்வீடு விழாக்கோலம் பூண்டுவிடுகிறது. அன்று, அந்த மாட்டின் புலாலிலிருந்து பெரும் விருந்து அவர்களுக்குக் கிடைக்கும். வீட்டின் சிறுவர்கள் மாட்டின் உடல் அறுக்கப்படும் போது அதைச் சுற்றி ஆடிப்பாடி மகிழ்வார்கள். எலும்பு மற்றும் சதைப்பிண்டங்களை எடுத்து ஒருவர்மீது ஒருவர் வீசி சிரித்து மகிழ்வார்கள். அக்காட்சி, காந்திஜியை அருவருப்படையவைத்தது.

ஹரிஜன தோல் பதனிடுபவர்களிடம் அவர் வேண்டுகோள் விடுப்பதுண்டு; "நீங்கள் இறந்த மாட்டின் புலாலை உண்ணும் பழக்கத்தைக் கைவிட்டுவிடுங்கள். நீங்கள் அப்பழக்கத்தைக் கைவிடாவிட்டாலும், நான் உங்களுடன் எப்படியும் தொடர்ந்து பழகுவேன்; ஆனால், ஜாதிக்கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட இந்துக்கள் இது ஒரு மோசமான பழக்கம் என்று உங்களை வெறுத்து ஒதுக்குவார்கள்." அவர்கள் கொடுத்த பதில் "நீங்கள் எங்களை இறந்த மாட்டின் தோலை உரிக்கச் சொன்னால் அதன் புலாலை உண்ணும் பழக்கத்தை எங்களால் தவிர்க்க இயலாது." "ஏன் அப்படி? நானும் ஒருநாள் தோல் பதனிடும் தொழிலை மேற்கொள்வேன். ஆனால், இறந்த மாட்டின் புலாலை உண்ண மாட்டேன். என் அனுபவத்திலிருந்து என்னால் உறுதிபடக் கூறமுடியும். துப்புரவுத் தொழிலையும் தோல் பதனிடும் தொழிலையும் சுத்தமான மற்றும் சுகாதாரமான முறையில் மேற்கொள்ள முடியும்" என்பதைக் கேட்டார் காந்திஜி.

சபர்மதி மற்றும் வார்தா ஆசிரமங்களில் தோல் பதனிடும் மையங்கள் காந்திஜியால் துவங்கப்பட்டன. முதலில் சிறிய அளவில் துவங்கப்பட்டது. பிறகு, பதனிடப்பட்ட தோல்களை வைப்பதற்காக, பக்காவான கட்டிடங்கள் எழும்பின. அந்தக் காலத்திலேயே இக்கட்டிடங்களுக்காக காந்திஜி ரூ. 50,000/– நிதி திரட்டினார். ஆசிரமத்தில் சில பயிற்சியாளர்களுக்கு அனுபவம் மிக்க தோல் பதனிடும் தொழிலாளிகளின் உதவியுடன் அத்தொழிலில் பயிற்சி அளிக்கப்பட்டது. அங்கு தயாரிக்கப்பட்ட தோல் பொருட்கள் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டன. பணி முழுவதுமே இறந்த பிராணிகளின் உடல்களைக் கொண்டு செய்யப்பட்டன.

காந்திஜி, கல்கத்தாவில் அமைந்திருந்த தேசிய தோல் பதனிடும் தொழிற்சாலைக்கு விஜயம் செய்து, அங்கு குரோம் தோல் தயாரிக்கப்படும் முறைகளை உன்னிப்பாகப் பார்த்தார். உப்பு தடவப்பட்ட மாட்டுத் தோல்கள் சுண்ணாம்பு நீரில் ஊற வைக்கப்பட்டு எப்படி முடிகள் அகற்றப்படுகின்றன என்பதையும், அதன் பின்பு சாயம் எப்படி ஏற்றப்படுகிறது என்பதையும் காந்திஜி கண்டறிந்து கொண்டார். தாகூரின் நிறுவனமாகிய சாந்திநிகேதனிலும் தோல் பதனிடும் தொழில் துறையில் செய்யப்படும் ஆராய்ச்சிகள் பற்றி காந்திஜி அறிந்துகொண்டார். அதேசமயம் காந்திஜி கிராமங்களில் பழக்கத்திலிருந்த தோல் பதனிடும் முறைகளைக் கைவிட்டுவிட விரும்பவில்லை. அப்படிச் செய்தால் கிராமத்தில், அப்பணியில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு வேலை இல்லாமல் போய், அவர்கள் தோல் தொழில்களுக்காக நகரங்களைச் சார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிவிடும் அல்லவா? இறந்து போன மாட்டின் உடலை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பாதுகாப்பான முறையில் எடுத்துச் செல்வதற்கான வழிமுறை ஒன்றை காந்திஜி தேடிக் கொண்டிருந்தார். கிராமத்துத் தோல் பதனிடுவோர், மாட்டின் உடலைச் சமயத்தில் கால்களைப் பிடித்துத் தூக்கி, சமயத்தில் தரதரவென்று இழுத்து தோலைப் பாழடித்து அதன் மதிப்பைக் குறைத்து விடுகிறார்கள். அம்மாட்டின் எலும்புகளைச் சரியான முறையில் பயன்படுத்தும் திறனும் அவர்களுக்குக் கிடையாது. எலும்புகளை நாய்களுக்கு உணவாகப் போட்டு விடுகிறார்கள்.

இதனால் நஷ்டம் ஏற்படுகிறது. எலும்புகளிலிருந்து தயாரிக்கப்பட்ட கைப்பிடிகளும் பொத்தான்களும் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுகின்றன. தூளாக்கப்பட்ட எலும்பு நல்ல உரமாகும்.

காந்திஜி தோல் தொழிலாளர்களின் விடுகளுக்குச் சென்று அவர்களுடன் நெருங்கிப் பழகினார். அவர்களும் அவரைத் தங்களது வழிகாட்டியாகவும் தங்களது வாழ்வை மேம்படுத்த வந்த மகானாகவும் ஏற்றுக் கொண்டார்கள். அவர்களது குடியிருப்புகளுக்கு அவர் விஜயம் செய்தபோது காந்திஜியிடம் குடிநீர்த் தட்டுப்பாடு பற்றி புகார் கொடுத்தார்கள். ஊர்ப் பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க அவர்கள் அனுமதிக்கப் படுவதில்லை என்பதையும், கோவில்களில் அவர்கள் நுழைய முடியாது என்பதையும், ஊர்மக்கள் அவர்களுடன் பழகுவதைத் தவிர்க்கிறார்கள் என்பதையும் அதன் காரணமாகவே அவர்கள் ஊரிலிருந்து ஒதுக்குப்புறமான பகுதிகளில் வசிக்க வேண்டியுள்ளது என்பதையும் எடுத்துக் கூறினார்கள். காந்திஜிக்கு வெட்கமும் வேதனையும் ஏற்பட்டது. அவர்களுக்குப் பிச்சை போட காந்திஜி விரும்பவில்லை. தங்கள் கால்களிலேயே அவர்கள் நிற்கவேண்டும் என்றுதான் அவர் விரும்பினார். தாகூருடன் இணைந்து காந்திஜி வெளியிட்ட கருத்து இது. "உடல் உழைப்பு கேவலம் என்று கருதப்படும் பழக்கம் தோன்றிய நாளிலிருந்து இந்தியாவைப் பீடை பிடித்துவிட்டது. தங்களது உடன்பிறப்புகளுக்கு மனித உரிமைகளை மறுத்ததற்காகவும் அநியாயமாகவும் அநீதியுடனும் நடந்து கொண்டதற்காகவும் மேல் ஜாதியினர் பதில் சொல்லவேண்டிய நாள் வரத்தான் போகிறது."

தோல்பதனிடுவோருக்கு நியாயமான கூலியும் அவர்களது குழந்தைகளுக்குப் படிப்பறிவும் மருத்துவ உதவியும் கிடைப்பதற்காகப் பணி மேற்கொள்ளக் கூடிய சில நல்ல தொண்டர்களைக் காந்திஜி தேடிக்கொண்டிருந்தார். அக்குழந்தைகளுக்காக இரவுப் பள்ளிகள் நடத்தப்பட்டன. குழந்தைகள் பல்வேறு இடங்களுக்கு சுற்றுலா சென்றார்கள். காந்திஜி தாமே தோல்

தொழிலாளர்களுக்காக சில இரவுப் பள்ளிகளைத் தொடங்கி நடத்தினார்.

தோல் தொழிலாளர்களும் காந்திஜியின் வேண்டுகோளுக்கு இணங்க முன்வந்தனர். ஒரு சிலர் இறந்துபோன மாடுகளின் தோல்களை மட்டும் பதனிட ஒப்புக் கொண்டனர். வேறுசிலர் இறந்து போன மாட்டின் புலாலை உண்ணும் பழக்கத்தைக் கைவிட்டுவிடுவதாக வாக்களித்தனர். ஒருதடவை, அவர் தோல் தொழிலாளர்களின் கூட்டம் ஒன்றிற்குப் பிய்ந்து போன செருப்புகளை அணிந்த வண்ணம் கலந்து கொண்டார். அப்போது, அவர் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்ததால் அவரிடம் மாற்று ஜோடி செருப்புகள் இல்லை. அதைக் கண்ட தோல் தொழிலாளிகளில் இருவர் உடனடியாக அவருக்குப் புதிய ஜோடி செருப்புகளைத் தைத்து அன்பளிப்பாக வழங்கினர்.

காந்திஜி தனது தென் ஆப்பிரிக்க சிறைவாசத்தின்போது தமது கைகளினால் தைத்த ஒரு ஜோடி செருப்புகளை அச்சமயம் அந்நாட்டின் அதிபராக விளங்கிய ஜெனரல் ஸ்மட்ஸ் அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார். காந்திஜியின் 70வது பிறந்த தினத்தன்று ஜெனரல் ஸ்மட்ஸ் அவருக்கு அனுப்பிய வாழ்த்துக் கடிதத்தில், "சிறையில் நீங்கள் எனக்காக ஒரு ஜோடி செருப்புகளைத் தயாரித்து அளித்தீர்கள். அவற்றை நான் பலதடவைகள் அணிந்ததுண்டு; இருப்பினும் உங்களைப் போன்ற ஒரு மகாத்மா தயாரித்த அச்செருப்புகளை அணிய நான் தகுதி அற்றவன் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டுவிட்டது".

8

காந்திஜி ஒரு வேலைக்காரர்

வேலைக்காரர்கள் வழக்கமாகச் செய்து வரும் எல்லாப் பணிகளையும் ஆசிரமத்தில் காந்திஜி செய்து வந்தார். ஆசிரம வாழ்வுக்கு முன்பு அவர் வக்கீலாக இருந்தார். அப்போது ஆயிரக் கணக்கில் சம்பாதித்துக் கொண்டிருந்தார். இருப்பினும் தினமும் கோதுமையைத் திரிகையில் தன் கையால் அரைத்து வந்தார். கஸ்தூர்பாவும் குழந்தைகளும் அவருடன் சேர்ந்து சப்பாத்தி செய்வதற்கான கோதுமை மாவு அரைப்பது வழக்கம். சபர்மதி ஆசிரமத்தில் இப்பழக்கத்தை காந்திஜி தொடர்ந்து வந்தார். திரிகையில் பழுது ஏற்பட்டால் அதைத் தாமே மணிக்கணக்கில் உட்கார்ந்து சரி செய்வார். ஒரு முறை சமையலறையில் சப்பாத்தி செய்வதற்கு கோதுமை மாவு போதுமான அளவு இல்லை என்று ஒரு ஊழியர் காந்திஜியிடம் சொன்னபோது அவர் உடனே திரிகையின் அருகே அமர்ந்து மாவு அரைக்கத் தொடங்கி விட்டார். மாவு அரைப்பதற்கு முன் கோதுமையை நன்கு புடைத்து கல்பொறுக்கும் பணியையும் அவர் செவ்வனே செய்வார். ஆசிரமத்திற்கு வருகை புரிந்தவர்கள் பலதடவை களில் அவர் கோதுமையில் கல்பொறுக்குவதைப் பார்த்திருக் கிறார்கள். வெளி ஆட்களுக்கு எதிரேயும் எவ்விதமான பணியை யும் செய்ய அவர் தயங்கியதே இல்லை. தனது ஆங்கிலமொழி அறிவு பற்றிப் பெருமை கொண்டிருந்த கல்லூரி ஆசிரியர் ஒருவர் ஒரு முறை காந்திஜியைக் காண வந்தார். "பாபுஜி எனக்கு ஏதாவது வேலை கொடுங்கள்" என்று அவர் கேட்டார். காந்திஜி, தனக்கு ஏதாவது அலுவலகப் பணி தருவார் என்று அவர் எதிர் பார்த்தார். இதை ஊகித்துவிட்ட காந்திஜி, அவரை கோதுமை யைப் புடைத்து கல்பொறுக்கி வைக்கும்படி கூறிவிட்டார். கல்லூரி ஆசிரியர் சற்று மலைத்து விட்டார். ஒரு மணி நேரம் வரை சிரமத்துடன் அப்பணியைச் செய்தபின் தளர்ந்து போய் 'போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

பல ஆண்டுகளுக்கு காந்திஜி பண்டகசாலையில் உதவி யாளராகப் பணிபுரிந்தார். காலைப் பிரார்த்தனைக்குப் பின் காய்களை வெட்டி வைப்பதற்காக நேராகச் சமையலறைக்குச் சென்றுவிடுவார். சமையலறையிலும் சாமான்கள் வைக்கப் பட்டிருந்த அறையிலும் எங்காவது குப்பையோ ஓட்டையோ தென்பட்டால் காந்திஜி பணியாளர்களைக் கடிந்து கொள்வார். காய்கறிகள் பழங்கள் மற்றும் தானியங்களில் அடங்கியுள்ள

சத்துக்களைப்பற்றி அவர் நன்கு அறிந்திருந்தார். ஒருமுறை ஒரு ஊழியர் உருளைக்கிழங்குகளைக் கழுவாமலேயே வெட்டத் தொடங்கி விட்டார். காந்திஜி அவருக்கு உருளைக்கிழங்கையும் எலுமிச்சம்பழத்தையும் ஏன் முதலில் தண்ணீரில் கழுவவேண்டும் என்று விளக்கினார். வேறு ஒரு ஆசிரமவாசிக்கு காந்திஜி தோல் சற்று கறுத்திருந்த வாழைப்பழங்களைச் சாப்பிடக் கொடுத்த போது அந்த நபர் சற்று முகம் சுளித்தார். காந்திஜியோ அவரிடம் "உங்களது உடல்நிலையைக் கருத்தில் கொண்டு ஜீரண சக்தியை அதிகரிப்பதற்காகத்தான் இப்பழங்களை உங்களுக்குக் கொடுத்தேன்" என்று விளக்கினார். காந்திஜி தாமே ஆசிரமவாசிகளுக்கு அடிக்கடி உணவு பரிமாறி வந்ததால், உணவு காரசாரமாக இல்லையே என்று யாரும் புகார்கூற வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. தென் ஆப்பிரிக்கச் சிறை வாசத்தின்போது நூற்றுக்கணக்கான கைதிகளுக்கு இரண்டு வேளைகளிலும் அவர் உணவு பரிமாறி வந்தார். ஒவ்வொருவரும் தனது பாத்திரங்களைக் கழுவி வைத்துக் கொள்ள வேண்டும் என்பது ஆசிரமத்தின் நியதி. சமையல் பாத்திரங்களை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குழுவினர் கழுவி வைப்பர். ஒரு நாள் காந்திஜி ஒரு பெரிய கனமான பானையைக் கையில் ஏந்தி அதில் படிந்திருந்த கரியை அகற்ற முயற்சித்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த கஸ்தூர்பா அம்மையார் அப்பானையைத் தன் கைகளில் வாங்கிக் கொண்டு, "இது உங்கள் பணி அல்ல, இதைச் செய்ய வேறு ஆட்கள் இருக்கிறார்கள்" என்று கூறி விட்டார். காந்திஜியும் அம்மையாரின் பேச்சுக்குக் கட்டுப் படுவதே விவேகமாக இருக்கும் என்று எண்ணி அங்கிருந்து நகர்ந்து விட்டார். உலோகங்களினால் செய்யப்பட்டிருந்த பானைகள் எல்லாமே பளபளப்புடன் விளங்கினால்தான் காந்திஜிக்குத் திருப்தி. ஒரு தடவை சிறையில் தனது உதவி யாளரிடம் இரும்புச் சட்டிகள் வெள்ளி மாதிரி பளபளக்கும் விதத்தில் தேய்க்கப்பட வேண்டும் என்று கூறினார்.

ஆசிரமத்தில் கட்டிட வேலை நடந்து கொண்டிருந்தபோது நிறையப் பேர் கூடாரங்களில் தூங்க நேர்ந்தது. புதிதாக வந்த ஒருவருக்கு எங்கு தங்கவேண்டும் என்று தெரியாததால் படுக்கையை வெளியே வைத்து விட்டு உள்ளே விசாரிப்பதற்குச் சென்றார். விசாரித்துவிட்டுத் திரும்பி வரும் சமயம் எதிரே காந்திஜி அவருடைய படுக்கையைத் தோளில் சுமந்த வண்ணம் வருவதைக் கண்டார்.

ஆசிரமத்திற்கு வெளியே இருந்த கிணற்றிலிருந்து தண்ணீர் இழுப்பது தினசரிப் பணிகளில் ஒன்றாகும். ஒருநாள் காந்திஜி சற்று உடல்நலம் குன்றி இருந்தார். இருப்பினும், தனது

மாவு அரைக்கும் பணியைச் செய்து முடித்திருந்தார். இதற்கு மேலாகவும் உடலுழைப்பு எதும் காந்திஜி செய்ய வேண்டிய தில்லை என்றுஎண்ணிய ஒரு தொண்டர் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கும் பணியில் காந்திஜியின் பங்கையும் தாமே செய்துவிட்டார். காந்திஜிக்கு இது சற்றும்பிடிக்கவில்லை. வேறு பகுதியிலிருந்து ஒரு தொட்டியைக் கிணற்றடிக்குக் கொணர்ந்து அதில் தண்ணீர் நிரப்பிவிட்டுச் சென்றார், காந்திஜி. அத் தொண்டர் தம் செயலுக்காக வருந்தினார். அவரது உடல்நிலை நடமாட முடியாத அளவுக்கு மோசமாகப் போனால் ஒழிய, உடல் நலிவுற்றிருந்த சமயத்திலும் உடல் உழைப்பு உட்பட எல்லாப் பணிகளையும் செய்து முடிக்கவேண்டும் என்பது காந்திஜியின் வழக்கம், கொள்கையும் கூட, அதேபோல தான் ஒரு மகாத்மா என்பதாலோ, தனக்கு வயது அதிகம் ஆகிவிட்டது என்பதற்காகவோ, சில சிறிய பணிகளைச் செய்வதைத் தவிர்க்கவும் அவர் விரும்பவில்லை. அவருடைய மனோதிடமும் அவருக்கு இருந்த உழைப்புத் திறனும் அளவிட முடியாதவை. சோர்வை அவர் அறியார். தென் ஆப்பிரிக்காவில் போயர் யுத்தத்தின்போது தூக்குப் படுக்கையை (ஸ்ட்ரெச்சர்) சுமந்த வண்ணம் தினமும் 25 மைல்கள் (40 கிலோ மீட்டர்கள்) நடந்திருக்கிறார். சரியான நடைமன்னர்! டால்ஸ்டாய் பண்ணையில் இருந்த சமயத்தில் பல சந்தர்ப்பங்களில் ஒரே நாளில் 42 மைல்கள் (67 கிலோ மீட்டர்கள்) அவர் நடப்பதுண்டு. பையில் கொஞ்சம் சிற்றுண்டியை எடுத்துக் கொண்டு அதிகாலை 2 மணிக்கே புறப்பட்டு பக்கத்து ஊருக்குச் சென்று கடைகளில் வாங்கவேண்டிய பொருள்களை வாங்கிக் கொண்டு மாலையில் திரும்பிவிடுவார். மற்ற நண்பர்களும் இளைஞர்களும் காந்திஜியின் உதாரணத்தை மகிழ்ச்சியுடன் பின்பற்றி வந்தனர்.

ஒருதடவை பண்ணையில் பெரியதோர் பள்ளம் ஒன்றை மூடவேண்டி இருந்தது. பணியாளர்கள் மண்வெட்டிகள் கூடைகள் சகிதம் சென்று காலைப் பணியை முடித்து விட்டு வரும் போது அவர்களுக்கு பழங்களுடன் கூடிய காலை உணவை காந்திஜி தயாராக வைத்திருந்தார். "எங்களுக்காக ஏன் இவ்வளவு சிரமப்பட்டீர்கள்?" உங்கள் கையினால் உணவு பரிமாறப்படும் அளவிற்கு எங்களுக்குத் தகுதி இல்லையே", என்று ஊழியர்கள் கூறினர். காந்திஜி சிரித்த வண்ணம் கொடுத்த பதில் "நீங்கள் பணியை முடித்துவிட்டு களைப்புடன் திரும்பியுள்ளீர்கள். உங்களது காலை உணவைத் தயாரிப்பதற்கு என்னிடம் நேரம் இருந்தது; விஷயம் அவ்வளவுதான்!"

தென் ஆப்பிரிக்காவில் வாழும் இந்தியர்களின் பிரபலமான தலைவர் என்ற முறையில் இந்தியர்கள் சார்பாக வாதாடுவதற்

காக ஒருமுறை அவர் லண்டன் நகருக்குச் சென்றார். சில இந்திய மாணவர்கள் அவரை ஒரு சைவ விருந்திற்கு அழைத்திருந்தனர். அம்மாணவர்கள் உணவை அவர்களே தயாரித்துக் கொண்டிருந்தனர். பகல் 2 மணிக்கு அங்கு வந்த மெலிந்த உருவத்துடன் கூடிய ஒரு நபர் அவர்களுடன் இணைந்து காய்களை வெட்டுதல் பாத்திரங்களைக் கழுவுதல் போன்ற பணிகளைச் செய்தார். விருந்திற்கான நேரம் வந்தபோதுதான் மாணவர்களுக்குத் தங்களுடன் பணியாற்றிய நபர் மகாத்மா காந்தி என்பது தெரியவந்தது.

காந்திஜி கடினமாக உழைப்பவர்தான். இருப்பினும் வேறு யாராவது அவருடைய பணியைச் செய்வது அவருக்குப் பிடிக்காது. ஒரு தடவை ஒரு அரசியல் கூட்டம் முடிந்து இரவு 10 மணிக்கு தம் அறைக்குத் திரும்பியதும் கையில் துடைப்பத்தை எடுத்துக் கொண்டு அறையைச் சுத்தம் செய்யத் தொடங்கினார். ஒரு தொண்டர் அவருக்கு உதவுவதற்கு ஓடிவந்ததை அவர் விரும்பவில்லை. கிராமங்களில் தங்க நேர்ந்தபோது சில நாட்கள் இரவு நேரங்களில் எண்ணெய் வற்றி விளக்கு அணைந்து போய்விடும். அப்போது சோர்வுடன் படுத்திருக்கும் யாரையும் எழுப்பித் தொந்தரவு செய்யக் கூடாது என்ற எண்ணத்துடன் அறைக்கு வெளியே வந்து நிலவின் வெளிச்சத்திலேயே கடிதம் எழுதுவார் காந்திஜி!

நவகாளி யாத்திரையின்போது காந்திஜி இரண்டு தொண்டர்களை மட்டுமே தம்முடன் தங்க அனுமதித்தார். அவர்களுக்குக் கஞ்சி எப்படித் தயாரிப்பது என்று தெரியவில்லை. சமையலறைக்குச் சென்று அடுப்பின் முன்பு உட்கார்ந்த காந்திஜி தொண்டர்களுக்குக் கஞ்சி வைப்பதைக் கற்றுக் கொடுத்தார். அப்போது அவருடைய வயது 78.

காந்திஜிக்குக் குழந்தைகளிடம் பிரியம் அதிகம். தன் குழந்தைகள் பிறந்த இரண்டு மாதத்திற்குப் பின் செவிலியரையோ ஆயாவையோ காந்திஜி உதவிக்கு வைத்துக் கொள்ளவில்லை. பெற்றோர்களின் அன்பும் ஆதரவும் குழந்தைகளின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியம் என்று காந்திஜி கருதினார். ஒரு கைக்குழந்தையை அதன் தாயைப் போன்றே கைகளில் ஏந்தி அரவணைத்துப் பாலூட்டி அன்பு காட்டி அதைச் சந்தோஷமாக வைத்திருப்பது காந்திஜிக்கு கைவந்த கலை. ஒரு தடவை தென் ஆப்பிரிக்காவில் இருந்த சமயம் சிறைவாசம் முடிந்து திரும்பிய போது, அவரது நண்பர் போலாக்கின் மனைவி இளைத்துச் சோர்வுடன் காணப்பட்டார். தனது குழந்தைக்குத் தாய்ப்பாலை மறக்கடிக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டிருந்தார். இரவெல்லாம்

அவரைத் தூங்கவிடாமல் அக்குழந்தை அழுது தொந்தரவு செய்தது. அன்று இரவே காந்திஜி குழந்தையைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டார். பலநாட்கள் நாள் முழுவதும் வழக்கம்போல் கடுமையான பணிகளையும், மாலையில் பொதுக் கூட்டங்களையும் முடித்து, பல மைல்கள் நடந்து இரவு 1 மணிக்கு காந்திஜி வீடு திரும்புவார். முதல்காரியமாகத் தாயின் அருகே படுத்திருக்கும் குழந்தையை எடுத்துச் சென்று தன் அருகே படுக்கவைத்துக் கொண்டு உறங்கப் போவார். குழந்தை அழுதால் கொடுப்பதற்காக ஒரு பாத்திரத்தில் தண்ணீர் மட்டும் பக்கத்தில் வைத்திருப்பார். ஆனால், அதற்கு அவசியமே ஏற்படவில்லை. குழந்தை அவர் அருகே அமைதியாக உறங்கிவிடும். 15 நாட்களில் குழந்தை தாய்ப்பாலை மறந்து விட்டது.

தன்னைவிட வயதில் மூத்தவர்களை காந்திஜி மிகவும் மதித்தார். கோகலே, காந்திஜியுடன் தங்கி இருந்தபோது அவரது துணிகளை இஸ்திரி போட்டுக் கொடுப்பார். அவரது படுக்கையைத் தட்டிப் போடுவார். அவருக்கு உணவளித்தபின் அவரது காலையும் பிடித்து விடுவார் காந்திஜி. கோகலே, எவ்வளவோ தடுத்தும் காந்திஜி கேட்கமாட்டார். அவருக்கு மகாத்மா பட்டம் அளிக்கப்படுமுன், ஒருமுறை, தென் ஆப்பிரிக்காவிலிருந்து அவர் இந்தியாவுக்கு வந்து காங்கிரஸ் மகாநாடு ஒன்றில் கலந்து கொண்டார். தாமாகவே முன்வந்து அசுத்தமாக இருந்த கழிப்பறைகளை அவர் சுத்தம் செய்தார். பிறகு ஒரு காங்கிரஸ் தலைவரிடம் சென்று "நான் செய்யக் கூடிய பணி ஏதும் உள்ளதா?" என்று கேட்டார். "ஏராளமான கடிதங்கள் பதில் அனுப்பப்படாமல் கிடக்கின்றன. அவற்றை கவனிப்பதற்கு எழுத்தர்கள் யாரும் இல்லை. நீங்கள் அப்பணியைச் செய்வீர்களா?" என்று தலைவர் காந்திஜியைக் கேட்டதற்கு அவர் "நான் நிச்சயம் செய்கிறேன்" என்று பதிலளித்தார். "என்னால் செய்ய இயலும் எல்லாப் பணிகளையும் நான் செய்வேன்" என்று மேலும் கூறிய வண்ணம், சிறிது நேரத்திலேயே அப்பணியை முடித்த காந்திஜி, அத்தலைவரின் சட்டைப் பொத்தான்களையும் மாட்டிவிட்டார்.

ஆசிரமத்தில் சற்று அனுபவம் மிக்க ஆட்களின் பணி தேவைப்பட்ட போதெல்லாம் காந்திஜி ஹரிஜனங்களையே தேர்ந்தெடுத்தார். அப்படிச் செய்வதன் மூலம் ஆசிரமத்திலிருந்து தீண்டாமை உணர்வை அகற்ற காந்திஜி முயற்சித்தார். காந்திஜியின் கொள்கை என்னவென்றால், "வேலைக்காரர்கள் சம்பளத்திற்கு வேலை செய்யும் எடுபிடிகள் அல்ல. அவர்கள் நமது சகோதரர்கள், சமயங்களில் சில தொந்தரவுகள், சில திருட்டுக்

கள், சில அதிகப்படி செலவுகள் எல்லாம் ஏற்படக்கூடும்; இருப்பினும் நாம் அவர்களைச் சகோதரர்களாகவே நடத்த வேண்டும்". தன்னிடம் ஒருவரை வேலைக்காரராக எப்படி வைத்துக் கொள்வது என்பதை மட்டும் காந்திஜி கற்கவே இல்லை! இருப்பினும் சிறைவாசத்தின்போது அவரது சகாக்கள் சிலர் அவருக்கு உதவ முன்வருவதுண்டு. ஒருவர் பழங்களைக் கழுவி வைப்பார். ஒருவர் ஆடுகளின் பாலைக் கறந்து வைப்பார். ஒருவர் எல்லா நேரங்களிலும் அவருக்குப் பக்கத்திலேயே இருப்பார். ஒருவர் அவரது அறையைச் சுத்தம் செய்வார். ஒரு பிராமணர் அவரது பாத்திரங்களைக் கழுவியதுண்டு. இரண்டு ஐரோப்பியர்கள் தினந்தோறும் அவருடைய கட்டிலைத் தூக்கி வந்து படுக்கையை விரித்து வைப்பார்கள்.

இங்கிலாந்தில் சில பிரபுக்களுக்கும் அவர்களது வேலைக்காரர்களுக்கும் இடையே நிலவிய நெருக்கமான உறவு காந்திஜிக்கு மகிழ்ச்சி அளித்தது. ஒரு பிரபுவின் வீட்டிற்கு அவர் விஜயம் செய்தபோது எல்லா வேலைக்காரர்களும் அவருக்கு குடும்பத்தின் அங்கத்தினர்கள் போலவே அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

ஒரு தடவை, ஒரு இந்தியரின் வீட்டில் சில நாட்கள் தங்கி விட்டு விடைபெற்றுச் செல்லும் தருணம் வந்தபோது, வேலைக்காரர்களை அழைத்து இவ்வாறு கூறினார். "என் நன்றியை எப்படி வார்த்தைகளில் சொல்வது என்றே புரியவில்லை. என் வாழ்வில் நான் யாரையுமே வேலைக்காரர் என்று எண்ணியது இல்லை. ஒரு சகோதரராகவோ சகோதரியாகவோ தான் எண்ணி வந்துள்ளேன். உங்களையும் அப்படியே எண்ணுகிறேன். உங்களது சேவைக்குப் பதிலாக எதையும் செய்வது என்னால் முடியாத காரியம். ஆனால், கடவுள் உங்களுக்கு நிச்சயம் நல்லது செய்வார்."

அரசியலில் அகிம்சை எவ்விதம் புதிய முறையோ அதே போலப் பொருளாதாரத்தில் கதரும் புதிய முறை. வழக்கில் உள்ள அரசியல் நெறிமுறைகளை அகிம்சை எவ்விதம் திகைக்கும்படி செய்திருக்கிறதோ அதேபோல வழக்கிலுள்ள பொருளாதார முறைகளைக் கதர் திகைக்கவே வைக்கும்.

— யங் இந்தியா 4-6-1931

9

காந்திஜி ஒரு சமையல்காரர்

ஒரு சந்தர்ப்பத்தில் மகாதேவ் தேசாய் காந்திஜியிடம் "நீங்கள் ஃபீனிக்ஸ் பண்ணையைத் துவங்குவதற்கு முன் எப்போதாவது சமையல்காரரைப் பணியில் அமர்த்திக் கொண்டது உண்டா?" என்று கேட்டார். காந்திஜி, "நான் முன்னதாகவே அவரது சீட்டைக்கிழித்து அனுப்பிவிட்டேன். எங்கள் சமையல்காரர் நன்கு சமையல் செய்பவர் தான். ஆனால், மசாலாப் பொடிகள் இல்லாமல் அவருக்கு சமையல் செய்யத் தெரியாது. அவரை விடுப்பில் அனுப்பியபின் பதிலுக்கு யாரையும் நியமிக்கவில்லை" என்று பதில் அளித்தார். அப்போது காந்திஜியின் வயது 35.

காந்திஜி இங்கிலாந்தில் இருந்தபோது, தனது 18வது வயதிலேயே சமையல் கலையைக் கற்கத் தொடங்கினார். அவர் சைவ உணவு மட்டுமே சாப்பிடுவார். சைவ உணவுப் பழக்கம் இங்கிலாந்து நாட்டில் அப்போதுதான் வேரூன்றத் தொடங்கி இருந்தது. காந்திஜிக்கு ரொட்டி, வெண்ணை, ஜாம் மற்றும் மசாலா ஏதும் போடாத வேகவைத்த கறிகாய்கள்தான் சைவ உணவாகக் கிடைக்கும். பலவகையான மசாலாப் பொடிகளுடன் தயாரிக்கப்பட்ட உணவுப் பழக்கத்தை உடைய காந்திஜிக்கு இங்கிலாந்தில் கிடைத்த சைவ உணவு சப்பென்று இருந்ததில் வியப்பில்லை.

சிறிது காலத்திற்கு சைவ உணவகங்களில் உணவு அருந்தியபின், சிக்கனத்தைக் கடைபிடிக்க காந்திஜி முடிவு செய்தார். வாடகைக்கு ஒரு அறையை எடுத்து, ஒரு ஸ்டவ் அடுப்பு வாங்கி, அதிலேயே தனது காலை மற்றும் இரவு உணவைத் தயாரித்துக் கொண்டார். உணவு தயாரிக்க அவருக்கு 20 நிமிஷங்கள்தான் பிடித்தன. செலவு, நாள் ஒன்றுக்கு 12 அணா ஆகியது (இன்றைய விகிதத்தில் 75 காசுகள்).

'சைவ உணவுப் பழக்கத்தின் மேன்மைகள்' என்ற தலைப்பில் ஸால்ட் என்பவர் எழுதிய புத்தகத்தை காந்திஜி படித்தார். அதற்குப்பின், அவர் லண்டனில் இருந்த சைவ உணவு உண்போர் கழகத்துடன் தொடர்பு கொண்டார். அவருடைய சாப்பாட்டிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன.

பாரிஸ்டர் பட்டத்துடன் இந்தியா திரும்பிய காந்திஜி பம்பாயில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டார். ஒரு பிராமண சமையல்காரரையும் பணியில் அமர்த்திக் கொண்டார். பாதி சமையலை காந்திஜியே செய்தார். அந்த சமையல்காரருக்கும், இங்கிலாந்து நாட்டின் சைவ உணவு வகைகளைத் தயாரிப்பதற்கான பயிற்சியை அளித்தார். சமையல் அறையின் சுத்தம், சுகாதாரத்தில் காந்திஜி மிகவும் கவனமாக இருந்தார். சமையல்காரருக்கு தினமும் குளித்து விட்டு துவைத்த ஆடைகளை அணிந்து பணிக்கு வரவேண்டும் என்று நிபந்தனை போட்டார்.

தென் ஆப்பிரிக்காவிலோ, இந்தியாவிலோ காந்திஜியின் ஆசிரமங்களில் சமையல்காரர்கள் பணிக்கு அமர்த்தப்படவில்லை ஒருவேளை சாப்பாட்டிற்குப் பலவிதமான உணவு வகைகளைத் தயாரிப்பது, நேரத்தை வீணாக்கும் ஒரு தேவையற்ற பழக்கம் என்று காந்திஜி கருதினார். பலதரப்பட்ட ஆசிரமவாசிகளின் பலவிதமான உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் காந்திஜி அக்கறை காட்டவில்லை எல்லோருக்கும் ஒரே மாதிரியான, எளிமையான உணவே தயாரிக்கப்பட்டது. சாப்பாடு ஒரு பொதுவான சமையல் அறையில் தயாரிக்கப் பட்டது. (அக்கால கட்டத்தில் ஒவ்வொரு ஜாதியினருக்கும் தனித்தனி சமையல் அறையில் உணவு தயாரிக்கும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது). மிகவும் கடினமான மற்றும் சிக்கல்கள் நிறைந்த சமையல் முறைகளை காந்திஜி எளிதாக்கி, அவரது ஆசிரமத்தில் தயாரிக்கப்பட்ட உணவுகள் முறையே— சாதமும் கஞ்சியும், ரொட்டி, பச்சைக் காய்கறித் துண்டுகள், மசாலாப்பொடிகள் தூவப்படாத — வேகவைக்கப்பட்ட காய் வகைகள், பழங்கள் மற்றும் பால் அல்லது தயிர், இனிப்பு வகைகளுக்கு பதிலாக வெல்லமும் தேனும் வழங்கப்பட்டது.

ஜஸ்ட் என்பவர் எழுதிய 'இயற்கைக்குத் திரும்புவோம்' என்ற புத்தகத்தைப் படித்ததிலிருந்து, காந்திஜி, நாம் நமது தேவைக்காக உணவு உட்கொள்ள வேண்டுமே அன்றி சுவைக் காக அல்ல என்ற கோட்பாட்டைப் புரிந்து கொண்டார். உணவு உண்ணும் பழக்கத்திலும் காந்திஜி பல பரிசோதனை களை மேற்கொண்டார். இப்பரிசோதனைகள் அவரது ஆயுட்காலம் முழுவதும் தொடர்ந்தன. சில பரிசோதனைகளில் சமையலுக்கு அவசியம் இருக்கவில்லை. சில பரிசோதனை களால் அவர் அவதிக்குள்ளானார். ஐந்து ஆண்டுகளுக்கு அவர் பழங்களை மட்டுமே உண்டு வாழ்ந்தார். ஒருமுறை, நான்கு மாத காலத்திற்கு முளை கட்டிய தானிய வகைகளையும், சமையல் செய்யப்படாத உணவு வகைகளையும் உட்கொண்டு பார்த்தார். விளைவு தீராத வயிற்றுப் போக்குதான்.

ஃபீனிக்ஸ் குடியிருப்பில் அவர் தலைமை ஆசிரியராகவும் தலைமை சமையல்காரராகவும் பணிபுரிந்தார். ஐரோப்பியர்களுக்குத் தென் ஆப்பிரிக்க இந்தியர்களால் அளிக்கப்பட்ட ஒரு விருந்தில் காந்திஜி சமையல் செய்ததுடன் உணவையும் பரிமாறினார்.

ஃபீனிக்ஸ் குடியிருப்பிலிருந்து சத்தியாக்கிரகம் செய்வோரின் முதற்குழு ஆசிரமத்தைவிட்டு வெளியேறிய நாளன்று காந்திஜி எல்லோருக்கும் சிறப்பான விருந்து படைத்தார். சப்பாத்திகளின் குவியல், தக்காளிச் சட்டினி, சாதம், கறிவகைகள் மற்றும் பேரீச்சம்பழங்கள் அவ்விருந்தில் இடம் பெற்றிருந்தன. அவரது கைகள் சமையல் பணியில் ஈடுபட்டிருந்த அதேசமயத்தில் அவர் சத்தியாக்கிரகம் பற்றி ஆசிரமவாசிகளுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தார். கூடவே, சிறைவாசம் பற்றியும் சில தகவல்களை அளித்தார். சத்தியாக்கிரகம் செய்வோரின் எண்ணிக்கை 2,500 ஆக உயர்ந்த போது காந்திஜியே அவர்களுக்குத் தலைமை ஏற்றார். கூடவே சமையல் பொறுப்பையும் ஏற்றார். ஒருநாள், பருப்பு வெறும் தண்ணீராகக் காட்சியளித்தது. இன்னொருநாள் சாதம் அரைவேக்காடு நிலையில் பரிமாறப்பட்டது. இருப்பினும் காந்திஜிமீது இருந்த அளவற்ற பாசத்தின் காரணமாக சத்தியாக்கிரகிகள் அந்த உணவை முகம் சுளிக்காமல் மகிழ்ச்சியுடன் உண்டனர். தென் ஆப்பிரிக்கச் சிறைகளில் தனது சக ஊழியர்களுக்கு அவர் சமையல் ஆசிரியராக விளங்கினார்.

சமையல்கலையைக் காந்திஜி கல்வியின் ஒரு முக்கிய அம்சமாகக் கருதினார். டால்ஸ்டாய் பண்ணையில் இருந்த எல்லா இளைஞர்களுக்குமே சமைக்கத் தெரியும் என்று காந்திஜி பெருமையுடன் கூறிவந்தார். தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய பின், சாந்திநிகேதன் மாணவர்களிடையேயும் சமையல்கலையை காந்திஜி பரப்பினார். ஒரு பொதுவான சமையல் அறை ஏற்பாட்டையும் தங்களது உணவைத் தாங்களே தயாரித்துக் கொள்ளும் பழக்கத்தையும் சாந்திநிகேதன் மாணவர்கள் விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டனர். தாகூருக்கு இத்திட்டங்கள் வெற்றி பெறுமா என்பதில் சந்தேகம் இருந்தது; இருப்பினும் அத்திட்டங்களுக்கு தமது ஆசிகளை அவர் வழங்கினார்.

ஒருமுறை அவரது சென்னை விஜயத்தின்போது மாணவர்கள் தங்குமிடமொன்றில் இருந்த உணவுவிடுதியின் நிலைமையைக் கண்டு திடுக்கிட்டார். ஒவ்வொரு ஜாதியினருக்கும் உணவு தனித்தனியே தயாரிக்கப்பட்டது. தவிர, ஒவ்வொரு

நபரின் விருப்பத்திற்கேற்றவாறும் கூட பலவிதமான உணவுகள் தயாரிக்கப்பட்டன. ஒரு வங்காளியின் வீட்டில் தங்கியபோது அங்கு வகை வகையான உணவுகள் பரிமாறப்பட்டதை அவர் விரும்பவில்லை. அப்போது தான், அவர் நாள் ஒன்றுக்கு ஐந்து வகையான உணவுக்கு மேல் (அதாவது காய், கூட்டு, சாம்பார், சாதம், தயிர் பழங்கள் போன்றவை) உட்கொள்ளப் போவதில்லை என்று சபதம் எடுத்துக் கொண்டார். பீஹாரில் சம்பாரனில் அவுரி பயிரிட்டவர்களுக்காகப் போராடியபோது தான் தீண்டாமை ஒழிப்பிற்கான முதல் படியாக தனது குழுவில் இருந்த பல வக்கீல்கள், நண்பர்கள் எல்லோருமே, பொதுவான ஒரே இடத்தில் தயாரிக்கப்பட்ட உணவை உட்கொள்ள வேண்டும் என்ற பழக்கத்தை அறிமுகம் செய்தார்! பல மசாலாக்களைச் சேர்த்து சுவையான உணவு தயாரிப்பதைக் காட்டிலும் சத்துள்ளதும், சுகாதாரமான முறையிலும் தயாரிக்கப்படும் உணவு மேலானது என்று அவர் வலியுறுத்தி வந்தார்.

காந்திஜியின் சற்றே மாறுபட்ட உணவு அயிட்டங்களில் சிலவற்றின் பட்டியல் :

1. வேப்பிலைச் சட்டினி	:	கொயினாவைப் போலவே கசப்பானது
2. புண்ணாக்குப் பச்சடி	:	செக்கிலிருந்து புதிதாக எடுத்த புண்ணாக்கைத் தயிருடன் கலந்து தயாரிக்கப்பட்டது.
3. புளியம்பழ சர்பத்	:	புளியைத் தண்ணீரில் கரைத்து வெல்லம் கலந்து தயாரிக்கப் படுவது
4. சோயாபீன்ஸ் வேகவைத்தது	:	சோயாபீன்ஸ் காய்களை வேகவைத்து– உப்பு மிளகாய்த் தூள் சேர்க்காமல் அப்படியே உட்கொள்வது
5. பச்சை இலைகள் சாலட்	:	கீரை வகைகள் முள்ளங்கி போன்ற இலைகளை வெட்டிப் பச்சையாக உட்கொள்வது
6. சப்பாத்திப் பாயசம்	:	சப்பாத்தியைப் பொடி செய்து வெல்லம் கலந்து தண்ணீரில் கரைத்து தயாரிக்கப்படுவது

7. கோதுமைக் கஞ்சி : கோதுமையை உடைத்து வேக வைத்துத் தயாரிக்கப்படுவது

8. கோதுமைக் காப்பி : கோதுமையை வறுத்து மாவாக அரைத்து அதிலிருந்து தயாரிக்கப்படும் காப்பி

ஒரு தடவை இங்கிலாந்திற்குக் கப்பல் பயணம் செய்து கொண்டிருந்தபோது தனது அண்ணன் மகனுக்கு இப்படி ஒரு கடிதம் எழுதினார். வாழைப்பழத்தை வேகவைத்துத் தயாரித்த மாவில் இரண்டு பங்கும், கோதுமை மாவு ஒரு பங்கும் கலந்து ரொட்டியும் பிஸ்கட்டும் தயாரிக்க முடியும். கேக் தயாரிப்பது பற்றி இப்படி ஒரு குறிப்பை காந்திஜி கொடுத்தார். வாழைப்பழ-கோதுமை மாவில் சிறிது நெய்யையும் சேர்த்து நன்கு பிசைய வேண்டும். அதை மூன்று மணிநேரம் ஊறவைக்க வேண்டும். பிறகு கேக் தயாராகிவிடும்.

கேக், சாதம், காய் வகைகளின் சூப், சாலட், ஆரஞ்சு மற்றும் ஆரஞ்சுத் தோலிலிருந்து ஜாம், ரொட்டி போன்ற அயிட்டங்களை சோடாமாவு அல்லது யீஸ்ட் பயன்படுத்தாமல் தயாரிப்பது எல்லாமே காந்திஜிக்கு கைவந்த கலை. சப்பாத்தியும் வேறுசில சிற்றுண்டி வகைகளும்கூட அவர் தயாரிப்பது உண்டு. ஆசிரமச் சமையல் அறையில் ரொட்டித் துண்டுகள் மற்றும் பிஸ்கட் தயாரிக்கும் முறைகளை அவர் அறிமுகப் படுத்தினார். நூற்றுக்கணக்கான நபர்களுக்கு குறைந்த செலவில் அரிசியைச் சோறாக்குவதற்காக புதியதோர் அடுப்பையும் காந்திஜி கண்டுபிடித்தார். அதேபோல் பெரும் அளவிற்குக் காய்களையும் அந்த அடுப்பில் வேகவைக்க முடியும்.

காந்திஜியின் சகா ஒருவர் காந்திஜியின் உணவு பழக்கங்களை இப்படிக் கிண்டல் செய்தார். "புற்களில் ஏராளமான சத்துக்களும் வைட்டமின்களும் இருப்பது சமீபகாலத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. நல்லவேளையாக அந்தச் சமயத்தில் காந்திஜி ஆசிரமத்தில் இல்லை. இருந்திருந்தால் சமையலறையை மூடிவிட்டு நம்மை எல்லாம் புல் வெளிகளுக்குச் சென்று புல்மேயச் சொல்லி இருப்பார்."

காந்திஜி ஒருமுறை தங்கும் விடுதியுடன் கூடிய ஒரு மாதிரிப் பள்ளிக்கு விஜயம் செய்தார். அங்கே இருந்த உணவு விடுதியின் நிலை அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை. ஆசிரியர்களிடம் காந்திஜி இவ்வாறு கூறினார்: "உங்களது பள்ளி உண்மையிலேயே ஒரு மாதிரிப் பள்ளியாக விளங்க வேண்டும் என்றால் ஏட்டுக் கல்வியைத் தவிர மாணவர்கள் சமையல்கலையிலும் துப்புரவுக் கலையிலும் தேர்ச்சி பெற வேண்டும்."

10

காந்திஜி ஒரு மருத்துவர்

ராஜ்கோட்டில் உள்ள அல்ஃப்ரெட் உயர்நிலைப் பள்ளியிலிருந்து காந்திஜி பத்தாம் வகுப்பில் தேறினார். அதற்குப் பின் அவரது அண்ணனும் பெரிய தகப்பனாரும் அவரை சட்டப் படிப்பிற்காக இங்கிலாந்திற்கு அனுப்பி வைக்க முடிவு செய்தனர். காந்திஜி, மருத்துவப் படிப்புப் படிக்க தாம் விரும்புவதாகக் கூறினார். அவருடைய அண்ணன் "ஒரு வைஷ்ணவக் குடும்பத்தில் பிறந்தவர். பிராணிகளின் உடலை அறுத்து ஆராய்ச்சி செய்யும் படிப்பைப் படிக்கக் கூடாது" என்று சொல்லி விட்டார். காலம் சென்ற காந்திஜியின் தந்தைக்கும், தன் மகன் மருத்துவம் படிப்பதில் விருப்பம் இல்லை.

தனது 39வது வயதில் காந்திஜி தென் ஆப்பிரிக்காவிலிருந்து மறுபடியும் இங்கிலாந்து சென்றார். அப்போதும் மருத்துவப் படிப்பு படிக்கும் ஆவல் அவருக்கு ஏற்பட்டது. பிராணிகளின் உடலை அறுப்பது அவரது விருப்பத்திற்குத் தடை போட்டுவிட்டது. பரிசோதனை என்ற பெயரில் பிராணிகளை அறுத்துக் கொல்வது, தடுப்பு ஊசி மருந்து தயார் செய்வதற்காக பிராணிகளை சித்திரவதை செய்வது போன்ற பழக்கங்களில் அவருக்கு உடன்பாடு இல்லை. எந்த மதமும் பிராணிகளைக் கொல்வதை அனுமதிக்கவில்லை. எல்லா மதங்களுமே மனிதனின் நலத்திற்காகப் பல உயிர்களைக் கொல்வது பாவம் என்று தான் கூறுகின்றன. காந்திஜி அலோபதி மருத்துவர்களை சாத்தானின் சீடர்கள் என்று கருதி வந்தார். அதே சமயம் பரிசோதனை முறைகளைத் தவிர்க்கும் ஆயுர்வேத வைத்தியர்களையும் அவர் கண்டனம் செய்தார். ஹோமியோபதியும் அவரை ஈர்க்கவில்லை. நோயுற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற அவருடைய ஈடுபாடு அவரைக் கடைசியாக ஒரு இயற்கை வைத்தியராக உருவெடுக்க வைத்துவிட்டது.

இயற்கை வைத்தியத்தில் நிபுணரான குஹ்னே என்பவரின் நூல்களைக் காந்திஜி படித்தார். அவரது நீர்ச் சிகிச்சை முறை காந்திஜியை மிகவும் கவர்ந்தது. முதலில் தன்மீதே சில பரிசோதனைகளை காந்திஜி செய்து கொண்டார். பிறகு தனது மனைவியையும் மகன்களையும் பரிசோதனைகளுக்கு உட்படுத்தினார். அதற்குப்பின், தண்ணீர், மண், காற்று, சூரிய ஒளி ஆகியவற்றின் உதவியுடன் வைத்தியம் செய்யும் ஆற்றலை

அவர் பெற்றார். மாத்திரைகளையும் மருந்தையும் பயன்படுத்தி உடலுக்கு விஷச் சிகிச்சை தருவதைத் தவிர்த்து, உபவாசம், சரியான உணவு முறைகள் மற்றும் பச்சிலைகள் மூலம் எவ்வித வியாதியையும் குணப்படுத்தலாம் என்று அவர் நம்பினார்.

நோய்க்கான காரணங்களை சரியான முறையில் கண்டறிந்து கொள்ளும் திறமை அவருக்கு இருந்தது. இதன் காரணமாக பல நோயாளிகளுக்கு அவர் உரிய சிகிச்சையை அளித்து குணப்படுத்தினார். தென் ஆப்பிரிக்காவில் முதல் கட்டத்தில் "கூலி பாரிஸ்டர்" என்று அழைக்கப்பட்ட காந்திஜி இப்போது "கூலி (சற்று அரைகுறை) டாக்டராகவும்" விளங்கினார். பல ஐரோப்பியர்களும் இந்தியர்களும் மருத்துவ ஆலோசனைக்கு அவரை அணுகினார்கள். நிறையப் பேருக்கு அவர் குடும்ப மருத்துவராகவும் ஆகிவிட்டார். அந்தக் கால கட்டத்தில் காந்திஜியின் சிகிச்சை முறைகள் எந்த மருத்துவ முறைக்கும் – மருத்துவ நூல்களுக்கும் அப்பாற்பட்டவைகளாக இருந்தன. இருப்பினும், சிறிது காலத்திற்குப் பின் அவரது சிகிச்சை முறைகளில் சிலவற்றை வைத்தியர்கள் ஏற்றுக்கொண்டு விட்டனர்.

அவருடைய மகன் டைஃபாய்ட் ஜுரத்தினால் அவதியுற்ற போது டாக்டர்கள் அவனுக்கு முட்டையும் சிக்கன் சூப்பும் உணவாகத் தரப்பட வேண்டும் என்று கூறினர். காந்திஜி மறுத்துவிட்டார். சைவ உணவு மட்டுமே கொடுத்தார். தாமே பையனுக்கு சிகிச்சையை மேற்கொண்டு தண்ணீரையும் ஆரஞ்சுப்பழ ரசத்தையும் மட்டுமே உணவாகக் கொடுத்தார். பையன் ஜுரத்தின்வேகத்தால் பிதற்றத் தொடங்கியபோது காந்திஜிக்குச் சற்று பயம் ஏற்பட்டது. இருப்பினும் அவர் இயற்கை சிகிச்சையை நிறுத்தாமல் தொடர்ந்தார். வெற்றியும் பெற்றார். இதைப் பார்த்து நிறைய டைஃபாய்ட் நோயாளிகள் அவரிடம் சிகிச்சைக்கு வந்தனர். ஊசிகள் இன்றி அவர்களை காந்திஜி குணப்படுத்தி விட்டார்.

டாக்டரின் உத்தரவை மற்றொரு சந்தர்ப்பத்திலும் அவர் மீறினார். கஸ்தூர்பா அன்னையார் ஒருமுறை மோசமான ரத்தசோகை நோயால் பிடிக்கப்பட்டிருந்தார். டாக்டர்கள் அவருக்கு பசுமாட்டின் புலாலிலிருந்து தயாரிக்கப்பட்ட சூப் தர வேண்டும் என்று கூறினார்கள். இதை காந்திஜி மட்டுமின்றி அன்னையும் ஏற்கவில்லை. காந்திஜி தொடர்ந்து பல நாட்களுக்கு அன்னையாருக்கு எலுமிச்சம்பழ ரசத்தை மட்டுமே கொடுத்து குணப்படுத்திவிட்டார். அன்னையாருக்கு பருப்பை

யும் உப்பையும் உணவையும் சேர்த்துக்கொள்ள வேண்டாம், என்று யோசனை கூறினார் காந்திஜி. ஒரு கணம் அன்னையாருக்கே தன் கணவர் எவ்வளவு திடசித்தம் வாய்ந்தவர் என்பது மறந்துவிட்டது போலும்! "எனக்கு உப்பு சாப்பிடாதே, பருப்பு சாப்பிடாதே என்று புத்தி சொல்லும் உங்களால் உப்பையும், பருப்பையும் விட்டுவிட முடியுமா?" என்று கணவரைக் கேட்டு விட்டார். "நிச்சயமாக! டாக்டர் யோசனை சொன்னால் அவற்றை விட்டுவிடுவேன். ஆனால், இப்போது மருத்துவரின் யோசனை இல்லாமலேயே ஒரு ஆண்டிற்கு பருப்பையும், உப்பையும் உட்கொள்ளப் போவதில்லை" என்று காந்திஜி சொல்லிவிட்டார். அம்மையாரின் கண்ணீரும், வேண்டுகோளும் காந்திஜியின் பிடிவாதத்திற்கெதிரே பயனற்றுப் போயின. நோயாளியான அம்மையாரும், வைத்தியரான காந்திஜியும் உப்பையும், பருப்பையும் துறந்து விட்டனர்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், பதினைந்து நாட்களுக்கு கஸ்தூரிபா அன்னையார் வேப்பிலைச் சாறு குடிக்க வேண்டி இருந்தது. குடலைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று காந்திஜி வற்புறுத்தி வந்தார். குறிப்பாக மலக்குடலில் மலம் தங்கிவிடுவது விஷம் போன்றது. அதைத் தவிர்ப்பதற்கு, உபவாசம், அரைநாள் உபவாசம், எனிமா போன்ற முறைகளை மேற்கொள்ள வேண்டும். தலைவலி, அஜீரணம், வயிற்றுப் போக்கு, மலச்சிக்கல் போன்ற நோய்கள், நாம் அதிகமாக உண்பதாலும் சரியான உடற்பயிற்சி மேற்கொள்ளாததாலும் ஏற்படுகின்றன என்று அவர் கூறிவந்தார். நீண்ட, துரிதமான நடை உடலின் ஆரோக்கியத்திற்கு அவசியம் என்று அவர் கூறி வந்தார். சிறைவாசத்தின்போது காலை, மாலை வேளைகளில் அவர் வெகுநேரம் நடைபயில்வது வழக்கம். மேலும் சரியான சுவாசப் பயிற்சிகளையும் மேற்கொள்ளும்படி அவர் சிறைவாசிகளுக்கு போதனை செய்து வந்தார். உடலின் ஆரோக்கியம், மனக்கவலை காரணமாகப் பாதிப்பு அடைகிறது என்பதை காந்திஜி அறிந்திருந்தார். ராமநாமத்தை ஜெபம் செய்வதன் மூலமும் அசைக்க முடியாத தெய்வ நம்பிக்கையினாலும் எல்லா கவலைகளும் மறந்துவிடும் என்று காந்திஜி கூறிவந்தார். அது ஒரு சர்வரோக சஞ்சீவினி.

தென் ஆப்பிரிக்காவில் இருந்தபோது, ஒருமுறை, காந்திஜியை ஒரு பட்டாணியன் நன்றாக அடித்து விட்டான். உதட்டிலும், விலா எலும்புகளிலும், நெற்றியிலும் ஏற்பட்டிருந்த காயங்களுக்கு காந்திஜி மண்ணையே பிசைந்து தடவினார். வீக்கம் வடிந்து காயங்களும் ஆறிவிட்டன.

ப்ளேக், டைஃபாய்ட் ஜுரம், மலேரியா, அஜீரணம், மஞ்சள் காமாலை, ரத்த அழுத்தம், தீக்காயங்கள், பெரியம்மை மற்றும் எலும்பு முறிவு எல்லாவற்றிற்கும் காந்திஜி மண்சாந்து சிகிச்சையை சிபாரிசு செய்தார். ஒரு பயணத்தின் போது அவரது மகனின் கை உடைந்து விட்டது. காந்திஜி மண்ணைக் குழைத்துப் பூசி கட்டுப் போட்டார். காயம் ஆறிவிட்டது. இந்தச் சிகிச்சை முறையில் நிறையப் பேர்களை காந்திஜி குணப் படுத்தி வந்தார். இருப்பினும் தமது சிகிச்சை முறைகள் பரிட்சார்த்தமானவையே அன்றி முற்றிலும் சரியானவை அல்ல என்றும் எச்சரித்து வந்தார். 'ஆரோக்கியத்திற்கான வழிகாட்டி' என்ற தமது நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சிகிச்சை முறையை மேற்கொள்வதில் ஆபத்தும் இருக்கிறது என்றும் தமது யோசனைகள் துணிச்சலானவை என்றும் காந்திஜியே சொல்வதுண்டு. மருத்துவமனைகளையோ, மகப்பேறு மனைகளையோ, மருந்து விற்பனைக் கூடங்களையோ நிறையக் கட்டி வைக்க வேண்டும் என்று அவர் சொன்னதில்லை. மாறாக மக்களுக்கு சுத்தத்தையும் சுகாதாரத்தையும் போதிப்பதுதான் முக்கியம் என்று கூறி வந்தார். நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதைவிட நோய் வராமல் தடுப்பது முக்கியம் என்றும் அவர் கூறிவந்தார்.

அலோபதி மருந்துகளை ஒரேயடியாக ஒதுக்கி விடுவதற் கில்லை. ஒரு முறை சேவாகிராமில் காலரா நோய் பரவி இருந்த போது காந்திஜியே ஆசிரமவாசிகளையும் கிராமத்து மக்களையும் காலரா தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளும்படி அறிவுறுத் தினார். ஒரு சிறைவாசத்தின்போது குடல்வால் நோய்க்காக (அப்பெண்டிசைட்டிஸ்) காந்திஜி அறுவை சிகிச்சையை ஏற்றுக் கொண்டார். பொதுமக்கள் அவருக்கு கண்டனக் கடிதங்களை அனுப்பினார்கள். தான் அலோபதி சிகிச்சையை ஏற்றுக் கொண்டது தவறுதான் என்று காந்திஜி ஒப்புக் கொண்டார்.

இயற்கை வைத்தியத்தை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்த முடியாது என்பதை காந்திஜி அறிந்திருந்தார். இருப்பினும் பல காரணங்களுக்காக அச்சிகிச்சை முறையை அவர் வலியுறுத்தி வந்தார். ஏழை மக்கள் அதை எளிதாக மேற்கொள்ள முடியும் என்பது முதல் காரணம். அது நூற்றுக்கு நூறு சுதேசி முறை என்பது இரண்டாவது காரணம். தனது 77வது வயதில் அளவற்ற உற்சாகத்துடன் உருளிகாஞ்சன் என்ற கிராமத்தில் (மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ளது) இயற்கை மருத்துவமனை ஒன்றை காந்திஜி நிறுவினார். அதில் விலை உயர்ந்த மருத்துவ சாதனங்கள் கிடையாது. ஒரு லட்சிய மருத்துவர் மருத்துவத்தைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். மேலும் தான் அறிந்துள்ளதை மக்களுடன் இலவசமாகப்

பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று காந்திஜி கூறினார். மருத்துவர் களுக்கு வருடாந்திர ஊதியம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்துவிட்டால் அவர்கள் நோயாளிகளிடம் பணத்தை எதிர்பார்க்கமாட்டார்கள் என்றும் அவர் நம்பினார். சில நாட்களில் காந்திஜியே நோயாளிகளைப் பரிசோதனை செய்து சிகிச்சை முறை பற்றி சீட்டில் எழுதிக்கொடுப்பது உண்டு. ராஜு என்பவருடைய சீட்டில் "சூரிய ஒளிக்குளியல், இடுப்புக் குளியல் மற்றும் ஒத்தடம்: பழரசம், தண்ணீர் கலந்த மோர், பால் கூடாது; மோர் செரிக்க வில்லை என்றால் மேலும் பழரசமும் கொதிக்க வைத்து ஆறவைத்த தண்ணீரும் கொடுக்கவும்" என்று எழுதப் பட்டிருந்தது. மற்றொரு சீட்டு பார்வதி என்ற நபருடையது. அதில் "சாத்துக்குடி ரசம் மட்டுமே கொடுக்க வேண்டும். இடுப்புக் குளியல், ஒத்தடம், வயிற்றின் மீது மண்சாந்து பூசவும்; சூரிய ஒளிக் குளியல் தினந்தோறும், இதையெல்லாம் செய்தால் அவருக்கு சரியாகிவிடும். மேலும் ராமநாமத்தை உச்சரிக்கும்படி அவருக்கு அறிவுரை கூறுங்கள்".

அவருடைய ஆசிரமவாசிகள் வேடிக்கையாக இப்படிச் சொல்வதுண்டு: "காந்திஜி உன்னை நெருங்கிவந்து உன்னுடன் பேசவேண்டும் என்றால் நீ ஒரு நோயாளியாக மாறவேண்டும்." நோயாளிகளின் சிறு தேவைகள் பற்றிக்கூட காந்திஜி அறிந்து வைத்திருந்தார். தினந்தோறும் மாலையில் உலாவி விட்டுத் திரும்பும் சமயத்தில் ஒவ்வொரு நோயாளியையும் சந்தித்துப் பேசுவார். நோயாளியின் உணவு எப்படி தயாரிக்கப்பட வேண்டும்: ஒத்தடம் எப்படிக் கொடுக்க வேண்டும், எனிமாவில் எந்த அளவிற்கு உப்பு சேர்க்கப்படவேண்டும் போன்ற விஷயங்கள் பற்றி விபரமான அறிவுரைகளை காந்திஜி வழங்கி வந்தார். சேவாகிராமத்தில் தினந்தோறும் ஒரு மணிநேரம் நோயாளிகளுக்காக அவர் ஒதுக்கி இருந்த சமயத்தில் ஆசிரம வாசிகள் மட்டுமின்றி பக்கத்து கிராமங்களிலிருந்தும் கூட்டமாக ஜனங்கள் வரத்தொடங்கினர். அவர் எல்லோருக்கும் கொடுத்து வந்த அறிவுரை: "காய்கறிகளைச் சாப்பிடுங்கள்; மோர் அருந்துங்கள்; மண்ணைப் பூசிக் கொள்ளுங்கள்." சிலசமயங் களில் அவர் நோயாளிகளின் மலத்தையும் சோதனை செய்து பார்ப்பது உண்டு. நோயாளிகள் பலகீனமாக இல்லாவிடில் அவர்களை திறந்தவெளியில் உட்கார்ந்திருக்கும்படி அறிவுரை சொல்வார். நோயாளியை முற்றிலுமாக சோதனை செய்த பின்புதான் சிகிச்சை முறை பற்றி அவர் தீர்மானிப்பார்.

அவருடைய சக ஊழியர் ஒருவர் மன உளைச்சல் காரண மாக அதிகமான ரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்தார்.

நோயின் அடிப்படைக் காரணத்தைக் கண்டறிவதற்காக ஒரு உரையாடலுக்கு முன்னும் பின்னும் அவரது ரத்த அழுத்தத்தைப் பதிவு செய்தார். அடுத்தநாள் அந்த நபரிடம் ஒரு ரம்பத்தைக் கொடுத்து ஒரு மரக்கட்டையை அறுக்கச் சொன்னார். அவரது ரத்த அழுத்தம் மரத்தை அறுப்பதற்கு முன்பும் பின்பும் பதிவு செய்யப்பட்டது. மூன்றாவது நாள் அவரை ஒரு பர்லாங் தூரம் (200 மீட்டர்) ஓடச்சொல்லி ஓடுவதற்கு முன்பும் பின்பும் ரத்த அழுத்தம் பதிவு செய்யப்பட்டது. மூன்றாவது நாள் அவரது ரத்த அழுத்தம் குறைந்துவிட்டது. முதல் இரண்டு நாட்களில் குறையவில்லை. காந்திஜி வழங்கிய அறிவுரை: "உங்களது ரத்த அழுத்தம் கூடும்போதெல்லாம் நீங்கள் நடைபயிலுங்கள்." காந்திஜி எவ்வளவு முக்கியமான பணியில் ஈடுபட்டிருந்தாலும், யாருக்காவது உணவு பற்றியோ, நோய் பற்றியோ அறிவுரை தேவைப்பட்டால் அவரைத் தொந்தரவு செய்ய அனுமதி உண்டு. நாட்டின் பெருந்தலைவர்களுக்குக் கூட இவ்விஷயத்தில் விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. சிறைவாசத்தின் போது சிறையில், கூட இருந்தவர்களுக்கு காந்திஜி சிகிச்சை அளித்து வந்தார்.

ஒரு தடவை ஆஸ்துமா நோயினால் அவதியுற்ற சக ஊழியர் ஒருவர் காந்திஜியின் உதவியை நாடினார். காந்திஜி அவரைப் புகை பிடிக்கும் பழக்கத்தை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று அறிவுறுத்தினார். மூன்று நாட்கள் கழிந்தன. எவ்வித முன்னேற்றமும் இல்லை. ரகசியமாக ஒன்றிரண்டு சிகரெட்டுகள் பிடிப்பதை அவரால் தவிர்க்க முடியவில்லை. ஒரு நாள் இரவு அவர் தீக்குச்சியைப் பற்றவைத்தபோது அவர் முகத்தில் டார்ச் விளக்கின் ஒளி விழுந்தது. காந்திஜி அவருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தார். அந்த நபர் தாம் சிகரெட் பிடித்ததற்காக காந்திஜியிடம் மன்னிப்பு கேட்டார். கூடவே சிகரெட் பிடிக்கும் பழக்கத்தையும் விட்டுவிட்டார். ஆஸ்துமா நோயும் அவரை விட்டு விலகிவிட்டது.

பாத்ஷா கானுக்கு (எல்லை காந்தி) தலையில் பிரச்சினை. காந்திஜி அவருக்கு சிபாரிசு செய்த சிகிச்சை, பாத்ஷா கானுக்கு நோயைவிட மோசமாகத் தொந்தரவு அளித்தது.

ஒரு தடவை வல்லப்பாய் பட்டேலின் காலில் முள் ஒன்று தைத்துவிட்டது. காந்திஜி அவருக்கு அயோடினுக்கு பதிலாக ஒரு செடியின் கொட்டையை அரைத்துத் தடவ முற்பட்டார். பட்டேல் காந்திஜியிடம் கூறியது : "நீங்கள் அளித்துள்ள சிகிச்சையைக் காட்டிலும் தைத்துள்ள முள்ளின் உபத்திரவம் மிகவும் குறைவுதான்".

11

காந்திஜி ஒரு செவிலியர்

காந்திஜியுடன் கலந்து ஆலோசிப்பதற்காக சில காங்கிரஸ் தலைவர்கள் ஒருமுறை சேவாகிராமத்திற்கு வந்தனர். அப்போது காந்திஜி ஆசிரம நோயாளிகள் சிலருக்கு இடுப்புக் குளியல் சிகிச்சை செய்வதிலும், குளிர்ந்த நீர் ஒத்தடம் கொடுப்பதிலும் ஈடுபட்டிருந்தார். ஒரு தலைவர் காந்திஜியிடம் கேட்டார் : "இப்பணிகளை எல்லாம் நீங்கள்தான் செய்ய வேண்டுமா?" காந்திஜி பதிலளித்தார்: "வேறு யார் செய்வார்கள்? நீங்கள் கிராமத்திற்குள் சென்று பாருங்கள், 600 நபர்களில் 300 பேர் நோய்வாய்ப்பட்டிருக்கின்றனர்."

சிறுவயது முதலே காந்திஜிக்கு செவிலியர் பணியில் ஈடுபாடு இருந்தது. பள்ளி முடிந்ததும் வீட்டிற்கு ஓடிச்சென்று நோயுற்றிருந்த தனது தந்தைக்கு பணிவிடை செய்வார் மருத்துவர்கள் வழங்கி இருந்த ஆலோசனைப்படி மருந்து தயாரித்து, தந்தைக்கு வேளா வேளைக்கு மருந்து கொடுப்பார். கூடவே புண்களையும் சுத்தம் செய்து கட்டுப் போடுவார் தென் ஆப்பிரிக்காவில் இருந்தபோது தினந்தோறும் ஒரு மருத்துவமனையில் இரண்டு மணி நேரத்திற்கு இலவசச் சேவை செய்ய அவர் தீர்மானித்தார். அப்போது, மருந்துகள் எழுதிக் கொடுக்கவும் அவர் கற்றுக் கொண்டார். செவிலியர் பணிக்கு நேரம் ஒதுக்கும் நிமித்தம், அவருக்கு வந்த வழக்குகளில் சிலவற்றை தனது ஒரு முஸ்லீம் நண்பருக்கு மாற்றி வந்தார்.

1896ம் ஆண்டில் சிறிது காலத்திற்கு இந்தியா வந்த காந்திஜி, இந்தியத் தலைவர்களிடம் தென் ஆப்பிரிக்க இந்தியர்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் பற்றி எடுத்துரைத்தார். அவரது நேரம் முழுவதுமே 'பசுமை அறிக்கை' தயாரிப்பதில் செலவழிந்தது. இருப்பினும் அவரது சகோதரியின் கணவர் நோய்வாய்ப்பட்ட போது சகோதரியால் செவிலியர் யாரையும் உதவிக்கு அமர்த்திக் கொள்ள முடியவில்லை. காந்திஜி நோயாளியைத் தனது வீட்டிற்குக் கொண்டு வந்து அவருக்கு இரவு பகலாகப் பணிவிடை செய்தார்.

கையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்த தனது எட்டு வயது மகனுக்குக் காயங்களைக் கழுவி ஒரு மாத காலத்திற்கு

கட்டுப்போட்டு வந்தார், டாக்டர் கட்டி இருந்த கட்டை அவிழ்த்துவிட்டு, காயங்களைக் கழுவி விட்டு சுத்தமான மண்சாந்து பூசி கட்டுப் போட்டு வந்தார். காயம் சீக்கிரமே ஆறிவிட்டது. அவரது 10 வயதான மற்றொரு மகன் டைஃபாய்ட் ஜுரத்தால் அவஸ்தைப்பட்டான். 40 நாட்கள் வரை காந்திஜி அவனுக்குப் பணிவிடை செய்தார். பையனின் அலறலைப் பொருட்படுத்தாமல் அவனது உடல் முழுவதையும் ஈரத் துணியால் சுற்றி போர்வைகளைப் போட்டு மூடிவைத்தார். மிகவும் சிரத்தையுடனும் கனிவுடனும் பணிவிடைகள் செய்வார் காந்திஜி. எவ்விதக் குறையும் வைப்பதில்லை. வேறொரு சிறுவனுக்கும் அவர் டைஃபாய்ட் ஜுரம் வந்தபோது சிகிச்சை செய்தார். 15 நாட்கள் வரை மண்சாந்துப் பூச்சும் இடுப்புக் குளியலும் செய்யப்பட்டன. ஒவ்வொரு ஒன்றரை மணி நேரத்திற்குப் பின்பும் புதிதாக மண்சாந்தை ஒன்றரை அங்குல கனத்திற்குப் பூசிவைப்பார். ஜுரம் விட்டதும் பையனை நன்கு கனிந்த வாழைப்பழங்களை உணவாக உட்கொள்ள அனுமதி கொடுத்தார். தாமே 15 நிமிஷங்களுக்கு வாழைப் பழத்தை நசுக்கிக் கூழாக்கிப் பையனுக்கு சாப்பிடக் கொடுத்தார், அவர். இப்பணியைப் பையனின் தாயாரிடம் ஒப்படைத்தால், அவர் அளவுக்கு அதிகமாக உணவு கொடுத்து விடுவாளோ என்று அஞ்சி, இப்பணியைத் தாமே செய்தார். நோயாளிக்குப் பணிவிடை செய்யும் தருணத்தில் அவரை அமைதியாகவும் இருக்க வைப்பார். மனிதர்களுக்கு சார்புத் தன்மையை ஏற்படுத்தும் காப்பி, டீ போன்ற பானங்களை காந்திஜி தவிர்த்து வந்தார். இருப்பினும் நோயுற்றிருந்த ஒரு தென் இந்தியச் சிறுவன் காப்பி வேண்டும் என்று கேட்டபோது, தாமே தமது கைகளால் காப்பி தயாரித்து அவனுக்கு அளித்தார்

நோயாளிகளுக்கு ஒத்தடம் கொடுப்பது, எனிமா கொடுப்பது, மண்சாந்து அப்புவது போன்ற பணிகளைச் செய்வார். நோயாளிகளைப் பொருத்தவரை அவர் செவிலியருக்கு ஒருபடி மேலாகவே இருந்தார். தன்னை நோய் தொற்றிக் கொண்டுவிடுமோ என்ற அச்சம் அவருக்கு எழுந்ததே இல்லை. வெண்குஷ்டத்தால் பாதிக்கப்பட்ட ஒரு பிச்சைக்காரர் ஒருமுறை அவரிடம் வந்தார். காந்திஜி அவருக்குத் தங்க இடம் கொடுத்து, புண்களுக்குச் சிகிச்சை அளித்து, சிலநாட்கள் தன்னிடம் வைத்துக்கொண்ட பின்பே அவரை மருத்துவமனைக்கு அனுப்பினார். காந்திஜியுடன் சிறையில் இருந்த ஒரு நபர் குஷ்டத்தால் பீடிக்கப்பட்டபோது, காந்திஜி தினமும் அவரைச் சென்று பார்த்து சிகிச்சை செய்து வந்தார்.

சிறைவாசத்திற்குப் பின் அந்நோயாளி பல ஆண்டுகளுக்கு காந்திஜியுடன் சேவாகிராமிலேயே இருந்தார். காந்திஜி தினமும் அவருக்கு மருந்து போட்டு வந்தார்.

இரண்டு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பங்களில் காந்திஜிக்குத் தமது செவிலியர் பணியைப் பெரும் அளவில் செய்வதற்கான வாய்ப்புகள் கிட்டின. முதலாவது, போயர் யுத்தம். இரண்டாவது, ஜுலுக்களின் புரட்சிப் போராட்டம். இரண்டு சந்தர்ப்பங்களிலும் காந்திஜி ஒரு இந்திய ஆம்புலன்ஸ் சேவையை நிறுவி காயமுற்றவர்களுக்கும், நோயுற்றவர்களுக்கும் சிகிச்சை அளித்தார். செவிலியர்களுக்குத் தலைமை ஏற்று சிறந்த முறையில் பணியாற்றிய காந்திஜி, நோயாளிகளைத் தூக்குப் படுக்கையில் (ஸ்ட்ரெச்சர்) சுமந்த வண்ணம் மைல் கணக்கில் நடப்பார். சவுக்கடி பட்டுக் காயமுற்றுக்கிடந்த ஜுலு மக்களுக்கு அவர் சிகிச்சை அளித்தார். "காருண்ய சகோதரிகள்" குழுவைச் சேர்ந்த வெள்ளைக்காரச் செவிலியர்கள் காயமுற்று, அவதிப்பட்டுக் கொண்டிருந்த ஜுலு இனத்தவருக்குச் சிகிச்சை செய்ய மறுத்துவிட்டனர். அவர்களது காயங்கள் சீழ்ப் பிடிக்கத் தொடங்கி இருந்தன. கறுப்பு இன ஜுலு மக்களுக்கு மட்டுமின்றி, காயமுற்ற வெள்ளையர்களுக்கும் செவிலியப் பணி செய்தார். அவரது பணிகளைப் பாராட்டிய தென் ஆப்பிரிக்க அரசாங்கம் அவருக்கு ஜுலு போர்ப் பதக்கத்தையும் இந்திய-கேசரி பதக்கத்தையும் வழங்கியது.

தென் ஆப்பிரிக்காவின் தங்கச் சுரங்கப் பகுதிகளில் பிளேக் நோய் பரவியபோது, நிறைய இந்தியர்கள் பாதிக்கப் பட்டனர். அதைப் பற்றிக் கேள்வியுற்ற உடனேயே காந்திஜி நான்கு உதவியாளர்களுடன் அங்கு விரைந்தார். அருகே மருத்துவமனை எதுவும் இல்லை. காலியாக இருந்த ஒரு சேமிப்பு கிடங்கில் படுக்கைகளுக்கு ஏற்பாடு செய்து 23 நோயாளிகளை அங்கு கொண்டு சென்றார். அவரது பணிகளைப் பாராட்டிய ஊராட்சி மன்றம் அவருக்குக் கிருமிநாசினிகளை வழங்கி ஒரு செவிலியையும் உதவிக்கு அனுப்பியது. அச் செவிலிய மாதிடம் பிராந்தி போத்தல்கள் நிறைய இருந்தன. காந்திஜி அவற்றைப் பொருட்படுத்தவில்லை. மருத்துவ உதவி செய்ததுடன், அவர்களது படுக்கைகளையும் சுத்தம் செய்து இரவெல்லாம் கண்விழித்து அவர்களைப் பார்த்துக் கொண்டார். டாக்டரின் அனுமதியுடன் மூன்று நோயாளிகளுக்கு மண்சாந்து சிகிச்சை அளிக்கப்பட்டது. இரண்டுபேர் பிழைத்துக் கொண் டனர். அந்தச் செவிலிய மாது உள்பட மற்ற நோயாளிகள் அனைவரும் மாண்டுபோயினர். நோயாளிகளுக்கு எப்படி நாம்

நல்ல முறையில் சேவை செய்கிறோமோ அதேபோல் நமது உடலையும் ஆரோக்கியத்துடன் வைத்துக் கொள்வது அவசியம் என்று காந்திஜி கூறுவார். அவர் எப்போதுமே முன் எச்சரிக்கையுடன் செயல்படுவார். பணி அதிகம் இருந்தபோதெல்லாம், தாம் உண்ணும் உணவின் அளவைக் குறைத்துக் கொள்வார். அவர் எனிமா கொடுப்பதில் நிபுணராக விளங்கினார். அதேபோல் இடுப்புக் குளியல் செய்வதிலும், மண்சாந்து சிகிச்சையிலும் குளிர்ந்தநீர் ஒத்தடம் கொடுப்பதிலும் நிபுணர். தன்னுடைய ரத்த அழுத்தத்தைக் குறைப்பதற்குத் தனது நெற்றியில் மண் சாந்தினைப் பூசிக்கொள்வார். யோனே நொகுச்சி என்ற ஜப்பான் நாட்டுக் கவிஞர் ஒருமுறை காந்திஜியைச் சந்தித்தபோது அவரது நெற்றியில் மண்சாந்து பூசப்பட்டிருந்தது. காந்திஜி சிரித்தவண்ணம் சொன்னார் : "நான் இந்திய மண்ணில் பிறந்தேன். இந்திய மண்ணையே என் தலைமீதும் தாங்கிக் கொண்டிருக்கிறேன்."

நோயாளியின் நிலைமை கவலைக்கிடமான சமயங்களில் காந்திஜி சற்றும் பதட்டம் அடையமாட்டார். தொடர்ந்து அமைதியாக நோயாளிகளுக்குச் சிகிச்சையைச் செய்வார். இரண்டு தடவைகள் தென் ஆப்பிரிக்காவில் கஸ்தூரிபா அன்னையாரின் உடல்நிலை கவலைக்கிடமாயிற்று. டாக்டர்கள் கைவிரித்து விட்டனர். காந்திஜி பொறுமையாகவும், தைரியத்துடனும் பணிவிடைகளைத் தொடர்ந்து செய்தார். அன்னையாரின் உடல்நிலையும் தேறிவிட்டது. தென் ஆப்பிரிக்கச் சிறையிலிருந்து வெளியே வந்த ஒரு சந்தர்ப்பத்தில் அன்னையார் மிகவும் பலகீனமாகிவிட்டார். காந்திஜி அவருக்கு பல் துலக்கி வைத்து, காப்பி தயாரித்து கொடுத்து எனிமா கொடுத்து, மலம் கழித்த தட்டுகளை அகற்றி சுத்தம் செய்து, அன்னையாரின் தலையையும் வாரிவிட்டார். அதிகாலையில் அவரைப் படுக்கை அறையிலிருந்து வெளியே தூக்கி வந்து நாள் முழுவதும் திறந்த வெளியில் ஒரு மரத்தடியில் உட்கார வைத்திருப்பார். சூரியன் கிழக்கிலிருந்து மேற்கு திசைக்குமாறும்போது படுக்கையையும் எதிர்ப்புறத்திற்கு மாற்றி வைப்பார்.

தென் ஆப்பிரிக்காவில் இந்தியச் செவிலியர் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்தது. வெள்ளையச் செவிலியர்கள் கறுப்பர்களுக்குப் பணிவிடை செய்யமாட்டார்கள். கஸ்தூர்பா அன்னையாரின் கடைசிக் குழந்தையின் பேறுகாலம் நெருங்கிய போது, காந்திஜி மகப்பேறு சம்பந்தமான புத்தகங்களைப் படித்தறிந்து, தாமே செவிலியராகப் பணியாற்றி குழந்தைப்பேறு நல்லபடியாக நடக்கும்படி பார்த்துக் கொண்டார்.

ஆகாகான் அரண்மனையில் கஸ்தூர்பா கடைசி முறையாக நோய்வாய்ப்பட்டார். 75 வயதான காந்திஜி அவருக்கு இடுப்புக் குளியல் மூலம் சிகிச்சை அளித்தார்.

செவிலியர் மற்றும் மருந்தாளுனராகப் பணியாற்றிய காந்திஜி ஒருமுறை தாமே நோயாளியாகிவிட்டார். ஏரவாடாச் சிறைவாசத்தின்போது குடல்வால் நோய்க்காக (அப்பெண்டிசைட்டிஸ்) அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. செவிலியர்கள் காந்திஜியின் செவிலிய-மருந்தாளுனர் அறிவை மிகவும் பாராட்டினர். ஒரு செவிலியை இவ்வாறு கூறினார் : "செவிலியர் பணி எப்போதுமே மகிழ்ச்சி அளிப்பதுதான். ஆனால், காந்திஜிக்குச் செவிலியப் பணி ஆற்றியது, நான் செய்த பாக்கியம்! அது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை அளித்தது. டாக்டர், இதுபோல் உனது அறிக்கையை நீ எப்போதுமே அச்சடித்து விளியோகித்தது இல்லையே, இப்போது ஏன் அப்படிச் செய்தாய் என்று?"

"இதற்கு முன்பு இப்படிப்பட்ட ஒரு நோயாளிக்குப் பணிவிடை செய்ததில்லையே" என்று செவிலியை பதில் அளித்தார்.

ஒரு ரூபாய் பெறுமானமுள்ள கதரை நீங்கள் வாங்கும் போது, தொழிலாளி தன்னுடைய உழைப்பின் முழுப் பலனையும் அவனே வைத்துக்கொள்கிறான் என்பதை நீங்கள் அறிய வேண்டும். ஆனால், உள்நாட்டு மில்லில் தயாராகும் துணியை நீங்கள் வாங்கும்போது, அவனுக்குப் பதிலுக்கு எதையும் அளிக்காமல் அந்த லாபகரமான உழைப்பின் பலன் முழுவதும் அவனுக்கு இல்லாதபடி செய்துவிடுகிறீர்கள். கதரை விற்கும் ஸ்தாபனம், அதற்காகும் செலவைத் தவிர வேறு எதையும் அடைவதில்லை. ஆகையால், அதுவும் உற்பத்தியாளருக்குச் சமமானதாகிறது.

— ஹரிஜன் 5-10-1934

12

காந்திஜி ஒரு ஆசிரியர்

காந்திஜியின் திருமணம் அவரது 13வது வயதில் நடந்தது. அப்போது, அவருடைய மனைவி கஸ்தூர்பாவின் வயதும் 13 தான். அன்னைக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அந்த வயதிலேயே காந்திஜி தம் மனைவிக்குக் கல்வி கற்பிக்க முயன்று தோற்றுப் போனார். 1914ம் ஆண்டில் இங்கிலாந்துக்குக் கப்பல் பயணமாகச் சென்றபோது, தனது நண்பர் கல்லன்பாக்கிற்கு தினமும் ஒருமணிநேரம் குஜராத்தி மொழி கற்றுக் கொடுத்தார். தம் மனைவி கஸ்தூர்பாவுக்கு கீதையையும் ராமாயணத்தையும் படித்துக் காண்பித்து விளக்கமும் கொடுத்தார். அன்னையார், குஜராத்திப் பாடம் கற்பிக்கும் போதும் உடன் இருப்பார். கஸ்தூர்பா தமது 73வது வயதில் ஆகாகான் அரண்மனையில் (சிறையில்) காந்திஜியுடன் இருந்தார். அப்போது காந்திஜிக்கு ஓய்வுநேரம் கிடைத்தது கீதையிலும் ராமாயணத்திலும் எளிய விளக்கங்களுடன் தம் மனைவிக்கு வகுப்பு எடுத்தார். தினமும் மனைவிக்கு பூகோளம், குஜராத்தி, இலக்கியம் மற்றும் இலக்கணம் ஆகியவற்றையும் கற்றுத்தர முயற்சித்தார். வயது கூடிவிட்டதாலும் மனதில் சற்று சோகம் இருந்ததாலும் அன்னையாருக்கு அப்பாடங்களில் விருப்பம் ஏற்படவில்லை! சிறைவாசத்தின்போது மற்றொரு சைனா நாட்டுச் சிறைவாசிக்கு ஆங்கிலமொழியைக் கற்றுக் கொடுத்தார். அயர்லாந்து நாட்டவர் ஒருவருக்கு குஜராத்தி மொழியைக் கற்றுத் தந்தார். தமது பேரப்பிள்ளைகளுக்கு சரித்திரம், பூகோளம் மற்றும் வடிவியலில் (ஜாமெட்ரி) பாடங்கள் எடுத்தார். தமது 74வது வயதிலும் அவரால் வடிவியல் உருவங்களைக் கச்சிதமாக வரைய முடிந்தது.

காந்திஜிக்கு தமது கற்பிக்கும் திறமையில் அசாத்திய நம்பிக்கை இருந்தது. ஆனால், கல்வி கற்பிப்பதில் அவருடைய அணுகுமுறை முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. தென் ஆப்பிரிக்காவில் ஒரு முடிதிருத்துபவர், ஒரு குமாஸ்தா மற்றும் ஒரு கடைக்காரர் ஆகிய மூவரும் ஆங்கிலம் கற்க விரும்பினர். அவர்களிடம் ஆசிரியருக்குக் கொடுப்பதற்கான பணமோ, வகுப்புக்குச் செல்வதற்கான நேரமோ இல்லை. காந்திஜி, தாமே அவர்கள் பணியில் இருந்த இடங்களுக்குச் சென்று எட்டே மாதங்களில் அவர்களுக்கு ஆங்கில மொழியை மட்டுமின்றி கணக்குகள் வைத்துக் கொள்ளும் முறை மற்றும் தொழில்

சம்பந்தமான கடிதங்கள் எப்படி எழுத வேண்டும் போன்ற விஷயங்களையும் கற்றுக் கொடுத்துவிட்டார்.

கொஞ்ச காலத்திற்குத் தன் மகன்களுக்கு வாய்வழிக் கல்வி கற்பித்தார், காந்திஜி. அவரிடம் நேரம் குறைவாக இருந்ததால் வெளியே உலாவச் செல்லும்போதும், கடைகளுக்குச் செல்லும் போதும் மகன்களைக் கூடவே அழைத்துச் சென்று, இலக்கியம், கவிதைகள் ஆகியவற்றைக் கற்பித்து வந்தார். சில மாதங்களுக்கு ஒரு ஆங்கில ஆசிரியையை அமர்த்தி, தன் மகன்களுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்தார். அவரது ஆங்கில நண்பர்களிடமிருந்தும் மகன்கள் சிறிது ஆங்கிலம் பயின்றனர்.

ஃபீனிக்ஸ் குடியிருப்பில் இருந்த சமயத்தில் பண்ணையில் தம்முடன் பணியாற்றிய ஊழியர்களின் குழந்தைகளுக்காக ஒரு ஆரம்பப் பள்ளியைக் காந்திஜி தொடங்கினார். அப்பள்ளியில், அவர் தலைமை ஆசிரியரானார். ஊழியர்களில் சிலர் ஆசிரியர்களாகப் பணியாற்றினர். மாணவர்கள் பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள். ஆசிரியர்கள், இந்தியா, இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி நாட்டவர்கள். ஆசிரியர்களுக்குத் தினந்தோறும் கடினமான உடலுழைப்புப் பணி மேற்கொள்ள வேண்டி இருந்ததன் காரணமாக, தோட்டங்களிலிருந்தும் வயல்களிலிருந்தும் கைகால்களில் புழுதியுடன் நேராக வகுப்பெடுக்க வந்து விடுவார்கள். காந்திஜி, சில சமயங்களில், கைகளில் ஒரு சிறுகுழந்தையை ஏந்திய வண்ணம் வகுப்பு எடுப்பார். தாம் செய்யாத, தம்மால் செய்ய இயலாத எதையும் செய்யும்படி மாணவர்களிடம் அவர் சொல்லமாட்டார். பயந்த சுபாவம் உள்ள ஒரு ஆசிரியரால் தைரியசாலிகளான மாணவர்களை உருவாக்க முடியாது என்று கூறுவார். காந்திஜி, ஆசிரியர் மாணவர்களுக்குத் தாமே ஒரு முன் உதாரணமாக விளங்க வேண்டும் என்று வற்புறுத்துவார். அவர் பல்வேறு துறைகளைப் பற்றிய புத்தகங்களைப் படித்து வந்தார் – அவ்வப்போது புதிய விஷயங்களையும் தெரிந்து கொள்வார். தனது 65வது வயதில் வான் இயல் பற்றி படிக்கத் தொடங்கினார்.

ஃபீனிக்ஸ் குடியிருப்பில் இருந்த பள்ளி, பரீட்சார்த்த முறையில் பல கடுமையான சட்டதிட்டங்களுடன் நடத்தப் பட்டது. நடைமுறைகள் எளிமையாகவும் அதேசமயம், சற்றுக் கடினமாகவும் இருந்தன. தேநீர், காப்பி, கோக்கோ போன்ற பானங்கள் தடை செய்யப்பட்டிருந்தன. காரணம் அவை அடிமைகளைக் கொண்டு பயிரிடப்படுபவை. பெரும்பாலான மாணவர்கள் ஆசிரமத்திலேயே வசித்தவர்கள். காந்திஜி, அபூர்வமாகவே புத்தகங்களைப் பயன்படுத்தினார். தனது இளமைப் பருவத்தில், தன்னை, ஆசிரியர்கள் பாடங்களை நெட்டுருப்

போடச் சொல்லி கட்டாயப் படுத்தியது அவருக்கு நன்றாக நினைவில் இருந்தது. இதன் காரணமாக படிப்பில் ஆர்வம் குறைந்து விடுகிறது. எழுத்தறிவு, படிப்பறிவு மற்றும் கணிதம் ஆகிய மூன்றின் அடிப்படைக் கல்விமுறையில் காந்திஜிக்கு ஈடுபாடு கிடையாது. மாணவர்களின் மனதில் பண்பாட்டையும் நன்னடத்தையையும் வளர்ப்பது முக்கியம் என்று கருதினார்.

மாணவர்கள் எல்லா மதங்களையும் மதிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர். ரம்ஜான் மாதத்தின்போது முஸ்லிம் மாணவர்களுடன் சேர்ந்து இந்து மாணவர்களும் விரதம் அனுசரித்தனர். சில மாதங்களுக்கு சில முஸ்லிம் மாணவர்கள் இந்து குடும்பங்களுடன் வசித்தனர். அம்மாணவர்கள் சைவ உணவை அக்குடும்பங்களுடன் சேர்ந்து உண்டனர். ஆசிரமத்தின் எல்லா மாணவர்களும் சர்வமத பிரார்த்தனையில் கலந்து கொண்டனர். தோட்டவேலை, துப்புரவுப் பணி, செருப்புத் தைக்கும் பணி, தச்சு வேலைகள் மற்றும் சமையல் பணியிலும் மாணவர்கள் பங்கேற்றனர். சங்கீதத்தை ரசிக்கவும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. தினந்தோறும் பஜனைகளும், பாடல்களும் பக்கவாத்தியங்களுடன் பாடப்பட்டன. டென்னிஸ் அல்லது கிரிக்கெட் விளையாடுவதற்கு பதிலாக மாணவர்கள் உடல் உழைப்பின் மூலம் உடலை வலுவாக வைத்துக் கொள்ள முடியும் என்று கூறிவந்தார். டால்ஸ்டாய் பண்ணையிலும் சபர்மதி ஆசிரமத்திலும் காந்திஜி செருப்பு தைக்கும் கலையை மாணவர்களுக்குப் பயிற்றுவித்தார். ஆரம்பப் பாடங்கள் உருது மற்றும் தமிழ் மொழியில் கற்றுத்தரப்பட்டன. தாய்மொழியில் பாடங்கள் நடத்தப்பட்டன. காந்திஜிக்கு குஜராத்தி, மராட்டி, இந்தி, உருது, தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு மற்றும் லத்தீன் ஆகிய மொழிகள் தெரியும்.

சபர்மதி ஆசிரமத்தில் கல்விக்குக் கட்டணம் கிடையாது. பெற்றோர்கள் தாமாகவே முன்வந்து நன்கொடை அளித்தனர். நான்கு வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் பள்ளியிலேயே தங்கிப் படிக்க வேண்டும். சரித்திரம், பூகோளம், கணிதம், பொருளாதாரம் ஆகிய பாடங்கள் தாய் மொழியிலேயே கற்பிக்கப்பட்டன. சமஸ்கிருதம் இந்தி மற்றும் ஒரு திராவிட மொழி ஆகியவற்றை மாணவர்கள் கட்டாயம் பயிலவேண்டும். ஆங்கிலம் ஒரு சார்பு மொழியாகக் கற்றுத் தரப்பட்டது. உருது, தமிழ், தெலுங்கு மற்றும் வங்கமொழிகளின் எழுத்துக்களும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டன. தினமும் மூன்று முறை எளிமையான, காரம் மசாலா இல்லாத உணவு தரப்பட்டது. எளிமையான சீருடைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. சுதேசி கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன. பையன்களும் பெண்களும் ஒரே பள்ளியில் ஒன்றாகப் படிப்பது நல்லது என்று அவர்

நம்பினார். அப்போதுதான் பால் உணர்வு பற்றிய பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ள முடியும். நாம் இந்த விஷயத்தில் கண்களுக்குத் திரைபோட்டு கொண்டு பிரச்சினையைத் தவிர்க்க முயல்வது சரியல்ல. பையன்கள், பெண்களிடையே எப்போதாவது சிறு தவறுகள் நிகழ்ந்தால்-காந்திஜி உண்ணாவிரதம் மேற்கொண்டு விடுவார்.

நூற்பைத் தவிர பஞ்சை சுத்தம் செய்வதிலும் பட்டை போடுவதிலும் மாணவர்கள் பயிற்சி பெற்றனர். இளைஞர்கள் ஏதாவது ஒரு தொழிலில் பயிற்சி பெற்று அதிலிருந்து கிடைக்கும் வருவாயில் இருந்து கல்விச் செலவில் ஒரு பகுதியை ஈடு செய்ய வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர்களுக்கு வாராந்திர விடுப்போ நீண்ட விடுமுறையோ அளிக்கப்படவில்லை. வாரத்தில் இரண்டு நாட்கள், மாணவர்களது சொந்தப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டது. வருடத்தில் மூன்று மாதங்களுக்கு அவர்களது உடல்நிலை அனுமதித்தால் பாதயாத்திரை மேற்கொள்ளலாம். குஜராத் வித்யாபீடத்தில் பைபிளின் உதவியின்றியே மாணவர்களுக்கு புத்தகத்தின் புதிய ஏற்பாடு மற்றும் ஆங்கில இலக்கியப் பாடல்களை அவர் எடுப்பது உண்டு. அப்போதையக் கல்வி முறை ஒருசில மத்தியதரக் குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் அமைந்திருந்தது. அதனை அனைத்து மக்களின் தேவைகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் முற்றிலுமாக மாற்றி அமைத்திட காந்திஜி விரும்பினார். தாய்மொழியிலிருந்து முற்றிலும் மாறுபட்ட அயல்நாட்டு மொழியான ஆங்கில மொழியைக் கற்பதற்காக மாணவர்கள் எவ்வளவு நேரத்தை வீணடிக்க வேண்டி இருக்கிறது என்று எண்ணி அவர் வருந்தினார். இதன் காரணமாக இந்தியக் கலாச்சாரம், இந்திய மொழிகள், இந்திய இலக்கியம் எல்லாவற்றிலுமிருந்தும் அந்த மாணவர்கள் ஒதுங்கி விடுகிறார்கள். உயர் கல்வியும் மாணவர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்கவில்லை. படிப்பு முடிந்ததும் என்ன செய்யப் போகிறோம் என்ற கவலை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களை வாட்டுகிறது. இந்தியாவின் பல்வேறு கலாச்சாரங்களையும், மரபுகளையும் மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும். மேலும், அவற்றை இன்றைய சூழலுக்கு ஏற்ப எப்படி அனுசரிக்க வேண்டும் என்பதும் அவர்களுக்குத் தெரியவேண்டும் என்பது காந்திஜியின் வாதம். மாணவர்கள் நல்ல உடல் ஆரோக்கியம், நன்னடத்தை மற்றும் நல்லறிவுடன் கூடிய கிராமவாசிகளாக உருவாகி அவர்கள் வாழ்வதற்கான வருமானத்தையும் ஈட்டிக் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். ஒரு குழந்தைக்கு எழுத்தறிவுக்கு முன்பாக படிப்பறிவு வழங்கப்பட வேண்டும். மாணவர்களின்

கையெழுத்து நேர்த்தியாக இருக்க வேண்டும் என்று அவர் கூறிவந்தார். தனது கையெழுத்து நன்றாக இல்லை என்பதில் அவருக்கு எப்போதுமே சற்று வருத்தம்தான். மாணவர்களுக்கு முதலில் நேர்கோடுகள், வளைவுகள், முக்கோணங்கள், பறவைகள், மலர்கள், இலைகள் ஆகியவற்றை வரைவதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதற்குப் பின்புதான் அவர்களுக்கு எழுதக் கற்றுத்தர வேண்டும் என்று காந்திஜி ஆசிரியர்களுக்கு அறிவுரை வழங்கினார். அப்போது, வழக்கில் இருந்த ஆரம்பக் கல்வித்திட்டம் அபத்தமானது. ஏனெனில், இந்தியாவின் கிராமவாசிகளின் தேவைகளை அது பூர்த்தி செய்யவில்லை என்றும் அவர் கூறினார்.

வெறும் எழுத்தறிவினால் பயனில்லை. மாணவர்கள் நல்ல பிரஜைகளாக உருவாக வேண்டும் என்று காந்திஜி விரும்பினார். கல்வியைப் பற்றி முப்பது ஆண்டுகளுக்குச் சிந்தனை செய்தபின் தொழில் அடிப்படையிலான ஒரு கல்வி முறையை அவர் அறிமுகப்படுத்தினார். தனது 63வது வயதில் சிறைவாசத்தின்போது தனது புதிய கல்வித் திட்டத்தை அவர் உருவாக்கினார். அதுதான் பிற்பாடு நயிதாலீம் அல்லது வார்தாக் கல்வித் திட்டம் என்ற பெயரில் புகழ் பெற்று விளங்கியது.

காந்திஜி, குழந்தைகளுக்கு கடும் தண்டனை விதிப்பதை வெறுத்தார். ஒரே ஒரு தடவை ஒரு குறும்புக்கார மாணவனை காந்திஜி குச்சியால் அடித்துவிட்டார். உடனேயே தாம் சுயகட்டுப்பாட்டை இழந்ததற்காக வருந்தினார். அம்மாணவனோ காந்திஜி தன்னை அடித்ததற்காக அழவில்லை. மாறாக, தன்னால் காந்திஜிக்கு வருத்தம் ஏற்பட்டுவிட்டதே என்று அவன் வருந்தினான்.

காந்திஜி, மாணவர்கள் விளையாட்டில் போட்டி போடுவதை ஆதரித்தார். ஆனால், படிப்பில் போட்டியை அவர் ஆதரிக்கவில்லை. அவர் மாணவர்களுக்கு மதிப்பெண்கள் வழங்கியமுறை சற்று வித்தியாசமாக இருந்தது. ஒரு மாணவனின் படிப்புத்திறமையை வகுப்பில் சிறந்த மாணவனின் திறமையுடன் அவர் ஒப்பிடவில்லை. அதேசமயம் ஒரு மாணவன் தன் படிப்பிலும் வீட்டுப் பாடத்திலும் முன்னேற்றம் காட்டினால் அவனுக்கு அவர் அதிக மதிப்பெண்களை வழங்கினார். அவர் மாணவர்களை முற்றிலுமாக நம்பினார். தேர்வுகள் நடக்கும்போது மேற்பார்வை அனாவசியம் என்று அவர் கூறுவார். ஆசிரமப் படிப்பில் மாணவர்களின் சுதந்திர உணர்வு முதலிடம் வகித்தது. "மிகவும் சிறிய குழந்தைக்குக்கூட தனது

முக்கியத்துவம் பற்றிய உணர்வு வரவேண்டும்" என்று அவர் விரும்பினார்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஆதாரப் பள்ளிகள் நிறுவப்பட வேண்டும்; அப்பள்ளிகள் சுயதேவைப் பூர்த்திப் பள்ளிகளாக விளங்கவேண்டும் என்றும் அவர் எண்ணினார். ஆதாரப்பள்ளி மாணவர்களுக்குத் தொழிற்கல்வி அவசியம். குறைந்தபட்சம் நூற்புப் பயிற்சியாவது அளிக்கப்பட வேண்டும். உலகில் சமத்துவமும் சமாதானமும் நிலவவேண்டுமானால் நாம் அதற்கான முயற்சிகளை மாணவர்களிடம்தான் தொடங்க வேண்டும் என்றும் அவர் எண்ணினார். அடிப்படைக் கல்வியான எழுத்தறிவு, படிப்பறிவு மற்றும் கணிதத்தை மட்டும் பயின்று உடலுழைப்பில் ஈடுபடுவது வெட்கத்திற்குரியது என்று எண்ணும் மாணவர்களை உருவாக்குவதைக் காட்டிலும், அவர்கள் படிப்பறிவின்றி கல்லுடைப்பதில் ஈடுபடுவதே மேல் என்று அவர் கூறுவார்- தனது பேரப்பிள்ளைக்கு பருத்தி எப்படி பயிராகிறது, தக்ளியில் நூல் எப்படி நூற்கப்படுகிறது, சிட்டத்தில் சுற்றுக்கள் எப்படி எண்ணப்படுகின்றன, துணி தறியில் எப்படி நெய்யப்படுகிறது போன்ற விஷயங்களை போதித்து வந்தார். மேலும் அவனுக்கு பூகோளம், இயற்கை, கணிதம், வடிவியல், நாகரிகங்களின் வளர்ச்சி ஆகிய விஷயங்கள் பற்றியும் எடுத்துக் கூறுவார்.

சற்று மூத்த மாணவர்களுக்கு, நூற்பு மற்றும் நூற்பு சார்ந்த துறைகளில் காந்திஜி நடத்திய தேர்வுகள் சற்று கடினமானவைதான். இத்துறையின் அடிப்படைகளையும் செயல்களையும் நன்கு கற்றறிந்த மாணவன்தான், அத்தேர்வில் வெற்றி பெறமுடியும். ஆதாரக் கல்வி மூலம் மட்டுமே மாணவர்கள் சிறிதளவு பொருள் ஈட்டும் திறமையைப் பெற முடியும் என்றும் அவர் கூறிவந்தார். இக்கல்வி முறையின் நோக்கம் மாணவர்களுக்குத் தொழிற்கல்வியை அளிப்பதுமட்டும் அல்ல; மாறாக மாணவனுள் ஒளிந்திருக்கும் மனிதனை உரியமுறையில் வெளிக்கொணர்வதுதான் என்றும் அவர் சொல்வார். தன்னை நாற்காலியில் உட்காரச் சொன்னால் பெருமிதம் கொள்வதும், கையில் துடைப்பத்தைக் கொடுத்தால் அவமானம் அடைவதும் மாணவர்களுக்கு அழகல்ல. ஏட்டுப் படிப்பு மாணவர்களிடம் நேர்மை உணர்வையோ நற்குணங்களையோ வளர்ப்பதில்லை என்பதும் அவரது வாதம்.

காந்திஜி, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையேயும், பட்டமளிப்பு விழாக்களிலும் பல தடவைகள் உரையாற்றி வந்துள்ளார். படிப்பறிவு மற்றும் நிச்சயமான வேலைவாய்ப்புக்

கேற்ற கல்வியினால் மட்டும் பயன் கிடையாது; தேசிய நீரோட்டத்துடன் கலந்து நாட்டிற்காகப் போராடவும் மாணவர்களுக்குத் தெரியவேண்டும். மேலும், அவர்கள் கிராம மக்களின் வாழ்க்கை நிலையை அறிந்து அதை மேம்பாடுறச் செய்வதற்கும் பாடுபட வேண்டும். நாட்டின் கோடிக்கணக்கான மக்களிடையே நிலவும் அச்சத்தையும் மூட நம்பிக்கைகளையும் அகற்றிடவேண்டுமானால் முதியோர் கல்வி மிகவும் அவசியம் என்றும் அவர் கூறிவந்தார்.

கல்விபற்றிய காந்திஜியின் கருத்துக்களில் ரஸ்கின், டால்ஸ்டாய் மற்றும் தாகூரின் பாதிப்பு இருந்தது. ஒரு கல்வி வித்தகர் என்ற முறையில் அவர் உலகின் தலைசிறந்த பரிசோதனையாளர்களின் வரிசையில் வைக்கப்பட வேண்டியவர். பீகாரில், பல பள்ளிகளை அவர் தொடங்கினார். ஒரு தேசியக் கல்லூரியை வங்காளத்தில் நிறுவினார். அகமதாபாத்தில் ஒரு பல்கலைக் கழகத்தையும் அவர் நிறுவினார். இவ்வளவு சாதனைகளைப் புரிந்த இம்மனிதர் தனது இளம் வயதில் மாதம் ரூ 75 ஊதியம் தரக்கூடிய ஆசிரியர் பணிக்கு விண்ணப்பித்தபோது அவருக்கு அப்பணி கிடைக்கவில்லை! ஏனெனில், அப்போது அவர் பட்டம் பெற்றிருக்கவில்லை. பத்தாவது வகுப்பு (லண்டன் மெட்ரிகுலேஷன்) மட்டுமே படித்திருந்தார்.

சாதாரணப் பொருளாதாரத்திற்கு முற்றிலும் மாறானது கதர்ப் பொருளாதாரம். சாதாரணப் பொருளாதாரம், மனிதரின் வாழ்க்கையைப் பற்றிய அம்சத்தையே கவனிப்பதில்லை. கதர்ப் பொருளாதாரமோ, முற்றிலும் மனிதரின் வாழ்க்கையைப் பொறுத்ததாக இருக்கிறது. சாதாரணப் பொருளாதாரம், பச்சையான சுயநலத்தைக் கொண்டது; கதர்ப் பொருளாதாரமோ, தன்னலமற்றதாக இருக்கிறது.

— யங் இந்தியா 16-7-1931

13

காந்திஜி ஒரு நெசவாளர்

காந்திஜி ஒரு தடவை கைது செய்யப்பட்டு நீதிபதியின் முன்பு ஆஜர்ப்படுத்தப்பட்டபோது, நீதிபதி அவரிடம் "நீங்கள் என்ன தொழில் (வேலை) செய்து வருகிறீர்கள்?" என்று கேட்டார். காந்திஜி "நான் நூல் நூற்கிறேன். நெசவு செய்கிறேன். ஒரு விவசாயியும் கூட" என்று பதில் சொன்னார். அப்போது அவருடைய வயது 64. அதற்கு 25 ஆண்டுகளுக்கு முன்பாக அவர் "இந்திய சுயராஜ்யம்" என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதி இருந்தார். அப்புத்தகத்தில் சுதேசி இயக்கம் பற்றி வலியுறுத்தி இருந்தார். நம் நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருள்களை பயன்படுத்துவதன் மூலமே நாட்டிற்கு விடுதலை கிடைக்கும். மேலும், இந்திய மக்கள் இந்தியாவிலேயே சுரண்டப்படுவதையும் வெளிநாட்டினர் மூலம் சுரண்டப்படுவதையும் தவிர்க்க இயலும் என்றார். அந்த காலகட்டத்தில் அவர் ஒரு கைத்தறியைப் பார்த்தது கிடையாது. அவருக்குச் சர்க்காவுக்கும் தறிக்கும் இடையே உள்ள வேறுபாடும் தெரியாது. ஆனால், இங்கிலாந்திலிருந்து துணி இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படுவதன் காரணமாக நெசவாளர்களின் வாழ்க்கை பாழாகி விட்டது என்பது தெரியும். வெளிநாட்டுப் பொருள்களுக்கு ஆதரவு தருவதன் மூலமே இந்தியர்கள் அந்நியர் ஆட்சி இந்தியாவில் நிலைநாட்டப்படுவதற்கு உதவியுள்ளனர். கிழக்கிந்திய கம்பெனி அதிகாரிகள் டாக்காவில் மஸ்லின் நெசவு செய்து வந்த நெசவாளர்களின் கட்டை விரலைத் துண்டித்து நெசவுத் தொழில் அற்றுப் போகும்படி செய்திருந்த விபரங்களை அவர் புத்தகத்தில் படித்திருந்தார்.

200 ஆண்டுகளுக்கு முன்புவரை இந்தியா ஆண்டுதோறும் ரூ. 30 லட்சம் பெறுமான கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்து வந்தது. வெள்ளையர்கள் இந்தியாவை ஆளத்தொடங்கி 40 ஆண்டுகளுக்குள் இந்த ஏற்றுமதி நின்று விட்டது. 100 ஆண்டுகளுக்குப்பின் இங்கிலாந்தின் மொத்த உற்பத்தியில் கால்பகுதி துணி ஆண்டுதோறும் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டது. இதன் மதிப்பு ரூ. 60 கோடி. இவ்வாறாக, உலகம் முழுவதிலும் புகழ்பெற்றதாகக் கருதப்பட்ட இந்தியாவின் கைத்தறி நெசவுத் தொழில் பாழடிக்கப்பட்டது. நெசவாளர்கள்

விவசாயக் கூலிகளாக மாறினர். போதிய வேலை கிடைக்காததால் பலர் பட்டினியால் இறந்தனர். இதுபற்றி ஒரு ஆங்கிலேய கவர்னர் ஜெனரலே இவ்வாறு கூறியுள்ளார்: "கைத்தறி நெசவாளர்களின் எலும்புகள் இந்நாட்டின் உரக்குழிகளில் புதையுண்டுவிட்டன. இப்படிப்பட்டதோர் சோக நிகழ்ச்சியை வாணிப சரித்திரத்தில் நாம் காண முடியாது."

'பனித்துளிகள்' என்ற பெயரில் உலகம் முழுவதும் பிரபலமாகி இருந்த துணிகளை வங்காளத்தில் சில முஸ்லிம் நெசவாளர்கள் நெய்து வந்தனர். அவர்கள், ஆங்கிலேயர் ஆட்சியில் வேலையின்றி இருந்தனர். பஞ்சாபிலும் பிரசித்தி பெற்ற நெசவாளர்கள் பலர் வேலையின்மை காரணமாக ராணுவத்தில் சேர்ந்து இந்தியாவை அடிமையாக வைக்கும் பணியில் அரசுக்கு உதவினர். ஒரு காலத்தில் கௌரவத்திற்குரியதாகக் கருதப்பட்ட நெசவுத்தொழில் அப்போது கேவலமானதாகி விட்டது. குஜராத்திலிருந்து வேலை இழந்த நெசவாளர்கள் வேலை தேடி கிராமங்களைவிட்டுச் சென்றனர். பம்பாய் போன்ற பெரும் நகரங்களில் துப்புரவுப் பணியாளர்களாக மாறினர். அவர்களது உடல் ஆரோக்கியம் கெட்டது. குடி, சூதாட்டம் போன்ற தீய பழக்கங்களுக்கு அவர்கள் ஆளாயினர். நிறையக் குடும்பங்கள் சீரழிந்து போயின; திறமைமிக்க தொழில் வல்லுநர்கள் கூலியாட்களாக மாறும் நிலை ஏற்பட்டது. நூற்பாலைகளோ, பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக்கிக் கொண்டிருந்தன.

காந்திஜி நாம் வெளிநாட்டைச் சார்ந்திருக்கும் நிலையை அகற்றி துணிகள் இறக்குமதி செய்யப்படுவதை ஒட்டுமொத்தமாக நிறுத்திவிட எண்ணினார். அவரைப் பொறுத்தவரை சுயராஜ்யத்தின் ஆதாரமே சுதேசி இயக்கம்தான். நம் நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருள்களைத்தான் நாம் பயன்படுத்த வேண்டும். அவரது வாழ்க்கை லட்சியம் இந்தியர்களை சுயசார்புடையவர்களாகவும் சுயதேவைப் பூர்த்தியாளர்களாகவும் செய்வதுதான். இதற்காக அவர் சில நிபந்தனைகளை விதித்தார். சுதேசித் துணியைத் தயாரிப்பதற்காக இந்தியாவில் மில்கள் நிறுவப்படுவதை அவர் ஆதரிக்கவில்லை. மில் ஒரு முதலாளிக்குச் சொந்தமானது. அதற்கான எந்திரங்கள் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படுகின்றன. இந்தியாவில் நிறையப்பேர்களுக்கு வேலை கிடைக்காமல் போய்விடுகிறது. மில்களில் பணியாற்றும் சில தொழிலாளர்களின் உழைப்பின் பலனும் முதலாளியைத்தான் சென்றடைகிறது. அத்தொழிலாளர்கள் தங்களது கிராமங்களைத் துறந்து நகரங்களுக்கு வேலைதேடி வந்தவர்கள். அவர்களது வாழ்க்கையும் ஒரு

எந்திரம் போலவே ஆகிவிடுகிறது. காந்திஜி கூறுவார்: "நமது உணர்வுகள் மரத்து, சீர்கேடுற்றுப் போய்விட்டன. அதனால்தான், நாம் கதரின் மேன்மையை உணராமல் கஞ்சிப் பசையுடன்கூடிய மில்துணியை விரும்புகிறோம். பெரும் அளவில் எந்திரங்களின் வாயிலாகப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படும்போது மனிதனின் அறிவும் கைத்திறனும் பயனற்றுப் போய்விடுகின்றன." அந்தக் காலகட்டத்திலும் கூட அஸ்ஸாமில் சில மாதர்கள் துணியிலேயே கவிதைகளை நெய்வது கண்டு காந்திஜி மிகவும் மகிழ்ச்சியுற்றார்.

கைத்தறி நெசவை எப்படியாவது மீண்டும் வழக்கத்தில் கொண்டுவர காந்திஜி விரும்பினார். "ஒரு வக்கீல், தன் தொழிலைத் துறந்து கைத்தறியில் நெசவு செய்ய முன் வரவேண்டும்: ஒரு டாக்டர் தன் தொழிலைத் துறந்து தறியில் அமர முன்வர வேண்டும்: அப்படிச் செய்தால் கைத்தறி வழக்கத்தில் வந்துவிடும்" என்று அவர் கூறிவந்தார். அவர் நெசவாளர்களுடன் நேரிடையாகத் தொடர்பு கொண்டு கைத்தறி பற்றிய தகவல்களைச் சேகரித்தார். காந்திஜி, இந்தியாவில் முதலாவதாக அகமதாபாத்தில் தனது ஆசிரமத்தை அமைக்கத் தீர்மானித்தார். ஏனெனில், ஆங்கிலேய ஆட்சிக்கு முன்பு அது ஒரு கைத்தறி நெசவிற்கு பிரபலமான நகரமாக விளங்கியது. சபர்மதி ஆசிரமத்தில் கைத்தறிகள் நிறுவப்பட்டன. ஆசிரமவாசிகள் அனைவருமே சுதேசிப் பொருள்களைத்தான் பயன்படுத்துவோம் என்று சபதம் எடுத்திருந்தனர். தங்களது தறிகளில் நெய்த துணிகளை மட்டுமே அவர்கள் பயன்படுத்தினர். அவர்களது தாரகமந்திரம்: "நமக்குத் தேவையானதை நாமே நெய்து கொள்வோம்; நம்மால் நெய்ய முடியாத ரகங்களை நாம் தவிர்ப்போம்" என்பதுதான். ஒரு தேர்ந்த நெசவாளர் தினந்தோறும் ஆசிரமவாசிகளுக்கு வகுப்புகள் எடுத்துப் பயிற்சி அளித்தார். ஆசிரமவாசிகளில் சிலர் நாள் ஒன்றுக்கு எட்டு மணிநேரம்வரை நெசவு செய்தனர். 45 வயதாகி இருந்த காந்திஜி தறியில் தினமும் நான்கு முதல் ஐந்து மணிநேரம் வரை உட்காருவார். ஒவ்வொரு நெசவாளருக்கும் நாள் ஒன்றுக்கு 12 அணா (75 பைசா) கூலியாகக் கிடைத்தது. ஆரம்ப காலத்தில் 30 அங்குல அகலம் கொண்ட துணிகள் மட்டுமே நெய்யப்பட்டன. பெண்களின் புடவைகளுக்கு அந்த அகலம் போதாமல் இருந்ததால் அவர்கள் இரண்டு துண்டுகளை (பீஸ்) ஒட்டுப்போட்டு புடவையாக அணிந்தனர். ஒரு பெண்மணிக்கு இது பிடிக்கவில்லை. அவர் இதுபற்றி புகார் செய்தார் சரியான அகலத்தில் புடவைத்துணி கிடைக்காததால் மில்துணியை வாங்க விரும்புவதாகவும் கூறினார்.

அவரது கணவர் காந்திஜியை அணுகியபோது காந்திஜி "நாம் உடனே தறியின் அகலத்தை மாற்றி அமைப்போம்" என்று கூறினார்.

அதற்குப்பின், புடவைகள் மற்றும் வேஷ்டிகளின் அகலத்திற்கேற்ப துணிகள் ஆசிரமத்தில் நெய்யப்பட்டன. வேறுபல நெசவாளர்களும் கைத்தறியில் கதர் நெசவு செய்ய முன்வந்தனர். ஆனால், அவர்கள் கூலி அதிகம் கேட்டனர். மில் நூலைப் பயன்படுத்தி நெசவு செய்வது அவர்களுக்கு எளிதாக இருந்தது. கதர்நூல் அடிக்கடி அறுந்துவிடும்.

நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்பு ஒரு கதர் ஊழியர் காந்திஜியிடம் நூற்போருக்கு நிதிஉதவி செய்யப்பட வேண்டும் என்று யோசனை கூறினார். மற்றொரு ஊழியர் நெசவாளர்கள் குறிப்பிட்ட அளவு கதர் நூலை நெசவு செய்தாலொழிய அவர்களுக்கு மில்நூல் கொடுக்கக்கூடாது என்ற யோசனையை முன்வைத்தார். காந்திஜி, இந்த யோசனையை நிராகரித்துவிட்டார். ஏனெனில் கதரை நெய்யச் சொல்லி நாம் நெசவாளர்களைக் கட்டாயப்படுத்தினால் அவர்கள் கதர்த்துணியை வெறுக்கத் தொடங்குவார்கள். மாறாக நாம் நூலின் தரத்தை உயர்த்தினால் நெசவாளர் களுக்குக் கதரை நெய்வது சற்று எளிதாகிவிடும் என்று அவர் கூறினார். அதேசமயத்தில் எல்லா சமயங்களிலும் மில்நூலையே நம்பி இருப்பது அவர்களுக்கு நல்லதல்ல என்று நெசவாளர் களை எச்சரித்தார் காந்திஜி, மில் உரிமையாளர்கள் தர்மபிரபுக்கள் அல்ல. கைத்தறி நெசவினால் மில் துணிகளுக்கு பாதிப்பு ஏற்படும் நிலை வந்தால், நூல் வழங்குவதை நிறுத்தி, நெசவாளர்களை நெருக்கிவிடுவார்கள். ஆனால், நாம் எல்லோருமே நெசவுத் தொழிலைப் பழகி இருந்தால் இந்த நிலை ஏற்பட்டிராது. "எல்லோரையும் நூற்றுப் பழகவேண்டும் என்ற வற்புறுத்திய நான், நெசவையும் பழகவேண்டும் என்று வற்புறுத்தாமல் விட்டது என்னுடைய தவறுதான்," என்றார் காந்திஜி.

14

காந்திஜி ஒரு நூற்பவர்

காந்திஜி முதலில் பழகியது துணி நெசவுதான். கைத்தறி யில் நெய்வதற்கு அவர் மில் நூலையே பயன்படுத்தினார். அதில் அவருக்கு திருப்தி ஏற்படவில்லை. காரணம் - அதை சுயதேவைப் பூர்த்தி என்று சொல்ல முடியாது. அவர் துணி தயாரிக்கும் தொழிலில் முதல்படியில் தொடங்கி முற்றிலுமாக நிபுணத்துவம் பெற விரும்பினார். முதலில் பருத்தி பயிரிட வேண்டும். பருத்தியிலிருந்து பஞ்சுக் காய்களைப் பறித்து சுத்தம் செய்து, பட்டை தயார் செய்து, நூல் நூற்று நெசவும் செய்ய வேண்டும். நூல் நூற்பதற்கான சர்க்கா அவருக்கு எளிதில் கிடைக்கவில்லை. அதனால் பயன் ஏதும் இல்லை என்ற காரணத்தினால் கிராம மக்கள் சர்க்காக்களை எப்போதோ தூக்கி எறிந்து விட்டிருந்தனர். பல கிராமங்களில் தேடிய பின்பு ஒரு கிராமத்தில் ஒரு பெண்மணி இன்னமும் ராட்டையில் நூற்றுக் கொண்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. நூற்பில் தேர்ச்சி பெற்ற ஒருவர் மூலமாக ஆசிரமவாசிகளுக்கு சர்க்காவில் எப்படி நூற்க வேண்டும் என்று சொல்லித் தரப்பட்டது. ஒரு முறை அவர் நோயிலிருந்து மீண்டு கொண்டிருந்த தருணத்தில் ராட்டை களின் ஒலி அவருக்கு சங்கீதம்போல் கேட்டது. அவரும் விரைவில் ராட்டையில் நூல் நூற்கப் பழகிவிட்டார். தினந் தோறும் குறைந்தது அரைமணி நேரத்திற்காவது நூற்காமல் உணவு உட்கொள்ளப் போவதில்லை என்று ஒரு சபதம் எடுத்துக் கொண்டார் காந்திஜி. நூற்பை அவர் ஒரு புனித வேள்வியாகவே கருதினார். அடுத்த 30 ஆண்டுகள் வரை - அதாவது தனது வாழ்நாள் முழுதும் அவர் தமது சபதத்தைக் கடைப்பிடித்தார். ரயில் மற்றும் கப்பல் பயணங்களின் போதும் கூட அவர் ராட்டையில் நூற்பதை நிறுத்தவில்லை. சில நாட்களில் நாள் முழுவதும் பல தலைவர்களுடன் கூடிப்பேச வேண்டி இருந்ததனால் அன்றைக்கு நூற்க வேண்டிய நூலின் அளவை நூற்று முடிப்பதற்காக நடு இரவில் நூற்கத் தொடங்கி விடுவார். பல மாதங்கள் வரை அவருக்கு வலது கையில் வலி ஏற்பட்டது. ஆனால் காந்திஜி இடது கையை பயன்படுத்தி நூற்பு வேள்வியைத் தொடர்ந்தார்.

பொதுக் கூட்டங்களில், மேடையில் அமர்ந்தபடியே அவர் ராட்டையில் நூற்று வந்தார். தாகூர் ஒருமுறை அவருடன் நீண்டநேரம் வரை பேசிக் கொண்டிருந்தார். காந்திஜி, தனது

நேரத்தை நூல் நூற்பதின் மூலம் வீணடிப்பதாக தாகூர் கூறினார். காந்திஜி பதிலளித்தார் : "நான் நமது பேச்சில் எவ்விதத் தடங்கலும் ஏற்படாவண்ணம் நூற்றுள்ளேன். நூல் நூற்பதன் மூலம் நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதாக நான் எண்ணுகிறேன். ஒருகோடி மக்கள் தினமும் ஒரு மணி நேரம் நூற்பில் ஈடுபட்டால் நாட்டின் செல்வம் ரூ. 50,000 அளவிற்குக் கூடும். இந்த ராட்டையினால் நாட்டின் எந்த ஒரு ஆண்மகனோ பெண்மணியோ தன் வேலையை இழந்து விடமாட்டார்கள்."

"ஏழை மக்கள் தங்களுக்குத் தேவையான துணியை நெய்வதற்கான நூலைத் தாங்களே நூற்பதின் மூலம் சுயதேவைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். பணக்காரர்கள் நூற்பை ஒரு கடமையாகவோ - நற்பணியாகவோ மேற்கொண்டு தாங்கள் நூற்ற நூலை ஏழைகளுக்கு நன்கொடையாக வழங்கலாம்" என்று கூறிவந்தார் காந்திஜி. எந்த ஒரு இந்தியனும் இந்தக் கர்ம வேள்வியைச் செய்யத் தவறக் கூடாது என்றார் அவர். தாகூரையும் சி. வி. ராமனையும் கூட அவர் சர்க்காவில் நூற்கும்படி கேட்டுக் கொண்டார். ராஜகுமாரன் ஆனாலும் சரி. ஏழையானாலும் சரி. இருவருக்கும் உணவும் உடையும் அவசியமானவை. இவற்றிற்காக இருவருமே உழைக்க வேண்டும். ''நான் நூற்கும் ஒவ்வொரு இழையிலும் இந்நாட்டின் எதிர்காலமே அடங்கியுள்ளது. இந்தியாவின் தலைவிதி ராட்டையில் தான் உள்ளது" என்பார் அவர். மாணவர்களிடம் "நீங்கள் அணியும் ஒவ்வொரு மீட்டர் காதியும் கொஞ்சம் பணத்தை ஏழைகளுக்குக் கிடைக்கச் செய்கிறது. கரடுமுரடான கதர்த் துணிதான் வாழ்வில் எளிமையின் சின்னம்; காதிக்கு ஒரு ஆத்மா உள்ளது.''

அவருடைய ஆயுட்காலத்தில் கதரின் தரம் குறைய அவர் அனுமதிக்கவில்லை. சில வாடிக்கையாளர்களின் விசித்திரமான வேண்டுகோள்களுக்கேற்ப கதரில் மாற்றம் செய்யவும் அவர் இணங்கவில்லை. கதரை வெள்ளாவி மூலம் வெளுப்பதை (ப்ளீச்சிங் செய்வதை) அவர் விரும்பவில்லை. கதர் விற்பனை நிலையங்கள் மக்களின் பகட்டான விருப்பங்களைப் பூர்த்தி செய்ய முயலக் கூடாது; மாறாக நம் தயாரிப்புகளை அப்படியே ஏற்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் அறிவுறுத்தி வந்தார்.

வருடத்தில் நான்கு முதல் ஆறு மாதங்களுக்கு வேலை யற்றிருக்கும் கிராமத்து மக்கள் ராட்டை நூற்பின் மூலம் பயனடையலாம். எந்திர யுகத்தில் காந்திஜி சர்க்காவுக்குப் புத்துயிர் கொடுத்து பழக்கத்தில் கொண்டு வர முயற்சி செய்ததைச் சிலர் கிண்டல் செய்தனர். காந்திஜி அவர்களுக்குக் கொடுத்த பதில் : தையல் மெஷின் வந்ததனால் ஊசியும் நூலும் வழக்கொழிந்து போய் விடவில்லை. தட்டச்சு எந்திரம் வந்ததனாலும் நாம் கையினால் எழுதும் பழக்கத்தை விட்டுவிடவில்லை. அப்படியே தான் நூற்பு ஆலைகளும் சர்க்காக்களும் இயங்கி வரும். சர்க்காக்களை குக்கிராமங்களுக்குக் கூட எடுத்துச் செல்ல இயலும். எல்லா கிராமங்களிலும் நூற்பாலைகளை நிறுவிட முடியாது.''

1921ம் ஆண்டில் காந்திஜி ஒத்துழையாமை இயக்கத்தையும் அயல்நாட்டுத் துணி பஹிஷ்கார இயக்கத்தையும் தொடங்கியதை நாம் அறிவோம். அந்த காலகட்டத்தில் அவரைக் காணச் சென்றவர்களிடம் தானும் தனது மனைவியும் ராட்டையில் நூற்று அந்த நூலை நெய்து தயாராகும் துணியையே உடுத்தும் விஷயத்தைக் கூறிவந்தார். தினமும் ராட்டை நூற்பையும் கதர் நெசவையும் பற்றியே, காண வருபவர்களிடமும் பொதுக் கூட்டங்களிலும் பேசி வந்தார். நாடு முழுவதுமே காந்திஜியின் பேச்சினால் கவரப்பட்டது. மோதிலால் நேரு தன்னிடம் இருந்த அயல்நாட்டுத் துணிகளை எரித்துவிட்டு, கதர்த்துணியை உடுத்திக் கொண்டு அலஹாபாத் நகரில் தெருத் தெருவாக கதர் வியாபாரமும் செய்தார். ஆயிரக் கணக்கானோர் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றினர்.

1925ம் ஆண்டு சர்க்கா சங்கம் துவக்கப் பட்டபோது 50,000 சர்க்காக்கள் 1500 கிராமங்களில் இயங்கிக் கொண்டிருந்தன. கூடவே எண்ணற்ற நெய்வோர்களுக்கும், சாயமிடுவோருக்கும், அச்சுப் பதிப்போருக்கும், தையற்காரர்களுக்கும் வேலை வாய்ப்புகள் கிடைத்தன. தக்ளி மற்றும் சர்க்கா தயாரிப்பில் கிராமத்து தச்சர்களுக்கும் கொல்லர்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைத்தது. சர்க்கா, ஏழை மக்களுக்கு உயிர் கொடுத்தது; பெண்களின் மானம் காத்தது, பசித்த வயிறுகளுக்கு உணவை அளித்தது.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் கதரின் உற்பத்தியும் விற்பனையும் மேலும் அதிகரித்து ஒரு லட்சம் நூற்போருக்கு வேலைவாய்ப்பு கிட்டியது. காதி ஊழியர்களுக்கு கதர் உற்பத்தியின் எல்லா அம்சங்களிலும் பயிற்சி அளிக்கப்பட்டது. காந்திஜி கூறுவார் : "இந்த சிறு நூற்பாலைக்கு ஈடாக உலகில் எதையுமே நான் கண்டதில்லை. மிகவும் குறைந்த மூலதனத்தில் 18 ஆண்டுகளில் லட்சக்கணக்கான ஏழை எளிய மக்களிடம் நான்கு கோடி ரூபாயைச் சென்றடையச் செய்த வேறு ஏதாவது தொழிலையோ தொழில் நிறுவனத்தையோ யாராவது அடையாளம் காட்ட முடியுமா?" ஒரு பைசா மட்டுமே கட்டணமாகச் செலுத்தி

எல்லாவோ குடும்பங்கள் நூற்புப் பணியைத் தொடங்கின. அடுத்த நாளே தாங்கள் நூற்ற நூலை விற்றபோது அவர்களுக்கு இரண்டு பைசா கிடைத்தது. குறுகிய காலத்திற்குள், அவர்களுக்குத் தேவையான துணி அவர்களது உழைப்பின் மூலமே அவர்களுக்குக் கிடைத்தது.

சர்க்காவில் சிலமாற்றங்களைச் செய்து அதிக நூலை நூற்பதற்கு யாரேனும் வழிவகுத்தால் அவருக்கு ரூ. ஒரு லட்சம் சன்மானம் தரப்படும் என்று காந்திஜி அறிவித்தார். (*காந்திஜியின் வாழ்நாளில் மேம்பாடுற்ற சர்க்கா தோன்றவில்லை. 1956ம் ஆண்டில்தான் ஐந்து கதிர்களுடன் கூடிய சர்க்காவை ஏகாம்பரநாதன் கண்டுபிடித்தார். காந்திஜி அப்போது உயிருடன் இருந்திருந்தால் மிகவும் மகிழ்ச்சியுற்றிருப்பார்*) பெட்டி ராட்டையை காந்திஜியே அறிமுகப் படுத்தினார். எரவாடா சிறையில் இருந்தபோது இதனை தயாரித்ததால் இதற்கு எரவாடா ராட்டை என்றும் பெயர் உண்டு. சில மாற்றங்களுடன் வில் தக்ளியும் (தனுஷ் தக்ளி) புழக்கத்திற்கு வந்தது. அதையும் காந்திஜியே பிரபலப் படுத்தினார். ராட்டையைப் போலவே வில் தக்ளியிலும் வலுவான மற்றும் தரமான நூலைத் தயாரிக்க முடியும் என்பதை காந்திஜி அனுபவத்தில் அறிந்து கொண்டார். சாதாரணத் தக்ளியிலும் அவர் நூற்றார். அவரது நூலிழை, சன்னரகமாக இருக்காது; ஆனால், வலுவாகவும் ஒரே சீரான முறுக்குடனும் இருக்கும். தாம் நூற்ற நூலைக் கொண்டு நெய்த புடவையை அவர் அன்னைக்கு வழங்கினார். அன்னையும் நூல் நூற்று வந்தார்.

நூற்பிற்கென்று ஒரு தனி மதிப்பு உள்ளது. இதைப் பற்றி ஆதாரக் கல்வி ஆசிரியர்களுக்கு உரையாற்றியபோது காந்திஜி இவ்வாறு குறிப்பிடுகிறார்: "நீங்கள் தச்சு வேலை, பொம்மை தயாரிப்பு, படம் வரைதல் போன்று நூல் நூற்பையும் எண்ணி விடாதீர்கள். நூற்புத் தொழில் சூரியனைப் போன்றது. ஏனைய தொழில்கள் சூரியனைச் சுற்றி வரும் கிரஹங்களைப் போன்றவை. சிட்டத்தின் சுற்றுக்களை எண்ணுவதன் மூலம் மாணவர்களுக்கு கணக்கு சொல்லித் தரலாம். பருத்திச் செடிகளை நாம் எப்போது வளர்க்க ஆரம்பித்தோம், அது எங்கே பயிராகிறது, எப்படிப் பயிராகிறது, அதிலிருந்து பஞ்சு எப்படி தயாராகிறது பஞ்சு எந்த நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு எந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்ற விபரங்கள் வாயிலாக இயற்கை மற்றும் பூகோள அறிவு மாணவர்களுக்குக் கிடைக்கும். அதேபோல் இரும்பினால் செய்யப்படும் தக்ளியின் தண்டில் ஏன் குறிப்பிட்ட அளவிலான பித்தளை விட்டம் பொருத்தப்படுகிறது என்பதை மாணவர்களுக்கு விளக்குவதன் வாயிலாகவும் அவர்கள் கணித அறிவைப் பெறுவார்கள்."

* மொழி பெயர்ப்பாளரின் குறிப்பு

காங்கிரஸ்காரர்களும் பொதுமக்களும் காந்திஜியின் பிறந்த நாளைக் கொண்டாடி வந்தனர். அந்த நாளில் சர்க்கா ஜெயந்தியையும் கொண்டாடினால்தான் தனது பிறந்த நாளைக் கொண்டாடலாம் என்று காந்திஜி அறிவுறுத்தினார். ராட்டையில் நூற்பதையும் கதரையும் பரப்புவதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் அவர் மேற்கொண்டார். அவர் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றபோது ஊழியர்களிடம் சந்தாத் தொகையாகிய நாலணாவை (25 காசு) பணமாகச் செலுத்தாமல் அதற்குரிய கதர் நூலைக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். ஒவ்வொரு அங்கத்தினரும் நாள்தோறும் குறைந்தது அரைமணி நேரமாவது நூற்க வேண்டும் என்றும் அவ்வாறு நூற்கும் நூலை மாதம் ஒரு முறை கதர் வாரியத்திற்கு அனுப்பி விடவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். தன் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் சர்க்கா சங்கத்தினரிடம் கதர்த்துணி வாங்க வருபவர் ஒவ்வொருவரிடமும் குறைந்த பட்சமாகவாவது அவர்கள் கையினால் நூற்ற நூலைத் தரும்படி கேளுங்கள் என்று அறிவுறுத்தினார். கதர் வாங்கி வந்தவர்களில் சிலர் முணுமுணுத்த போது, காந்திஜி அவர்களை "நீங்களே நூற்காவிட்டால் கதர்த் துணி எங்கிருந்து வரும்?" என்று கேட்டார்.

இந்தியாவில் துணிப் பஞ்சம் நிலவுகிறது என்ற கருத்தை அவர் ஏற்கவில்லை "இந்தியா தனது தேவைக்கு அதிகமான பருத்தியை உற்பத்தி செய்கிறது. மேலும் மனித ஆற்றலுக்கும் இங்கு குறைவு இல்லை. ஒவ்வொரு வீட்டிலும் சிறியதோர் மில் போல ராட்டைகளையோ, தக்ளிகளையோ நிறுவுவதன் மூலம் துணித் தட்டுப்பாடு நீங்கிவிடும்" என்று கூறுவார் அவர். நூற்பு அவருக்கு ஆத்மார்த்த திருப்தியை அளித்து வந்தது "நூற்புதான் ஏழைகளிலும் பரம ஏழைகளான மக்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்தியது அவர்களின் மூலமாக கடவுளுடனும் நெருக்கம் ஏற்பட்டது" என்று அவர் கூறியுள்ளார். அவர் உறுதிபடக் கூறினார்: "சர்க்கா மெதுவாகத்தான் சுழல்கிறது (அது மாற்றங்களை விரைவில் கொண்டு வராது) என்ற தோல்வி மனப்பான்மை எவ்வளவு ஜென்மங்கள் எடுத்த பின்பும் என்னிடம் தோன்றாது. நீங்கள் எல்லோருமே என்னைக் கைவிட்டாலும் சரி, ஏன் என்னைக் கொன்றாலும் கூட, சர்க்காவை நான் கைவிடமாட்டேன்".

15

காந்திஜி ஒரு பணியா (வியாபாரி)

காந்திஜி ஒரு தடவை சொன்னார் "நான் ஒரு பணியா. என்னுடைய பேராசைக்கு அளவே கிடையாது". அவர் ஒரு வியாபாரி குடும்பத்தில் பிறந்தவர். தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சுதேச சமஸ்தானம் ஒன்றில் திவானாகப் பணி செய்வதற்கு குடும்பத்துப் பெரியவர்கள் அவரைத் தயார் செய்தனர், காந்திஜியோ திவான் பதவிக்குச் செல்லாமல் பரதேசி கோலம் பூண்டுவிட்டார். இருப்பினும் அவருடைய ரத்தத்தில் வியாபாரத் தந்திரம் ஊறி இருந்தது.

எப்போதுமே, அவர் சிக்கனத்தைக் கடைப்பிடித்து வந்தார். குறைந்த விலையில் தரமான பொருள்களை வாங்குவது அவருக்குக் கைவந்த கலை. பிற்பாடு, அவர் ஆடம்பரப் பொருள்கள் அனைத்தையும் துறந்துவிட்டார். கதர் அரையாடையும் மேலே போர்த்திக் கொள்வதற்கு ஒரு சால்வையுமே அவருடைய உடைகள். கையினால் தயாரிக்கப் பட்ட செருப்பைத்தான் அவர் அணிவார். பல அயிட்டங்கள் நிறைந்த சாப்பாட்டை அவர் சாப்பிடுவதில்லை. ஒன்றிரண்டு சப்பாத்திகள், சாதம், வேகவைக்கப்பட்ட காய்கள், பச்சை இலைகள், ஆட்டுப்பால், வெல்லம் மற்றும் தேன்தான் அவர் ஏற்றுக் கொண்ட உணவுப் பொருள்களின் மொத்தப் பட்டியல். இப்பட்டியலிலிருந்து நாள் ஒன்றுக்கு ஐந்து அயிட்டங்களுக்கு மேல் உண்ணமாட்டார்.

நாள் ஒன்றுக்கு ஒரு அணா (ஆறு பைசா) அல்லது அதற்குக் குறைவாக ஊதியம் பெறும் கோடிக் கணக்கான ஏழைகள் வசிக்கும் நாட்டில் ஏராளமான பணத்தை நகைகளாகவும் அலங்காரப் பொருள்களாகவும் குவித்து வைப்பது பெரும் குற்றமாகும் என்று காந்திஜி கருதினார். அவரது மனைவியிடம் ஆபரணம் எதுவும் கிடையாது.

தன்னுடைய நான்கு மகன்களையும் அவர் பள்ளிக்கோ கல்லூரிக்கோ அனுப்பவில்லை. நிறைய பணச் செலவுசெய்து தங்களது மக்களைப் படிக்கவைக்க இயலாத நிலையில் நாட்டின் கோடிக்கணக்கான ஏழை மக்கள் இருந்த நிலையில் தனது மகன்களின் படிப்பிற்காகப் பணம் செலவழிப்பதை அவர் விரும்பவில்லை. தானே தன் மகன்களுக்கு ஆசானாக

மாறினார். வீட்டில் உதவிக்கு வேலைக்காரர்களை வைத்துக் கொள்ளவில்லை எல்லா வேலைகளையும் தாமே செய்தார். அவர் மண் குடிசைகளில் வசிக்க விரும்பினார். இந்தியாவில் பல தடவைகள் ரயில் பயணம் மேற்கொண்ட அவர் எப்போதும் மூன்றாம் வகுப்பிலேயே பயணம் செய்தார். பயணத்தின்போது அவரது மாற்றுடைகள் மற்றும் சில காகிதங்கள் அடங்கிய பை அவரது தலையணையாகப் பயன்பட்டது. அவரது படுக்கையில் சில சுதேசிக் கம்பளிகளும் கதர் விரிப்புகளும் இருந்தன. ஒரு முறை கொசுவலையைத் தவிர்க்க அவர் முயற்சித்தார். உடல் முழுவதையும் படுக்கை விரிப்பினால் மூடிக்கொண்டு முகத்தின் மீது மண்ணெண்ணெயைப் பூசிக்கொண்டார். கொசுவலை வாங்க இயலாத ஏழை மக்கள் அப்படித்தான் செய்கிறார்கள் என்று அவர் கேள்விப்பட்டிருந்தார்.

ஆங்கிலேயர்கள் உண்மையிலேயே இந்தியாவிற்கு சுதந்திரம் அளிக்கப் போகிறார்களா! என்பதைத் தெரிந்துகொள்வதற்காக அவர் இங்கிலாந்திற்கு நான்காவது முறையாகக் கப்பல் பயணம் மேற்கொண்டார். குறைந்த கட்டணத்துடன் கூடிய கீழ்வகுப்பிலேயே அவர் பயணம் செய்தார். உடன் பயணம் செய்த சக ஊழியர்கள் பெட்டி பெட்டியாக உடைகளையும் ஏனைய பொருட்களையும் கொண்டு வந்தனர். காந்திஜியோ அதனைத் தடுத்து ஒரு சில இந்திய உடைகளை மட்டும் (வேஷ்டி, சட்டை, கால்செருப்பு) கொண்டுவந்தால் போதும் என்று கூறிவிட்டார். பயணத்தின் போது ஒரு அன்பர் ரூ. 700 பெறுமான சால்வை ஒன்றை காந்திஜிக்கு அளித்தார். காந்திஜி அதை ஏலம் விட்டபோது ரூ. 7,000 கிடைத்தது. "ஏழை மக்களின் ஒரே பிரதிநிதியாய் இதைத்தான் செய்ய இயலும்" என்று காந்திஜி கூறினார். "நண்பர்களால் எனக்குப் போர்த்தப்படும் சால்வைகளைக் கொண்டு ஒரு கடையையே திறந்திருக்கலாம் போல் இருக்கிறது" என்று அவர் சொல்வது உண்டு. (பொன்னாடைக் கலாச்சாரம் அப்போதே துவங்கி விட்டது: மொழி பெயர்ப்பாளரின் குறிப்பு) இம்மாதிரி விற்பனையில் கிடைத்த பணத்தை அவர் ஹரிஜனங்களின் மேம்பாட்டிற்காகச் செலவிட்டார்.

காந்திஜி பிரான்ஸ் நாட்டில் வந்திறங்கியபோது அந் நாட்டினர் அவரது 'அரையாடையைக்' கண்டு அதிர்ச்சி அடைந்தனர். காந்திஜி சிரித்த வண்ணம் கூறினார்: "உங்கள் நாட்டினர் தேவைக்கு அதிகமான ஆடைகளை அணிகின்றனர். நான் தேவைக்கு சற்றுக் குறைவான ஆடைகளை அணிகிறேன். அவர் இதே உடையில் லண்டன் சென்று இங்கிலாந்து நாட்டின் மன்னரைச் சந்திப்பாரா! அங்கு நிலவும் குளிரிலும் மற்றவர்கள்

அனைவருமே அதற்கேற்ப உடைகளையும் அணிந்திருக்கும் சூழ்நிலையிலும் கூட அவரது உடையில் மாற்றம் இருக்காதா? என்று சிலர் கேட்டனர். காந்திஜியின் சிரிப்பில் அப்போதும் மாற்றம் இல்லை. அவர் கூறுவார் : "மன்னரிடம் உள்ள உடைகள் இருவருக்குமே போதுமானவை". அவர் வட்டமேஜை மகா நாட்டில் பங்கேற்றார். ஆக்ஸ்ஃபோர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களுக்கு விஜயம் செய்தார். இம்மூன்று சந்தர்ப்பங்களிலும் அவர் அரையாடை, ஒட்டுத் தையல் போட்ட சால்வை மற்றும் சாதாரண செருப்பு மட்டுமே அணிந்திருந்தார். சர்ச்சில் கோபத்துடன் "இந்தியாவின் அரை நிர்வாணப் பக்கிரி" என்று காந்திஜியைக் குறிப்பிட்டார். காந்திஜியோ தாம் அப்பட்டத்தைப் பற்றி பெருமைப் படுவதாகக் கூறினார். அவரது சாப்பாட்டுச் செலவு நாள் ஒன்றிற்கு 12 அணாவைத் (75 பைசா) தாண்டவில்லை.

பொருள்களை எந்த விதத்திலும் வீணடிப்பது காந்திஜிக்குப் பிடிக்காத ஒன்று. கிழிந்துபோன பழைய துணிகளை விற்று விடலாம் என்பார். பல் துலக்கிய பின் தூக்கி எறியும் குச்சிகளைக் கூட கழுவி வெயிலில் காயவைத்து அடுப்பெரிக்க பயன் படுத்தலாம் என்பார். 24 மணி நேரத்திற்கும் அவர் நிகழ்ச்சி நிரல் வைத்திருந்தார். எந்த சமயத்திலும் எந்த பணிக்கும் அவர் நேரம் தவறியதில்லை. அதே சமயம் எப்போதும் பதற்றமோ பரபரப்போ அடைவதில்லை. வார்த்தைகளையும் அளந்தே பயன்படுத்துவார். அவர் எவ்வளவோ கூட்டங்களில் பேசியுள்ளார். எவ்வளவோ கட்டுரைகளையும் எழுதியுள்ளார். மிகையான அல்லது தேவையற்ற சொற்களைப் பயன்படுத்தியதில்லை. அவருக்கு வரும் கடிதங்களில் காலியாக இருக்கும் பக்கங்களையும் கடிதம் வைக்கப்படும் உறைகளையும் அவர் பத்திரப் படுத்தி வைப்பார். அவற்றின் அளவுகளுக்கேற்ப தனித்தனியாக காகிதங்களைக் கட்டி வைத்திருப்பார். அவற்றையே அவர் கடிதம் எழுதப் பயன்படுத்தினார். அவரது முக்கியமான அறிக்கைகள், கவர்னர் ஜெனரலுக்கும் இங்கிலாந்தின் பிரமுகர்களுக்கும் பிரதமருக்கும் அவர் எழுதிய கடிதங்கள் எல்லாமே இந்த ஒரு பக்கக் காகிதங்களில்தான் எழுதப்பட்டன. பள்ளி மாணவன் அவருக்குப் பரிசாக அளித்திருந்த ஒரு சிறிய பென்சிலும் ஒரு மாக்கல்லும் ஒரு முறை காணாமல் போய் விட்டன. நீண்ட நேரம் தேடி அவற்றைக் கண்டுபிடித்த பின்பு தான் அவர் அமைதியானார். சுதந்திரத்திற்குப்பின் மந்திரிகளும், நகராட்சிகளில் முக்கிய பதவி வகித்தவர்களும் சொந்தக் கடிதப் போக்குவரத்திற்கு அலுவலகக் கடிதத்தாளைப் பயன்படுத்துவதையும் அந்த கடிதத்தாள்கள் ஆடம்பரமான முறையில்

அதிகச் செலவில் தயாரிக்கப்பட்டிருந்ததையும் அவர் கண்டனம் செய்தார். வெள்ளைக்காரர்களின் பழக்க வழக்கங்களைக் காப்பி அடிப்பதால் நாட்டிற்கு கேடு தான் விளையும் என்று கூறினார். ஆங்கிலேயர்கள் ஆதிக்கத்துடன் ஆண்டு அடிமைகளின் மனத்தில் அச்சத்தை ஏற்படுத்த விரும்பினார்கள். அந்த நோக்கில் அவர்கள் கையாண்ட பழக்கங்களை நாம் கைவிட்டு விடவேண்டும். கையினால் தயாரித்த காகிதத்தில் செய்த கடிதத் தாள்களைப் பயன்படுத்த வேண்டும். அவற்றில் அலுவலகங்களின் பெயர்கள் ஹிந்தியிலும் உருதுவிலும் அச்சடிக்கப் பட்டிருக்க வேண்டும். மக்களுக்கு சேவை செய்பவர்கள் விலை உயர்ந்த அன்பளிப்புகளையும், பூங்கொத்துக்களையும் பெற்றுக் கொள்ளக் கூடாது.

ஏழைகளுக்காகத் தாம் வசூலித்த ஒவ்வொரு பைசாவையும் அவர் சேமித்து வைத்தார். பணவிடை (மணியார்டர்) கமிஷன், வங்கியில் வரைவோலை (டிராஃப்ட்) மற்றும் காசோலைக்கான கமிஷன் செலவு இவற்றையும் அவர் தவிர்க்க முயன்றார். தொண்டர்களும் சக ஊழியர்களும் பணத்தை வீண்செலவு செய்தால் அவர் கண்டனம் தெரிவிப்பார். 1896ம் ஆண்டு அவர் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்த சமயம் அவருக்கு ரூ. 1000 பணமுடிப்பு தரப்பட்டது. அதற்கு அவர் விபரமான கணக்குகளை ஒப்படைத்தார். அதில் சில அயிட்டங்கள் இப்படி இருந்தன : டிராம் வாடகை ஒரு அணா, தண்ணீர் ஆறு பைசா, வேடிக்கை காட்டியவனுக்கு ஆறு பைசா, மந்திரவாதிக்கு எட்டணா, கொட்டகைக்கு (தியேட்டர்) நான்கு ரூபாய்.

நமது போராட்டங்களின் போது ஆடம்பரமும் வீண் செலவுகளும் அறவே கூடாது என்று கூறி வந்தார் காந்திஜி. "ஒவ்வொரு ஊருக்கும் நான் விஜயம் செய்யும் சமயங்களில் ஊர் மக்கள் விலை உயர்ந்த ஆரஞ்சுப் பழங்களையும் திராட்சைப் பழங்களையும் ஏன் கொண்டு வருகிறார்கள்? நான் ஒரு டஜன் கேட்டால் பத்து டஜன் பழம் ஏன் வருகிறது? நாம் ஏழை மக்களின் அறங்காவலர்களாக விளங்க வேண்டும்" என்று கூறினார் காந்திஜி. அவரது புத்திமதி : 'உன்னால் நடந்து செல்லக் கூடிய தூரப் பயணத்திற்கு வாகனங்களை பயன் படுத்தாதே." அவர் இதைத் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்து வந்திருக்கிறார். தென் ஆப்பிரிக்கா வாசத்தின்போது பல நாட்கள் பண்ணையிலிருந்து பக்கத்து ஊருக்கும் கடைகளுக்கும் நடந்தே சென்று திரும்புவார். இதற்காக அவர் நடந்த தூரம் 42 மைல்கள் (67 கிலோ மீட்டர்). அப்படி நடந்து சில ரூபாய்களைச் சேமித்தார். வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு நடந்தே சென்று திரும்புவார்.

ஒரு நடவை காந்திஜி "இனவெறி நாட்டுப் பற்றுக்கு அவசியம்தானா?" என்ற தலைப்பில் ஒரு கூட்டத்தில் பேசினார் அக்கூட்டத்திற்கு டிக்கெட் வாங்கியவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். அதன்மூலம் கிடைத்த பணம் தேசபந்து நினைவு நிதிக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. "உண்மைதான் கடவுள்" என்ற தலைப்பில் காந்திஜியின் பேச்சு முதன் முறையாக இசைத் தட்டில் பதிவு செய்யப்பட்டது. இசைத்தட்டு கம்பெனி காந்திஜிக்கு ரூ. 65,000 வழங்கியது அவர் அரை மணி நேரத்தில் அவ்வளவு பெரிய தொகையை சம்பாதித்து விட்டார்! அதை ஹரிஜன நலநிதிக்கு வழங்கினார்.

காந்திஜிக்குப் பணத்தை சம்பாதிக்கவும் தெரியும், சேமிக்கவும் தெரியும். அரசு அவரது புத்தகங்களுக்குத் தடை விதித்த போது தாமே தமது புத்தகங்களை விறபனை செய்தார். நான்கு அணா (25 காசு) விலையுள்ள 'இந்திய சுயராஜ்யம்' என்ற புத்தகம் ஐந்து ரூபாய், பிறகு பத்து ரூபாய் பிறகு ஐம்பது ரூபாய்க்கு விலை போயிற்று. அவரது புகழ் பெற்ற தண்டி யாத்திரையின்போது தயாரிக்கப்பட்ட உப்பிலிருந்து அரைத் தோலா (அரை ரூபாய் எடை) ரூ. 525க்கு விற்கப்பட்டது. அப்போது அரைத்தோலா தங்கத்தின் விலை 40 ரூபாய்தான். உலகில் எங்குமே எந்த வியாபாரியும் உப்பை அந்த விலைக்கு விற்றதில்லை.

ஜனங்களிடம் தனது கையெழுத்தைப் பெறும் ஆவல் இருந்தது என்பது அவருக்குத் தெரியும். ஒவ்வொரு கையெழுத்திற்கும் அவர் ஐந்து ரூபாய் வசூல் செய்தார். ஆயிரக்கணக்கில் நன்கொடை கொடுத்தவர்களுக்குக் கூட அவர் விதிவிலக்கு அளிக்கவில்லை அவர்களும் கையெழுத்திற்கு 5 ரூபாய் கட்ட வேண்டி இருந்தது. கதரின் விற்பனையை அதிகரிப்பதற்காக அவரே விற்பனையில் ஈடுபட்டார். வலது கையில் துணியின் அளவுகோலையும் இடது கையில் கதர்த்துணிகளையும் சுமந்த வண்ணம் பில்களில் கையெழுத்திட்டு வெகுவேகமாக விற்பனை செய்தார். 50 நிமிஷங்களில் ரூ. 500 மதிப்புள்ள கதர் விற்றுத் தீர்ந்து விட்டது. (அக்காலத்தில் ஒரு மீட்டர் துணி 10, 12 பைசாவுக்குக் கிடைக்கும். அப்படி என்றால் ரூ. 500க்கு அவர் விற்ற துணியின் அளவு 4000 மீட்டர் இருக்கும்). மற்றொரு சந்தர்ப்பத்தில் அவர் ரயில் பயணம் மேற்கொண்டபோது ரயில் நிலையங்களில் கதர் விற்பனை செய்தார். கதர் விற்பனைக்காக பொருட்காட்சி ஒன்றிற்கு ஏற்பாடு செய்த சமயம் ஒரே வாரத்தில் ரூ. 4000க்கான கதர் விற்பனை செய்யப்பட்டது. அப்போது (அவ்விடத்தில்) ஆண்டு ஒன்றின் மொத்த விற்பனை ரூ. 6,000 ஆக இருந்தது. இன்னொரு காதி பண்டாரில் அவரது முயற்சி

காரணமாக வருடாந்திர விற்பனை ரூ. 48லிருந்து ரூ. 5,312 ஆக அதிகரித்தது காங்கிரஸ் கட்சி மாநாடுகள் நடக்கும் போது கைவினைப் பொருள்கள் கண்காட்சியும் நடைபெறுவது வழக்கம். தொண்டர்கள் அனைவரையும் கைவினைப் பொருள்கள் விற்பனையை அதிகரிப்பதற்காக விற்பனை ஊக்குவிப்போராகவும் பணியாற்றும்படி கேட்டுக் கொண்டார்.

அயல்நாட்டுத் துணியை பகிஷ்கரிக்கும்படி அவர் கொடுத்த வேண்டுகோள் காரணமாக வங்காளத்தில் மட்டும் அத்துணியின் விற்பனை பாதியாகக் குறைந்து விட்டது. மற்ற மாநிலங்களிலும் இதே நிலைதான். மொத்தத்தில் அயல்நாட்டு வியாபாரமே ஸ்தம்பிக்கும் நிலைக்கு வந்து விட்டது. இந்தியாவின் அதிகரிக்கும் தேவைகளுக்கேற்ப எல்லாப் பொருள்களும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்று அவர் கூறி வந்தார். இந்தியப் பொருள்களின் விற்பனையை பாதிக்காத பட்சத்தில் இங்கிலாந்துடன் வர்த்தகத்தை அனுமதிக்கலாம் என்று அவர் கூறி வந்தார். கதர்த்துணியை மட்டும் அணிந்து ஏனைய தேவைகளுக்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களைப் பயன் படுத்துவதை அவர் எதிர்த்தார். வெளிநாட்டுப் பொருள்களை நாம் பயன் படுத்துவதன் காரணமாக இந்தியாவின் பெரும் வியாபாரிகளும் தொழில் அதிபர்களும் லாபம் அடைகிறார்கள். இதன் மூலம் ஆங்கிலேயர் நம்மைக் கொள்ளை அடிக்கும் பணிக்கு இந்திய வியாபாரிகள் துணை போகிறார்கள். நாட்டில் அனைவரும் கதர் அணிந்து கிராமங்களில் தயாராகும் ஏனைய பொருள்களையும் பயன் படுத்தி நாட்டின் செல்வம் சூறையாடப்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

அரசு, கதர்-கிராமத் தொழில் கொள்கைக்கு எதிர்ப்பாக இருந்ததால் அரசிடமிருந்து சலுகையோ உதவித் தொகையோ அவருக்குக் கிட்டவில்லை. பெரும்பாலான மக்களும் அசட்டையாகவே இருந்தனர். அந்தச் சூழ்நிலையிலும் மக்கள் தங்களது உணவு, உடை போன்ற அடிப்படைத் தேவைகளுக்கான பொருள்களை தாங்களே உற்பத்தி செய்து கொள்ள வேண்டிய தன் அவசியத்தை அவர் வலியுறுத்தி வந்தார். அகில இந்திய நூற்போர் சங்கமும் அகில இந்திய கிராமத் தொழில்கள் சங்கமும் அமைக்கப்பட்டு நாடு முழுதும் அவற்றின் கிளைகளும் இயங்கின. வார்தாவில் இருந்த மகன் அருங்காட்சியகம் இப்பணிகளின் மையமாகத் துலங்கியது. நூற்பு, நெசவு, காகிதம் தயாரித்தல், தோல் பொருள்கள் தயாரிப்பு, எண்ணெய் ஆட்டுதல், அரிசி அரவை, சோப் தயாரிப்பு, தேனீ வளர்த்தல், தச்சு மற்றும் கொல்லு வேலைகள் ஆகிய எல்லாப் பணிகளுமே அங்கு

மேற்கொள்ளப்பட்டன. எப்படி ஒருவனது சொந்தத் தோட்டத்தில் விளைந்த தானியங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் உணவு விலைகுறைவாக இருக்குமோ அப்படியே ஒருவன் தன் கையினால் நூற்று தன் கையினால் நெசவு செய்த துணியும் விலை குறைவாகத்தான் இருக்கும் என்று அவர் கூறிவந்தார். "வாழ்க்கையில் பணம் பிரதானமானது அல்ல. வேலையின்மை காரணமாக மக்கள் சோம்பித் திரிவதுதான் எனக்குக் கவலை தருகிறது" என்பார் அவர். நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு பொருளாதாரம் பற்றிய நமது பார்வையில் மாற்றம் வரவேண்டும் என்று எண்ணினார் அவரது வேண்டுகோள் என்னவெனில் "நாம் ஏராளமான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்தும் கூட கோதுமையை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வருகிறோம். நன்கு பாலிஷ் செய்யப்பட்ட சத்தில்லாத அரிசியையும் சத்துள்ள வெல்லத்திற்கு பதில் சத்துக் குறைவான வெள்ளை ஜீனியையும் சாப்பிடுகிறோம். சற்று குறைந்த விலையில் சத்தில்லாத பொருள்களை வாங்கி நம் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்கிறோம். கிராமத்தில் எண்ணை ஆட்டுபவர்களுக்கு நாம் ஆதரவு கொடுக்காமல் விரட்டிவிட்டோம். இன்றைய கிராமவாசிகள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த கிராமவாசிகளைக் காட்டிலும் அறிவிலும் தன்னம்பிக்கையிலும் குறைந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். அவன் நிறைய பொருள்களை இழக்கிறான். பதிலுக்கு அவன் பெறுவது மிகவும் குறைவு. எனது திட்டங்களை எல்லோரும் மேற்கொண்டால் நகரங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் கிராமங்களில் உற்பத்தி செய்யப்பட்டு கிராமவாசிகளின் இழப்பு தவிர்க்கப்படும்." ஜனங்களை அவர்களே நெல்லிலிருந்து கைக்குத்தல் அரிசி தயாரிக்கும்படியும் கோதுமையை தங்களது வீடுகளிலேயே திரிகையில் அரைத்து மாவு தயாரித்துக் கொள்ளும்படியும், ஜீனிக்கு பதிலாக வெல்லத்தை பயன்படுத்தும்படியும், தங்களுக்குத் தேவையான துணிகளைத் தாங்களே தயாரித்துக் கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டார்.

கதர்த்துணி மில் துணியுடன் போட்டி போட முடியும் என்பதை மறந்து விடும்படி காந்திஜி நாட்டு மக்களிடம் கூறினார்: "மில் சொந்தக்காரர்கள் போட்டிக்காக எப்படியும் துணியின் விலையைக் குறைக்கவே முயற்சிப்பார்கள். நாம் நேர்மையான வழியில் சென்று கதர் ஊழியர்களுக்கு நியாயமான ஊதியம் வழங்க வேண்டும். இல்லாவிடில் நாம் நம்மை அறியாமலேயே கதர் ஊழியர்களைச் சுரண்டிய குற்றத்திற்கு ஆளாவோம்." குடிசைத் தொழிலில் காகிதம் தயாரித்துக்

கொண்டிருந்த ஒரு நபர் தொழிலாளர்களுக்கு ஆறு பைசா மட்டுமே ஊதியம் வழங்கி காகிதத்தைக் குறைந்த விலைக்கு விற்பதாகக் கூறினார். குறைந்த விலைக்கு அவரிடம் தன்னால் காகிதம் வாங்க இயலாது என்று காந்திஜி கூறிவிட்டார்.

விவசாயிகளையும் கிராமத்து கைவினைஞர்களையும் ஒட்டுண்ணி போல் உறிஞ்சி வாழ்ந்து கொண்டிருந்த இடைத்தரகர்களை அகற்றிவிட அவர் விரும்பினார். பயிர்களை உற்பத்தி செய்து வரும் விவசாயிகளுக்கு நியாயமான வருவாய் கிடைக்கவில்லை என்ற உண்மை அவருக்கு நன்கு தெரிந்திருந்தது. நுகர்வோர் ஒரு தானியத்திற்குக் கொடுக்கும் விலையில் ஒரு சிறிய பங்கே விவசாயியைச் சென்றடைகிறது. அவர்களது (விவசாயிகளது) பிரச்சினை தானியங்களின் குறைந்த விலை அல்ல. இடைத்தரகர்கள்தான். உணவு மற்றும் துணிகளின் விலைகளை சட்டத்தின் மூலம் கட்டுப்பாட்டில் வைப்பதையும் அவர் விரும்பவில்லை. அப்படிச் செய்வதினால் கறுப்புச் சந்தை பெருகி பல வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். அவர் மக்களை ஏமாற்றிப் பணம் குவிக்கும் வியாபாரிகளைச் சாடினார். தவறான முறையில் சம்பாதித்த பணத்தின் ஒரு பகுதியை தர்ம காரியங்களுக்குச் செலவிடுவதன் மூலம் அவர்கள் பாவத்திலிருந்து தப்பி விடமுடியாது என்றார். வியாபாரிகளைக் கண்டித்து இவ்வாறு கூறினார். "பெரும் வியாபாரிகளும் முதலாளிகளும் ஆங்கிலேய அரசாங்கத்திற்கு எதிராகக் குரல் எழுப்புகிறார்கள். ஆனால், உண்மையில் அந்த அரசாங்கத்துடன் ஒத்துழைக்கிறார்கள். ஆங்கிலேய அரசாங்கத்திற்கு 95 சதவீதம் பங்கும் இந்திய வியாபாரிகளுக்கு 5 சதவீதமும் கிடைக்கிறது. சுதேசி இயக்கத்தின் தோல்விக்குக் காரணம் இந்திய வியாபாரிகள் வெளிநாட்டுச் சரக்குகளைப் பொய்யாக இந்திய சரக்குகள் என்று முத்திரை குத்தி விற்பனை செய்ததுதான். இந்தியாவுக்கு ஏற்பட்ட இழப்புக்கு வியாபாரிகள்தான் காரணம். அதே வியாபாரிகளைக் கொண்டு இந்தியாவை முன்னேற்றப் பாதையில் நாம் கொண்டு செல்ல வேண்டும்".

கதருக்கு இருக்கும் இணையற்ற மதிப்பு, கோடிக்கணக்கான மக்களுக்கு உடனேயே வருவாயுள்ள வேலையைக் கொடுக்கிறது என்பதில்தான் இருக்கிறதே யன்றித் தனிப்பட்ட சிலருக்கு அதிகமான ஊதியம் அளிக்கும் என்பதில்லை ஆகையால், வெற்றிகரமாக அமைத்து விடுவதற்குத் தகுந்ததாக இருக்கும் ஒரே ஒரு துணைத் தொழில் இதுதான்.

-- யங் இந்தியா 15-10-1925

16

காந்திஜி ஒரு விவசாயி

விவசாயியை உலகத்தின் தந்தையாகச் சித்தரிக்கும் கவிதை ஒன்றை காந்திஜி படித்தார். அக்கவிதை கூறியது என்னவென்றால், "கடவுள் எல்லோருக்கும் உணவளிக்கிறார்: அதில் விவசாயிகள் கடவுளின் கரங்களாகச் செயல்படுகிறார்கள்." விவசாயிகள் வறுமை மற்றும் அறியாமை ஆகியவைகளிலிருந்து விடுதலை பெறும்போதுதான் இந்தியா சுதந்திர நாடாகத் திகழும் என்று காந்திஜி கூறுவார். "நாட்டின் ஜனத்தொகையில் 75 சதவிகிதம் விவசாயிகள்தான். அவர்கள் பூமியின் உப்பைப் போன்றவர்கள். அவர்கள் பாடுபடும் நிலம் அவர்களுக்குச் சொந்தமானதாக இருக்க வேண்டும்; நிலச்சுவான்தார்களுக்கு அல்ல; எல்லா நிலமும் ஆண்டவனுடையது. அதை உழுபவன் அனுபவிக்கலாம். வேறு யாருக்கும் அதன் மீது உரிமை கிடையாது. விவசாயிகளது உழைப்பின் பயனை நாம் எடுத்துக் கொள்வது சுயராஜ்யம் ஆகாது. நமக்கு விடிவுகாலம் விவசாயிகள் வாயிலாகத்தான் பிறக்கும்; வக்கீல்களாலோ, டாக்டர்களாலோ, பணக்கார நிலச்சுவான்தார்களாலோ நமக்கு விடிவுகாலம் பிறக்கப் போவதில்லை."

அரசின் வருவாயில் 25 சதவிகிதம் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. நிலவரியின் சுமை பளுவானதுதான். இந்தியாவின் பெரு நகரங்களில் அரண்மனை போன்ற கட்டிடங்கள் கட்டப்படுவதைக் கண்ணால் பார்த்தாலோ, ஏன் அப்படி ஒரு கட்டிடம் கட்டப்படுவதாகக் கேள்வியுற்றாலோகூட காந்திஜி வருத்தத்துடன், "இது விவசாயிகளிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணத்தைக் கொண்டு கட்டப்படுகிறது" என்று கூறுவார். நகரங்களின் வளமை, கிராமங்களில் விவசாயிகள் மீது சுமத்தப்படும் வரிச்சுமையையும் சட்டத்திற்கு புறம்பான சுரண்டல்களையும், திருப்பித்தர இயலாத கடன் சுமைகளையும், படிப்பறிவின்மையையும், மூடநம்பிக்கைகளையும், வியாதிகளையும், அவருக்கு நினைவூட்டியது.

காந்திஜி விவசாயியாகப் பிறக்கவில்லை, ஆனால், விவசாயியாகத் திகழ பல்வேறு முயற்சிகளை அவர் மேற்கொண்டார். பள்ளிப் பருவத்திலிருந்தே பழமரங்களை வளர்ப்பதில் அவருக்கு நாட்டம் இருந்தது. தினந்தோறும் மாலை நேரங்களில் பள்ளியிலிருந்து வீடு திரும்பியதும் மொட்டை மாடியில்

வளர்க்கப்பட்ட செடிகளுக்கு நீர் ஊற்ற வாளி வாளியாகத் தண்ணீரை எடுத்துச் செல்வார். தனது 36வது வயதில் ஒரு பண்ணையைத் தொடங்கி விவசாயியின் வாழ்க்கை முறையை அவர் மேற்கொண்டார். பழமரங்களுடன் கூடிய ஒரு ஏக்கர் நிலம் அவரைக் கவர்ந்தது. அதை விலைக்கு வாங்கி அங்கேயே குடும்பத்துடனும் மேலும் சில நண்பர்களுடனும் வசிக்கத் தொடங்கினார். தனது வக்கீல் தொழிலைப் படிப்படியாகக் கைவிட்டு விவசாயத் தொழிலை அவர் மேற்கொண்டார். வசிப்பதற்கான குடிசைகள் ஆசிரமவாசிகளாலேயே கட்டப்பட்டன. காந்திஜி நிலத்தை உழுது, தண்ணீர் பாய்ச்சி, காய்கறிச் செடிகளையும் பழமரங்களையும் வளர்த்தார். சமயத்தில் மரங்களை வெட்டுவதும் அறுப்பதும் உண்டு. அந்த நிலம் விரைவில் ஒரு தோப்பாக மாறிவிட்டது.

தென் ஆப்பிரிக்காவில் பத்தாண்டு பண்ணை வாழ்க்கை அவரை ஒரு விஷயம் தெரிந்த மற்றும் அனுபவமிக்க விவசாயியாக மாற்றி விட்டது. அவர் விஞ்ஞான முறையிலான மற்றும் அஹிம்சை அடிப்படையிலான தேனீ வளர்ப்பையும் அறிமுகப்படுத்தினார். தேனீக்களைக் கொல்லாமலும் தேன்கூட்டைச் சிதைக்காமலும் தேன் எடுக்க அவருக்குத் தெரிந்திருந்தது. மேலும், தேனீ வளர்ப்பின் பயனாக பழங்கள் மற்றும் காய்கறிகளின் விளைச்சலும் கூடும் என்பதையும் அவர் விளக்கினார். தேனீக்கள் தங்களது கால் இடுக்கில் மகரந்ததூள்களை ஒரு மலரிலிருந்து மற்றொரு மலருக்குச் சுமந்து சென்று அயல் மகரந்தச் சேர்க்கையை நிகழ்த்தி மகசூலைப் பெருக்குகின்றன.

விவசாயத்தைப் பொருத்தவரை நிலம் வளமற்றது, சரியான உபகரணங்கள் இல்லை தண்ணீர் போதாது போன்ற வாதங்களை காந்திஜி புறக்கணித்துவிடுவார். ஒரு விவசாயியின் சொத்து தனது உழைப்பைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வதில்தான் உள்ளது என்பார் அவர். விவசாயி திறமையுடனும் ஊக்கத்துடனும் தன்னம்பிக்கையுடனும் செயல்பட வேண்டும். ஆதாரக் கல்வித் திட்டத்தில் பணியாற்றிய அலுவலர் ஒருவர் காந்திஜியிடம் தங்களுக்குத் தரப்பட்டுள்ள நிலம் விவசாயத்திற்கு ஏற்றது அல்ல என்று கூறியபோது காந்திஜி சொல்வார்: "தென் ஆப்பிரிக்காவில் நாங்கள் விவசாயம் தொடங்கிய போது எங்களுக்குக் கிடைத்த நிலம் எப்படி இருந்தது என்பது உங்களுக்குத் தெரியாது உங்கள் இடத்தில் நான் இருந்திருந்தால் நிலத்தைக் கலப்பையைக் கொண்டு உழுதிருக்க மாட்டேன். மாணவர்கள் கையில் களைக்கொத்துக் களைக் கொடுத்து நிலத்தைத் தோண்டுவதற்குப் பயிற்சி

அளித்திருப்பேன். அது ஒரு கலை. எருதுகளைப் (ஏர் உழவை) பிற்பாடு கொண்டு வரலாம். நிலத்திற்கு மேலெழுந்தவாரியாகச் சிறிது வண்டல் மண்ணையோ, தொழுஉரத்தையோ போட்டிருப்பேன்; அதைக் கொண்டு காய்கறிகளையும் கீரை வகைகளையும் வளர்க்கலாம். மனிதக் கழிவுகளை ஆழம் குறைவான வாய்க்கால்களில் மண்ணுடன் கலந்து மட்கவைத்து உரம் ஆக்குவதற்கு 15 நாட்களே பிடிக்கும். சிறுவர்கள் மனதில் உழவுத் தொழில் கௌரவமானது என்ற எண்ணம் பதிய வேண்டும். அது இழிவான தொழில் அல்ல, மேலான தொழிலாகும்." ஆதாரக் கல்வி திட்டத்தில் விவசாயத்திற்கு முக்கியமான பங்கு உண்டு என்று காந்திஜி நம்பினார்.

இந்தியாவின் பிரிவினைக்குச் சற்று முன்பாக நவகாளியில் இருந்த ஹிந்துக்கள் காந்திஜியைக் கேட்டனர்: "எங்களுக்கு உணவு கிடைக்காத நிலையில் நாங்கள் எப்படி இங்கே தொடர்ந்து வாழ முடியும்? இங்குள்ள முஸ்லீம் விவசாயிகள் எங்களுடன் ஒத்துழைப்பதில்லை. எங்களுக்கு உணவு தானியங்களையோ, எருதுகளையோ, கலப்பையையோ தருவதில்லை." காந்திஜி சற்றுச் சூடாகவே பதில் கொடுத்தார்: "சில பிக்காசிகளைக் கொண்டு வாருங்கள், நிலத்தைத் தோண்டுங்கள். அப்படி விவசாயம் செய்வதால் பயிர் விளைச்சல் குறைந்து விடாது."

1943ம் ஆண்டு காந்திஜி சிறையில் இருந்தபோது வங்காளப் பஞ்சத்தில் லட்சக்கணக்கான மக்கள் மாண்டனர். அந்தக் கொடூர சம்பவத்தின் நினைவு மக்கள் மற்றும் அரசு அலுவலர்களின் மனதில் பசுமையாகவே இருந்தது. 1947ம் ஆண்டில் மற்றொரு பஞ்சம் வந்துவிடுமோ என்ற அச்சம் அரசின் மனதில் தோன்றியபோது இந்தியாவின் கவர்னர் ஜெனரல் தனது உதவியாளரை காந்திஜியிடம் ஆலோசனை கேட்பதற்காக அனுப்பி வைத்தார். அந்த உதவியாளர் தனி விமானத்தில் டில்லியிலிருந்து வார்தாவுக்கு வந்து காந்திஜியைச் சந்தித்தார். காந்திஜி சற்றும் பதட்டம் அடையாமல் இருந்தார். ஜனங்கள் அச்சமின்றி வரப்போகும் பஞ்சத்தை எதிர்கொள்ள வேண்டும். நம்மிடம் வளமான நிலத்திற்கோ, தண்ணீருக்கோ, உழைப்பாளிகளுக்கோ பஞ்சம் இல்லை. நிலைமை இவ்வாறு இருக்கையில் உணவுப் பற்றாக்குறை எப்படி ஏற்பட்டுவிட முடியும்? ஜனங்களிடம் தன்னம்பிக்கையும் தற்சார்பு நிலையையும் வளர்க்க வேண்டும். ஒரு படி தானியங்களை உண்பவர்கள் இரண்டு படி தானியங்களை உற்பத்தி செய்ய வேண்டும். வேறு சில சாப்பிடுவதற்குரிய பொருளையும் ஒவ்வொருவரும் உற்பத்தி செய்ய வேண்டும். இதற்கு மிகவும் சுலபமான வழி ஒன்றுள்ளது.

சுத்தமான மண்ணைச் சேகரித்து ஒரு மண் தொட்டியிலோ, தகரத்திலோ போட்டு, கொஞ்சம் தொழுஉரம் அல்லது உலர வைத்த சாணத்தைப் போட்டு ஏதோ ஒரு தானியம் அல்லது காய்றிகயின் விதையைத் தூவி தினந்தோறும் தண்ணீர் ஊற்றிவர வேண்டும் எல்லாவிதமான விழாக் கொண்டாட்டங்களையும் உடனடியாக நிறுத்தி விடவேண்டும். விதைகள் ஏற்றுமதி செய்யப்படுவதையும் உடனடியாக நிறுத்த வேண்டும். மாவுச் சத்தினை நாம் காரட், உருளைக் கிழங்கு, சேனைக்கிழங்கு போன்ற கிழங்குகளிலிருந்தும் வாழைப்பழத்திலிருந்தும் பெற முடியும். இவற்றை பயன்படுத்துவதன் மூலம் தானியங்களையும் பருப்பு வகைகளையும் சேமித்து வைக்கலாம். காந்திஜியின் வழியில் சுயதேவைப் பூர்த்தியை அடைவதற்குக் கட்டுப்பாடும், எளிமையும், உணவுப் பழக்கவழக்கங்களில் மாற்றமும் தேவையாக இருந்தன. இவற்றை நாம் கடைப்பிடித்தால் அயல் நாட்டினரிடம் கையேந்துவதைத் தவிர்க்க முடியும்.

உணவுக்கும் துணிக்கும் பங்கீடுமுறை (ரேஷன்) அமுலில் இருந்த போது காந்திஜிக்கு அப்பொருள்களை அரசிடமிருந்து பெறவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அரிசியையோ, கோதுமையையோ, பருப்பையோ, சர்க்கரையையோ உட்கொள்ளாமல் அவரால் வாழ முடிந்தது. தனக்குத் தேவையான துணியையும் அவர் தானே உற்பத்தி செய்து கொண்டார்.

ஹரிஜன் பத்திரிகையில் அவர் கம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்கான முறையை விவரித்திருந்தார். குறைந்த செலவிலோ அல்லது எவ்விதச் செலவும் இன்றியோ பசுமாட்டின் சாணம், மனிதக் கழிவுகள், சிறுநீர், காய்கறி வெட்டும்போது வீணாகும் தோல்கள், குளம் குட்டைகளில் பரவிக்கிடக்கும் ஆகாயத் தாமரை போன்றவற்றை பயன்படுத்தி கம்போஸ்ட் உரத்தைத் தயாரித்து விடலாம். இதற்கு முதலீடு தேவையில்லை. அவரது ஆசிரமங்களில் மனிதக் கழிவுகளும், சிறுநீரும் ஆழம் குறைவான பள்ளங்களில் சேமித்து வைக்கப்பட்டன. பூமியின் மேற்பகுதியில் ஒரு அடி ஆழம்வரை எண்ணற்ற நுண்ணுயிர்கள் வாழ்கின்றன. இவை கழிவுகளை உரமாக மாற்றுகின்றன. கழிவுகளை ஆழத்தில் புதைத்து வைத்தால் துர்நாற்றத்துடன்கூடிய வாயுக்கள் வெளியாகி காற்று மண்டலத்தை மாசுபடுத்துகின்றன. இப்படி ஒரே சமயத்தில் துப்புரவாளராகவும், விவசாயியாகவும் காந்திஜி பணியாற்றியது பரம்பரை விவசாயிகளுக்கு ஏற்புடையதாக இல்லை. காந்திஜி ரசாயன உரங்களுக்கு பதிலாக இயற்கை உரங்களை பயன்படுத்தவே விரும்பினார். விரைவாக அதிக மகசூல் பெறும் நோக்கத்துடன் ரசாயன உரங்களை பயன்படுத்துவது அபாயகரமானது என்று அவர் கருதினார். நல்ல

மகசூல் கிடைத்தாலும் கூட ரசாயன உரங்கள் நிலத்திற்குக் கேடு விளைவிக்கும் என்பது அவரது வாதம்.

ஏர் உழவுக்கு பதிலாக டிராக்டரைப் பயன்படுத்தி உழுவதை அவர் எதிர்த்தார். சபர்மதி ஆசிரமத்தில் அவர் பலவித கலப்பை களை பயன்படுத்திப் பார்த்தார். தொன்மையான கலப்பையே சரியானது என்ற முடிவுக்கு அவர் வந்தார். அதன் மூலம் நிலம் பாதுகாக்கப்படுகிறது. பயிருக்குத் தேவையான ஆழத்திற்கு அக்கலப்பை செல்லும், ஆனால், நிலத்திற்கு குந்தகம் விளைவிக்காது. நூற்றுக்கணக்கான மனிதர்களின் உழைப்பைப் பயனற்றதாக்கிவிடும் டிராக்டரை அவர் ஆதரிக்கவில்லை. மனிதர்களைப் பயனுள்ள ஆக்கப்பணியில் ஈடுபடுத்தவேண்டும். எந்திரங்களைப் பயன்படுத்துவதன் காரணமாக விவசாயிகளின் திறமையும் பாதிக்கப்படும் என்று அவர் எண்ணினார். நிலத்தைச் சின்னஞ்சிறு வயல்களாகப் பாகுபாடு செய்து உழவு செய்வதை அவர் ஆதரிக்கவில்லை. "நூறு குடும்பங்கள் ஒன்று சேர்ந்து தங்களுக்குப் பொதுவான நிலத்தில் ஒன்றாக விவசாயம் செய்து விளையும் தானியங்களைப் பகிர்ந்து கொள்ளலாம். ஒவ்வொரு விவசாயியும் தனித்தனியாக ஒரு ஜோடி மாடுகளையும் வண்டியையும் வைத்துப் பராமரிப்பது தேவையற்றது." மாட்டுப் பண்ணையையும் கூட்டுறவு முறையில் நடத்தும்படி அவர் கேட்டுக் கொண்டார். அப்படிச் செய்வதன் மூலம் மாடுகளின் நலனைப் பாதுகாக்க கால்நடை மருத்துவத்துக்கு ஏற்பாடு செய்யலாம், பொதுவான மேய்ச்சல் நிலம், பொதுவான பொலிகாளை போன்ற ஏற்பாடுகளையும் செய்து கொள்ளலாம். தனிப்பட்ட ஒரு விவசாயியால் இவ்வசதிகளைச் செய்து கொள்ள இயலாது. மாட்டுத்தீவனத்தின் விலை மாடுகளிடமிருந்து நாம் அடையும் பயன்களின் மதிப்பைவிடக் கூடுதலாக உள்ளது. அவனிடம் உள்ள மாடுகளின் எண்ணிக்கை பெருகும்போது வறுமை காரணமாக விவசாயி கடேரிக் கன்றுகளை விற்று விடுகிறான், காளைக் கன்றுகளை விரட்டிவிடுகிறான். பெரும் பாலும் அவை பட்டினியால் இறந்துபோகும். தனது கால்நடை களுக்கு அவன் சரியாகத் தீவனம் தருவதில்லை. ஆனால், அவற்றைச் சக்கையாகப் பிழிந்து வேலை வாங்குகிறான்.

பசுமாடுகளின் பாதுகாப்பு பற்றி காந்திஜிக்கு கவலை இருந்தது. பசுக்கள் பண்ணை சார்ந்த பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் கருதினார். இந்தியாவைப் பல தடவைகள் சுற்றிவந்த அவர், விவசாயிகளின் ஒளி இழந்த கண் களையும், கால்நடைகளின் பரிதாப நிலையையும் கண்டு மிகவும் வருந்தினார். "பசுவை கோமாதா என்று பூஜிக்கும் வழக்கம் உள்ள இந்த நாட்டில்தான், பசுக்கள் கொடூரமாக நடத்தப் படுகின்றன. பசுக்கள் இப்படி சித்தரவதைக்குள்ளாவதை உலகில் வேறு எங்கிலும் காணமுடியாது. இந்த பூஜிக்கும் வழக்கம்கூட முஸ்லிம்களுடன் பசுவதை பற்றிச் சண்டை போடுவதிலும் பசுமாட்டைத் தொட்டுக் கும்பிடுவதில் மட்டுமே அடங்கியுள்ளது. நமது மாட்டுத் தொழுவங்களும், கோசாலை களும் (பசுக்களின் புகலிடம்) நரகம்போல் உள்ளன." நமது கோசாலைகளில் பால் மரத்துவிட்ட மற்றும் நோயுற்ற மாடுகளை பராமரிக்கும் ஏற்பாடுகள் செய்து வீரியமுள்ள கால்நடைகளை யும் உற்பத்தி செய்ய வேண்டும். அவர் பசும்பால் எருமைப் பாலைக் காட்டிலும் மேலானது என்று கருதி அதையே பயன் படுத்தினார். மேலும் பசுமாடு இறந்தபின் அதன் தோல், எலும்பு, குடல் மற்றும் சதையை உரிய முறையில் பயன்படுத்த முடியும்.

காந்திஜியின் ஆசிரமத்தில் அமைந்திருந்த கோசாலையில் பொலிகாளைகள் இருந்தன. மாட்டுக் கொட்டில் ஒரு முன் உதாரணத்திற்குரியதாகவும், அதேசமயம் எளிமையாகவும் இருந்தது. அவர் கோசாலையில் நன்கு கவனம் செலுத்தினார். புதிதாகப் பிறக்கும் ஒவ்வொரு இளங்கன்றையும் பிரியமாகத் தனது கையினால் தடவிக் கொடுப்பார். ஒரு கன்றுக்குட்டி ஒரு தடவை தீராத நோயினால் அவதியுற்றது. எவ்வித வைத்தியமும் பயன் அளிக்கவில்லை. காந்திஜி, தாமே அதன் வாழ்வை முடித்திட முன்வந்தார். அவர், அதன் கால்களை இறுக்கிப் பிடித்துக் கொண்ட நிலையில் மருத்துவர் ஊசிமூலம் அக்கன்றினை மீளா நித்திரையில் ஆழ்த்தினார். அஹிம்சா மூர்த்தியான காந்திஜியே இப்படிச் செய்யலாமா என்று பெரும் கண்டனம் எழுந்தது. ஒரு ஜைனர், இந்தப் பாவச் செயலை காந்திஜியின் ரத்தத்தைக் கொண்டு தான் கழுவமுடியும் என்று கூறினார். காந்திஜி இந்தப் புயலை அமைதியாக எதிர் கொண்டார்.

ஆசிரமத்தின் பண்ணையில் வளர்க்கப்பட்ட தானியங் களையும், காய்களையும், பழங்களையும் குரங்குகள் அழிக்க முற்பட்டபோது காந்திஜி குரங்குகளைக் கொன்றுவிடும்படி கூறினார். அஹிம்சையின் காவலர்கள் அதிர்ச்சி அடைந்தனர். "ஒரு விவசாயியாக மாறிவிட்ட நான், எனது பயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளும் வழியைப் பற்றியும் சிந்திக்க வேண்டி யுள்ளது. குறைந்த அளவு ஹிம்சை இதற்கு அவசியமாகிறது. குரங்குகளின் தொல்லை தாங்க முடியவில்லை. அவைகள் துப்பாக்கி சப்தத்திற்கு பயப்படாமல் ஊளையிடுகின்றன. தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அக்குரங்குகளை நான் கொல்ல வும் தயாராகி விட்டேன்." உண்மையில் ஒரு குரங்குகூட ஆசிரமத்தில் கொல்லப்படவில்லை.

ஏழை விவசாயியின் வருமானத்தை எப்படிக் கூட்டமுடியும் என்பது பற்றியே அவர் சிந்தித்து வந்தார். வருடத்தில் நான்கு முதல் ஆறுமாத காலங்கள் அவர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். விவசாயத்தை மட்டுமே நம்பி அவர்களால் வாழமுடியாது. முப்பது கோடி விவசாயிகளின் இந்தக் கட்டாய ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக ஆக்குவதற்காகவே அவர் பெண்களுக்குச் சர்க்காவையும் ஆண்களுக்குக் கைத்தறியையும் அளித்தார். படிப்பறிவற்ற, உடுத்துவதற்குப் போதிய உடைகள் இல்லாத, உண்பதற்குப் போதிய உணவு இல்லாத ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி அவர்களுக்கு சரியான உணவும், வசிப்பதற்கு வீடும், உடுத்துவதற்குப் போதிய உடைகளும், நல்ல ஆரோக்கியமும் கல்வியும் கிடைப்பதற்கு அவர் பாடுபட்டார். அவர்களுக்கு இன்னல்களை எதிர்கொள்ளும் மனோபாவமும் இருக்கவேண்டும் என்பார் அவர். விவசாயிகள் தொழிலாளிகள் பிரஜைகளின் அரசாங்கம் ஏற்படவேண்டும் என்று விரும்பிய அவர் "விவசாயிகளுக்குத் தமது இழிவான நிலைக்குத் தலைவிதி காரணம் அல்ல என்ற விழிப்புணர்வு ஏற்படும்போது, விளைவுகள் பயங்கரமாக இருக்கும். அவன் சட்டத்திற்குட்பட்ட மற்றும் சட்டத்திற்குப் புறம்பான விஷயங்களின் வேறுபாட்டை மறந்து விடுவான். சுயராஜ்யம் என்றால் என்ன என்பதை விவசாயிகள் புரிந்து கொண்டு விட்ட நிலையில் அவர்களை யாராலும் கட்டுப்படுத்த முடியாது," என்று எச்சரித்தார்.

காந்திஜியின் தலைமையை ஏற்று விவசாயிகள் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றனர். அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளை மீறி உப்பு தயாரித்தனர். பொதுக் கூட்டங்களில் சுதந்திரப் பிரமாணமும் எடுத்துக் கொண்டனர். அவர்கள் வரிகொடா இயக்கத்தில் ஈடுபட்டபோது அவர்களது சொத்துக்களும் நிலங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்கள் தங்களது பொருளை இழந்தாலும்கூட அவர்களது கௌரவம் உயர்ந்து நின்றது.

17

காந்திஜி ஒரு ஏலம் விடுபவர்

தன்னை மகாத்மா என்று சொல்வதையும் ஜனங்கள் தனது கால்களைத் தொட்டுக் கும்பிடுவதையும் தடை செய்வதற்கு ஒரு சட்டம் இயற்றப்பட்டால் அதை ஆதரிப்பதற்கு காந்திஜி தயாராக இருந்தார். இருப்பினும் அவர் சென்ற இடங்களில் எல்லாம் பெருந்தலைவர் என்ற முறையில் அவருக்கு அளிக்கப்பட்ட தடபுடலான வரவேற்பை அவரால் தவிர்க்க முடியவில்லை. பல்வேறு நற்பணிகளுக்காகவும் ஜனங்களுடன் எப்போதும் தொடர்பு வைத்துக் கொள்வதற்காகவும் அவர் எப்போதும் பயணம் செய்து கொண்டே இருந்தார். சென்ற இடத்தில் எல்லாம் அவரை மக்கள் அன்புடனும் பக்தியுடனும் வரவேற்றனர் அன்பளிப்பாக அவருக்கு மாலைகளும் மலர்க் கொத்துக்களும், விலை உயர்ந்த கண்ணாடிச் சட்டங்களிலும் பேழைகளிலும் வைக்கப்பட்ட பாராட்டுக் கடிதங்களும், பணப் பைகளும், நகைகளும் அளிக்கப்பட்டன. காந்திஜிக்கு மக்களின் இந்த அன்பு பிடித்திருந்தது. இருந்தாலும் சாதாரண மக்களின் வருவாய் நாள் ஒன்றுக்கு மூன்று பைசா என்று இருந்த நிலையில். பணம், மாலைகளிலும் பாராட்டுக் கடிதங்களிலும் அன்பளிப்புகளிலும் விரயம் செய்யப்படுவதை காந்திஜி விரும்பவில்லை.

இவ்வாறு பணம் விரயடிக்கப்படுவதை காந்திஜியால் எவ்வளவு முயன்றும் தடுக்க இயலவில்லை. இருந்த தேவையற்ற அன்பளிப்புப் பொருள்களை எப்படிப் பயனுள்ளதாக மாற்றலாம் என்று அவர் சிந்தித்தார். அவருக்கு ஒரு வழி தோன்றிவிட்டது. தனக்குக் கிடைக்கும் அன்பளிப்புப் பொருள்களை எல்லாம் ஏலம் விடுவது என்று முடிவு செய்தார். பகிரங்கமான முறையில் அன்பளிப்புப் பொருள்கள் பணமாக மாறும். பொதுக்கூட்ட மேடைகளில் அவர் இப்படி ஆரம்பிப்பார். "எனது அன்புக்குரிய இந்த மாலைகளை இப்போது என்ன செய்வது! சிறுமிகளை இங்கே காணோம். (சிறுமிகள் அங்கு இருந்திருந்தால் மாலைகளை அவர்களது கழுத்தில் போட்டிருப்பாராம் காந்திஜி! என்ன கிண்டல்). யாராவது இவற்றை வாங்க முன்வருவீர்களா? இரண்டு ரூபாய், ஒருதரம், மூன்று ரூபாய் இரண்டுதரம், ஐந்து ரூபாய் மூன்றுதரம்" என்று ஜாலியாக ஏலம் விடுவார். ஏலம் மேலே மேலே ஏறிக் கொண்டே இருக்கும்—ஒரு சிறிய எலுமிச்சம் பழமானாலும் சரி ஒரு பூமாலையானாலும் சரி,

மாலை சில தடவை முப்பது ரூபாயிலும் விலைபோகும். முன்னூறு ரூபாயிலும் போகும். கிராமவாசிகள்கூட ஏலத்தில் பங்கேற்று பொருள்களை அதிக விலைக்கு வாங்குவதுண்டு. ஒரு முறை காந்திஜி பேழை ஒன்றைக் கையில் எடுத்து "இதன் விலை முன்னூறு ரூபாய், மன்னிக்க வேண்டும் தவறாகச் சொல்லி விட்டேன். இதன் விலை 75 ரூபாய்தான்", என்றார். அதை முன்னூறு ரூபாயில் ஒருவர் ஏலம் கேட்டபோது ரூ. 300 ரூ. 300 என்று காந்திஜி கூவத் தொடங்கிவிட்டார். "முன்பு ஒரு தடவை இப்படிப்பட்ட பேழையை ஆயிரம் ரூபாய்க்கு விற்றிருக்கிறேன்" என்றார். கல்கத்தா நகரமக்கள் மூன்று முறை காந்திஜிக்கு அது போன்ற விலை உயர்ந்த பேழைகளைப் பரிசாக அளித்தனர். மூன்று முறையும் அப்பேழைகளை ஏலம் விட்டுவிட்டார். அவர் கூறுவார் "நீங்கள் பேரன்புடன் எனக்கு அளித்துள்ள பொருள் களை ஏலம் விடுவதன் மூலம் உங்களது அன்பை நான் அலட்சியம் செய்வதாக எண்ண வேண்டாம். என்னிடம் பெரிய டிரங்குப் பெட்டி ஏதும் இல்லாததால் இந்தப் பேழையை என்னால் எடுத்துச் செல்ல இயலாது. ஆசிரமத்திலும் இப்பேழையை வைக்க இடம் எதுவும் கிடையாது. இப்படிப் பொருள்களை ஏலம் விடுவதில் தவறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இதன் காரணமாக மக்கள் மத்தியில் நற்பணி களுக்கு உதவ வேண்டும் என்ற ஒரு தர்ம சிந்தனையும் ஒரு ஆரோக்கியமான போட்டி உணர்வும் ஏற்படுகின்றன. மேலும் பொருள்களை ஏலம் எடுப்பவர்கள் எனக்காக அதிக விலை கொடுப்பதாகவும் நான் நினைக்கவில்லை."

சில சமயங்களில் அவர் பேச்சைக் கேட்டபின்பும் கூட தாராளமாக நன்கொடை தர யாருமே முன்வராத சந்தர்ப்பங் களும் இருந்தன. ஆனால், பெரும்பாலும் ஏலத்தில் கணிசமான தொகை அவருக்குக் கிடைத்து வந்தது. ஒரு எலுமிச்சம்பழம் பத்து ரூபாய்க்கு ஏலம் போயிற்று. ஒரு சிட்ட மாலை 201 ரூபாய்க்கு ஏலம் போயிற்று. தங்கத் தக்ளி ஒன்று 5000 ரூபாய்க்கு ஏலம் போயிற்று. பேழை ஒன்றுக்கு ஏலத்தில் 1000 ரூபாய் கிடைத்தது. கட்டடம் ஒன்றிற்கு அடிக்கல் நாட்டியபின் அவர் பயன்படுத்திய மண்வெட்டியும் தட்டுக்கூடையும் 1000 ரூபாய்க்கு ஏல விற்பனையாகியது. ஒரு ஏலத்தின்போது ஒரு சிறுவன் அணிந்திருந்த தங்கக் காப்பு அவரது கவனத்தை ஈர்க்கவே, காந்திஜி அந்தப் பக்கமாகக் கையை நீட்டினார். பையனின் தாயார் பையனைத் தூக்கிப் பிடித்து காந்திஜிக்கு உதவினார். காப்பைக் கழற்றிக் கொண்டு பையனைத் தட்டிக் கொடுத்தார். காப்பு ஏலம் விடப்பட்டது.

ஒருமுறை இப்படி ஒரு அறிவிப்பை அவர் வெளியிட்டார் : "என்னிடம் எண்ணற்ற மோதிரங்கள் உள்ளன. அவற்றை நான் ஏலம் விடப்போகிறேன்." மூன்று தடவை ஏலம் விடப் பட்ட மோதிரம் ஒன்று 445 ரூபாய்க்கு ஏலம் போயிற்று. அதன் அடக்கவிலை ரூ. 30 மட்டுமே. ஒருமுறை அவருக்குக் கிடைத்த நன்கொடைப் பணத்தை எண்ணிய போது அதில் ரூபாய் நோட்டுக்கள், வெள்ளி நாணயங்கள் மற்றும் செப்புக் காசு களைத் தவிர சோழி ஒன்றும் காணப்பட்டது. அதைக் கண்டு காந்திஜி மனம் நெகிழ்ந்தார். "மிகவும் ஏழையான ஒரு மனிதர் தன்னிடம் பணம் ஏதும் இல்லாததால் தன்னிடம் இருந்த இச்சோழியை அளித்துள்ளார். இது அவரது தியாக மனப் பான்மையின் சின்னம், தங்கத்தைக் காட்டிலும் விலை உயர்ந்தது" என்று கூறினார்! உண்மையிலேயே தங்கத்தைக் காட்டிலும் அதிக மதிப்பு ஏற்பட்டு அச்சோழி ரூ. 111க்கு விற்பனையாகியது. தொடர்ச்சியான பயணங்களும், நாள் முழுதும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் பலவித சிக்கலான பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் பணியும் இருந்த போதும்கூட காந்திஜி சற்றும் தளர்ச்சி அடைய மாட்டார். அவரிடம் இருந்த 'வியாபாரி' எப்போதுமே விழிப்புடனும் உற்சாகத்துடனும் இருப்பார். தனது 78வது வயதில் ஹிந்து முஸ்லீம் கலவரங்களினால் துயரமுற்றிருந்த நிலையிலும் கூட பீகார்ப் பயணத்தின்போது முஸ்லீம்களின் நலனுக்காகப் பணவசூல் செய்து அணிகலன்களையும் அன்பளிப்பாகப் பெற்று அவற்றை ஏலம் விட்டார்.

காந்திஜியிடம் தன்னுடையது என்று பணமோ பொருளோ கிடையாது. அவரே ஒரு ஏழை ஆசிரமவாசி. ஒரு முறை ஒரு பொது நலத்திற்காக செப்புக்காசு ஒன்றை நன்கொடையாக அளித்தார். அதே செப்புக்காசை காந்திஜியிடம் அன்பு கொண்ட ஒரு நபர் 500 ரூபாய் செலுத்திப் பெற்றுக் கொண்டார்!

வாங்கப்படும் ஒவ்வொரு கெஜம் கதருக்கும் குறைந்த பட்சம் அதன் விலையில் எண்பத்தைந்து சதவீதம் பட்டினி கிடக்கும் இந்தியாவின் ஏழைகளின் வாய்களுக்குப்போகிறது. வாங்கப்படும் ஒவ்வொரு கெஜ மில்துணிக்கும், அதன் விலையில் 75 சதவிகிதம், முதலாளிகளின் பணப்பெட்டிக்கும் 25 சதவிகிதம் தொழிலாளரின் மடிக்கும் போகிறது. மில் தொழிலாளர்கள் திக்கற்றவர்களாக இல்லை. இவர்கள் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ள முடியும். திக்கற்ற கோடிக்கணக்கான கிராம மக்களைப்போல இவர்கள் பட்டினி கிடக்கவும் இல்லை.

— யங் இந்தியா 4-10-1928

18

காந்திஜி ஒரு பிச்சைக்காரர்

மக்கள் நலனில் காந்திஜியின் ஈடுபாடு அதிகரித்துக் கொண்டு சென்றதன் காரணமாக அவரால் தனது குடும்பத்தினருக்கோ தனது வக்கீல் தொழிலுக்கோ ஒதுக்கப்பட்ட நேரம் குறைந்து கொண்டு வந்தது. அப்போது அவருக்கு இவ்வாறு ஒரு எண்ணம் தோன்றியது. "நான் மக்களின் தொண்டனாக மாற வேண்டும் என்றால் வறுமையை மனமுவந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். என்னிடம் உள்ள சொத்து சுகங்களைத் தியாகம் செய்து விட வேண்டும்." ஒரு காலகட்டத்தில் அவருக்கு சொத்து சேர்ப்பது பெரும் குற்றமாகத் தோன்றியது. அதைத் தியாகம் செய்தது அவருக்கு மனநிம்மதியை அளித்தது. ஒவ்வொன்றாக அவருடைய சொத்து சுகங்கள் அவரிடமிருந்து விலகிச் சென்றன. தனது தந்தை வழியான பரம்பரைச் சொத்தில் தனக்கு பங்கு வேண்டாம் என்று முதலில் அறிவித்தார். தொடர்ந்து காப்பீட்டுத் தொகைக்கு (இன்ஷ்யூரன்ஸ்) சந்தா கட்டுவதை நிறுத்திவிட்டார். மாதம் ரூ. 4,000க்கு மேல் வருமானம் தந்து கொண்டிருந்த வழக்கறிஞர் தொழிலை அவர் கைவிட்டார். அவருக்கு அன்பளிப்பாகக் கிடைத்த தங்க மற்றும் வைர நகைகளையும், தென் ஆப்பிரிக்க நாட்டில் அவர் பெயரில் பதிவாகி இருந்த ரூ. 65,000 மதிப்புள்ள ஃபீனிக்ஸ் பண்ணையையும் பற்றி ஒரு அறக்கட்டளைக்கான சாசனப் பத்திரம் தயார் செய்து விட்டார். அந்தப் பணம் அனைத்துமே பொது நலனுக்காக செலவிடப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் இருந்தது. தனக்கென நிச்சயமான - நிரந்தரமான வருவாயுடன் கூடிய பாதுகாப்பான வாழ்க்கையை அவர் துறந்துவிட்டார். தனது மனைவி மகன்கள் மற்றும் உறவினர்களையும் அதே கடினமான வாழ்க்கைக்குட்படுத்தினார்.

நண்பர்கள் மற்றும் தொண்டர்களின் நன்கொடைகளின் ஆதாரத்தில் தான் அவரது வாழ்வின் கடைசி நாற்பது ஆண்டுகள் கழிந்தன. டால்ஸ்டாய் பண்ணை வாசத்தின்போது காந்திஜி மற்றும் அவரது குடும்பத்தினருடைய செலவுகளை அவரது நண்பர் கல்லன்பாக் ஏற்றுக்கொண்டார். காந்திஜி இந்தியாவில் அமைத்திருந்த எல்லா ஆசிரமங்களுமே நண்பர்கள் மற்றும் கொடையாளர்களின் ஆதரவுடன் இயங்கின.

பண்டித மாளவியா 'பிச்சைக்காரர்களின் இளவரசர்' என்று அழைக்கப்பட்டார் காந்திஜியோ 'பிச்சைக்காரர்களின் மன்னர்' என்று அழைக்கப்பட்டார். பொதுநலனுக்காகப் பிச்சை எடுப்பதில் காந்திஜி ஒரு உலகச் சாதனையே புரிந்துள்ளார் தன்னிடம் இப்படிப்பட்ட ஒரு திறமை இருப்பதை காந்திஜி தென் ஆப்பிரிக்காவில் நேட்டால் இந்தியன் காங்கிரஸிற்காக நன்கொடை வசூலிக்கும் பொறுப்பு அவரிடம் இருந்தபோது உணர்ந்தார். ஒரு நாள் மாலை நேரத்தில் சற்று தாமதமாக ஒரு பணக்காரரிடம் பணம் வசூலிக்க அவர் சென்றிருந்தார். காந்திஜி அப்பணக்காரரிடம் எண்பது ரூபாய் நன்கொடையை எதிர்பார்த்தார். அப்பணக்காரரோ காந்திஜி எவ்வளவோ மன்றாடியும்கூட ரூபாய் நாற்பது மட்டுமே தர ஒப்புக் கொண்டார். காந்திஜிக்குப் பசியாகவும் சோர்வாகவும் இருந்தது. இருப்பினும் அவர் தளரவில்லை. இரவு முழுவதும் அப்பணக்காரர் வீட்டிலேயே அவர் உட்கார்ந்திருந்தார். விடியும் தருவாயில் எண்பது ரூபாய் அவருக்குக் கிடைத்துவிட்டது.

தென் ஆப்பிரிக்காவில் குடியேறி இருந்த இந்தியர்களின் உரிமைகளுக்காகப் போராடிய காலகட்டத்தில் அப்போராட்டத்திற்காக நிதி திரட்டும் பொறுப்பு காந்திஜியிடம் இருந்தது. கூடவே போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 5,000 நபர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலத்திற்கும் நிதி தேவைப்பட்டது. நாள் ஒன்றுக்கு ரூ. 3,200 செலவாகிக் கொண்டிருந்தது. காந்திஜி தந்தி மூலம் அனுப்பி இருந்த வேண்டுகோளுக்கிணங்கி இந்திய நாட்டினர் தாராளமாக நிதி உதவி தர முன் வந்தனர். அரச குமாரர்களும் பணக்கார வியாபாரிகளும் பணம் அனுப்பினர். அப்போது நடந்த காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் காந்திஜியின் தென் ஆப்பிரிக்கப் போராட்டத்திற்கு நிதி உதவி வேண்டி கோரிக்கை வைக்கப்பட்ட போது கரன்சி நோட்டுக்களும் தங்கமும் வெள்ளியும் மழைபோல் பொழிந்தன.

காந்திஜி வரவு செலவு பற்றி எல்லா விபரங்களும் அடங்கிய கணக்குகளை அனுப்பிவைத்தார். கொடையாளர்களின் உணர்வுகளை மிகவும் மதித்த காந்திஜி போராட்டம் தவிர வேறு எப்பணிக்கும் ஒரு பைசா கூட செலவு செய்யவில்லை. பொது நிதியை மிகவும் கவனத்துடன் கையாள வேண்டும் என்பதே அவருடைய கொள்கை. இதுபற்றி எந்த ஒரு நபருக்கும் ஐயம் ஏற்பட்டால் அவர்கள் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளைப் பார்வை இட வழி செய்தார்.

திலகர் சுயராஜ்ய நிதிக்காக ரூ. ஒரு கோடியை மூன்று மாதங்களுக்குள் திரட்ட வேண்டும் என்று அவர் இலக்கு

வைத்திருந்தார். ஒரு நண்பர், சில சினிமா நட்சத்திரங்களை அழைத்து ஒரு கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தால் பணம் விரைவில் வசூலாகிவிடும் என்று கருத்துத் தெரிவித்தார். காந்திஜி அக்கருத்தினை ஏற்கவில்லை. இருப்பினும் அவர் வரையறுத்திருந்த காலக்கெடுவுக்குள் ஒரு கோடியே பதினைந்து லட்சம் ரூபாய் வசூல் ஆகிவிட்டது. காந்திஜி அடிக்கடி கூறுவதுண்டு, ''பணக்காரர்கள் ஆயிரக்கணக்கில் நிதி உதவி செய்வதை நான் வரவேற்கிறேன். இருப்பினும் ஏழை மக்கள் மனமுவந்து அளிக்கும் செப்புக் காசுகளும் வெள்ளி ரூபாய்களும் முக்கியமானவை. அவர்கள் கொடுக்கும் ஒவ்வொரு காசும் நமது சுயராஜ்ய கொள்கைக்கு அவர்கள் தரும் ஆதரவின் அடையாளம்.'' சில வயது முதிர்ந்த வறியோர்கள் நடுங்கும் கரங்களுடன் செப்புக் காசுகள் அடங்கிய முடிச்சை தங்களது இடுப்பிலிருந்து அவிழ்த்து ஒரு சில காசுகளை நன்கொடையாக அளித்த செயல் அவரை மனம் நெகிழ வைத்தது. "அவர்கள் கடின உழைப்பின் மூலம் பெற்ற பணத்தை மனவிருப்பத்துடன் தருகிறார்கள்'' என்று கூறி அவர்களை அவர் பாராட்டினார். திலகர் சுயராஜ்ய நிதி தவிர காந்திஜி, தியாகி தில்லையாடி வள்ளியம்மை, கோகலே, லாலா லஜபதிராய், தேசபந்துதாஸ், ஆண்ட்ரூஸ் மற்றும் ஜாலியன் வாலாபாக்கில் உயிரிழந்தோரின் குடும்பங்கள் ஆகியவற்றிற்கும் நிதி திரட்டினார். ஜாலியன் வாலா தோட்டத்தில் நினைவுச் சின்னம் அமைப்பதற்கான நிதியை, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வசூலிக்க இயலவில்லை என்றால் தனது ஆசிரமத்தை விற்றுப் பணத்திற்கு ஏற்பாடு செய்யப் போவதாக அறிவித்தார்! ஆசிரமம் விலை போகவில்லை. ஏனெனில் நிதி வசூல் செய்யப்பட்டுவிட்டது.

தேசபந்து (சித்தரஞ்சன் தாஸ்) நினைவு நிதிக்கான இலக்கு பத்து லட்சம் ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது. இரண்டே மாதங்களில் இத்தொகை வசூலாகிவிட்டது.

ரவீந்திரநாத் தாகூர், சாந்திநிகேதன் ஆசிரமத்திற்கு நிதி திரட்டுவதற்காக நாடு தழுவிய சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஆங்காங்கே கலைநிகழ்ச்சிகள் நடத்திவருவதைக் கேள்வியுற்ற காந்திஜி, தாகூரிடம் உடனடியாக சுற்றுப் பயணத்தை நிறுத்திக் கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்தார். அவரே ரூபாய் ஐம்பதாயிரத்தை நன்கொடையின் முதல் தவணையாக அளித்தார்.

நாட்டின் எப்பகுதியிலாவது வெள்ளமோ, பஞ்சமோ, பூகம்பமோ ஏற்பட்டால் காந்திஜி பிக்ஷாபாத்திரத்தைக் கையில் எந்திவிடுவார்! கதர் இயக்கத்திற்காகவும் தீண்டாமை ஒழிப்பிற்

காகவும் அவர் நாடு தழுவிய சூறாவளிப் பயணம் மேற்கொண்டார். ஹரிஜன நலநிதிக்காக அவர் இரண்டு கோடி ரூபாய் வசூல் செய்தார். ஏழை மக்களின் உணவுக்காக என்று யாராவது நிதி உதவி செய்தால் அதை காந்திஜி ஏற்பதில்லை. மனிதனின் உண்மையான பசி உணவைப் பற்றியதல்ல. அது ஒரு அடிப்படை வசதிகள் மற்றும் சுயகௌரவம் பற்றியது. அவர் மேலும் சொல்வார் : ''ஆடை இல்லாதவனுக்குப் பழைய துணிகளைக் கொடுத்து நான் அவனை அவமானப்படுத்த விழைய மாட்டேன். அவனுக்குத் தேவையான நல்லதோர் வாழ்க்கையை அமைத்துத் தரவே நான் முயலுவேன்.''

ஒரு சிறைவாசத்தின்போது ஒரு மருத்துவர் அவரிடம் "பாபுஜி, திடகாத்திரமான உடலுடன் கூடியவர்கள் பிச்சை எடுப்பது தடை செய்யப்பட வேண்டாமா? அப்படி ஒரு சட்டத்தை நீங்கள் இயற்றுவீர்களா?'' என்று கேட்டார். அதற்கு காந்திஜி, "நிச்சயமாக அப்படியே செய்வோம். ஆனால், என்னைப் போன்றவர்களுக்கு மட்டும் பிச்சை எடுக்க அனுமதி வேண்டும்'' என்றார். "பிச்சை எடுப்பவர்கள் விரும்பியதை எல்லாம் பெற முடியாது'' (பெக்கர்ஸ் ஆர் நாட் சூஸர்ஸ்) என்று ஆங்கிலத்தில் பழமொழி உண்டு. காந்திஜி இப்பழமொழிக்கு விதி விலக்காக விளங்கினார். அவரது வார்த்தைகள் (Slogan) நன்கொடையாளர்களிடம் அவர் நடந்து கொண்ட விதம், நன்கொடையை ஏற்றுக் கொள்வதற்கு அவர் விதித்த நிபந்தனைகள் எல்லாமே அசாதாரணமானவை. ரயில்வண்டியில் நின்றபடியோ, பிளாட்பாரத்தில் நின்றபடியோ, ஓடிக் கொண்டிருக்கும் காரிலிருந்து பிக்ஷாபாத்திரத்தை வெளியே நீட்டியபடியோ அவர் பிச்சை கேட்பார். பெரிய கூட்டமே நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டு பிச்சை போடுவதற்கு அவரை நோக்கி ஓடும். நூற்றுக் கணக்கான மக்கள், வறியோர், முதியோர் ஆண்கள், பெண்கள் எல்லோரும் பல கிலோ மீட்டர்கள் ஓடியும் நடந்தும் வந்து காந்திஜிக்குப் பிச்சை போட்டார்கள். சிலர் தங்களது தோட்டத்தில் விளைந்த கத்தரிக்காய், பூசணிக்காய் போன்ற காய்களைக் கொண்டு வருவார்கள். ஒரு மாதிரிப் பள்ளியின் மாணவர்கள் ஏராளமான நூல் சிட்டங்களையும் அவர்களே நெய்த கொஞ்சம் கதர்த்துணியையும் கூடவே தாங்கள் சேமித்து வைத்திருந்த சிறு தொகையையும் அவருக்கு அளித்தனர். அத்தொகையை சில நாட்கள் நெய், பால், ஒரு வேளை உணவு ஆகியவற்றைத் தவிர்த்து அவர்கள் சேர்த்திருந்தனர். ஒரு தடவை ஒரு விதவை யாரிடமோ இரண்டு அணாவை (12 பைசா) கடனாகப் பெற்று காந்திஜியிடம் அளித்தார். காந்திஜி "ஏன் இரண்டணா மட்டும் தருகிறீர்கள்?'' என்று கேட்டதற்கு "நான் உங்களது நற்பணிகளுக்காக இப்பணத்தைத் தரவில்லை,

எல்லாவற்றையும் துறந்த மகாத்மாவிற்குப் பிச்சை போட்டேன் என்ற பெருமைக்காகத் தருகிறேன்'' என்று அப்பெண்மணி கூறினார்.

சில லட்ச ருபாய்களை வசூல் செய்வது காந்திஜிக்கு மிகவும் எளிதாக இருந்தது. ஒலிபெருக்கி மூலமோ, சிலருக்குத் தந்திகளை அனுப்பியோ, பத்திரிகைகள் வாயிலாக வேண்டுகோள் அனுப்பியோ அவர் லட்சங்களை வசூல் செய்துவிடுவார். ஒரு தடவை ஒரு கூட்டத்தில் அருகே நின்று கொண்டிருந்த ஒரு பத்திரிகைக்காரரின் தொப்பியைக் கழற்றி அதையே திருவோடாக வைத்துப் பிச்சை கேட்கத் தொடங்கிவிட்டார். குழப்பமடைந்த அப்பத்திரிகையாளர் காந்திஜியின் இந்தப் புதிய பரிசோதனைக்கு முதல் பலிகடா! கூடவே தனது பையிலிருந்தும் கொஞ்சம் பணத்தை எடுத்து காந்திஜியின் கைக்கு மாறிவிட்டிருந்த தனது தொப்பியில் போட்டார்!

பர்மா நாட்டிற்குத் திருவோட்டுடன் சென்றபோது இப்படி ஒரு வேண்டுகோளை வெளியிட்டார்: "நான் பதினான்கு ஆண்டுகளுக்குப்பின் பர்மாவுக்கு வந்துள்ளேன். பதினான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரக்கூடிய பஞ்சத்தை நீங்கள் எப்படி எதிர்நோக்குவீர்களோ அப்படியே என்னையும் எதிர் நோக்குங்கள். தரித்திர நாராயணர்களின் பிரதிநிதியாக வந்துள்ள எனது பசியைத் தீர்த்து வையுங்கள். இன்னொரு முறை உங்களிடம் நான் வரமாட்டேன்." பெரும் பணக்கார வியாபாரிகள் அற்பத்தனமாக சிறிய தொகைகளை அளித்தது அவருக்குப் பிடிக்கவில்லை. "இந்த நன்கொடைப் பட்டியலைக் கிழித்து எறியுங்கள்; புதிதாகப் பட்டியல் போடுங்கள். நான் குஜராத்தியர்களின் பைகளில் ஆழமாகவே கையை நுழைப்பேன்; ஏனெனில் நான் ஒரு குஜராத்திச் செட்டியார்!" அவருடைய இந்தக் கோபத்தின் பயனாக நன்கொடைத் தொகை இரு மடங்காகியது.

இலங்கைக்கு அவர் சென்றபோது இவ்வாறு கூறினார். "மகேந்திரன் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தபோது இந்திய நாட்டின் குழந்தைகள் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கவில்லை. எங்களது நிலைமை நன்றாக இருந்தது. அப்பெருமையில் நீங்களும் பங்கு கொண்டீர்கள். உங்களுக்கு எங்களுடன் உள்ள உறவை நீங்கள் இன்னமும் மறக்கவில்லை என்றால், அந்த உறவு பற்றி நீங்கள் பெருமை கொள்கிறீர்கள் என்றால் நீங்கள் பணத்தை மட்டும் அல்ல, நகைகளையும் தர வேண்டும்." பணமும் நகைகளும் குவிந்தன.

கட்சு பகுதிக்குச் சென்று அவர் வசூல் நடத்தியபோது அம்மக்கள் அங்கே வசூல் செய்த பணத்தை அப்பகுதிக்கே செலவிட வேண்டும் என்று கோரினார்கள். கோபமுற்ற காந்திஜி "உங்களுக்கு நான் பணத்தை உரிய முறையில் தான் செலவு செய்வேன் என்ற நம்பிக்கை இருந்தால் மட்டுமே நன்கொடை தாருங்கள்'' என்று கேட்டார்.

சற்று மனம் தளர்ந்துபோன ஒரு சந்தர்ப்பத்தில் அவர் இவ்வாறு கூறினார்: "என்னிடமும் அனுமாருக்கு இருந்த சக்தி இருந்திருக்குமானால் என் இதயத்தைப் பிளந்து உங்களுக்குக் காட்டி இருப்பேன். அங்கே ராமன் மீது நான் வைத்துள்ள அன்பைத் தவிர வேறு எதையுமே நீங்கள் காண மாட்டீர்கள். பட்டினியில் தவிக்கும் கோடிக்கணக்கான ஏழை இந்தியர்களில் தான் நான் ராமனைக் காண்கிறேன்.'' பல சந்தர்ப்பங்களில் ஒரே நாளில் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட கூட்டங்களில் அவர் கலந்து கொண்டார். அங்கெல்லாம் அவர் கேட்பார்: "கால் அணாவோ, அரை அணாவோ, ஒரு பைசாவாக இருந்தாலும் பரவாயில்லை, கொடுங்கள்," என்று "எங்கே என் பணமுடிப்பு?" பணம் கிடைக்காவிட்டால் "நான் இந்த இடத்தை விட்டு நகரமாட்டேன்: தனியாகவே இங்கேயேதான் அமர்ந்திருப்பேன்," என்று அடம் பிடிப்பார். பணம் வசூல் செய்யப்பட்டு அவரிடம் அளிக்கப்படும். சில சமயங்களில் பெரிய கூட்டமே அவருக்காக நள்ளிரவு வரை காத்திருந்து வீடுகளையும், நகைகளையும், காசோலைகளையும், கரன்சி நோட்டுக்களையும், தங்கம், வெள்ளி, செப்புக் காசுகளையும், கதர் சிட்டங்களையும், கதர்த்துணியையும் அவருக்கு அளிக்கும். அவரது 78வது பிறந்த நாளன்று அவருக்கு 78 லட்சம் கதர்ச் சிட்டங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

வசூலாகிய காசுகளுக்கிடையே ஒரு தடவை சோழி ஒன்று காணப்பட்டது. காந்திஜி அதை ஒரு ஏழையின் தியாக உணர்வின் சின்னமாகக் கருதினார். தங்கத்தைக் காட்டிலும் விலை உயர்ந்தது என்றும் கூறினார். ஒரு கொலைக் குற்றக் கைதி தூக்கு மேடையில் ஏறுவதற்கு முன் தனது கணக்கில் வரவாகி இருந்த நூறு ரூபாயை காந்திஜிக்கு நன்கொடையாக வழங்கும்படி சிறை அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

எப்போதுமே ஒவ்வொரு கூட்டம் முடிந்ததும் சில்லறைகளை எண்ணுவதற்கு மூன்று அல்லது நான்கு பேர்கள் தேவைப்பட்டனர். சில சமயங்களில் புதைத்து வைக்கப்பட்டிருந்த செப்புக் காசுகளை ஏழை மக்கள் வாரி வழங்குவதுண்டு.

அவற்றில் பாசம் படிந்திருக்குமாகையால் அவற்றை எண்ணும் தொண்டர்களின் கைகளில் பச்சைக் கறை படிந்துவிடும். அதைக் காணும் காந்திஜி கூறுவார்: "இது விலை மதிப்பற்ற நன்கொடை. அந்த ஏழை மக்களின் அர்ப்பணம். உலகில் இன்னமும் நல்லவையே நடக்கும் என்ற நம்பிக்கை இப்படிப் பட்ட செயல்களால்தான் உதயமாகிறது".

பிச்சையை ஒரு தொழிலாக பலர் மேற்கொண்டுள்ளதை காந்திஜி எதிர்த்து வந்தார்! பிடி சோற்றுக்காக தன்மானத்தை இழந்து கையேந்தும் பிச்சைக்காரர்களைப் பார்க்கும்போது அவர் கோபம் கொள்வார். அவர்களுக்குப் பிச்சை போடக் கூடாது. அவர்களுக்கு ஏதாவது வேலை தரவேண்டும் என்பார். 56 லட்சத்திற்குமேல் இந்தியாவில் பிச்சைக்காரர்கள் உள்ளனர் என்று கேள்வியுற்ற அவர் அதுபற்றி கோபமுற்றார். ஆரோக்கிய மான உடலுடன் கூடிய எந்த ஒரு நபரும் பிச்சை எடுக்கக் கூடாது; ஏதாவது பணியில் ஈடுபடவேண்டும் என்று கூறுவார். பிச்சை கொடுப்பதும் தவறு; ஏற்பதும் தவறு என்பது அவரது வாதம். ஆரோக்கியமான உடலுடன் கூடியவர்கள் பிச்சை எடுப்பது திருடுவதற்கு ஒப்பானது என்பார்.

பீகாரில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களையும் மதக் கலவரங்களினால் அகதியானவர்களையும் தங்களது உணவு, உடை மற்றும் இருப்பிடத்திற்காக ஏதாவது பணி செய்ய வேண்டும் என்று அவர் வற்புறுத்துவார். அப்படி வேலை ஏதும் செய்யாவிட்டால் பிறரைச் சார்ந்து வாழும் மனப்பான்மை அவர்களிடையே வளர்ந்துவிடும் என்று எச்சரிப்பார். பிறரைச் சார்ந்திருப்பது தவறானது என்று எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர் கூறுவார். அவருடைய அறிவுரை : நேர்மையுடன் நன்றாகப் பணி செய்யுங்கள். பிச்சைக்காரர்களை நான் வெறுக்கிறேன். வேலை கேளுங்கள் அதை நன்றாகச் செய்யுங் கள். வேலை செய்யுங்கள் பிச்சை எடுக்காதீர்கள்."

(மொழி பெயர்ப்பாளரின் பின்குறிப்பு - காந்திஜி பிச்சைக் காரர்களின் மன்னராகத் திகழ்ந்தார். ஆனால் அவர் எடுத்த பிச்சை பொது நலனிற்காக. அந்தப் பிச்சைக்காரர் சுயநலனுக் காக யாரும் பிச்சை எடுப்பதை வன்மையாகக் கண்டித்தது சற்று வேடிக்கைதான்).

19

காந்திஜி ஒரு கொள்ளைக்காரர்

காந்திஜி பிச்சைக்காரர்களின் மன்னராகத் திகழ்ந்தார் என்றால் கொள்ளைக்காரர்களிடையே அவர் இளவரசராகவும் திகழ்ந்தார்.

இந்தியாவில் நாள்தோறும் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்கள் ஆவதையும் ஏழைகள் மேலும் ஏழை ஆவதையும் அவர் பார்த்தார். தனது வழியிலேயே ஒரு சமத்துவ நிலையைக் கொண்டுவர அவர் விரும்பினார். கிராம வாழ்க்கையைப் புணரமைத்து கிராம மக்களின் துயரங்களைப் போக்குவது அவரது லட்சியம்.

காந்திஜி பணக்காரர்களைக் கொள்ளை அடித்து ஏழை களுக்கு உதவுவார். அவர் அக்காலத்திய கொள்ளைக்காரர் களைப் போல தீவட்டியையோ பட்டாக்கத்தியையோ கையில் ஏந்தவில்லை. அவரது கனிவான பேச்சும் அதில் தொனித்த நியாய உணர்வுமே அவரது ஆயுதங்கள். பணக்காரர்களைத் தங்களது செல்வத்தை வாரி வழங்கும்படி கேட்டுக் கொள்வார்; பண்டிதர்களைத் தங்களது அறிவைத் தானம் செய்யும்படி வேண்டுவார்; முதலாளிகளிடம் தங்களது லாபத்தைத் தொழிலாளிகளுடன் பங்கிட்டுக் கொள்ளும்படி அறிவுறுத்துவார்; ஆட்சியாளர்களிடம் மக்களுக்குத் தங்களது உரிமைகளை வழங்கும்படி கேட்பார்; சோம்பித் தாழ்வுற்று நின்ற மக்களை சோம்பலை ஒழித்து நிமிர்ந்து நிற்கும்படி வேண்டிக்கொள்வார். மக்களின் நலனில் சிறிதும் அக்கறை காட்டாத வெள்ளையர் களது ஆட்சியை அகற்றி நாமே ஆளவேண்டும் என்றும் அவர் களுக்கு அறிவுறுத்துவார். அவரது பேச்சில் ஒரு மந்திர சக்தி இருந்தது. இளைஞர்களும் முதியோர்களும் எளிய கிராமவாசி களும், கெட்டிக்கார வியாபாரிகளும், எல்லோருமே அவரது பேச்சினால் கவரப்பட்டனர். ஒரு புயல் காற்றைப் போல அவர் இந்தியாவின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்குப் பயணம் மேற்கொள்வார்.

சென்ற இடங்களில் எல்லாம் மக்களைத் தங்களது செல்வங்களையும் குடும்ப பந்தங்களையும் துறந்து நாட்டுப் பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும்படி வேண்டுவார். குழப்பமுற்றிருந்த உள்ளங்களை அவரது பேச்சு உலுக்கியது.

பெற்றோர் தங்களது மக்களை நாட்டுப்பணிக்காக அர்ப்பணிக்க வேண்டும்; பர்தா அணிந்த மாதர்கள் தங்களது நகைகளை நாட்டுக்காகத் துறக்க வேண்டும். ஏழைகளும் தங்களது செப்புக் காசுகளை அளிக்க வேண்டும் என்று கேட்பார்.

ஒரு முறை, நாட்டில் மழை பொய்த்து பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்டது. விவசாயிகள் துயருற்றிருந்தனர். அப்போது கூட அரசு அவர்களை வரியை முழுவதுமாக கட்டும்படி நிர்ப்பந்தம் செய்தது. வரி வசூலுக்கு வந்த அரசு அதிகாரிகளுக்கு அஞ்சிய விவசாயிகள் தங்களது கலப்பைகளையும் மாடுகளையும் விற்று வரிகட்ட முனைந்தார்கள். காந்திஜியோ விவசாயிகளிடம் வரிப்பணத்தைக் கொள்ளை அடிக்கும்படி கூறினார். அதாவது, அரசுக்கு வரிசெலுத்த வேண்டாம் என்று கூறினார். இங்குதான் காந்திஜியின் புகழ்பெற்ற வரிகொடா இயக்கம் தோன்றியது. காந்திஜியின் தலைமையில் விவசாயிகள் ஒரு பிரமாணம் எடுத்துக் கொண்டனர். ''நாங்களாகவே முன்வந்து இந்த ஆண்டிற்கான வரியைச் செலுத்தமாட்டோம். எங்களுக்குச் சொந்தமான நிலங்களை இழக்கவும் நாங்கள் தயாராகி விட்டோம்'' அரசும் விடாப்பிடியாக பயிர்கள் விளைந்திருந்த நிலங்களை ஜப்தி செய்தது. காந்திஜி விவசாயிகளிடம் அந்த நிலங்களின் மீது அவர்களுக்கு உரிமை உள்ளது என்று அறிவுறுத்தினார். ஜப்தி செய்யப்பட்ட வெங்காயம் விளைந்திருந்த வயல்களில் இறங்கி வெங்காயத்தைக் கொள்ளை அடிக்கும்படியும் கூறினார். ஒரு தொண்டர் படை வயல்களில் இறங்கி வெங்காயத்தை அறுவடை செய்தது, கொள்ளைக் கூட்டத்தின் தலைவராகிய மோஹன்லால் பாண்டியா கைது செய்யப்பட்டார். அவர் விடுதலை செய்யப்பட்டதும் அவருக்குப் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டு ''வெங்காயத் திருடர்'' என்ற பட்டமும் சூட்டப்பட்டது. அக்கூட்டத்திற்கு காந்திஜி தலைமை தாங்கினார். திருடரின் நெற்றியில் வெற்றித் திலகமும் இட்டார்.

வேறு ஒரு சந்தர்ப்பத்திலும் மோசமான உணவு பற்றாக் குறை ஏற்பட்ட சூழ்நிலையில் காந்திஜி அதேபோல் நடந்து கொண்டார். நிலவரி வசூல் ஆகாததால் அரசு அதிகாரிகள் நிலங்களை ஜப்தி செய்து விவசாயிகளை அவர்களது குடிசைகளிலிருந்து வெளியேற்றினர். விவசாயிகள் சில பாத்திரம் பண்டங்களுடன் தாங்கள் பரம்பரையாக வசித்துவந்த வீடுகளிலிருந்து வெளியேறத் தொடங்கினர். அரசு அதிகாரிகள் அவ்விவசாயிகளிடமிருந்து ஜப்தி செய்யப்பட்ட நிலங்களை ஏலம்விட முற்பட்ட போது யாரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. நீண்ட விசாரணைக்குப்பின் விவசாயிகளின்

கோரிக்கைகள் பாதிக்குமேல் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிலவரி வஜா செய்யப்பட்டது.

சம்பாரனில் வெள்ளைக்கார முதலாளிகள் விவசாயிகளை அவுரி பயிரிடச் சொல்லி கட்டாயப்படுத்தினர். ஆனால், நியாயமான கூலி தரவில்லை. அந்த அவுரியிலிருந்து வெள்ளையர்கள் கொள்ளை லாபம் அடித்தனர். இன்னலுற்ற ஒரு விவசாயி காந்திஜியை உதவிக்கு அழைத்தார். காந்திஜி, உடனே சம்பாரனுக்கு வந்து விசாரணை நடத்தினார். விவசாயிகளின் கூற்றில் நியாயம் இருப்பதையும் உணர்ந்தார். வெள்ளைக்கார முதலாளிகளுடன் பல சுற்றுக்கள் பேச்சுவார்த்தை நடந்தது. இறுதியில் வெள்ளையர்கள் பெரும் லாபம் ஈட்டியது குறைந்து விவசாயிகளின் வருமானம் கூடியது. நூறு ஆண்டுகளாக அவுரி விவசாயம் காரணமாக சம்பாரன் மீது படிந்திருந்த கறை அகற்றப்பட்டது.

இந்தியனின் சராசரி வருமானம் நாள் ஒன்றுக்கு ஒரு அணா (ஆறு பைசா) என்றிருந்த சூழ்நிலையில் உப்பின் மீது விதிக்கப்பட்டுவந்த வரி அதிகமாகத்தான் இருந்தது. சில தானியங்களையும் உப்பையும் மட்டும் உட்கொண்டு வாழ்ந்து வந்த ஏழை மக்கள் வரிச்சுமையினால் பாதிக்கப்பட்டனர். நாட்டின் சில பகுதிகளில் உப்புப் பாறைகளிலிருந்து உப்பினை எளிதாகச் சுரண்டி எடுக்க முடியும். ஆனால், அப்படி உப்பைச் சுரண்டி எடுப்பது சட்டப்படி குற்றம் ஆகும். இச்சட்டத்தை எதிர்த்துத்தான் காந்திஜி உப்பு சத்தியாக்ரஹத்தை மேற்கொண்டார். அரசின் இந்த அநியாய வரி விதிப்பிற்கு காந்திஜி முடிவுகட்டத் தீர்மானித்தார்.

''ஒன்று நான் கையில் உப்புடன் திரும்பி வருவேன் அல்லது எனது பிணம் கடலில் மிதக்கும்''... நாம் மரணம் அடைந்தால் சுவர்க்கத்திற்குச் செல்வோம், கைது செய்யப்பட்டால் சிறைக்குச் செல்வோம்; வெற்றி பெற்றால் வீடுகளுக்குத் திரும்புவோம்.'' சபர்மதி ஆசிரமத்திலிருந்து தொடர்ந்து 25 நாட்களில் 241 மைல் தூரம் (387 கிலோ மீட்டர்) நடந்து தண்டி கடற்கரையை அடைந்தார். கடல் நீரிலிருந்து உப்பைக் காய்ச்சி கையில் எடுத்தார். சரோஜினி நாயுடு ''சட்டத்தை மீறிய'' காந்திஜியை வாழ்த்தி மாலையிட்டு, நெற்றியில் திலகம் இட்டார். காந்திஜி கூறுவார். ''ஒரு கை நிறைய உப்பை எடுத்தது சிறுவர்களின் விளையாட்டைப் போன்றது. நான் நாட்டில் உற்பத்தியாகும் எல்லா உப்பையும் ஒட்டு மொத்தமாக அள்ளப் போகிறேன்.'' இந்தியா முழுவதிலும் மக்கள் உப்பு எடுக்கும் பணியில் ஈடுபட்டனர். சட்ட விரோதமாக எடுக்கப்பட்ட

உப்பைக் கைப்பற்ற போலீஸ் தீவிர முயற்சிகளை மேற்கொண்டது. பர்தா அணிந்த பெண்கள் பயணம் செய்த பல்லக்குகள் சோதனைக்குள்ளாயின. ஒருமுறை காரில் பயணம் செய்து கொண்டிருந்த போது சாலையில் ஒரு போலீஸ் காவலர் நிற்பதைக் கண்டார். காரை நிறுத்திய காந்திஜி அக்காவலரிடம் "என்னிடம் சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட உப்பு இருக்கிறது. நீங்கள் என்னைத் தடுத்து நிறுத்தப் போகிறீர்களா? என்று கேட்டார்.

காந்திஜி தாரசேனாவில் அமைந்திருந்த உப்புக் கிடங்கைக் கொள்ளையடிக்க திட்டமிட்டிருந்தார். அவர் கைதாகிச் சிறையில் அடைக்கப்பட்டதால் அத்திட்டம் நிறைவேறவில்லை. அவருடைய தொண்டர்கள் ஆயுதம் ஏதுமின்றி உப்புக் கிடங்கை நோக்கி நடந்தனர். பெரும் சண்டை நிகழ்ந்தது. இரும்புப் பூண் பொருத்தப்பட்ட தடிகளைக் கொண்டு காவலர்கள் தொண்டர்களைத் தாக்கினர். எலும்புகள் நொறுங்கின, மண்டைகள் உடைந்தன. காயங்களிலிருந்து ரத்தம் ஆறாய்ப் பெருகியது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு உப்புக் கிடங்குகள் கொள்ளை அடிக்கப்பட்டன. ஒரே ஆண்டில் உப்புச்சட்டம் தளர்த்தப்பட்டது. வீடுகளில் சொந்த உபயோகத்திற்கும், குறிப்பிட்ட கிராமப் பகுதிகளில் விற்பனைக்கும் வரிகள் இன்றி உப்பு தயாரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஆங்கிலேய அரசாங்கத்திற்கு காந்திஜி ஒரு ஏற்றமான எதிரியாக விளங்கினார். அவர்களது பொய் பித்தலாட்டத்தைக் காட்டிலும் காந்திஜியின் கொள்ளை ஒரு படி மேலானது என்று நிரூபிக்கப்பட்டுவிட்டது. ஆங்கிலேயர்கள் வியாபாரிகளாக இந்தியாவுக்கு வந்தனர். ஏமாற்று வித்தை மூலம் இந்தியாவின் சந்தையைப் பிடித்தனர். உலகிலேயே தலை சிறந்து விளங்கிய இந்தியாவின் நூற்பு மற்றும் நெசவுத் தொழிலை அழித்தனர். ராட்டைகளும், தறிகளும் ஒட்டடை படிந்து வேலையின்றி கிடந்தன. பாதிக்கப்பட்ட கைவினைஞர்களில் சிலர் விவசாயத் தொழிலை மேற்கொண்டனர். சிலர் வேறு கூலிவேலைகளைத் தேடிச் சென்றனர். வளங்கள் நிறைந்த நாடு வறுமையில் வாடியது. லங்காஷயரிலிருந்தும் மான்செஸ்டரிலிருந்தும் துணிகள் இறக்குமதி செய்யப்பட்டதால் இந்திய நாட்டிற்கு கோடிக் கணக்கான ரூபாய்கள் இழப்பு ஏற்பட்டது. வியாபாரிகளின் கையிலிருந்த அளவுகோல் ஆங்கில அரசின் செங்கோலாக உருவெடுத்தது.

காந்திஜியின் மனதில் அயல்நாட்டில் தயாரிக்கப்பட்ட துணி, அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் அயல்நாட்டுப்

பொருள்களை பகிஷ்காரம் செய்யவேண்டும் என்ற எண்ணம் உருவெடுத்தது. அவர் ஓயாமல் மக்களிடம் கையினால் நூற்று கைத்தறியில் நெசவு செய்து கதர்த் துணியைத் தயாரிக்கும்படி பிரச்சாரம் செய்து வந்தார். நூற்பு நெசவு தொழில்களில் ஈடுபட்டிருந்த பெண் தொண்டர்களை ஒருங்கிணைத்து வெளிநாட்டில் தயாராகிய துணி மற்றும் மதுபான வகைகளை விற்பனை செய்யும் கடைகளுக்கு முன்பாக மறியல் செய்யத் தூண்டினார். நகரங்களிலும் கிராமங்களிலும் பல்வேறு கூட்டங்களில் கலந்துகொண்டு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களை தகனம் செய்தார். இதன்விளைவாக இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துணியின் அளவு பெரிதும் குறைந்து அங்குள்ள மில்கள் மூடப்பட்டன. கைராட்டையின் கதிர்கள் துப்பாக்கி ரவைகளாக உருவெடுத்து இங்கிலாந்து நாட்டின் மில் தொழிலாளர்களைத் தாக்கின! ஆயிரக்கணக்கானோர் வேலை இழந்தனர். சில ஆண்டுகளுக்குப் பின் காந்திஜி லங்காஷயருக்குச் சென்ற போது மில் தொழிலாளர்களது கூட்டத்தில் இவ்வாறு உரை நிகழ்த்தினார்.

"இங்கு பலர் வேலைவாய்ப்பின்றி இருப்பது எனக்கு வருத்தம் அளிக்கிறது. உங்களிடையே 30 லட்சம் பேர்கள் வேலை இன்றி இருக்கிறீர்கள். இந்தியாவில் 30 கோடி பேர்கள் ஆண்டில் ஆறுமாத காலத்திற்கு வேலை இன்றி இருக்கிறார்கள். இங்கு வேலையின்றி இருப்பவர்களுக்கு மாதந்தோறும் சராசரியாக எழுபது ஷில்லிங் (45 ரூபாய்) உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. எங்கள் நாட்டிலோ சராசரி மாத வருமானமே ஏழரை ஷில்லிங் (5 ரூபாய்) தான். இந்தியாவில் வாழும் ஏழைகளான நூற்போர் மற்றும் நெய்வோரின் வயிற்றில் அடித்து நீங்கள் வசதியுடன் வாழ விரும்புகிறீர்களா.?" காந்திஜி திறந்த மனதுடன் இப்படி பேசியதை அந்த மில் தொழிலாளிகள் பாராட்டினர்.

காந்திஜி ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையே இருந்த இடைவெளியைக் குறைப்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டார். துப்புரவுத் தொழிலாளர்களின் கூட்டம் ஒன்றில் ஒரு பெண்மணி தனது கைகளிலிருந்த இரண்டு தங்க வளையல்களைக் கழற்றி காந்திஜியிடம் அளித்தார். அப்பெண்மணி கூறுவார்: "இப்போதெல்லாம் கணவன்மார்கள் மனைவிகளுக்காக எதுவுமே தருவதில்லை. ஏதோ என்னால் இயன்றது இந்தச் சிறு அன்பளிப்புதான். இவை, என்னிடம் கடைசியாக மிஞ்சிய நகைகள். இவற்றை நீங்கள் ஹரிஜனங்களின் நலனுக்காக பயன்படுத்தலாம்." காந்திஜி பதில் சொன்னார்: "நான் சில டாக்டர்களையும் வக்கீல்களையும்,

வியாபாரிகளையும் ஓட்டாண்டிகளாக்கி விட்டேன். அதற்காக நான் வருந்தவில்லை. வறுமையில் சிக்கி வாழும் நம் இந்திய நாட்டில் ஒரு பைசா சம்பாதிப்பதற்காக சிலர் மைல் கணக்கில் நடக்கின்றனர். இந்தச் சூழ்நிலையில் சிலர் விலையுயர்ந்த நகைகளை அணிவது சரியல்ல.'' சில சந்தர்ப்பங்களில் சில பெண்கள் தங்களது கைகளிலிருந்து வளையல்களைக் கழற்று வதற்கு சிரமப்பட்டபோது காந்திஜி அவ்வளையல்களை வெட்டி எடுத்து விடுவார். சில விமர்சகர்கள் காந்திஜி பெண்களிட மிருந்து பொது நலனுக்காக நகைகளைப் பெறுவதை வன்மை யாகக் கண்டனம் செய்தனர். காந்திஜி சற்றும் அசைந்து கொடுக்கவில்லை. "எனது கூட்டங்களில் ஆயிரக்கணக்கான சகோதரிகள் பங்கேற்று தாங்கள் அணிந்துள்ள நகைகள் அனைத்தையுமோ அல்லது ஒரு சிலவற்றையோ என்னிடம் தர வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். ஒரு இளம் விதவை அவரைத் தனது வீட்டிற்கு அழைத்து, தனது நகைகளைத் தானம் செய்தார். தனது கணவரின் மாத வருமானம் ரூபாய் நாற்பது மட்டும் இருந்த நிலையிலும் கூட வேறொரு பெண்மணி காந்திஜி தனது வீட்டிற்கு வந்து தான் வழங்க இருக்கும் நகைகளைப் பெற்றுச் செல்ல வேண்டும் என்று கோரி உண்ணாவிரதமே தொடங்கி விட்டார்.

பொதுக்கூட்டம் ஒன்றில் ஒரு இளம் பெண் மேடையில் ஏறி தனது தங்க நெக்லஸ், வளையல்கள் மற்றும் காதணிகளைக் கழற்றி காந்திஜியிடம் வழங்கினார். கொடையாளிகளிடம் காந்திஜி ஒரு வேண்டுகோள் விடுத்தார்: "இப்பெண்கள் வழங்கி விட்ட நகைகளை மீண்டும் அவர்களுக்குச் செய்து போடாதீர் கள். ஒரு பெண்ணின் உண்மையான அணிகலன்கள் அவளது தூய்மையும் நன்னடைத்தையுமே." சின்னஞ் சிறிசுகளையும் காந்திஜி விட்டுவைக்கவில்லை. ஒரு சிறுபெண் காந்திஜியிடம் மலர்க் கொத்துகளை வழங்குவதற்காக வந்த போது அவர் அப்பெண்ணின் கைவிரலிலிருந்த சிறிய மோதிரத்தைப் பார்த்து விட்டார். அச்சிறு பெண்ணிடமிருந்து மோதிரத்தை அவர் வாங்கிவிட்டார். ஒரு பையனின் காதிலிருந்த தங்க கடுக்கன் களையும் அவர் பறித்துக் கொண்டுவிட்டார். அப்பையனிடம் "என்னை முறைப்படி வணங்கிவிட்டு ஓடிப் போய்விடு, எனது ரத்த அழுத்தம் 195ஐத் தாண்டிக் கொண்டிருக்கிறது.'' எந்தக் குழந்தையிடமும் அதன் பெற்றோரின் சம்மதத்தைப் பெறாமல் நகைகளை வாங்கமாட்டார்.

காந்திஜி கொள்ளை அடிப்பதில் சாமர்த்தியம் வாய்ந்தவர் என்று பெயர் எடுத்திருந்தும் கூட அவரிடம் பொருள்களை இழப்பதற்குப் பலரும் விரும்பி அவரை வரவேற்றனர். ஒரு

அன்பர் காந்திஜி தனது வீட்டில் தங்க சம்மதித்தால் ஒவ்வொரு நிமிஷத்திற்கும் ரூபாய் 116 அளிப்பதாகக் கூறினார். காந்திஜி யிடம் போதுமான அவகாசம் இல்லாததால் இரண்டு நிமிஷங்கள் மட்டுமே தங்கினார்.

ஒருமுறை காந்திஜி திடீரென்று நோய்வாய்ப்பட்டபோது அவருடைய டாக்டர் நண்பர் அவரைப் பார்க்க ஓடோடி வந்தார். காந்திஜியோ டாக்டரைக் கிண்டலாக "என்னைப் பரிசோதித்துப் பார்க்க உங்களை நான் அனுமதிக்கிறேன். அதற்கு நீங்கள் எவ்வளவு பணம் தருவீர்கள் என்று கேட்டார்.'' டாக்டர் கட்டணம் ஏதும் வசூலிக்கவில்லை. தனது கையிலிருந்த பணம் முழுவதையும் காந்திஜியிடம் கொடுத்துவிட்டுச் சென்றார்.

மோதிலால் நேருவும் தேசபந்து (சித்தரஞ்சன்) தாசும் பல்லாயிரக்கணக்கில் வருமானம் தந்து கொண்டிருந்த தங்களது வக்கீல் தொழிலைத் துறந்து அரண்மனை போன்ற தங்களது வீடுகளையும் நாட்டிற்காக அர்ப்பணித்தனர். இதுபோல் ஆயிரக்கணக்கான கோடீஸ்வரர்களைப் பிச்சைக்காரர்களாக மாற்றிய பெருமை காந்தியையே சாரும்.

மில் துணியைப் போன்ற ரகத்தையோ, தரத்தையோ கதர் என்றுமே அடையாமல் போகலாம். கடையில் விற்கப் படும் விலையிலும் மில் துணிபோலக் கதர் மலிவானதாக இல்லாதும் போகலாம். இவற்றில் இந்த இரண்டையும் அளக்கும் முறை வெவ்வேறானது. கதர், மனித வாழ்வின் மதிப்பைக் காட்டுகிறது; மில் துணியோ பணத்தின் மதிப்பு ஒன்றை மாத்திரமே காட்டுவதாக இருக்கிறது. கதரின் விலை கெஜத்திற்கு நான்கணா, என்றாலும், அது எனக்கு மலிவானது தான். ஆனால், அதே நெம்பர் நூலையும் நெசவையும் கொண்ட மில் துணியின் விலை கெஜம் இரண்டணாதான் என்றாலும் அது எனக்கு கிராக்கியானதே.

— ஹரிஜன் 9-2-1934

20

காந்திஜி ஒரு சிறைப்பறவை

காந்திஜி, இந்திய மக்களை ஆங்கிலேய அரசை எதிர்த்துப் போராடும்படி தூண்டினார்; ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார்; பல முறை சிறைக்கும் சென்றார். கைது செய்யப்பட்ட போதெல்லாம் நீதிபதியிடம் தனக்கு அதிக பட்ச தண்டனை வழங்கும்படி கேட்டுக் கொள்வார். தென் ஆப்பிரிக்காவில் ஒரு வழக்கில் அவர் மீதும் அவரது சக ஊழியர்கள் மீதும் சுமத்தப் பட்டிருந்த குற்றச்சாட்டுகளை நிருபணம் செய்வதற்கு அவரே சாட்சிகளை ஏற்பாடு செய்தார். சிறை வாழ்வின் பயங்கரம், அவமானம் அவதிகள் – எல்லாமே கொடுங் குற்றங்களைப் புரிந்தவர்களுக்காக ஏற்பட்டவை. அச்சூழ்நிலைக்குள் செல்ல தென் ஆப்பிரிக்க இந்தியர்கள் அஞ்சினர். காந்திஜி அவர்களது அச்சத்தை அகற்றினார்.

அவர் பதினோரு தடவைகள் சிறை சென்றார். ஒரு சந்தர்ப்பத்தில் நான்கு நாட்களுக்குள் மூன்று முறை அவர் கைது செய்யப்பட்டார். அவருக்கு விதிக்கப்பட்ட சிறை தண்டனைகளை முழுமையாக அனுபவித்திருந்தால் அவர் பதினோரு ஆண்டுகள் மற்றும் பத்தொன்பது நாட்களுக்கு சிறையில் இருந்திருப்பார். பல தடவைகளில் அவரது தண்டனை குறைக்கப்பட்டதால் மொத்தம் ஆறு ஆண்டுகள் மற்றும் பத்து மாத காலத்தை சிறைகளில் கழித்தார். தனது 39வது வயதில் அவர் முதல் முறையாகச் சிறைக்குச் சென்றார். தனது 75வது வயதில் கடைசி முறையாக சிறையிலிருந்து வெளியே வந்தார்.

முதல் முறையாக தென் ஆப்பிரிக்காவின் ஒரு சிறையில் தனது ஐந்து சகாக்களுடன் நுழைந்தார். சிறைகளைப் பற்றி அச்சமூட்டும் விஷயங்களை அவர் கேள்வியுற்றிருந்தார். தன்னை ஒரு அரசியல் கைதியாக நடத்துவார்களா என்று யோசித்தார். அவர் வக்கீலாக வாதம் செய்த அதே நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் ஏறி நின்றபோது அவருக்கு சற்று சங்கடமாகவே இருந்தது. அவருக்கு இரண்டு மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டது. நீதிமன்றத்திலிருந்து ஒரு குதிரை வண்டியில் ரகசியமாக சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப் பட்டார். ஏனெனில் நீதிமன்றத்திற்கு வெளியே பெரியதோர் கூட்டமாக மக்கள் நின்றிருந்தனர். சிறையில் நுழைந்ததும் அவரது பத்து விரல் ரேகைகளும் பதிவு செய்யப்பட்டன.

அவரது உடைகள் முற்றிலுமாகக் களையப் பட்டு அவர் எடை பார்க்கப் பட்டார். பிறகு அவருக்கு அழுக்கேறிய சிறைச்சாலையின் சீருடைகள் தரப்பட்டன. அவரைத் தொடர்ந்து அடுத்த இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை மேலும் பலர் சிறைக்கு வந்து சேர்ந்தனர். இவ்வாறாக 15 நாட்களில் கைதிகளின் எண்ணிக்கை 150 ஆகியது. 50 நபர்களே இருக்கக் கூடிய அறையில் 150 நபர்கள் அடைக்கப் பட்டனர். இரவு நேரங்களில் மட்டும் கைதிகள் தூங்குவதற்காக கூடாரங்கள் அமைக்கப் பட்டன.

சிறையில் ஆய்வாளர், கவர்னர் மற்றும் மேலாளர் சிறையைப் பார்வையிடுவதற்கு தினந்தோறும் நான்கு அல்லது ஐந்து தடவைகள் வந்தனர். ஒவ்வொரு தடவையும் காந்திஜியும் மற்றவர்களும் தொப்பியைக் கையில் ஏந்திய வண்ணம் வரிசையாக நிற்க வேண்டி இருந்தது. காந்திஜி உடலுழைப்பு மேற்கொள்ள விரும்பினார். ஆனால், அனுமதிக்கப்படவில்லை.

சிறையில் அளிக்கப்பட்ட உணவு இந்தியர்களுக்கு ஒத்துக் கொள்ளவில்லை. காலையிலும் மாலையிலும் அவர்களுக்கு ஒரு வகையான சோளக் கஞ்சி அளிக்கப்பட்டது. சர்க்கரை, பால், நெய் எதுவும் தரப்படவில்லை. கைதிகளுக்கு அக்கஞ்சியைக் குடிப்பது கஷ்டமாக இருந்தது. சில மாலை நேரங்களில் வேக வைக்கப்பட்ட பீன்ஸ் மட்டுமே வழங்கப்பட்டது. சர்க்கரையோ மசாலாப் பொடிகளோ கிடையாது. உப்பு மட்டுமே தரப்பட்டது. ஐரோப்பிய கைதிகளுக்கோ புலால், ரொட்டி, காய்கறிகள் எல்லாமே கிடைத்தன. ஐரோப்பிய கைதிகளால் ஒதுக்கப்பட்ட காய்கறிகளின் கழிவுகளுடன் கொஞ்சம் காய்களைச் சேர்த்து சமைக்கப்பட்ட உணவு இந்திய கைதிகளுக்குத் தரப்பட்டது. நூறு இந்தியக் கைதிகளின் கையெழுத்துக்களுடன் கூடிய புகார் மனு ஒன்றை காந்திஜி சிறையின் அதிகாரிக்கு அனுப்பினார். அவர் எச்சரிக்கப்பட்டார்: "இது இந்தியா அல்ல; இது ஒரு சிறைச்சாலை. உங்களுக்குப் பிடித்தமான உணவு எதுவும் உங்களுக்கு வழங்கப்பட மாட்டாது." இருப்பினும் பதினைந்து நாட்களுக்குள்ளாக காந்திஜிக்கு வெற்றி கிட்டியது. சாதம், ரொட்டி, காய்கறிகள், நெய் எல்லாமே இந்தியர்களுக்கு வழங்கப் பட்டன. தங்களுக்குத் தேவையான உணவைத் தாங்களே சமைத்துக் கொள்வதற்கு அனுமதியும் வழங்கப்பட்டது. காந்திஜி சமையல் பணியில் உதவியதுடன் இரு வேளைகளிலும் தாமே உணவைப் பரிமாறினார். இப்போது காந்திஜியுடன் இருந்த இந்திய கைதிகளுக்கு எவ்வித பிரச்சினையும் இன்றி நல்ல உணவு கிடைத்தது.

அவரது மூன்றாவது சிறைவாசத்தின்போது அவருக்கு நல்ல உணவு கிடைத்தது. பழங்களை மட்டுமே அவர் உண்டார். வாழைப்பழங்கள், தக்காளி மற்றும் உலர்ந்த பழங்கள் அவருக்கு வழங்கப்பட்டன. சிறையின் கட்டுப்பாடுகளுடன் கூடிய வாழ்க்கை காந்திஜிக்குப் பிடித்து விட்டது. சிறையிலிருந்து வெளியே வந்ததும் அவர் தேநீர் அருந்தும் பழக்கத்தைக் கைவிட்டார். இரவு உணவையும் சூரியன் அஸ்தமனமாவதற்கு முன்பு உண்ணும் பழக்கத்தைத் தொடர்ந்தார்.

அடுத்த இரண்டு சிறைவாசங்களில் காந்திஜி பல இன்னல்களை அனுபவித்தார். அவர் வழக்கறிஞராகப் பத்து ஆண்டுகளுக்கு மேல் வழக்காடிய நீதி மன்றத்திற்கு அவர் விலங்குகளுடன் கொண்டு வரப்பட்டார். அவருக்கு கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. அவருக்குத் தென் ஆப்பிரிக்க கைதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த வழக்கமான சிறைச் சீருடை வழங்கப்பட்டது. கூடவே ஒரு ராணுவத் தொப்பி, முரட்டுத் துணியில் தயாரிக்கப்பட்ட தொள தொளப்பான சட்டை, அதில் கைதி எண் குறிக்கப்பட்டு அம்புக் குறிகளும் போடப்பட்டிருந்தன. அரைக்கால் சட்டையும் கால்களுக்கு கம்பளியில் தயாரிக்கப்பட்ட காலுறைகளும், தோல் செருப்புகளும் தரப்பட்டன. ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு மேல் கொட்டும் மழையில் தலையில் படுக்கையை சுமந்த வண்ணம் அவர் நடக்க வேண்டி வந்தது. மிகவும் மோசமான நடத்தையுள்ள கறுப்பின (நீக்ரோ) மற்றும் சீனக் கைதிகள் இருந்த அறையில் காந்திஜி அடைக்கப்பட்டார். சில ஜுலு கைதிகள் காந்திஜியைத் திட்டி அடிக்கவும் செய்தனர். கழிப்பறையில்கூட தனி மறைவிடம் கிடையாது. அக்கைதிகளின் நடவடிக்கைகள் அருவருப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தின. அவர்களது மொழி அவருக்குப் புரியவில்லை. சிறிது காலத்திற்குப் பின் நான்கு அடிக்கு ஆறு அடி அளவுள்ள ஒரு இருண்ட தனி அறையில் சிறை வைக்கப்பட்டார். கூரையின் அருகே காற்றுக்காக சிறிய ஜன்னல் ஒன்று இருந்தது. பூட்டப்பட்டிருந்த கதவிற்குப் பின்பாக நின்ற நிலையில் அவர் உணவு அருந்த வேண்டி வந்தது. தினமும் இருமுறை அவர் உடற் பயிற்சிக்காக அறைக்கு வெளியே அழைத்து வரப்பட்டார். நெய் வழங்கப்படாததால் தொடர்ந்து 15 நாட்களுக்கு அவர் சாதத்தை ஏற்க மறுத்தார். ஒருவேளை மட்டும் ஒரு விதமான கஞ்சியை அருந்தினார். இதன் பின்பு அவருக்கு ரொட்டியும் நெய்யும் வழங்கப்பட்டன. கயிற்றில் தயாரிக்கப்பட்ட விரிப்பு ஒன்றும், மரத்தலையணை ஒன்றும் இரு கம்பளிகளும் புத்தகங்களும் கூட அவருக்குக் கிடைத்தன. தினமும் ஒரு வாளி தண்ணீர் வழங்கப்பட்டது. அறையின் ஒரு

மூலையில் தண்ணீர் வைக்கப்பட்டது. கைதியைக் கண்காணிப்பதற்காக இரவு முழுவதும் மின்விளக்கு எரிந்தது. ஆனால், அதன் வெளிச்சம் புத்தகம் படிப்பதற்குப் போதுமானதாக இல்லை. சற்று மாறுதலுக்காகத் தன் அறைக்குள் அவர் உலவ முற்பட்டார். காவலர் "நடந்து தரையைப் பாழடிக்காதே" என்று அதட்டுவார். அந்தத் தரை தாரினால் அமைக்கப்பட்டிருந்தது.

காந்திஜி குளிப்பதற்கு அனுமதி கேட்டபோது அவரை நிர்வாணமாக நடந்து செல்லும்படி காவலர் உத்தரவிட்டார். 125 அடி தூரத்திற்கு உடலில் ஆடையின்றி நடப்பதற்கு அவர் இணங்கவில்லை. குளியல் அறைக்கு வெளியே தனது உடைகளைக் கொண்டு திரை அமைத்துக் கொள்ள அவர் அனுமதிக்கப்பட்டார். அவர் உடம்பில் தண்ணீர் ஊற்றிக் கொள்வதற்குள்ளாகவே 'சாம் வெளியே வா!' என்ற உத்தரவு வந்தது. வெளியே அவர் வந்திராவிட்டால் ஒரு கறுப்பர் அவரை உதைத்து வெளியேற்றி இருப்பார்.

அவருக்கு சட்டைகளின் பைகளைத் தைப்பது மற்றும் கிழிந்த போர்வைகளைத் தைப்பது, இரும்புக் கதவுகளுக்கு வார்னிஷ் செய்வது போன்ற பணிகள் தரப்பட்டன. நாள் ஒன்றிற்கு ஒன்பது மணிநேரம் வேலை இருந்தது. தரையையும் கதவுகளையும் மூன்று மணிநேரம் தொடர்ந்து சுத்தம் செய்த பின்பும் அவற்றில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. கழிவறைகளை சுத்தம் செய்யும்படியும் அவர் பணிக்கப் பட்டார். எல்லாப் பணிகளையும் அவர் இன்முகத்துடன் மேற்கொண்டார். ஆனால் அதே பணிகள் அவரது நண்பர்களுக்கும் வழங்கப்பட்ட போது அவர் வருத்தம் அடைந்தார். ஏனெனில். அவர்கள் பணியைச் செய்ய முடியாமல் அவதியுற்று அழுதனர். மயக்கம் அடைந்தனர். நான்தானே இவர்களது இன்னல்களுக்குக் காரணம் என்று எண்ணி வருந்தினார். இப்படியாக அவதியுற்று தியாகம் செய்வதன் மூலமே அடிமைத்தனத்தை அகற்றி மனதில் அமைதி பெற முடியும் என்று அவர் நம்பினார்.

காலைக் கடன்களை ஆறு மணிக்குள் முடிக்க வேண்டும். 7 மணிக்குத் தொடங்கி தொடர்ந்து ஒன்பது மணி நேரத்திற்கு கடினமான வேலைகள் செய்ய வேண்டும். ஒரு மைல் தூரம் நடந்து சென்றபின் பூமியைப் பிக்காசி கொண்டு பிளக்க வேண்டும். அவர் எடை குறைந்தது. அவர் முதுகில் வலி எடுத்தது. கைகளில் தோன்றி இருந்த கொப்புளங்களிலிருந்து நீர் வடிந்தது. சிறிது நேரத்திற்குக்கூட பணி செய்வதை அவர் நிறுத்தினால் காவலர் "தொடர்ந்து வேலை செய்" என்று சப்தம்

போடுவார். காந்திஜி காவலரை எச்சரித்தார்: "நீங்கள் உங்களது மிரட்டல்களை நிறுத்தாவிட்டால் நான் பணி செய்வதை நிறுத்தி விடுவேன்." காந்திஜி தனது மானத்தைக் காக்கும்படியும், கொடுத்த பணியை முடிப்பதற்கான பலத்தை அளிக்கும்படியும் கடவுளை வேண்டிக் கொள்வார்.

இந்தியாவைப் பொருத்தவரை சிறைகளை அவர் மாட்சிமை தங்கிய இங்கிலாந்து மன்னரின் ஹோட்டல்களாகவே கருதினார்! அவரது செலவுகளை அரசே ஏற்றது. இருப்பினும் தனது தேவைக்குமேல் ஒரு பைசா கூட அவர் செலவு வைக்க மாட்டார். ஒரு தடவை சிறை மேலாளரிடம் தனக்காக அளிக்கப்பட்ட சோபா நாற்காலி மேஜைகளையும் சமையல் பாத்திரங்களையும் அகற்றும்படி கேட்டுக் கொண்டார். ஒரு இரும்புக் கட்டிலையும் ஒரு சில பாத்திரங்களை மட்டுமே வைத்துக் கொண்டார். அவருக்காக செய்யப்படும் செலவுகள், கோடிக் கணக்கான ஏழை மக்கள் செலுத்தும் வரிப் பணத்திலிருந்து ஈடுசெய்யப்படுகிறது என்ற உணர்வு எப்போதும் அவரை விட்டு அகலவில்லை. ஆகாகான் அரண்மனையில்தான் அவர் கடைசியாக சிறை வைக்கப்பட்டிருந்தார். அச்சிறை வாசம் பற்றிக் குறிப்பிடுகையில் "நான் சிறை வைக்கப்பட்டுள்ள இந்தப் பெரும் அரண்மனை மற்றும் ஏராளமான காவலர்கள் காரணமாக - மக்கள் பணம் வீண் செலவு செய்யப்படுகிறது. பட்டினியால் ஜனங்கள் செத்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் இந்த வீண் செலவு மனித இனத்திற்கெதிராக செய்யப்படும் குற்றம் ஆகும்."

இந்தியாவில் காந்திஜிக்கு எதிரான முதல் வழக்கு மறக்க முடியாத ஒரு சம்பவம் தனது ஆசனத்தில் அமர்வதற்கு முன்பாக நீதிபதி குற்றம் சுமத்தப்பட்டவர் கூண்டில் நின்றிருந்த இந்தியருக்கு வணக்கம் செலுத்தினார்! காந்திஜியின் புரட்சிகரமான நடவடிக்கைகளுக்கு தண்டனையாக அவருக்கு ஆறு ஆண்டுகளுக்கு சிறை தண்டனை வழங்கிய நீதிபதி இவ்வாறு கூறினார். "அரசியலில் உங்களிடமிருந்து மாறுபட்ட கொள்கை உடையவர்கள் கூட உங்களை நேர்மைக்கு இலக்கணமாக விளங்கும் ஒரு முனிவரைப் போல் மதிக்கிறார்கள்." காந்திஜியோ "இந்தியாவின் பெரும் தேசபக்தர்களுக்கு இப்படிப்பட்ட சட்டங்களின் அடிப்படையில் இது போன்ற தண்டனை வழங்கப்பட்டுள்ளது. எனக்கு சட்டத்தின் அதே பிரிவின் அடிப்படையில் தண்டனை வழங்கப் பட்டுள்ளதைக் கௌரவமாகவே கருதுகிறேன். நான் நெருப்புடன் விளையாடினேன் என்று எனக்குத் தெரியும். எனினும் மீண்டும் அப்படியே செய்வேன்."

காந்திஜி கோர்ட்டில் நுழைந்த சமயத்திலும், வெளியேறிய சமயத்திலும் கோர்ட்டிலிருந்த அனைவரும் அவருக்கு எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். போலீசார் அவருக்காக ஒரு ரகசிய சங்கேதக் குறிப்பைப் பயன்படுத்தினர். "பாம்பே அரசியல் எண் 50" என்பதே அச்சங்கேதக் குறிப்பு. அவரது பெயர் வழக்கறிஞர்கள் பட்டியலிலிருந்து நீக்கம் செய்யப்பட்டது. சிறையில் அவரது உயரமும் அடையாளக் குறிகளும் பதிவு செய்யப்பட்டன. அவர் தனியறையில் சிறை வைக்கப்பட்டார். அவரிடம் இடுப்பில் கட்டியிருந்த அரையாடையைத் தவிர வேறு எதுவும் இல்லை. இருப்பினும் அவரது உடை சோதனை செய்யப்பட்டது. அவரது போர்வையும் சோதனை செய்யப்பட்டது. அவரது மண்பானை மீது பூட்ஸ்கால் படும் வரை அவர் பொறுமை காத்தார். பிறகு ஏற்பட்ட வெறுப்பில் சிறிது காலத்திற்கு அவர் பார்வையாளர்களை அனுமதிக்கவில்லை. கடிதங்களும் எழுதவில்லை.

இன்னலுக்கு ஆளானபோதெல்லாம் அவர் கசப்புணர்ச்சியைக் காட்டவில்லை. நிதானத்தையும் இழக்கவில்லை. ஒவ்வொரு முறை சிறையிலிருந்து வெளியேவரும் போதும் அவரது மனம் மேலும் உறுதியடைந்து விசாலமாயிற்று. அவரைப் பொருத்தவரை சிறைவாசத்தின் போது நாம் சீரான பழக்க வழக்கங்களை மேற்கொள்ளலாம். நண்பர்களுடன் உறவாடுவதற்கான வாய்ப்புகள் குறைந்துவிட்டாலும்கூட நல்ல புத்தகங்களைப் படிக்க வாய்ப்பு உண்டு. சிறைவாசத்தின்போது ஒரு பறவையைப் போல் மகிழ்ச்சியுடன் இருந்தார். அவர் புத்தகங்களைப் படிக்க விரும்பினாலும் கூட சிறைக்கு வெளியே அவருக்கு எப்போதும் ஏதாவது அலுவல் இருந்ததால் படிப்பதற்கு அவகாசம் கிடைப்பதில்லை. சிறையிலோ படிப்பதற்காக ஒரு கால அட்டவணையே வைத்திருந்தார். உருது மொழியைச் சிறையில்தான் கற்றார் அவர். சமஸ்கிருதம், தமிழ், ஹிந்தி, குஜராத்தி மற்றும் ஆங்கில மொழிகளில் பல்வேறு நூல்களை அவர் படித்தார். இரண்டு ஆண்டுகளில், மதம், இலக்கியம் மற்றும் சமூக நலம் ஆகிய துறைகளில் பல பிரபல எழுத்தாளர்களின் 150 நூல்களை அவர் படித்தார். கீதை, குர்ஆன், பைபிள் மற்றும் புத்த, ஜைன ஜோராஷ்ட்ர மதங்கள் பற்றிய புத்தகங்களைப் படித்தார். கூடவே ராமாயணம், மகாபாரதம், உபநிஷத்துக்கள், மனுநீதி சாஸ்திரம் மற்றும் பதஞ்சலியின் யோக சூத்திரம் ஆகிய நூல்களையும் படித்தார். தனது 65வது வயதில் மற்றொரு சிறைவாசியிடமிருந்து வானியல் பற்றிய முதல் பாடங்களைப் படித்தார். சிறை அதிகாரிகளிடமிருந்து டெலிஸ்கோப் ஒன்றைப் பெற்று நட்சத்திரங்களை ஆராயத் தொடங்கினார்.

சிறையில் காந்திஜி நாள்தோறும் நூல் நூற்றார். நான்கு முதல் ஆறு மணி நேரங்கள் சுறுசுறுப்பாக நடை பயின்றார். ஆகாகான் அரண்மனையில் தனது 75வது வயதில் கஸ்தூர்பா அம்மையாருக்கும், தனது பேத்திக்கும் புவியியல் (பூகோளம்) அளவைஇயல் (ஜாமெட்ரி) சரித்திரம், குஜராத்தி இலக்கணம் மற்றும் இலக்கியம் ஆகியவற்றைக் கற்றுத் தந்தார். இதற்கு முன்பாக (தென் ஆப்பிரிக்காவில்) ஒரு சீனக் கைதிக்கு ஆங்கில மொழியையும் ஒரு அயர்லாந்து நாட்டுக் கைதிக்கு குஜராத்தி மொழியையும் கற்றுக் கொடுத்திருந்தார். சத்தியாக்ரஹத்தின் சரித்திரம் மற்றும் தென் ஆப்பிரிக்கச் சிறைவாசம் பற்றி சிறுவர்களுக்கான புத்தகங்களை அவர் சிறைவாசத்தின்போதுதான் எழுதினார். இந்திய முனிவர்கள் எழுதிய உபநிஷதுகளிலிருந்து ஸ்லோகங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். "சிறைச் சாலையில் எழுதப்பட்ட பாடல்கள்" என்ற தலைப்பில் அப்புத்தகம் வெளியிடப்பட்டது. ஆசிரமவாசிகளுக்கும், சக ஊழியர்களுக்கும், சிறை அதிகாரிகளுக்கும், ஆளுனர்களுக்கும், கவர்னர் ஜெனரல்களுக்கும், இங்கிலாந்து நாட்டின் பிரதம மந்திரிக்கும் அவர் நூற்றுக்கணக்கான கடிதங்களைச் சிறையிலிருந்துதான் எழுதினார். ஒவ்வொரு வாரமும் ஆசிரமக் குழந்தைகளுக்கு சுவையான கடிதங்களை அவர் எழுதுவார்; "நீ மட்டும் இறக்கைகள் இன்றிப் பறக்கக் கற்றுக் கொண்டு விட்டால் உனது கஷ்டங்கள் அனைத்தும் விலகிவிடும். என்னிடம் இறக்கைகள் இல்லை. இருப்பினும் ஒவ்வொரு நாளும் இரவு நேரங்களில் கற்பனையில் பறந்து உன்னிடம் வருகிறேன். இதோ விமலாவைப் பார்க்கிறேன். ஹரி அங்கு நிற்கிறான்."

காந்திஜி, சிறையின் கட்டுப்பாடுகளை நன்கு கற்று ஒரு லட்சியக் கைதி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று விவரிப்பார். சிறைவாசிகள் தங்களுக்கு இடப்பட்ட பணிகளைச் செய்ய வேண்டும் என்றும், சட்டதிட்டங்கள் நல்லொழுக்கத்திற்குப் புறம்பாக இல்லாதவரை அவற்றை அனுசரித்து நடக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். உதாரணத்திற்கு, அவர்கள் வேண்டுமென்றே அவமானத்திற்குட்படுத்தப் படாதவரை அல்லது அசுத்தமான உணவு வழங்கப்படாத வரை உண்ணாவிரதத்தை மேற்கொள்ளக் கூடாது என்பார். மண்டி இட்டு, உட்கார்ந்தபடி சிறை அதிகாரிகளுக்கு சலாம் போடும் வழக்கத்தை அவரும் அவரது நண்பர்களும் அனுசரிக்கவில்லை.

நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்த பின்பும்கூட சிறைச்சாலைகள் தேவைப்படும் என்று அவர் கூறிவந்தார். ஆனால், குற்றம் புரிந்தவர்களைத் திருத்தி நல்வழியில் செல்வதற்கு வாய்ப்பு

அளிக்கும் விதத்தில் சிறைச் சாலைகள் மறுவாழ்வு இல்லங்களாக இயங்க வேண்டும் என்று அவர் விரும்பினார். கைதிகள் பல்வேறு தொழில்களை மேற்கொண்டு சிறைச் சாலைகளின் செலவுகளைச் சமாளிக்கும் விதத்தில் பணிபுரிய வேண்டும் என்றும் அவர் விரும்பினார் ஒரு கைதி வழங்கிய இதுபோன்ற யோசனைகளை சிறை அதிகாரிகள் ஏற்க மறுத்து விட்டனர்.

இந்த லட்சியக் கைதி சில சமயங்களில் சிறை அதிகாரிகளை சங்கடத்தில் ஆழ்த்திவிடுவது உண்டு. அவருக்கு ரொட்டி சாப்பிடுவதற்கு அனுமதி தரப்பட்டு ரொட்டியும் வழங்கப்பட்டபோது ரொட்டியை வெட்டுவதற்குக் கத்தி கேட்டார். ரொட்டியைச் சுடுவதற்கு (டோஸ்ட் செய்வதற்கு) அடுப்பும் சாதனங்களும் வேண்டும் என்றும் கேட்டார். நடை பயில்வதற்கு அதிக இடம் வேண்டும் என்று அவர் கேட்பதுண்டு. சிறையில் உடன் இருந்த நண்பர்களுக்குத் தானே பொறுப்பு ஏற்று அவர்கள் நோயால் அவதியுற்றால் அவர்களுக்கு ஆயுர்வேத சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யும்படி சிறை அதிகாரிகளை வற்புறுத்துவார். தனது கோரிக்கைகளை நிறைவேற்றும்படி கோரி திடீர் என்று உண்ணாவிரதம் மேற்கொண்டு விடுவார். அவர் மிகவும் உடல் நலிவுற்றபோது சிறை அதிகாரிகள் அவரை விடுதலை செய்துவிடுவார்கள். நாட்டின் மிகவும் பிரசித்தமான ஒரு தலைவரின் உடல்நிலை மோசமாகிவிடும்போது நேரக்கூடிய விளைவுகளுக்கு பொறுப்பு ஏற்க அவர்கள் அஞ்சினர். அவருக்கு குடல்வால் நோய் (அப்பெண்டிஸைட்டிஸ்) ஏற்பட்டபோது உடனே அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அறுவைச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தனர்.

காந்திஜி எப்போதுமே நண்பர்கள் மற்றும் உறவினர்கள் அடங்கிய ஒரு பட்டாளத்துடன்தான் சிறையில் நுழைவார். அன்னை கஸ்தூர்பாவும் அவரது செயலாளரான மஹாதேவ் தேசாயும் ஆகாகான் அரண்மனையில் அவருடன் சிறைவாசம் அனுபவித்தனர். இருவரும் அங்கு உயிர் நீத்தனர். இருவரது உடல்களும் அச்சிறையில் தகனம் செய்யப்பட்டன. காந்திஜி சொன்னார், "செய் அல்லது செத்துமடி" என்ற தாரக மந்திரத்திற்கேற்ப இவ்விருவரும் வாழ்ந்து காட்டினர். சுதந்திர தேவதையின் பலிபீடத்தில் உயிர்த்தியாகம் செய்தனர். அவர்கள் அமரர் ஆகிவிட்டனர்".

21

காந்திஜி ஒரு ராணுவ தளபதி

தென் ஆப்பிரிக்காதான் காந்திஜியை ஒரு மனிதனாக உருவாக்கியது. டர்பனுக்கு வந்த போது அவரது வயது 23. அதுவரை அவர் ஒரு கூச்ச சுபாவமுள்ள இளைஞர். தென் ஆப்பிரிக்க மண்ணில் காலடி எடுத்து வைத்ததுமே இந்தியர்களும் ஏனைய வெள்ளையர் அல்லாதவர்களும் வெள்ளையர்களால் இழிவாக நடத்தப்படுவதைக் கண்டார். இந்தியர்களை, அவர்கள் 'கூலிகள்' என்றே அழைத்தனர்.

தென் ஆப்பிரிக்காவிற்கு வந்த மூன்றாவது நாளே அவர் டர்பன் நகர நீதிமன்றத்திற்கு வந்தார். தலைப்பாகையைக் கழற்றி நீதிபதிக்கு மரியாதை செலுத்தும்படி அவருக்கு உத்தர விடப்பட்டது. காந்திஜிக்கு அவமானமாக இருந்தது. தலைப் பாகையைக் கழற்ற மறுத்து, நீதிமன்றத்தை விட்டு வெளியேறினார்.

ஒரு வாரத்திற்குப் பின் வேறு ஒரு ஊருக்கு ரயிலில் போகவேண்டி இருந்தது. முதல் வகுப்பு டிக்கெட் வாங்கிக் கொண்டு ரயிலில் ஏறி உட்கார்ந்தார். அடுத்த ஸ்டேஷனி லேயே டிக்கெட் பரிசோதகர் அவரை முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து இறங்கிச் சென்று மூன்றாம் வகுப்புப் பெட்டியில் அமரும்படி கூறினார். காந்திஜி, தான் முதல் வகுப்புக்காக டிக்கெட் வாங்கி இருப்பதால் தனக்கு அவ்வகுப்பில் பயணம் செய்ய உரிமை உண்டு என்று வாதாடினார். டிக்கெட் பரிசோதகர் காந்திஜியின் வாதத்தை அலட்சியம் செய்து அவரது பெட்டி படுக்கையை வெளியே வீசி அவரையும் முதல் வகுப்பிலிருந்து வெளியேற்றி விட்டார். இப்படி நேர்ந்த அவமானத்தில் காந்திஜி ஆடிப்போய்விட்டார். ரயில் நிலையத்தின் இருண்ட தங்கும் அறையில் உட்கார்ந்த வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்தார். "நான் இப்போது என்ன செய்ய வேண்டும்? இந்தியர்களுக்கு அநீதி இழைக்கும் இந்நாட்டைவிட்டு ஓடிவிடலாமா! அல்லது அந்த அநீதியை எதிர்த்துப் போராடலாமா? இந்திய நாட்டின் கௌரவமே கேள்விக் குறியாகி உள்ளதே?" என்றெல்லாம் அவரது சிந்தனை ஓடியது. இறுதியில் தென் ஆப்பிரிக்காவில் தங்கி அநீதிகளை எதிர்த்து போராடவே அவர் முடிவெடுத்தார். காந்திஜியின் எதிர்காலம் அந்த இரவில்தான் நிர்ணயிக்கப் பட்டது.

காந்திஜியின் அடுத்தக்கட்டப் பயணம் ஒரு கோச்சு வண்டி (குதிரை வண்டி)யில் தொடர்ந்தது. வண்டிக்காரருக்குப் பக்கத்தில் அவர் உட்கார்ந்திருந்தார். ஏனெனில், இந்தியர் களுக்குக் கோச்சு வண்டியின் உள்ளே உட்கார அனுமதி கிடையாது. சிறிது தூரம் சென்றபிறகு அவர் வண்டிக்காரருக்குப் பக்கத்து இருக்கையையும் காலி செய்துவிட்டு வண்டியின் படியின் மீது உட்காரும்படி பணிக்கப்பட்டார். காந்திஜி தனது இருக்கையை விட்டு அகல மறுத்தார். அவருக்கு சரியான அடியும் உதையும் கிடைத்தன. பக்கத்து ஊரை வந்து அடைந்ததும், ஒரு ஹோட்டலில் தங்குவதற்கு அறை கிடைக்குமா? என்று கேட்டார். ஹோட்டல் மானேஜர் அவருக்கு இடம் தர மறுத்துவிட்டார். அந்த இரவை ஒரு இந்திய நண்பரின் கடையில் கழித்தார். தனக்கு நேர்ந்த இன்னல்களை அந்த இந்திய நண்பரிடம் காந்திஜி கூறியபோது, நண்பர் இரக்கப்பட்டார். அதுபோன்ற அநீதிகளையும் அவமானங்களையும் தென்ஆப்பிரிக்க இந்தியர்கள் தினந் தோறும் சந்தித்து வந்தனர். அவர்களுக்கு அது பழக்கமாகி விட்டிருந்தது. தென் ஆப்பிரிக்காவுக்குப் பிழைப்பிற்காக வந்த இந்தியர்கள் இப்படியாக தன்மானம் இழந்துதான் வாழவேண்டி இருந்தது. இந்தியர்களின் அடிமை மனப்பான்மை காந்திஜிக்கு அதிர்ச்சி அளித்தது. அவர் பத்திரிகைகளுக்கும், ரயில்வே மற்றும் கோச் வண்டி நிர்வாகத்தினருக்கும் புகார்க் கடிதங் களை அனுப்பினார். போகப்போக காந்திஜிக்கு இன்னும் சில விஷயங்கள் தெரியவந்தன. இந்தியர்களுக்கு நடைபாதைகளில் நடக்க அனுமதி கிடையாது. இரவு 9 மணிக்குமேல் தெருக்களில் நடமாடக்கூடாது. டிராம் வண்டிகளில் முன்வரிசையில் அமரக்கூடாது. இந்தியர்கள், கூலி குடியிருப்புகள் என்று அழைக்கப்பட்ட குறிப்பிட்ட இடங்களில் தான் வசிக்க முடியும். ஒருதடவை நடைபாதையில் அவர் நடந்து சென்று கொண்டிருந்தபோது ஒரு காவலர் அவரை ,"கூலி வக்கீல்" என்று ஏளனமாகக் குறிப்பிட்டு உதைத்தார். அவருடைய வெள்ளைக்கார நண்பர்கள் சிலர் அவருக்கு சில சலுகைகள் பெற்றுத்தர முன்வந்தனர். காந்திஜி அச்சலுகைகளை ஏற்க மறுத்துவிட்டார். தனக்கென்று சில சலுகைகள் பெற்றுப் பயனில்லை. நிறவெறி முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும். அவர் வெட்கமடைந்து புலம்பிக்கொண்டிருக்கவில்லை. அவரை அவமானப் படுத்தியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று எண்ணி கோபமும் அடையவில்லை.

அந்த ஊரில் வசிக்கும் ஒவ்வொரு இந்தியனுக்கும் இழைக்கப்படும் அவமானம் மற்றும் அநீதிகள் பற்றிய

பட்டியல் ஒன்றை அவர் தயாரித்தார். ஒரு வாரத்திற்குள் இந்தியர்களின் பொதுக்கூட்டம் ஒன்றை அவர் கூட்டினார். அக்கூட்டத்தில் இந்தியர்கள் தங்களது வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தினார். நாம் நாணயத்துடன் நடந்துகொள்ள வேண்டும். சுத்தம் மற்றும் சுகாதாரமான பழக்கங்களை மேற்கொள்ள வேண்டும். நமக்குள்ளே ஜாதி, சமய, மாநில வேறுபாடுகள் இருக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டார். வெள்ளையர்களைக் குற்றம் சாட்டி ஒரு வார்த்தை கூட அவர் சொல்லவில்லை. இந்தியர்கள் முதலில் தங்களது வாழ்க்கை முறையைச் சீராக வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான், அவர்கள் மனித உரிமைக்குப் போராட இயலும். எல்லா இந்தியர் களுடன் தொடர்பு வைத்து அவர்களது குறைகளையும் கேட்டறிந்து வந்தார், காந்திஜி.

ஓர் ஆண்டிற்குப்பின் இந்தியர்களுக்கு இருந்த ஓட்டுரி மையையும் ரத்து செய்து, சட்டம் கொண்டு வரப்பட்டது. காந்திஜி இந்தியர்களை இச்சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கு மாறு அறிவுறுத்தினார். அவர் இதற்காகத் தொண்டர்களைக் கூட்டத் தொடங்கினார். முஸ்லீம் மற்றும் பார்சி வியாபாரி களும், கிறிஸ்தவ இளைஞர்களும் ஹிந்து குமாஸ்தாக்களும் காந்திஜியின் அணியில் சேர்ந்தனர். சிலர், காந்திஜி எழுதி வைத்திருந்த எதிர்ப்புக் கடிதத்தை நகல் எடுத்தனர். வியாபாரிகள் பண உதவி செய்தனர். சிலர், இந்த எதிர்ப்பு அணி பற்றிய செய்தியை மற்ற நகரங்களுக்கு எடுத்துச் சென்று பரப்பினர். ஒரே மாதத்தில் நிதி திரட்டப்பட்டது. எதிர்ப்புக் கடிதத்தில் 10,000 கையெழுத்துக்கள் பெறப்பட்டன. எதிர்ப்புக் கடிதம் அச்சிடப்பட்டு அதன் பிரதிகள் நேட்டால் மாகாணத்தின் முதல்வர் மற்றும் கவர்னர், இந்தியாவின் கவர்னர் ஜெனரல், விக்டோரியா மகாராணி, நேட்டால் நகரின் பத்திரிகைகள், இந்தியா மற்றும் இங்கிலாந்தின் பத்திரிகைகளுக்கும் அனுப்பப்பட்டன. இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றி தெரியவந்தது. அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது. இந்தியர்களுக்கு உரிமை ஏதும் கிடைக்கவில்லை இருப்பினும் இந்தியர்கள் தங்களது இயலாமையையும் பயத்தையும் கைவிட்டனர். அநியாயமான சட்டத்தை எதிர்த்துப் போராடக் கற்றனர். விரைவில் காந்திஜி நேட்டால் இந்திய காங்கிரஸை உருவாக்கினார். அதற்கான சட்டங்களை இயற்றி நிதியையும் திரட்டினார்.

தென் ஆப்பிரிக்காவில் அவரது இருபது ஆண்டு வாசத்தின்போது இதுபோன்ற பல அநியாயச் சட்டங்களுக்கு

எதிராக காந்திஜி தலைமை ஏற்றுப் போர்க்கொடி உயர்த்தினார். ஒரு சட்டத்தின்படி ஒவ்வொரு இந்தியரும் ரூ. 40/- வரி செலுத்த வேண்டி இருந்தது. இன்னொரு சட்டம் இந்திய நாட்டில் இந்தியர்கள் செய்து கொண்ட திருமணங்கள் செல்லாது என்று அறிவித்தது மூன்றாவது சட்டம் ஒவ்வொரு இந்தியனும் தான் செல்லும் இடத்திற்கெல்லாம் தனது இரண்டு கைகளின் பத்து விரல்களின் ரேகைப் பதிவைக் கையில் தயாராக வைத்திருக்கவேண்டும் என்று கோரியது. கைரேகைகள் குற்றவாளியிடமிருந்து மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன. இச்சட்டங்களை எதிர்த்து காந்திஜி நூற்றுக்கணக்கான கடிதங் களையும், விண்ணப்பங்களையும் தயாரித்து எல்லா அதிகாரி களுக்கும் அனுப்பினார். அரசின் முக்கிய அலுவலர்களையும் அவர் சந்தித்தார். செய்திப் பத்திரிகை வாயிலாகவும் நேரிடையாகவும் மேற்கொண்ட அவரது போராட்டங்கள் பயனளிக்காத நிலையில் காந்திஜி சத்யாக்ரஹம் என்னும் புதிய ஆயுதத்தைப் பிரயோகம் செய்தார்.

முதல் கட்டமாக கைரேகைகளைப் பதிவு செய்வதைத் தவிர்க்கும்படி இந்தியர்களைக் கேட்டுக் கொண்டார். அகிம்சை அடிப்படையிலான நீண்டதோர் போராட்டத்திற்குத் தயாராகும்படி இந்தியர்களை அவர் கேட்டுக் கொண்டார். சிறைக்குச் செல்லவும், அவசியம் நேர்ந்தால் உயிரைவிடவும் தயாராக இருக்க வேண்டும். ஆனால், அநியாயமான சட்டத் திற்கு அடிபணியக்கூடாது என்று அவர் கூறினார். அவரது தாரக மந்திரம் "சாவு பற்றிய பயத்தைக் கைவிடுங்கள். நாமாகவே மனமுவந்து ஏற்கும் இன்னல்கள் மூலமாகத்தான் அநியாயத்தை எதிர்த்துப் போராட முடியும்." அவரைப் பின்பற்றுவதால் மட்டுமே வெற்றி கிடைத்து விடாது என்றும் அவர்களை எச்சரித்தார். மாறாக அவருடைய வழிமுறையை நன்கு புரிந்து கொண்டு கடைப்பிடித்தால் வெற்றி கிட்டும் என்று கூறினார். அவரது அறிவுரைகள் ஹிந்தி, குஜராத்தி, தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டன. காந்திஜியின் படை அகிம்சை அடிப்படையில் போராட சபதம் மேற்கொண்டது. எழுத்தறிவற்ற சாமானியர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், வியாபாரிகள் மற்றும் பெண்கள் அவரது படையில் அங்கம் வகித்தனர். ஆயுதம் ஏந்தாத, அமைதியான ஒழுங்கைக் கடைபிடித்த 5,000 வீரர்கள் அடங்கிய படையை காந்திஜி நடத்திச் சென்றார். அப்படையுடனே அவர் நடந்தார் திறந்தவெளியில் உறங்கினார், வேகாத உணவைப் பகிர்ந்து உண்டார். உடல் நலிவுற்றவர்களுக்குச் சிகிச்சை அளித்தார்; சோம்பியவர்களுக்கு

ஊக்கம் அளித்தார். உணவு சமைத்தார், உணவு பரிமாறினார். அவரது மனதைப் போலவே உடலும் திடமாக இருந்தது. 2500 பேர்களுக்கு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. 1000 நபர்கள் சீரழிந்துவிட்டனர். சிலர் உயிர்த் தியாகம் செய்தனர். அவரது தலைமையில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து பழக்கப்பட்ட வியாபாரிகள் கல் உடைத்தனர். சிலர் துப்புரவுத் தொழிலாளர்களாகப் பணியாற்றினர். கஸ்தூர்பா அன்னையாரும் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் மேற்கொண்டார்.

இங்கிலாந்து நாட்டில் காந்திஜியின் போராட்டத்திற்கு ஆதரவு கிடைத்தது. இந்தியாவில் காங்கிரஸ் கட்சியின் கூட்டங்களில் தென் ஆப்பிரிக்க பிரச்சினை விவாதிக்கப்பட்டது. ''இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருங்கிணைந்து இந்தியாவின் பெருமையை நிலைநாட்டுவதற்காகப் போராடுவது நல்லதோர் உதாரணம். காந்திஜியின் தலைமைக்கு நாம் நன்றி செலுத்துகிறோம்.'' காந்திஜியின் போராட்டத்திற்கு நாள்தோறும் 3200 ரூபாய் தேவைப்பட்டது. நன்கொடைக்காக ஒரு வேண்டுகோள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டது. பெண்கள் தங்களது தங்க வளையல்களையும், காதணிகளையும் கழற்றிக் கொடுத்தனர். அரசர்களும் வியாபாரிகளும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை வழங்கினர். தாகூர் நிதி வசூல் செய்து காந்திஜிக்கு அனுப்பினார். அந்த நீண்ட போராட்டத்தின் முடிவில் இந்தியர்களுக்கு சாதகமான ஒரு சமரச ஒப்பந்தம் ஏற்பட்டது. காந்திஜியும் சுயமரியாதைக்கு பங்கம் ஏற்படாத வரையில் சமரசத்திற்குத் தயாராகவே இருந்தார்.

இந்தியாவில் எத்தனையோ தலைவர்கள் இருந்தனர். இருப்பினும் தென் ஆப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்திஜியையே, அல்லலுற்ற மக்களும், ஏழை விவசாயிகளும், இன்னலுற்ற தொழிலாளிகளும் நாடினர். அவரது தலையீடு காரணமாகவே சம்பாரனில் நூறு ஆண்டுகளுக்குமேல் கொத்தடிமை நிலையிலிருந்த அவுரி பயிரிட்டு வந்த விவசாயிகளுக்கு விடுதலையும் நியாயமான கூலியும் கிடைத்தன. ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அப்பகுதியில் உள்ளவர்களே தீர்வு காண வேண்டும் என்று கூறுவார். அவர் அப்போராட்டங்களுக்கு விளம்பரம் கிடைத்ததால் நாடு முழுவதும் அப்போராட்டங்களைப் பற்றி அறிந்து கொள்ள முடிந்தது.

மக்கள் போராட்டங்களை மேற்கொண்டபோதெல்லாம் காந்திஜி இந்த முறையைத்தான் கடைபிடித்தார். சம்பாரன், கேடா மற்றும் பார்டோலியில் விவசாயிகளுக்கு வழிகாட்டியதைத் தவிர முப்பது ஆண்டு காலத்திற்கு தளபதியாக நின்று நான்கு நாடு தழுவிய போராட்டங்களை மேற்கொண்டார். இந்தியா முழுவதும் சுற்றி நாட்டிலுள்ள பிரச்சினைகளையும் தெரிந்துகொண்டார்.

ஆயிரக்கணக்கானவர்களை அவர் நேரில் சந்தித்து மக்கள் அரசுக்கெதிராக நடத்தும் போராட்டங்கள் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொண்டார். நாள்தோறும் 18 முதல் 20 மணி நேரம் வரை உழைத்தார். ஆயிரக்கணக்கான பொதுக் கூட்டங்களில் அவர் பேசினார். ஒழுக்கத்திற்கான விதிமுறைகளையும் வகுத்தார். அஹிம்சை வழிதான் சரியானது என்று கூறிய அவர் ''நாட்டின் விடுதலைக்கு மற்றொரு பாதையும் இருக்கிறது, நாம் வாளை உருவலாம். அது சாத்தியமாக இருந்திருந்தால் இந்தியாவில் அகிம்சைப் பாதை எடுபட்டிருக்காது. மேடைப்பேச்சு ஊர்வலங்கள் வாயிலாக மட்டுமே சுதந்திரம் வந்துவிடாது. சுதந்திரம் அடைய வேண்டும் என்ற லட்சியத்தை எப்போதுமே மறக்கக்கூடாது. நாம் போர்க்களத்தை விட்டு ஓடாத துணிவுள்ள போர் வீரர்களாக விளங்க வேண்டும். நம் உயிரைத் தியாகம் செய்ய நாம் தயாராக வேண்டும். இதற்குத் தேவை மன திடம். மற்றவரைக் கொல்வதற்கு பதிலாக நம் உயிரைக் கொடுக்க நாம் முன் வரவேண்டும். மற்றொருவரைக் கொல்வதற்கு எடுக்கும் முயற்சியில் அபாயத்தைச் சந்திப்பது எளிதாக இருக்கிறது. இன்னொருவரின் உயிரைக் காப்பதற்கு எடுக்கும் முயற்சியில் அபாயத்தை சந்திப்பது மிகவும் கடினமாக இருக்கும். பிறரைக் கொல்வது தைரியத்திற்கு அடையாளம் அல்ல. நாட்டின் விடுதலைக்காகவும் நமது கௌரவத்தை நிலைநாட்டுவதற்காகவும் உயிர்த் தியாகம் செய்வதுதான் தைரியமான செயலாகும்.''

பெண்கள், சிறுவர்கள், வயதானவர்கள் எல்லோருமே அவரது அஹிம்சைப் போரில் பங்கேற்க முடிந்தது. சிறுவர்களின் படை வானர சேனை என்று அழைக்கப்பட்டது. எங்காவது வன்முறை நிகழ்ந்துவிட்டால் காந்திஜி சத்தியாகிரகப் போராட்டத்தைக் கைவிட்டு விடுவார். ரகசியம் அவருக்குப் பிடிக்காத ஒன்று. தனது எதிர்காலத் திட்டங்களை அவர் பகிரங்கமாக அறிவித்து வந்தார். மக்களது மனங்களிலிருந்து கோபம், வெறுப்பு மற்றும் பழிவாங்கும் மனப்பான்மை அகன்றுவிட வேண்டும் என்று அவர் விரும்பினார்.

இப்போர் தளபதி தனது படையினரிடம் ஆசை வார்த்தைகளைக் கூறமாட்டார். எவ்வித எதிர்ப்பையும் காட்டாமல் எப்படி தடியடிப் பிரயோகத்தை எதிர்நோக்க வேண்டும், எப்படி துப்பாக்கிகுண்டுகளை சந்திக்க வேண்டும், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் தூக்கு மேடைக்கு எப்படிச் செல்லவேண்டும் என்பதைத்தான் சொல்லிக் கொடுத்தார். போராளிகள் தங்களது சொத்துக்களை இழக்க நேரிடும். அவருடைய தாரக மந்திரமான "செய் அல்லது செத்துமடி" என்பதன் பொருளே நாம் இன்னலுற வேண்டும் என்பதுதான், இன்னல் எதிராளியின் உள்ளத்தையும் உருக்கிவிடும் சக்தி வாய்ந்தது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துணிகளை எரிக்கும்படி கூறினார். நிலவரி கொடுக்கவேண்டாம் என்று கூறினார். சட்ட விரோதமாக உப்பு தயாரிக்கும்படி தூண்டினார். அரசு நடத்தும் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் நீதி மன்றங்களை புறக்கணிக்குமாறு (பாய்காட்) கேட்டுக் கொண்டார். இந்தப் போராட்டங்களுக் கிடையிலும் நிர்மாணத் திட்டத்தை அறிமுகம் செய்து அதை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொண்டார் மக்களை ராட்டையில் நூற்று கைத்தறியில் அந்த நூலை நெய்து கதர்த் துணியை தயாரிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

கிராம பஞ்சாயத்துக்களை அமைத்து பள்ளிகளையும் கல்லூரிகளையும் நடத்தும்படி கேட்டுக் கொண்டார். ஒரே ஆண்டில் சுயராஜ்யத்தைக் கொண்டு வருவதற்கான அவரது முயற்சி வெற்றிபெறவில்லை. ஆனால் மக்களது மனத் தளைகள் அகன்று விட்டன. மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வு அவரது பெரும் வெற்றியாகும். அவரது தண்டியாத்திரை எனும் மந்திரத்தில் எல்லோரும் கட்டுண்டனர். நூற்றுக்கணக்கான பெண்மணிகள் தங்களது பர்தாவைத் துறந்து உப்பு காய்ச்சுவதற்கு வந்தனர். ஆண்களுக்கு தாங்கள் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பதையும் நிரூபித்தனர். வெளிநாட்டுத் துணியை விற்பனை செய்த கடைகள் மற்றும் கள்ளுக்கடைகளின் மறியலில் ஈடுபட்டனர். இந்தியாவின் அரசியல் சரித்திரத்திலேயே முதல் முறையாக காந்திஜி ஒத்துழையாமைப் போராட்டத்தை நாடு தழுவிய அளவில் பயன்படுத்தினார்.

காந்திஜி தனது அஹிம்சாவழி போராட்டங்களுக்கு போர்களில் பயன்படுத்தப்படும் சொற்களையே பயன்படுத்தினார். "நான் போருக்கு தயாராகிவிட்டேன். வடமேற்கு இந்தியாவில் வாழும் அஃப்ரிடி இனத்தினர் எப்படி துப்பாக்கி ஏந்தியபடியே செல்கிறார்களோ, அவ்வாறே நீங்கள்

ஒவ்வொருவரும் கையில் ராட்டையுடன் இருக்க வேண்டும். சிட்டங்கள்தான் துப்பாக்கி குண்டுகள், ராட்டைதான் துப்பாக்கி. நமது சுதந்திரத்தைத் துப்பாக்கிகளால் காப்பாற்ற முடியாது, ராட்டைகளால்தான் காப்பாற்ற முடியும். நீங்கள் தாராசானாவில் உள்ள உப்புத் தொழிற்சாலையைத் தாக்கலாம். அது 'தாராசானப்போர்' என்று சரித்திரத்தில் இடம் பெறும் நாசத்தை விளைவிக்கும் ஆயுதங்கள் அப்போரில் பயன் படுத்தப்படவில்லை. ஆனால், ராணுவத்திற்கே உரிய பண்பு களாகிய துணிவு, வீரம், நாட்டுப்பற்று, சகிப்புத்தன்மை மற்றும் தியாகம் அங்கு பேணப்பட்டன.

காந்திஜி கோழைத்தனத்தைக் காட்டிலும் ஹிம்சை மேலானது என்று கருதினார். ஆனால், ஆன்மபலம் சரீர பலத்தைக் காட்டிலும் மேம்பட்டது என்று கூறினார். அவரை யாரோ கேட்டார்கள் "உலகில் அணுகுண்டு வெடிக்கப்பட்ட பின்பும் கூட அஹிம்சை மீதான உங்களது நம்பிக்கை குறையவில்லையா?" என்று. அதற்கு அவர் "அப்படி எதுவும் நடக்கவில்லை. மாறாக உண்மை மற்றும் அஹிம்சையைப் போன்ற மாபெரும் சக்தி உலகில் வேறு எதுவும் இல்லை என்று தான் தோன்றியது; அதற்கு முன்பாக அணுகுண்டு பயனற்றது." அஹிம்சை வழியில் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டால் அது உலகில் அடிமை நிலையில் உள்ள எல்லா மக்களிடையேயும் சுதந்திரம் நம்மை நெருங்கிவிட்டது என்ற உணர்வை ஏற்படுத்தும் என்று அவர் கூறினார்.

உயிரில்லாத செயற்கை ரோஜா, ரோஜாவைப் போன்று இருப்பதோடு அதன் இதழ்களும் ஒரே மாதிரியாக இருக்க லாம். என்றாலும், தனது இரண்டு இதழ்கள் ஒன்றுபோல் இல்லாமலிருக்கும் உயிருள்ள ரோஜாவுடன் அது போட்டி போட முடியுமா? கிராம்வெல்லின் மெழுகுச் சிலை, உயிரோ டிருக்கும் கிராம்வெல்லுக்குப் போட்டியாகுமா? உயிருள்ள பொருள் கதர். ஆனால், இந்தியா உண்மைக் கலையை ரசிக்கும் கண்களை இழந்துவிட்டது. ஆகையால், பளபளப் பான, வெளித்தோற்றத்தைக் கண்டு திருப்தியடைகிறது, கதரின் மீது பிரியம் கொள்ளும் ஆரோக்கியமான தேசிய ருசி திரும்பவும் ஏற்படும்படி செய்துவிட்டால் தேன்கூடு போன்று ஒவ்வொரு கிராமமும் சுறு சுறுப்பாக வேலை செய்துகொண் டிருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

— யங் இந்தியா 11-11-1926

22

காந்திஜி ஒரு எழுத்தாளர்

காந்திஜியின் பெயரில் பல புத்தகங்கள் வெளிவந்துள்ளன. அநேக புத்தகங்களை புத்தக வடிவில் அவர் எழுதவில்லை. சத்தியம், அகிம்சை, சுதேசி, கதர் கிராமத் தொழில் போன்ற தலைப்புகளில் அவ்வப்போது அவர் எழுதிய கட்டுரைகள், பொதுக் கூட்டங்களில் அவர் ஆற்றிய உரைகள். பெண்கள், குழந்தைகள் மற்றும் மாணவர்களிடம் அவர் பேசியவை எல்லாமே புத்தகங்களாக வெளிவந்தன.

காந்திஜி ஒரு சிறந்த எழுத்தாளர் என்று பெயர் பெற்றுவிட்டார். அழகிய நடையிலோ, கவர்ச்சியான சொற்களையோ பயன்படுத்தி தன் எழுத்தின் மூலம் பிறரைக் கவர அவர் முயற்சிக்கவில்லை. அவரது நடையில் ஒரு அழுத்தம் இருந்தது. அதில் அவரது எதிர்பார்ப்புகளும், நம்பிக்கையும், சோகமும், ஏமாற்றங்களும் அப்படியே பிரதிபலித்தன. எழுத்தாளரைப் போன்றே எழுத்தில் எளிமையும், சுருங்கக் கூறும் திறனும், தெளிவும் இருந்தன. செயற்கைத் தன்மை மட்டுமே அவரது எழுத்தில் காண முடியாத ஒன்று. காந்திஜியின் ஆங்கில எழுத்துக்களில் வெளியாகிய அவரது திறமையையும், தெளிவையும், வார்த்தைகளை உரிய முறையில் பயன்படுத்திய நேர்த்தியையும் வெள்ளைக்கார கவர்னர் ஜெனரல்களே பாராட்டியுள்ளனர். காந்திஜியே "பொருத்தம் இல்லாத வார்த்தை எதுவுமே என் வாயிலிருந்தோ பேனாவிலிருந்தோ வெளிவராது" என்று கூறியுள்ளார். காந்திஜி லண்டனில் நடந்த வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்றிருந்தபோது ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய ஆங்கிலப் பேராசிரியர் காந்திஜிக்கு அறிக்கை தயாரிப்பாளராகப் பணியாற்றினார். அப்பேராசிரியர் கூறுவார் : நான் இந்த அறிக்கையின் முன்வரைவைத் தயாரிக்க மிகவும் நேரம் எடுத்துக் கொண்டேன். காந்திஜி ஒரு நொடியில், ஒரு பார்வையில், ஒரு சிறிய திருத்தம் செய்தார். அறிக்கையில் வியக்கத்தகு மாறுதல், என் அறிக்கை இப்போது காந்திஜியின் அறிக்கையாக மாறிவிட்டது.

ஆங்கில மொழியின் மீது அவருக்கு இருந்த பற்றுதல் மற்றும் பல ஆங்கில எழுத்தாளர்களின் படைப்புகளையும் விவிலிய நூலையும் கவனத்துடன் படித்ததன் காரணமாக அவருக்குச் சரியான வார்த்தையை சரியான முறையில் பயன்

படுத்தும் திறன் வந்திருக்கக் கூடும் என்று தோன்றுகிறது. அவர் நூல்களை நன்கு படித்து, படித்தவற்றை நன்கு புரிந்து வைத்திருந்தார்.

தனது 18, 19வது வயதிலேயே ஆங்கிலத்தில் எழுதுவதற்கான முதல் முயற்சியை அவர் மேற்கொண்டார். இந்திய மாணவர்களுக்காக எழுதப்பட்ட 'லண்டன் நகரின் வழிகாட்டி' கையேடுதான் அம்முயற்சி. அதைத் தொடர்ந்து மேலும் இரு கையேடுகள் வெளியாகின: "ஆங்கிலேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்" மற்றும் "இந்தியர்களின் வாக்குரிமை" முதல் கையேடு நேட்டால் நகரில் வாழ்ந்த இந்தியர்களின் நிலையை விவரித்தது. இரண்டாவது, இந்தியர்களின் உரிமை பற்றிய சரித்திரம். அதற்குப் பின்பு வெளியாகிய "பசுமைக் கையேடு" உண்மை நிலவரத்தைக் காட்டியது. ஒரு மாதத்திற்குப் பின் திருத்தப்பட்ட இரண்டாவது பதிப்பு வெளியாகியது. இக்கையேட்டின் சுருக்கம், தென் ஆப்பிரிக்கப் பத்திரிகைகளில் வெளியாகிய போது ஆங்கிலேயர்கள் கோபமுற்று காந்திஜிக்கு அடியையும் உதையையும் பரிசாக அளித்தனர். அவர் பெற்ற கசப்பான அனுபவம், தனது எழுத்து சரியான முறையில் சுருக்கி எழுதப்படவில்லை என்பதுதான். அவருக்கே விஷயத்தைச் சுருக்கமாக எழுதத் தெரியும். ஆப்பிரிக்கக் காங்கிரசின் விதிமுறைகளையும் தீர்மானங்களையும் அவரேதான் எழுதினார்.

தான் உண்ட உணவைப் பற்றி அவர் மேற்கொண்ட பரிசோதனைகள் "ஆரோக்கியத்திற்கான நல்வழி" என்ற தலைப்பில் புத்தகமாக வெளி வந்தது. முதலில் குஜராத்தி மொழியில் வெளியாகிய "இந்தியர்களின் எண்ணங்கள்" என்ற பத்திரிகையில் இந்த நூல் வெளியாகியது. பின்பு ஆங்கிலத்திலும், ஐரோப்பிய மொழிகளிலும் மற்ற இந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டு எல்லோராலும் படிக்கப் பட்டது.

அவரது மனதில் ஒவ்வொரு புதிய எண்ணம் தோன்றிய போதெல்லாம் அதை உடனடியாக நம்பிக்கையுடன் எழுத்தில் வடித்து விடுவார். யாரும் தன் எழுத்தை கேலி செய்வார்களோ என்ற அச்சம் அவருக்கு ஏற்பட்டதில்லை. எழுத வேண்டும் என்ற அவரது வேகம் காரணமாக ரயில் பயணத்தின் போதும் கப்பல் பயணத்தின் போதும் அவர் எழுதத் தொடங்கி விடுவார். "பசுமைக் கையேடு" 1896ம் ஆண்டில் அவர் மேற்கொண்ட கப்பல் பயணத்தின் போது தயாரிக்கப் பட்டது. "இந்திய சுயராஜ்யம்" தற்கால நாகரிகத்தைப் பற்றிய ஒரு விமர்சனம். இப்புத்தகம் 1909ம் ஆண்டில் அவர் இங்கிலாந்திலிருந்து தென் ஆப்பிரிக்காவுக்கு மேற்கொண்ட பயணத்தின் போது எழுதப்

பட்டது. கப்பலில் கிடைக்கும் காகிதங்களையே அவர் பயன்படுத்தினார். வலது கையால் எழுதிச் சோர்ந்து கையில் வலி எடுத்தபோது இடது கையினால் எழுதத் தொடங்கினார். அப்புத்தகம் பத்தே நாட்களில் எழுதி முடிக்கப் பட்டது. டால்ஸ்டாய் அதைப் படித்துவிட்டு "ஒத்துழையாமை இயக்கம்'' இந்தியாவிற்கு மட்டுமின்றி உலகின் எல்லா நாடுகளுக்குமே பொருத்தமானதுதான் என்றார். நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய ''நிர்மாணத் திட்டம்'' என்ற அவரது புத்தகம் ரயில் பயணத்தின்போது எழுதப் பட்டது. அவருடைய கையெழுத்துப் பிரதியில் திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் அபூர்வமாகத் தான் ஏற்படும். மாற்றமும் அப்படியே. சத்தியத்தின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கை மற்றும் ஆன்ம பலம் காரணமாக தன்னால் அவ்வாறு எழுத முடிகிறது என்பார் அவர்.

ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்யும்போது சரியான வார்த்தையை பயன்படுத்துவதிலும் அவர் அசாத்திய திறமை பெற்றிருந்தார். ஒரு வார்த்தை அல்லது கருத்தின் பொருளின் அடிப்படையில் மட்டும் அவர் மொழி பெயர்ப்பு செய்யவில்லை. ''சாவின் நடனம்'' என்ற பொருள் கொண்ட ஆங்கில வார்த்தைக்கு அவர் "விட்டில்பூச்சியின் நடனம்'' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். ரஸ்கினின் புகழ்பெற்ற "கடையனுக்கும் கடைத்தேற்றம்" காந்திஜியின் மொழி பெயர்ப்பில் ''சர்வோதயம்'' - ஆக மாறியது. கார்லைல் கெமால்பாஷாவைப் பற்றி எழுதிய புத்தகத்தின் சில பகுதிகளை குஜராத்தி மொழியில் அவர் மொழி பெயர்த்தார். ப்ளாட்டோ, ''சாக்ரட்டீஸின் மரணமும் அதில் உள்ள நியாயமும்'' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையை ''ஒரு சத்தியாக்ரகியின் கதை'' என்ற தலைப்பில் மொழி பெயர்த்தார். இந்தியாவின் ரிஷிகளும் முனிவர்களும் வடமொழியில் எழுதிய உபநிஷதுக்களை ''ஆசிரம பஜனாவளி'' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இது அவரது சிறைவாசத்தின்போது எழுதப் பட்டது. இதுவே, மீண்டும் "சிறைச்சாலைப் பாடல்கள்" என்ற தலைப்பில் வெளியிடப் பட்டது.

தனது சுயசரிதையை அவர் குஜராத்தி மொழியில் எழுதினார். எளிமையான நடையில், அதே சமயம் படிப்போர் மனதில் பதியும் வண்ணம் அது எழுதப்பட்டிருந்தது. அம்மொழி இப்போது சாதாரணர்களும் படித்துப் புரிந்து கொள்ளக் கூடிய மொழியாக மாறிவிட்டது. அதன் ஆங்கில மொழி பெயர்ப்பு ஆங்கில இலக்கியத்தில் சிறந்ததோர் புத்தகமாக பல அறிஞர் களால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. உலகப் பிரசித்தி பெற்ற ஒரு மாமனிதரின் வாழ்க்கையை மட்டுமின்றி, அவரது பெற்றோர்,

மனைவி, நண்பர்கள் பற்றிய குறிப்புகள் அவரது வாழ்க்கையின் முக்கிய சம்பவங்கள் எல்லாமே படிப்பவரின் ஆவலைத் தூண்டும் விதத்தில் அந்நூலில் பின்னப்பட்டிருந்தன. இந்தியாவின் எல்லா மொழிகளிலும் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்ய, சைன ஜப்பானிய மொழிகளிலும் அந்நூலின் மொழி பெயர்ப்பு வெளியாகியது.

அவரது எல்லா எழுத்துக்களிலும் சத்தியமும் நன்னெறி களும் மிளிர்கின்றன. அதே சமயம், படிப்பவர்கள் மனதில் சோர்வு ஏற்படுத்தாத வண்ணம் எழுதப்பட்டுள்ளன. சிறுவர் களுக்கு நல்லொழுக்கம் பற்றி போதிப்பதற்காக ''பாலர் புத்தகம்'' மற்றும் ''நீதி தர்மம்'' ஆகிய நூல்களை அவர் எழுதினார். சிறுவர்கள் வாழ்க்கையில் மேற்கொள்ள முடியாத எந்த நெறி முறை பற்றியும் அப்புத்தகங்களில் எழுதப்படவில்லை. ஆசிரமக் குழந்தைகளுக்கு அவர் எழுதும் கடிதங்கள் சுவாரசியமாகவும் கருத்துச் செறிவுடனும் இருக்கும். அவர் ஏராளமாகக் கடிதங்கள் எழுதுவார். தமது கைப்பட ஒரே நாளில் ஐம்பது கடிதங்களுக்கு மேல் அவர் எழுதுவது உண்டு. காந்திஜியின் படைப்புகளில் அவர் எழுதிய ஒரு லட்சம் கடிதங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

''கலை கலைக்காகவே'' என்ற கொள்கைக்கு காந்திஜி எதிர்ப்பு தெரிவித்தார். ''கலைகள் எல்லாமே உண்மையின் அடிப்படையில் இருக்க வேண்டும். இலக்கியம் படிப்பவர் களின் மனத்தை மேம்பாடுறச் செய்ய வேண்டும்'' என்பார் அவர். பட்டினியிலும் பசியிலும் வாடும் ஏழை மக்களுக்கு அவர் களுக்குப் புரியும் விதத்தில் சிறு கதைகளும் பாடல்களும் எழுதப் பட்டால் அவர்கள் நாராசமான வார்த்தைகளை பயன்படுத்தும் வழக்கத்தை விட்டு விடுவார்கள் என்று அவர் நம்பினார். ஒரு இலக்கிய மகா நாட்டில் பேசும்போது எழுத்தாளர்களை அவர் கேட்டது:

''நம் நாட்டின் ஏழை மக்களின் எதிர்பார்ப்புகளைப் பற்றி யும் ஏக்கங்கள் பற்றியும் நீங்கள் சிந்தித்ததுண்டா? யாருக்காக நாம் இந்த இலக்கியங்களைப் படைக்கிறோம்? அவர்களுக்கு நாம் எதைப் படித்துக் காட்டுவது?'' இயேசுக்கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றி டீன் ஃபர்ரர் அவர்கள் எளிய ஆங்கில மொழியில் இயற்றிய நூலை, காந்திஜி ஒரு முன் உதாரணமாகக் குறிப்பிடுவார். "இந்தியர்களின் எண்ணங்கள்'' என்ற குஜராத்திப் பத்திரிகையில் அவர் நாட்டின் புகழ்பெற்ற மனிதர் களையும் பெண்மணிகளையும் பற்றி கட்டுரைகள் எழுதி வந்தார். அவருக்குப் பிடித்தமான கவியும் - தத்துவஞானியு

மாகிய ராய்சந்த் பாயின் வாழ்க்கை வரலாற்றை எழுதும்படி அவரைச் சிலர் கேட்டனர். அப்போது அவர் சொல்வார்: ''அவருடைய வாழ்க்கை வரலாற்றை நான் எழுதவேண்டும் என்றால், அவரது வீடு, அவர் விளையாடிய மைதானம், அவருடைய நண்பர்கள், பள்ளியில் அவருடன் படித்தவர்கள் உறவினர்கள், அவரது சீடர்கள் எல்லோரைப் பற்றியும் நான் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அதற்கான அவகாசம் இல்லையே'' என்றார். இந்தத் துறையிலும்கூட அவர் கற்பனைக்கு இடம் தரவில்லை. சத்தியத்தின் அடிப்படையில் தான் எழுத வேண்டும் என்று எண்ணினார்.

இந்தியாவின் இதிஹாசங்களிலிருந்தும் புராணங்களி லிருந்தும், ராமர், கிருஷ்ணர், முகம்மது நபி ஆகியோரது வாழ்க்கையிலிருந்தும் அரிய சம்பவங்களையும், உதாரணங் களையும், நெறிகளையும் மேற்கோள் காட்டி அவர் எழுதுவார். அவரது எழுத்து மக்களுக்கு எளிதில் புரிந்தது. அவர்களது உள்ளங்களைத் தொட்டது. சட்டவிரோத நடவடிக்கைகள், வெள்ளையர்களின் ரௌடித்தனம், தீண்டாமை, வெண்ணிற ஆடையில் உலவிவரும் சீர்குலைந்து கொண்டிருக்கும் காங்கிரஸ் காரர்கள் எல்லாவற்றிற்கும் துணிவுடன் அவர் எதிர்ப்புத் தெரிவித்து எழுதினார். அவரது சில எழுத்துக்கள் - குறிப்பாக காங்கிரஸ்காரர்கள் பற்றியவை - வரும் பொருள் உரைப்பவை யாய் அல்லவா அமைந்துவிட்டன! ''உண்மையை லட்சியமாகக் கொள்ளும் மனப்பாங்கு ஐரோப்பியர்களுக்கே உரியது'' என்று கர்சன்பிரபு கூறியதற்கு காந்திஜி எதிர்ப்பு தெரிவித்து ராமாயணம், மகாபாரதம் மற்றும் வேதங்களிலிருந்து மேற்கோள்களைக் காட்டி இந்தியாவில் எப்போதுமே உண்மை லட்சியமாகக் கொள்ளப்பட்டு வந்திருக்கிறது என்று விளக்கினார். ஒரு பண்புள்ள மனிதர் என்ற முறையில் கர்சன் பிரபு தனது தவறான ஆதாரமற்ற கருத்தைத் திரும்பப் பெறவேண்டும் என்றும் காந்திஜி கேட்டுக் கொண்டார்.

ஒரு தடவை காந்திஜி இப்படியும் கேட்டார்: ''முகம்மது நபியும் அவரது அமைதிக்கான அறைகூவலும் இப்போது எங்கே சென்றுவிட்டன? அவரைப் பின்பற்றுபவர்கள் என்று கூறிக் கொள்ளும் பலரை அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார். ஆனால் என்னை ஒரு மெய்யான முஸ்லீமாக அவர் ஏற்றுக் கொள்வார். இயேசுகிறிஸ்து என்னை ஒரு கிறிஸ்தவனாக ஏற்றுக் கொள்வார். மேலை நாடுகளில் இப்போது போர்கள்தான் நிகழ்கின்றன. கிறிஸ்தவ மதம் அங்கே காணாமல் போய்விட்டது.''

காந்திஜி ஒரு முறை சொன்னார்: கவிஞர்கள் தாங்களே சிருஷ்டிசெய்த கற்பனை உலகில் வாழ்கிறார்கள். என்னைப் பொருத்தவரை வேறு யாராலோ சிருஷ்டிக்கப்பட்ட கைராட்டைக்கு நான் அடிமை என்றார். அவருடைய அந்த அழகிய எண்ணங்களும் எழுத்தும் அக்காலத்திய பெரிய மனிதர் களை கவர்ந்திருக்கின்றன. அவருடைய எழுத்துக்களில் அவர் குறிப்பிடும் சம்பவங்கள் சித்திரம்போல் காட்சியளிக்கும். சில உதாரணங்கள் இதோ:

''நான் மைசூர் சென்றபோது ஒரு பழைய கோயிலின் மூலையில் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சிற்பம் ஒன்றைக் கண்டேன். அச்சிற்பம் என்னுடன் பேசியது. அது காமனின் பிடியிலிருந்து தப்ப முயலும் ஆடை குலைந்த ஒரு அழகிய பெண்ணின் சிற்பம். காமன் தோல்வியுற்றுத் தேளாக மாறி அவளது காலடியில் கிடந்தான். அச்சிற்பத்தின் முகத்தில் கடுந்துயரை - தேளின் விஷம் ஏறும்போது ஏற்படும் வேதனையைக் கண்டேன்.''

''ஒரிஸ்ஸா மாநிலம் என்றாலே நமக்கு எலும்புக் கூடுகள் தான் நினைவுக்கு வருகின்றன. பசியில் வாடும் அந்த எலும்புக் கூடு மனிதர்களின் கரங்கள் தந்தத்திலும் மாட்டுக் கொம்பிலும் வெள்ளியிலும் செய்யும் அதிசயங்களைப் பார்த்திருக்கிறீர்களா? அப்பட்டினி மனிதர்களின் ஆன்மாக்கள் மாட்டுக் கொம்பிற்கும் உலோகத்திற்கும் உயிரூட்டிவிடுகின்றன. ஒரு ஏழை மண்பாண்டத் தொழிலாளி களிமண்ணில் அதிசயங்களை நிகழ்த்தியுள்ளார்.''

''அந்த இடம் ஒரு நதிக்கரையில் அமைந்திருந்தது. அந்த ஆறோ 'வரிசையாக பல குன்றுகளின் ஊடேயும் அழகிய மரம் செடி கொடிகள் அடங்கிய சோலைகளின் வழியாகவும் ஓடிக் கொண்டிருந்தது. நதியின் அடியில் மணல் இருந்தது, சேறு இல்லை. அந்த மேடை அந்த நதிக்கரையில் அமைக்கப் பட்டிருந்தது. அந்த மேடையிலிருந்து சென்ற சாலையின் இருமருங்கிலும் 12,000 ஆண்களும் பெண்களும் அமைதியாக அமர்ந்திருந்தனர்.''

''நான் கேரளத்தில் நுழைந்தது அதிகாலை வேளையில், எனக்குப் பழக்கமான இடங்களில் நான் நடந்து சென்று கொண்டிருந்த போது, முந்தைய பயணத்தின் போது நான் பார்த்திருந்த ஒரு நாயாடியின் (தாழ்த்தப்பட்ட ஜாதியினர்) முகம் என் கண் முன்னே வந்தது. தீண்டாமையைப் பற்றி நாங்கள் விவாதம் செய்து கொண்டிருந்தபோது காதைத் துளைக்கும் குரல்

ஒன்று கேட்டது. என்னுடன் பேசிக் கொண்டிருந்தவர்கள் ''நாங்கள் ஒரு நாயாடியை உயிருடன் காட்டுகிறோம்'' என்று சொன்னார்கள் பொதுமக்கள் நடந்து செல்லும்பாதையில் செல்வதற்கு அந்நாயாடிகளுக்கு உரிமை கிடையாது. அரையாடையுடன் அவர் வயல்களுக்கு மத்தியில் அமைதியாக நடந்து சென்று கொண்டிருந்தார். நான் அவரை என்னருகே வந்து பேசும்படி பணித்தேன். நடுங்கிக் கொண்டே என் பக்கம் வந்து பேசினார், அவர். அந்தச் சாலை அவர் உள்பட எல்லோருக்கும் பொதுவானதுதான் என்று கூறினேன். "அப்படி இருக்க முடியாது! நான் பொதுச் சாலையில் நடக்க மாட்டேன்" என்றார் அவர். நான் உங்களுடன் வேடிக்கையாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறீர்கள். ஆனால் இந்தச் சிரிப்பிற்கும் பேச்சுக்கும் அப்பால் அந்த நாயாடியின் முகம் எனது கேரளப் பயணம் முழுவதற்கும் நினைவில் நிற்கும்.

கைக்குத்தல் அரிசிக்கும் யந்திரத்தால் தீட்டப்பட்ட அரிசிக்கும்; வெல்லத்துக்கும் சர்க்கரைக்கும், உணவுச் சத்திலும், குணத்திலும் உள்ள வித்தியாசங்களை விளக்குமாறு கேட்டுப் பிரபல வைத்தியர்களுக்கும், விஞ்ஞான நிபுணர்களுக்கும் கேள்விகள் அனுப்பியிருந்தேன். பலர் உடனே பதில் அனுப்பியிருந்தனர். ஆனால், அத்துறையில் இதுவரை ஆராய்ச்சி எதுவும் செய்யப்படவில்லை என்பதுதான் அவர்கள் அனுப்பியிருந்த பதில். வெல்லத்தின் குணத்தையும், ரசாயனத் தன்மையையும் பற்றி எந்த விஞ்ஞான நிபுணராலும் விளக்க முடியவில்லை என்பது மிகவும் வெட்கரமானது அல்லவா! கிராமவாசியைப் பற்றி நாம் நினைப்பதில்லை என்பதுதான் இதற்குக் காரணம்.

— ஹரிஜன் 7-12-34

23

காந்திஜி ஒரு பத்திரிகையாளர்

தனது 19வது வயதில் இங்கிலாந்திற்கு வந்த பின்புதான் காந்திஜி பத்திரிகைகளை தினந்தோறும் படிக்கத் தொடங்கினார். பள்ளி மாணவனாக இருந்தபோது இந்தியாவில் பத்திரிகைகளை அவர் படித்ததில்லை. சங்கோஜ சுபாவத்தின் காரணமாக கூட்டத்தில் அவரால் பேச முடியாது. தனது 21வது வயதில் சைவ உணவு பற்றியும், இந்திய நாட்டின் உணவு பழக்க வழக்கங்கள் பற்றியும், மத அடிப்படையிலான விழாக்கள் பற்றியும் பல கட்டுரைகளை 'தி வெஜிட்டேரியன்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் அவர் எழுதினார். அவருடைய ஆரம்ப கால எழுத்து எவ்வித கருத்தையும் எளியமுறையில் அவரால் எழுதமுடியும் என்பதைக் காட்டியது.

இரண்டு ஆண்டு இடைவெளிக்குப்பின் அவர் மீண்டும் பத்திரிகைகளுக்கு எழுதத் தொடங்கினார். அப்போது தொடங்கி அவரது வாழ்நாள் முழுவதும் எழுதுவதை நிறுத்தவில்லை. புகழ் பெறும் நோக்கத்துடன் அவர் எழுதவில்லை. அவரது எழுத்தில் மிகை இருக்காது. அவரது எழுத்து சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டது. நாட்டிற்குப் பயன்தரும் விதத்தில் அவரது எழுத்தைப் படிப்பவர்கள் அறிவு பெறுவார்கள்.

தென் ஆப்பிரிக்காவுக்கு வந்து சேர்ந்த மூன்றாவது நாளன்றே அவர் நீதிமன்றத்தில் அவமானத்திற்காளானார். அச்சம்பவம் பற்றி உடனடியாக ஒரு கட்டுரை எழுதி உள்ளூர் பத்திரிகையில் பிரசுரம் செய்து அதை நாடறியச் செய்தார்.

தனது 35வது வயதில் 'இந்தியர்களின் எண்ணங்கள்' என்ற ஆங்கிலப் பத்திரிகைக்குப் பொறுப்பு ஏற்றார். அதன் வாயிலாக தென்ஆப்பிரிக்காவில் வாழும் இந்தியர்களை ஒன்று திரட்டினார். இந்த வாரப் பத்திரிகையின் குஜராத்தி பதிப்பு விரைவில் ஃபீனிக்ஸ் குடியிருப்பிலிருந்து வெளிவரத் தொடங்கியது. இந்தியர்களின் உணவுப் பழக்கங்கள் பற்றிய கட்டுரைகள் தொடராக இப்பத்திரிகையில் வெளியாயின கூடவே நாட்டின் தலைசிறந்த மனிதர்களின் வரலாற்றுச் சுருக்கமும் வெளியாகியது.

ஒவ்வொரு வாரமும் இருபதிப்புகளிலுமே காந்திஜியின் படைப்புகள் வெளியாயின. அவற்றிற்கென்று ஒரு ஆசிரியர்

இருந்தும் கூட எல்லாப் பணிகளையும் காந்திஜியே செய்தார். மக்களிடையே சரியான எண்ணங்களைப் பரப்புதல், வெள்ளையர்களுக்கும் இந்தியர்களுக்குமிடையே நிலவிய கருத்து வேறுபாடுகளை அகற்றுதல், மற்றும் இந்தியர்களுக்கு அவர்களிடம் உள்ள குறைகள் பற்றி எடுத்துக் கூறுதல் - இவை எல்லாம் இப்பத்திரிகையின் நோக்கங்கள் ஆகும். இப்பத்திரிகைகளில் எழுதுவதற்கு காந்திஜி அரும்பாடு பட்டார். தென்ஆப்பிரிக்க சத்தியாக்ரகத்தை பற்றி விபரமாக எழுதினார். வேறு நாடுகளில் வசிப்பவர்கள் காந்திஜியின் கட்டுரையிலிருந்து தென்ஆப்பிரிக்க சத்தியாக்ரகத்தைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. அவ்வாறு படித்துப் புரிந்து கொண்டவர்களில் இந்தியாவிலிருந்து கோகலே, இங்கிலாந்திலிருந்து தாதாபாய் நௌரோஜி, ரஷ்யாவிலிருந்து டால்ஸ்டாய் ஆகியோர் அடங்குவர். பத்து ஆண்டுகளுக்கு இப்பணியில் காந்திஜி அயராது உழைத்தார். 'இந்தியர்களின் எண்ணங்கள்' பத்திரிகையின் பிரதிகளைச் சிலருக்கு பண்டமாற்ற அடிப்படையில் அனுப்பி வைத்ததற்கு பதிலாக 200 பத்திரிகைகள் அவருக்குக் கிடைத்தன. அவை ஒவ்வொன்றையும் நன்கு படித்து அவற்றிலிருந்து பயனுள்ள செய்திகளை 'இந்தியர்களின் எண்ணங்கள்' பத்திரிகையில் வெளியிட்டார்.

கருத்துக்களைப் பரப்புவதில் செய்தித்தாள்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை காந்திஜி நன்கு அறிந்திருந்தார். அவர் ஒரு தேர்ந்த பத்திரிகையாளர் தான். ஆனால் அத்தொழில் வாயிலாக பணம் சம்பாதிக்கும் எண்ணம் அவருக்கு இல்லை. பத்திரிகைத் தொழிலின் முக்கிய நோக்கம் மக்களுக்கு சேவை செய்வது என்று அவர் எண்ணினார். "பத்திரிகைத் தொழிலை சுயநலத்திற்காகவோ வயிற்றுப்பாட்டிற்காகவோ நடத்தக் கூடாது. அந்த ஆசிரியர்களுக்கோ அல்லது பத்திரிகைக்கோ என்ன நேர்ந்தாலும் சரி, விளைவுகளுக்கு அஞ்சாமல் பத்திரிகைகள் செயல்படவேண்டும். மக்களின் இதயங்களைத் தொட வேண்டும் என்றால் பத்திரிகைகள் தங்களது வழிமுறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்

உண்மை அடிப்படையிலான செய்திகளை வெளியிடும் கொள்கையிலிருந்து அவர் விலகவே இல்லை. செய்திகளை மிகைப்படுத்தி அவர் எழுதுவதில்லை. ஆதாரமற்ற செய்திகளையும் வெளியிடுவதில்லை. மொழிபெயர்ப்பின் போது சரியான வார்த்தைகளை பயன்படுத்துவதில் மிகவும் கவனம் செலுத்தினார் அநாமதேயக் கடிதங்களை அவர் கண்டுகொள்ள மாட்டார். கையெழுத்துடன் கூடிய கடிதங்களை, குறிப்பாக அவரது கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கடிதங்களை அவர் தவறாமல் வெளியிடுவார்.

'இந்தியர்களின் எண்ணங்கள்' பத்திரிகைக்கு அவர் பொறுப்பு ஏற்றபோது 400 பிரதிகளே அச்சிடப்பட்டன. பத்திரிகை நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருந்தது. அதை நல்ல முறையில் நடத்தி லாபம் சம்பாதிக்கவேண்டும் என்று அவர் எண்ணவில்லை. ஆனால் நஷ்டத்தை தவிர்க்க விரும்பினார். பல மாதங்கள் வரை அப்பத்திரிகையை நடத்துவதற்காக மாதம் ஒன்றுக்கு ரூ. 1200 செலவழித்து வந்தார். மொத்தத்தில் அவரது சொந்தப்பணத்தில் 26000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. *(இது தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் நடந்தது. இப்போது இத்தொகையின் மதிப்பு ரூ. 26 லட்சத்திற்கு அதிகமாக இருந்திருக்கும்) இவ்வளவு இழப்பிற்குப் பின்பும் அவர் விளம்பரங்களைப் பிரசுரிப்பதைத் தவிர்த்தார். அப்படிச் செய்தால் பயனுள்ள செய்திகளைப் பிரசுரிக்க இயலாமல் போய் விடும் என்று அவர் எண்ணினார். விளம்பரங்களை ஏற்றுக் கொண்டால் சத்தியத்தின் பாதையில் சுதந்திரமாகச் செல்வதில் தடை ஏற்படும் என்றும் அவருக்குத் தோன்றியது. அவருடைய வார்த்தைகளில் "விளம்பரங்களை நம்பிப் பத்திரிகை நடத்துவது தவறு. மாறாக நாம் சந்தாதாரர்களை அதிகரித்துக் கொள்ளலாம். குடியினால் கேடுவிளையும் என்று எழுதும் பத்திரிகைகள் மது பானங்கள் பற்றிய விளம்பரங்களைப் பிரசுரிக்கின்றன. 99 சதவீதம் விளம்பரங்கள் பயனற்றவை, சமூகத்திற்குத் தீங்கு விளைவிப்பவை பல விளம்பரங்கள் மக்களை ஏமாற்றுகின்றன, அசிங்கமாகவும் உள்ளன." *(அந்தக் காலத்திலேயே இப்படிக் கூறியுள்ள காந்திஜி இன்றைய விளம்பரங்களைப் பார்த்தால் என்ன கூறி இருப்பார்? சற்று சிந்தியுங்கள்)

தவறான வழிகளில் பத்திரிகையின் சுற்று விற்பனையை அதிகரிக்க அவர் முனையமாட்டார். மற்ற பத்திரிகைகளுடன் போட்டியிடவும் அவர் எண்ணியதில்லை. குறுக்கெழுத்து போட்டி போன்ற உத்திகளைக் கையாண்டு பத்திரிகையின் விற்பனையை அதிகரிக்க அவர் முயன்றதில்லை. 'இளைய பாரதம் (யங் இந்தியா)' மற்றும் புதுவாழ்வு (நவஜீவன்) பத்திரிகைகளில் வெளியாகிய அவரது வாழ்க்கை வரலாற்றை மற்ற பத்திரிகைகள் அனுமதி பெறாமல் வெளியிட்டபோது கூட அதைத் தடை செய்து தனது பத்திரிகைகளின் சுற்றை அதிகரித்துக் கொள்ள அவர் எண்ணவில்லை.

இந்தியாவில் முப்பது ஆண்டுகளுக்கு 'விளம்பரம்' என்ற களங்கம் இன்றி தனது பத்திரிகைகளை அவர் வெளியிட்டார். ஒவ்வொரு மாநிலத்திலும் விளம்பரத்திற்கென்று ஒரு சாதனம் தான் இருக்கவேண்டும் - அதிலும் மக்களுக்குப் பயனுள்ள பொருள்கள் பற்றிய விளம்பரம் மட்டுமே வெளியிடப்பட

---

* மொழி பெயர்ப்பாளரின் குறிப்பு

வேண்டும் என்பதே அவரது எண்ணம். 'இளையபாரதத்தின்' ஆசிரியப் பணியை மேற்கொண்டதும் அதுபோன்ற ஒரு பத்திரிகையை இந்திய மொழிகளிலும் வெளியிட வேண்டும் என்று அவருக்குப்பட்டது. 'புதுவாழ்வு' என்கிற குஜராத்தி மொழிப் பத்திரிகை இப்படித்தான் வெளி வந்தது. பிறகு அதே பெயரில் அப்பத்திரிகை ஹிந்தி மொழியிலும் வெளியிடப்பட்டது. மூன்று பத்திரிகைகளிலும் அவர் தவறாது எழுதி வந்தார். இளையபாரதத்திற்கு 1200 சந்தாதாரர்கள் இருந்தனர்; 'புதுவாழ்வு' பத்திரிகைக்கோ 12000 சந்தாதாரர்கள். புதுவாழ்வின் சந்தாவை அவர் எட்டு ரூபாயிலிருந்து நான்கு ரூபாயாகக் குறைத்தார். அப்பத்திரிகையின் பக்கங்களைக் குறைத்த சந்தர்ப்பத்திலோ, அல்லது அப்பத்திரிகை ஈட்டிய லாபத் தொகையிலிருந்து 50,000 ரூபாயைக் கதர்ப் பணிக்காக நன்கொடை அளித்ததற்காகவோ அவர் வாசகர்களிடம் மன்னிப்புக் கோரவில்லை.

அவர் பெருமையுடன் கூறுவார். "எனது நோக்கம் சாதாரண மக்களைச் சென்றடைவதுதான்." இந்தியமொழிகள் வாயிலாகத்தான் இது சாத்தியம் ஆகும். எனது எழுத்து கிராம மக்களுக்குப் புரியக்கூடியது. "புதுவாழ்வை" குதிரைவண்டிக்காரர்களும், கூலிக்காரர்களும் படிக்கின்றனர். விவசாயிகள் மற்றும் நெய்வோர்களின் இல்லங்களை அது சென்றடைய வேண்டும். அது அவர்களுக்குப் புரியும் மொழியில் இருக்க வேண்டும். ஆங்கில மொழிப் பத்திரிகைக்கு ஆசிரியராகப் பணியாற்றுவதில் அவருக்கு அவ்வளவாக விருப்பம் இல்லை. ஏனெனில் அம்மொழி வாயிலாக மிகச் சிறுபான்மையினரையே நாம் சென்றடைய இயலும்."

வாசகர்கள் பத்திரிகை தங்களுக்கே சொந்தமானது என்று எண்ண வேண்டுமென்று அவர் விரும்பினார். இந்தியர்கள் அனைவரும் அவரது பத்திரிகைகளைத் தங்களது சொந்தப் பத்திரிகையாக எண்ணவேண்டுமேயன்றி காந்திஜி நடத்தும் பத்திரிகையாக நினைக்கக் கூடாது. பத்திரிகையில் பெரும் தவறுகள் காணப்பட்டால் படிப்பவர்கள் பத்திரிகை வாங்குவதை நிறுத்திவிட வேண்டும் என்றுகூட அவர் அறிவுறுத்தினார். கூடவே 'புதுவாழ்வு' புறக்கணிப்பு சங்கம் ஒன்றையும் அமைக்கலாம் என்றும் யோசனை கூறினார். ஒரு பத்திரிகையில் உதவியாளர் செய்த தவற்றிற்கோ, அச்சுக் கோர்ப்பவர், பிழைத் திருத்துபவர் செய்த பிழைக்கோ, பத்திரிகை நிருபர்கள், விஷய தானம் செய்தவர்கள் ஆகியோரின் பிழை உள்பட எல்லா பிழைகளுக்கும் பத்திரிகை ஆசிரியர்தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பார் அவர். எந்திரக்கோளாறு காரணமாக ஏற்படும் தாமதத்

திற்கும் கூட பத்திரிகை ஆசிரியர்தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பார். அவர் ஆசிரியர் பொறுப்பு வகித்த காலத்தில் அவரது எந்தப் பத்திரிகையும் எந்த சந்தர்ப்பத்திலும் தாமதம் ஆனது கிடையாது. அவர் உள்நாட்டில் ரயில் பயணம் மேற்கொண்ட சமயத்திலும் பர்மா, இலங்கை, இங்கிலாந்து ஆகிய வெளிநாடுகளுக்கு கப்பல் பயணம் மேற்கொண்ட சமயத்திலும்கூட அவரது கட்டுரைகள் உரிய நேரத்திற்கு பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டு தாமதம் இன்றி பிரசுரம் செய்யப்பட்டன.

பல பணிகளில் ஈடுபட்டிருந்த காந்திஜிக்கு ஒரு பத்திரிகையை நடத்துவது அவ்வளவு எளிய காரியமாக இருக்கவில்லை. அவரது 70வது வயதிலும் கூட சில சமயங்களில் 'ஹரிஜன்' பத்திரிகையை நேரத்தில் வெளியிடுவதற்காக நள்ளிரவில் 1.30 மணிக்கு எழுந்து வேலை செய்யத் தொடங்குவார். பொதுவேலைகளின் பளு மிகவும் அதிகமாக இருந்த சமயங்களில் கூட எழுதும் பணியை அவர் தொடர வேண்டி இருந்தது. அடிக்கடி ஓடும் ரயிலில் அவர் கட்டுரை எழுதுவார். அவரது பிரசித்தமான தலையங்கங்கள் அறிக்கைகள் ஆகியவை ஓடும் ரயிலில் எழுதப்பட்டவை. வலதுகையினால் எழுதி எழுதி வலி ஏற்பட்டபோது இடதுகையினால் அவர் எழுதியுள்ளார். அவரது இடது கையெழுத்து வலது கையெழுத்தைக் காட்டிலும் தெளிவாக இருந்தது. உடல்நலம் குன்றி இருந்த நிலையிலும் கூட வாரம் ஒன்றிற்கு மூன்று அல்லது நான்கு கட்டுரைகள் அவர் எழுதுவதுண்டு.

இந்தியாவில் அவர் நடத்திய எந்தப் பத்திரிகையும் நஷ்டத்தில் இயங்கவில்லை. அவரது ஆங்கில மற்றும் இந்திய மொழி பத்திரிகைகளின் சுற்று எண்ணிக்கை 40,000க்கும் அதிகமாக இருந்தது. அவர் சிறையில் இருந்தபோது சுற்று எண்ணிக்கை 3,000ஆகக் குறைந்து விட்டது. தனது முதல் இந்திய சிறை வாசத்திலிருந்து வெளியே வந்த பின்பிலிருந்து எல்லா வாரப்பத்திரிகைகளிலும் அவரது சுயசரிதம் தொடராகப் பிரசுரமாகத் தொடங்கியது. மூன்றாண்டுகளுக்கு அது தொடர்ந்தது. எல்லோராலும் ஆர்வத்துடன் படிக்கப்பட்டது. காந்திஜி நடத்திய பத்திரிகைகள் தவிர இதர பத்திரிகைகளிலும் அது பிரசுரம் ஆகியது. சிறையில் இருந்தபோதுதான் 'ஹரிஜன்' என்ற வாரப்பத்திரிகையைத் தொடங்கினார். 'இளையபாரதத்தைப்' போலவே இதன் விலையும் ஒரு அணா (ஆறுபைசா) தான். இது தாழ்த்தப்பட்டோர் நலனுக்காகத் தொடங்கப்பட்டது. பல ஆண்டுகள் வரை அரசியல் சம்பந்தமான கட்டுரைகள் எதுவும் அதில் வெளிவரவில்லை. முதலில் ஹிந்தி மொழியில் வெளியாகியது. சிறையில் இருந்தபோது வாரம் மூன்று தடவைகள்

எழுதுவதற்கு அனுமதி தரப்பட்டிருந்தது. அப்பத்திரிகையை ஆங்கில மொழியில் வெளியிடுவதற்கு யோசனை தெரிவிக்கப் பட்டபோது காந்திஜி இவ்வாறு எச்சரித்தார்: "பத்திரிகையில் கட்டுரைகள் சரியான முறையில் மொழி பெயர்க்கப்பட்டு பத்திரிகையும் நன்றாக சரி பார்க்கப்பட்டு நல்லமுறையில் வெளியிடப்பட்டாலன்றி இம்முயற்சி பயனளிக்காது."

சரியான முறையில் ஆக்கப்படாமல் ஆங்கில மொழி பெயர்ப்பை வெளியிடுவதைக் காட்டிலும் இப்போதுள்ள இந்தி பத்திரிகையை மட்டுமே வெளியிடுவது உசிதமாக இருக்கும். அப்பத்திரிகை காலூன்றும் வரை அதை கவனிப்பேன். அதற்குப் பின் அப்பத்திரிகையுடன் தொடர்பு வைத்துக் கொள்ள மாட்டேன் என்றார் அவர். முதலில் 10,000 பிரதிகள் வெளியிடுவது என்றும் மூன்று மாதங்களுக்குப் பின்பு நிலவரம் பற்றி பரிசீலனை செய்யலாம் என்றும் தீர்மானித்தார். இரண்டு மாத காலத்திலேயே பத்திரிகை வேருன்றி சுயச்சார்பு நிலையை அடைந்துவிட்டது. பின்பு அது ஒரு புகழ்வாய்ந்த பத்திரிகையாக மாறிவிட்டது. ஜனங்கள் அதைப் பொழுதுபோக்கிற்காகப் படிக்கவில்லை. விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்காகப் படித்தார்கள். அது ஆங்கிலம், ஹிந்தி, உருது, தமிழ், தெலுங்கு, ஒரியா, மராட்டி குஜராத்தி, கன்னடம் மற்றும் வங்காளி மொழிகளில் வெளியாகியது. காந்திஜி ஹிந்தி, உருது, குஜராத்தி மற்றும் ஆங்கில மொழிகளில் அப்பத்திரிகைக்கு எழுதி வந்தார்.

காந்திஜியின் பத்திரிகைகளில் ஆவலைத் தூண்டும் விதத்தில் கட்டுரைகள் எழுதப்படவில்லை. அவர் எடுத்துக் கொண்ட விஷயங்கள் நிர்மாணப்பணிகள், சத்தியாக்ரகம், அஹிம்சை, உணவுக் கட்டுப்பாடு, நூற்பு, கதர், சுதேசி, கிராமத் தொழில்கள், மதுவிலக்கு போன்றவையாகும். கல்வி முறையை மாற்றி அமைக்கவேண்டும் என்று அவர் கூறி வந்தார். உணவு பழக்க வழக்கங்களையும் நாம் மாற்றிக் கொள்ளவேண்டும் என்றும் கூறுவார் அவர். நாட்டின் குறைபாடுகளைப் பற்றி கடுமையாக விமர்சிப்பார்.

எல்லோரையும் கடுமையாக உழைக்கும்படி செய்வார். ஒரு தடவை பணியைக் குறித்த நேரத்தில் முடித்துக் கொடுப்பதற்காக அவரது செயலாளராகிய மகாதேவ் தேசாய் ரயிலின் கழிப்பறையில் ஒளிந்து கொண்டு கட்டுரை எழுதினார். காந்திஜியின் உதவியாளர்களுக்கு எல்லா ஊர்களின் ரயில் நேரங்களையும், ஒவ்வொரு ஊரிலும் தபால்கள் வெளியூர்களுக்கு அனுப்பப்படும் நேரங்களையும் அத்துப்படியாகத் தெரிந்து கொள்ள வேண்டி இருந்தது. அப்போதுதான் காந்திஜியால் தாம் எழுதிய

வற்றை உரிய நேரத்தில் தபாலில் சேர்க்க இயலும். ஒரு தடவை காந்திஜி பயணம் செய்த ரயில் தாமதமாகச் சென்று கொண்டிருந்தது. அவரது கட்டுரைகளை தபாலில் அனுப்புவதற்கு இயலாத நிலை. ஆங்கிலக் கட்டுரைகளை ஒரு தொண்டரிடம் கொடுத்து ஆமதாபாதிற்கு அனுப்புவதற்குப் பதிலாக பம்பாய்க்கு அனுப்பி அங்கேயே பிரசுரிப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டார். பத்திரிகையும் நேரத்தில் வெளியாகிவிட்டது.

'இளையபாரதம்' பத்திரிகையில் சில தீவிரமான கட்டுரைகளை வெளியிட்டதற்காக அவர் சிறையில் அடைக்கப்பட்டார். அரசு வெளியிட்ட எந்த தடை உத்தரவிற்கும் அவர் அடிபணியவில்லை. அவர் மனத்தின் ஆழத்திலிருந்த எண்ணங்களை வெளியிடுவதற்குத் தடை ஏற்பட்டபோது அவர் எழுதுவதையே நிறுத்திவிட்டார். தனது தலையங்கங்களை வாசகர்களே பிரதிகள் எடுத்து எல்லோருக்கும் அனுப்பி விடுவார்கள் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. அவர் உயிருடன் இருக்கும் வரையில் அவரது பத்திரிகை தடை செய்யப்பட்டால்கூட அவர் விடுக்கும் செய்தியைப் பரப்புவதில் தடை ஏற்படாது என்று அவர் நம்பினார். அச்சுக்கோர்ப்பது பற்றியும், பிழை திருத்துவது பற்றியும் கவலைப்படாமல் கையெழுத்துப் பிரதியே அதுபோன்ற சிக்கலான நிலையில் சரியான தீர்வாக இருக்கும் என்றார். அவர் 'சத்தியாக்ரஹம்' என்ற பெயரில் பதிவு செய்யப்படாத ஒரு வாரப்பத்திரிகையை அரசு சட்டங்களுக்கு எதிராக 1919ம் ஆண்டில் அவர் வெளியிட்டார். ஒரே தாளில் வெளியாகிய அப்பத்திரிகையின் விலை ஒரு பைசா மட்டுமே.

பல ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த பத்திரிகையாளர் என்ற முறையில் பத்திரிகைத் துறை எவ்வாறு இயங்கவேண்டும் என்பது பற்றி அவர் ஆணித்தரமாகப் பேசுவார்: "பத்திரிகையாளர்கள் நடமாடும் பிளேக் நோயாக மாறிவிட்டனர். செய்தி பத்திரிகைகள் விவிலியநூல், குர்-ஆன் மற்றும் கீதை ஆகிய நூல்களின் கலவைபோல் ஆகிவிட்டன. ஒரு பத்திரிகை கலவரங்கள் நிகழப்போகின்றன என்றும் டில்லியில் எல்லா கத்திகளும் கம்புகளும் விற்பனையாகிவிட்டன என்றும் எழுதுகிறது. ஒரு பத்திரிகையின் கடமை மக்களின் மனதில் துணிவை வளர்ப்பதாக இருக்க வேண்டுமேயன்றி பயத்தை அல்ல" என்றார் அவர்.

24

காந்திஜி ஒரு புத்தகம் அச்சிடுபவர் மற்றும் வெளியிடுபவர்

காந்திஜி 'இந்தியர்களின் எண்ணங்கள்' 'இளைய பாரதம்' 'புதுவாழ்வு' மற்றும் ஹரிஜன் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராக விளங்கினார். அவற்றைத் தனது அச்சகத்தில் அச்சிட்டுத் தாமே வெளியிட்டார். வேறு யாருக்கும் சொந்தமான அச்சகத்தில் இருந்து பத்திரிகை வெளியானால் தனது எண்ணங்களை சுதந்திரமாக வெளியிட முடியாது என்பதை அவர் அறிந்திருந்தார். 'இந்தியர்களின் எண்ணங்கள்' வாரப் பத்திரிகைக்கு அவர் பொறுப்பு ஏற்றபோது அது நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. அச்சகத்தை நகரத்திலிருந்து ஊருக்கு வெளியே தூரத்தில் அமைந்திருந்த ஃபீனிக்ஸ் குடியிருப்புக்கு மாற்றத் தீர்மானித்தார். அவரது முயற்சி தோல்வியில் முடியும் என்று நண்பர்கள் நினைத்தார்கள். அவர் அச்சு எந்திரத்தையும் மற்ற தளவாடங்களையும் ஃபீனிக்ஸ் குடியிருப்பிலிருந்த ஒரு கொட்டகைக்கு மாற்றினார். ஒரு டீசல் எந்திரத்தைக் கொண்டு அச்சு எந்திரம் ஓட்டப்பட்டது. அவருடைய அலுவலகம் பக்கத்தில்தான் இருந்தது. சம்பளம் வாங்கும் ஊழியரோ கடைநிலை ஊழியரோ (பியூன்) யாரும் அங்கு கிடையாது. 'இந்தியர்களின் எண்ணங்கள்' ஒவ்வொரு சனிக்கிழமையும் தவறாமல் தபாலில் சேர்க்கப்பட்டு விடும். வெள்ளிக்கிழமை மதியத்திற்குள் கட்டுரைகள் அச்சுக் கோர்க்கப்பட்டுவிடும். குடியிருப்பிலிருந்த எல்லோருமே இளைஞர் — முதியோர் — எல்லோரும் அச்சுக் கோர்ப்பதிலும், அச்சடிப்பதிலும், பங்கேற்று அச்சடித்துக் காகிதங்களை வெட்டி மடித்து விலாசம் எழுதிக் கட்டுக் கட்டி அடுத்த நாள் ரயில் புறப்படுவதற்குள் ரயில் நிலையத்திற்கு அனுப்பி விடுவார்கள். வழக்கமாக நள்ளிரவு வரை பணி செய்வார்கள். பணி சற்று அதிகமாக இருந்தபோது காந்திஜியும் மற்ற ஆசிரமவாசிகளும் வெள்ளிக்கிழமை இரவு முழுவதும் கண் விழித்தனர். கஸ்தூரிபா அன்னையாரும் மற்ற பெண்மணிகளும் சில சமயங்களில் இப்பணியில் உதவினர். எல்லாப் பெண்மணிகளும், குறிப்பாக சனிக்கிழமைகளில் ஃபீனிக்ஸ் அச்சகத்திற்குச் சென்று பணியாற்றினர் 'இந்தியர்களின் எண்ணங்கள்' பத்திரிகை ஞாயிற்றுக்கிழமையன்று கடைகளுக்கு வந்துவிட்டது.

பத்திரிகையை அச்சிடத் துவங்கிய முதல்நாள் இரவிலேயே டீசல் எந்திரம் பழுதடைந்துவிட்டது. அதனால் அச்சடிக்கும் மிஷினின் பெரிய சக்கரத்தை காந்திஜியும் மற்ற ஆசிரமவாசிகளும் கைகளினாலேயே சுழற்றி உரிய நேரத்தில் பத்திரிகையை வெளியிட்டு விட்டனர். இதுபோன்ற அனுபவங்கள் காந்திஜிக்குப் புத்தகங்களை அச்சிடும் தொழிலை நன்கு அறிந்துகொள்ள உதவின. அவரே கட்டுரைகளை எழுதி அச்சுக் கோர்த்து, பிழைதிருத்தி அச்சிடவும் செய்தார். பல இளைஞர்கள் காந்திஜியிடம் தொழில் பயின்றனர். 'இந்தியர்களின் எண்ணங்கள்' பத்திரிகையின் ஒரு இதழை இளைஞர்கள் அச்சிட்டு வெளியிட்டனர். ஆரம்பத்தில் இப்பத்திரிகை ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி மொழிகளில் மட்டும் வெளியிடப்பட்டது. காந்திஜி இந்தியாவுக்குத் திரும்பி சென்னை – அடையாறுக்கு வந்தபோது அன்னிபெஸண்ட் அம்மையார் காந்திஜி அச்சிடும் முறைகளை நுணுக்கமாக கவனிப்பதைப் பார்த்தார்.

வாரப்பத்திரிகைகளைத் தவிர ஆங்கிலம், ஹிந்தி மற்றும் சில மொழிகளில் பல புத்தகங்கள் ஃபீனிக்ஸ் குடியிருப்பிலிருந்தும் நவஜீவன் அச்சகத்திலிருந்தும் வெளியிடப்பட்டன. காந்திஜி அரசிற்குக் காப்புத் தொகை எதுவும் செலுத்தவில்லை. அவருடைய புத்தகங்களிலிருந்து கிடைத்த லாபத் தொகை கதர் துறைக்காகச் செலவிடப்பட்டது. நவஜீவன் அச்சகத்திற்கென ஒரு லட்சம் ரூபாயுடன் ஒரு அறக்கட்டளை நிதியைத் தொடங்கினார்.

மோசமான முறையில் அச்சிடுவது கொடுமை என்பார் அவர். அவருக்கு அச்சு எழுத்துக்கள் தெளிவாக இருக்க வேண்டும். காகிதம் கெட்டியாக இருக்க வேண்டும், அட்டையும் நன்றாக இருக்க வேண்டும். நல்ல அட்டையுடன் கூடிய அதிக விலையான புத்தகங்களை நம் நாட்டில் சாமானியர்களால் வாங்க முடியாது என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். அவருடைய வாழ்நாளில் நவஜீவன் அச்சகம் நிறைய புத்தகங்களைக் குறைந்த விலையில் அச்சிட்டு வெளியிட்டது. குஜராத்தி மொழியில் வெளியாகிய அவரது சுயசரிதை 12 அணாவுக்கு (75 பைசா) விற்கப்பட்டது. தேவ நாகரியில் அச்சிடப்பட்ட புத்தகம் ஒன்றும் குறைந்த விலையில் வெளியிடப்பட்டது.

காந்திஜி நாடு முழுவதிலும் பொதுவான ஒரு லிபி பின்பற்றப்பட வேண்டும் என்று விரும்பினார். அப்படிச் செய்தால் அது அச்சிடுபவர்களுக்கும் படிப்பவர்களுக்கும் எளிதாக

இருக்கும் என்றும் நம்பினார். அவர் தேவநாகரி லிபியைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் அனைத்து இந்திய மொழிகளுமே சமஸ்கிருத மொழியிலிருந்து தோன்றியவை என்று அவர் எண்ணினார். 'இந்தியர்களின் எண்ணங்கள் குஜராத்திப் பத்திரிகையில் துளசி ராமாயணம் பற்றிய ஒரு பக்கக் குறிப்பு தேவநாகரி லிபியில் ஹிந்தி மொழியில் வெளியிடப்பட்டது. ஹரிஜன் பத்திரிகைக்கான அச்சுகளை காந்திஜியே தேர்ந்தெடுத்தார். அவருடன் பணியாற்றிய ஒருவர் அச்சகத்திற்கான எந்திரங்களை வாங்கச் சென்றபோது காந்திஜி இவ்வாறு கூறினார் : "எந்திரங்களை கவனமாகச் சோதனை செய்து பார். ஒரு டபுள் ராயல் எந்திரமும் இரண்டு டிரெடில்களும் சரியாக இயங்குகின்றனவா? என்பதையும் உறுதி செய்து கொள். எழுத்தச்சுகள் தேய்வு இன்றி புதிதாக உள்ளனவா என்பதையும் கவனிக்க வேண்டும்."

தனது பத்திரிகைக்கும் புத்தகங்களுக்கும் பதிப்புரிமை தன்வசம் இருக்க வேண்டும் என்று அவர் எண்ணவில்லை. தன் எழுத்துக்களை நாட்டு மக்களின் பொதுச் சொத்தாகவே அவர் கருதினார். அவர் எழுதியதைப் பலர் கூட்டிக் குறைத்து மாற்றத்துடன் வெளியிடுவதைக் கண்ட பின்புதான் பதிப்புரிமைச் சட்டத்தை பயன்படுத்த அவர் ஒப்புதல் அளித்தார்.

பாலர்கள் படிக்கும் புத்தகங்கள் நல்ல காகிதத்தில் பெரிய எழுத்துக்களில் நிறையப் படங்களுடன் வெளியிடப்பட வேண்டும் என்று கூறுவார். புத்தகங்கள் சிறியவையாக இருந்தால் நன்றாக இருக்கும். மாணவர்களுக்கு அலுப்பு ஏற்படாது. படிப்பதற்கும் குறைவான நேரமே தேவைப்படும். ஒரு தடவை கல்விக்கு பொறுப்பு வகித்த ஆசிரமவாசி ஆரம்ப வகுப்புக்கான புத்தகம் ஒன்றை அவரிடம் கொண்டு வந்தார். அதில் ஒவ்வொரு பக்கத்திலும் படங்கள் இருந்தன. அது விலை உயர்ந்த வண்ணக் காகிதத்தில் அச்சிடப்பட்டிருந்தது. கர்வத்துடன் அவர் காந்திஜியிடம் கேட்டார். "நீங்கள் இந்தப் புத்தகத்தைப் பார்த்தீர்களா? இப்புத்தகம் முழுவதுமே என்னுடைய தயாரிப்பு." காந்திஜி பதில் சொன்னார் "பார்த்தேன்; புத்தகம் அழகாக உள்ளது. ஆனால் யாருக்காக நீங்கள் இப்புத்தகத்தை அச்சிட்டுள்ளீர்கள்? எவ்வளவு பேர்கள் இப்புத்தகத்தை ஐந்து அணாக் கொடுத்து வாங்குவார்கள்? இந்திய நாட்டின் கோடிக்கணக்கான ஏழைக் குழந்தைகளின் கல்விக்கான பொறுப்பு உங்களிடம் தரப்பட்டுள்ளது. மற்ற புத்தகங்கள் ஒரு அணாவுக்கு விற்கப்பட்டால் உங்களது புத்தகம் அரையணாவிற்கு விற்கப்படவேண்டும். "ஒரு

தடவை காந்திஜி இரண்டணா விலையுள்ள ஒரு வாரப் பத்திரிக்கைக்குப் பொறுப்பு ஏற்று குறுகிய காலத்திற்குள்ளாகவே அதன் விலையை அரை அணாவாகக் குறைத்துவிட்டார்.

புத்தகங்களைக் குறைந்த விலையில் வெளியிடுவது மட்டுமே அவரது நோக்கம் அல்ல. வெளியீடு தரமாக இருக்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார். ஒரு தடவை நவஜீவன் அச்சகம் கோகலேயின் எழுத்துக்களையும் பேச்சுக்களையும் குஜராத்தி மொழியில் மொழி பெயர்த்து வெளியிட முடிவு செய்தது. புத்தகம் அச்சாகிய நிலையில் அதன் முன்னுரையை எழுதும்படி காந்திஜியிடம் கேட்டனர். அந்த மொழி பெயர்ப்பு மிகவும் மோசமாக இருந்தது. காந்திஜி அச்சாகிய பிரதிகளை அழித்து விடும்படி கூறினார். அதற்காக 700 ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளதாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டபோது, "இவ்வளவு மட்டமான மொழிபெயர்ப்பை வெளியிடுவது எப்படியும் தவறுதான். புத்தகத்தை அச்சடிப்பதற்கு ஆன செலவோடு நிறுத்திக் கொள்வோம். புத்தகத்தை பைண்டிங் செய்வதற்கும் அட்டைக்கும் ஆகப்போகும் செலவை மிச்சப் படுத்துவோம். மட்டமான நூல்களை வெளியிட்டு மக்களுக்குப் புத்தகம் படிப்பதிலுள்ள ஆர்வத்தைக் குறைக்க நான் விரும்பவில்லை." அப்பிரதிகள் பழைய பேப்பராகக் கூட விற்கப்படாது எரிக்கப்பட்டன.

பத்திரிகை சுதந்திரத்தை காந்திஜி எப்போதுமே பேணி வந்தார். நீதிமன்றங்களிலிருந்து அவர் எழுதுவதற்குத் தடை உத்தரவு வந்த சமயங்களில் எல்லாம் பத்திரிகை வெளியிடுவதையே நிறுத்திவிடுவார். அவருக்கு பத்திரிகை சுதந்திரத்தில் ஆசை இருந்ததற்குப் பலனாக அவரது அச்சகம் ஜப்தி செய்யப்பட்டது. அவரது கோப்புகள் அழிக்கப்பட்டன. அவருடன் பணியாற்றியவர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டனர். அதனால் அவர் தைரியம் இழக்கவில்லை. "நாம் இந்த அச்சு எழுத்துக்களையும் அச்சு எந்திரங்களையும் நம்பி இருக்க வேண்டாம், பேனாதான் நமது சாதனம். எழுதுவோரின் கைகள்தான் எந்திரங்கள். நாம் ஒவ்வொருவரும் செய்திகளைப் பரப்பும் நடமாடும் பத்திரிகைகளாக மாறுவோம். இதை எந்த அரசாலும் தடை செய்ய இயலாது."

25

காந்திஜி ஃபாஷனுக்கு ஒரு முன்னோடி

நான் ஆப்பிரிக்காவில் இருந்தபோது காந்திஜி முழுக்கால் சட்டையுடன் (பாண்ட்டுடன்) சாண்டல் செருப்பை அணிந்தார். அந்தக் காலத்தில் பாண்ட்டுடன் பூட்ஸ் அணிவதுதான் வழக்கமாக இருந்தது. காந்திஜி சாண்டல் செருப்பிற்கு மாறியதற்குக் காரணம் வெயில் காலங்களில் அதுதான் காலுக்குக் குளிர்ச்சியாக இருக்கும். குளிர் காலங்களில் அச்செருப்பைக் காலுறையுடன் அணியலாம். சாண்டல்களை அவரே தயாரித்தார். தென் ஆப்பிரிக்காவின் பிரதம மந்திரியாக இருந்த ஜெனரல் ஸ்மட்ஸ் இந்த சாண்டல்கள் உறுதியாகவும் சௌகரியமாகவும் உள்ளன என்று கேள்வியுற்று தனக்கும் ஒரு ஜோடி வேண்டும் என்று கோரினார். காந்திஜி, தனிப்பட்ட முறையில் (ஸ்பெஷலாக) ஒரு ஜோடி சாண்டல் தயாரித்து அவருக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

வழக்கமான முறையிலிருந்து மாறுபட்ட முறையில் பல பணிகளையும் செய்வது அவர் வழக்கம். அவர் ஆரம்பித்த ஃபாஷன்கள் பலராலும் பின்பற்றப்பட்டன. பல ஏற்றுக் கொள்ளப்படாமல் வழக்கொழிந்து போயின.

முதல்முறையாக அவர் காங்கிரஸ் மகாநாட்டிற்கு வந்தபோது ஒவ்வொரு ஜாதியினருக்கும் தனித்தனி சமையல் அறைகள் இருந்ததைக் கண்டார். தவிர சில முக்கிய புள்ளிகளின் விருப்பங்களுக்கேற்பவும் தனிப்பட்ட உணவு வகைகள் தயாரிக்கப்பட்டதையும் கண்டார். இதுபோன்ற விஷயங்களை காந்திஜி அலட்சியப்படுத்தவில்லை. சமையலில் ஜாதி வேறுபாடுகளும் சலுகைகளும் அனுசரிக்கப்படும்வரை நாடு சுதந்திரம் அடையாது. இந்த வேறுபாடுகள் ஒழிந்தால் தான் நாட்டில் ஒற்றுமை ஏற்படும் என்றும் எண்ணினார். உணவுப் பழக்கங்களை எளிமையாக்கி பணத்தை வீண் செய்வதைத் தவிர்க்கும்படி அறிவுறுத்தினார். உணவுப் பழக்கங்களில் பல பரிசோதனைகளை அவர் நிகழ்த்தினார். அவரது ஆசிரமத்தில் எளிய - மசாலாக்கள் போடப்படாத சைவ உணவு தயாரிக்கப்பட்டு எல்லோருக்கும் வழங்கப்பட்டது. முஸ்லீம்கள் ஹிந்துக்கள், பார்சிக்கள், கிறிஸ்தவர்கள் எல்லோரும் ஒரே சாப்பாட்டு அறையில் ஒன்றாக உட்கார்ந்து அந்த சைவ உணவை உண்டார்கள்.

பச்சைக் காய்கறிகள், பழங்கள், வேர்க்கடலை, முந்திரி போன்ற பருப்புகள், வேகவைக்கப்பட்ட காய்கறிகள், கைக்குத்தல் அரிசி, கையினால் திரிகையில் அரைக்கப்பட்ட கோதுமை மாவு ஆகியவற்றின் பெருமையை அடிக்கடி எடுத்துக் கூறுவார். புதிதாகத் தயாரிக்கப்பட்ட வெல்லம் அல்லது தேனில் ஜீனியைக் காட்டிலும் வைட்டமின்கள் அதிகம் உள்ளன என்று கூறுவார். ஒரு பொருளின் தோற்றத்தைக் கண்டு மயங்கக் கூடாது. அதில் உள்ள பயனுள்ள சத்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் கூறுவார்.

பைஸ்பூரில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் கட்சிப் பிரதிநிதிகளுக்கும் பார்வையாளர்களுக்கும் முதன் முறையாக பாலிஷ் செய்யப்படாத அரிசிச் சோறும், தவிடு நீக்கப்படாத கோதுமை மாவில் தயாரிக்கப்பட்ட சப்பாத்திகளும் வழங்கப்பட்டன. காங்கிரஸ் மகாநாட்டை ஒரு கிராமத்தில் நடத்தும் எண்ணம் முதன் முதலாக காந்திஜிக்குத்தான் தோன்றியது. அதற்கு முந்தைய 50 ஆண்டுகளில் நாட்டில் மேல்நிலையிலிருந்த மத்தியதர வர்க்கத்தினர் மட்டுமே காங்கிரஸ் கூட்டங்களில் பங்கேற்பர். கூட்டங்களும் பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை போன்ற பெரு நகரங்களில்தான் நடைபெறும். காந்திஜி இந்த வழக்கங்களை மாற்றி காங்கிரஸை சாதாரண மக்களின் கட்சியாக மாற்றிவிட்டார். எளிமையான இந்திய உடைகளை அணிந்து கூட்டத்தினருக்கு ஹிந்தி மொழியில் உரையாற்றினார்.

ஃபைஸ்பூரில் திலக் நகர் பகுதியில் காங்கிரஸ் மகா நாட்டிற்கு ஏற்பாடாகி இருந்தது. கிராமத்தில் எளிதில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு கிராம கைவினைஞர்களே மகா நாட்டுப் பந்தலையும், மற்ற கூடங்களையும் அமைத்திருந்தனர். காந்திஜியின் கனவுகளுக்குப் புகழ்பெற்ற கலைஞராகிய நந்தலால் போஸ் வடிவம் கொடுத்தார். தங்கும் விடுதிகளின் சுவர்களும் கூரைகளும் மூங்கிலைக் கொண்டு அலங்கார வளைவுகளுடன் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து பிரம்புக் கூடைகள் தலைகீழாகத் தொங்க விடப்பட்டிருந்தன. வாயிலில் காந்திஜியால் அமைக்கப்பட்ட தேசியக் கொடி பறந்து கொண்டிருந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பாக அவர் தேசியக் கொடிக்கு உருவம் கொடுத்திருந்தார். அதில் ஆரஞ்சு, வெள்ளை, பச்சை ஆகிய மூன்று வண்ணங்கள் இருந்தன. வெள்ளைப் பகுதியில் கருநீல நிறத்தில் அகிம்சையையும் சாமானிய இந்தியனையும் நினைவுபடுத்தும் விதத்தில் கைராட்டைச் சின்னம் அச்சிடப்பட்டிருந்தது.

எளிமையான, அதேசமயம் நேர்த்தியானதுமான தேசிய உடையை நாட்டுக்களித்த பெருமை காந்திஜியையே சாரும். தென் ஆப்பிரிக்காவில் பெரியதோர் போராட்டத்தை அவர் தொடங்கியபோது நூற்றுக்கணக்கான சுரங்கத் தொழிலாளர்களும், கொத்தடிமைக் கூலிகளும் அவரைப் பின்பற்றினர். அவர்களில் பெரும்பாலானோர் தென் இந்தியர்கள். எல்லோரும் சித்ரவதைக்காளானார்கள். பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். பலர் உயிரைவிட்டனர். அவர்கள் மீது இரக்கப்பட்ட காந்திஜி, தன்னையும் அவர்களைப் போலவே பாவித்து அவர்கள் அணிவதுபோலவே தென் இந்திய பாணியில் வேஷ்டியையும் சட்டையையும் அணிந்தார். கையில் நடைக் கம்புக்குப் பதிலாக ஒரு தடிக் கம்பை ஏந்தினார். தோளில் ஒரு பையும் தொங்கியது.

அஹிம்சை அடிப்படையிலான, ஒத்துழையாமை, சட்ட எதிர்ப்பு இவற்றுடன் சத்தியாக்ரகத்தை ஒரு மாபெரும் சக்திக்கெதிராக அவர் தொடங்கினார். கொடும் சக்திகளுக்கெதிரான ஒத்துழையாமைக்குப் பெரும் உதாரணங்களாக காந்திஜி விபீஷணரையும் பிரஹலாதனையும் குறிப்பிடுவார். ஒத்துழையாமை தனது கண்டுபிடிப்பு அல்ல என்றும் கூறுவார். கொடுங்கோலுக்கு எதிராக அஹிம்சை அடிப்படையிலான போராட்டத்தைத் தொடங்கலாம் என்ற துணிச்சலான எண்ணம் அவருக்குத் தான் தோன்றியது. அதன் வெற்றியும் வியக்கத் தகுவிதத்தில் இருந்தது. ஒரு பத்திரிகையாளர் காந்திஜியிடம் கேட்டார். "அணுகுண்டு வெடிக்கப்பட்ட பின்பும்கூட உங்களுக்கு சத்தியத்தின் மீதும் அஹிம்சை மீதும் நம்பிக்கை உள்ளதா?" காந்திஜி பதில் கூறினார்: "இப்போதும் சத்தியத்தின் மீதும் அஹிம்சையின் மீதும் உள்ள எனது நம்பிக்கை குறையவில்லை. மாறாக மிகவும் அதிகரித்துள்ளது அகிம்சை சத்தியத்திற்கெதிராக அணுகுண்டு அற்பமானதுதான். அஹிம்சையை அணுகுண்டினாலும் அழிக்க முடியாது." வேறு எந்தத் தலைவரைக் காட்டிலும் இந்திய மக்களை ஒன்று திரட்டிய பெருமை காந்திஜியையே சாரும்.

காந்திஜியின் தலைமையில் இந்தியாவுக்கு அஹிம்சை அடிப்படையில் சுதந்திரம் கிடைத்தது. ஆசிய மற்றும் ஆப்பிரிக்க கண்டங்களில் மேலை நாடுகளின் ஆதிக்கத்திற்குட்பட்டு சுரண்டப்பட்டு வரும் எல்லா நாடுகளுமே இந்தியாவின் முன் உதாரணத்தைப் பார்த்து நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று கூறி வந்தார். "அஹிம்சை அடிப்படையிலான இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் எல்லைகளின் அடிமைப் பிடியில் உள்ள உலகின் எல்லா

நாடுகளுக்கும் பொருந்தக் கூடியது" இந்தியாவின் உதாரணத்தைப் பின்பற்றி பலநாடுகள், சுதந்திரம் பெற்றன. மனித உரிமைகளையும் பெறுவதற்கான போராட்டத்தை அமெரிக்காவின் கறுப்பின மக்கள் மேற்கொண்டுள்ளனர். •(இது 1964ம் ஆண்டு நிலவரம். அடுத்த சில ஆண்டுகளில் அம்மக்களுக்கும் வெற்றி கிட்டிவிட்டது).

தனது எதிராளியின் மனதிலும் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்ற அவரது முயற்சிக்கிணங்க அவரது உடையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. காந்திஜி கடைசி தடவையாக தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியதும், வட இந்தியர் பாணியில் தார்பாய்ச்சி வேஷ்டியும், முழுக்கை சட்டையும், நீண்ட கோட்டும், கத்தியவார் பாணி தலைப்பாகையும் அணிந்து கொண்டார். இந்தியாவின் வெப்பமான சூழ்நிலைக்கு அந்த உடை ஏற்றதல்ல என்பதை அவர் விரைவில் உணர்ந்து கொண்டார். மேலும் தலைப்பாகைக்காக மீட்டர் கணக்கில் துணி வீணாகியது. விரைவில் அவர் வேஷ்டி, மேல் சட்டை மற்றும் ஒரு தொப்பியுடன் கூடிய உடைக்கு மாறினார். பெரிய மனிதர்களாகக் கருதப்பட்ட சிலருக்கு காந்திஜி இவ்வளவு எளிமையான உடைகளுடன் பொதுக் கூட்டங்களிலும் பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டது அதிர்ச்சி அளித்தது. அவர் நூல் நூற்கவும் துணி நெய்யவும் பழகியபோது உடை முழுவதும் கதராக மாறியது. காந்திஜி அணிந்த குல்லாய் காஷ்மீரிகள் அணிந்த குல்லாயைப் போலவே இருந்தது. ஆனால் காஷ்மீர் குல்லாயில் இருந்த பின்னல் அலங்காரம் (எம்ப்ராய்டரி) காந்திஜியின் குல்லாயில் கிடையாது. காந்திஜி குல்லாயின் நிறம் வெள்ளையாக இருக்க வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தார். வெள்ளைக் குல்லாய் எளிதில் அழுக்காகி விடுகிறது என்று பலர் புகார் கூறியதற்கு, காந்திஜி கூறிய பதில்: "சுத்தத்தை உரிய முறையில் கடைபிடிக்க வேண்டும் என்பதற்காகவே நான் வெள்ளைக் குல்லாயை அறிமுகப்படுத்தினேன். மெல்லிய துணியில் செய்யப்பட்ட இக்குல்லாயை எளிதாக வெளுத்து விடலாம். உலர்வதற்கு அதிக நேரம் பிடிக்காது. குல்லாய் வேறு நிறங்களில் இருந்தால் அதுவும் அழுக்காகும். ஆனால், அழுக்கு தெரிவதில்லை." கதர் வேஷ்டி அல்லது பைஜாமா, ஜிப்பா, தொப்பி ஆகியவை பிரசித்தமாகி தேசிய உடையாகவே மாறிவிட்டன.

பல பீகாரிகள், மார்வாடிகள் மற்றும் குஜராத்திகள் தங்களது நீண்ட தலைப்பாகையைக் கைவிட்டு காந்தி குல்லாயை அணிந்து கொண்டனர். முஸ்லிம்களும் தங்களது

• மொழி பெயர்ப்பாளரின் குறிப்பு

அலங்காரக் குல்லாயைக் கைவிட்டு காந்தி குல்லாயை அணிந்தனர். வங்காளிகளும் தென் இந்தியர்களும் தலைப்பாகை அணிவதில்லை என்றாலும்கூட இப்போது காந்தி-குல்லாய் அணியும் பழக்கத்தை மேற்கொண்டனர். சுதேசிப் போராட்ட காலத்தில் காந்தி குல்லாய் ஆங்கில அரசாங்கத்திற்கு எரிச்சல் ஊட்டியது. குல்லாய் அணிந்தவர்களுக்கு அவ்வப்போது தடியாராதனை நடந்தது. அவர்களது குல்லாயும் அகற்றப் பட்டது. பள்ளி மாணவர்கள்கூட அக்குல்லாய் அணிந்ததற்காக தண்டனைக்காளானார்கள். பல தடவைகள் காந்தி-குல்லாய் அணிந்த தொண்டர்களுக்கு 10 ரூபாய் அபராதம் விதிக்கப் பட்டது. அபராதம் கட்டத் தவறியவர்கள் சிறைக்கு அனுப்பப் பட்டார்கள். காந்திஜி அத்தொப்பியை சிறிது காலத்திற்கு மட்டுமே அணிந்தார். கடைசியாக அவர் அணிந்த உடை அரையாடையும் மேல் அங்கியும் மட்டுமே. காலில் சாதாரண செருப்பு அணிந்தார். ஒரு தலைவர் சாதாரண உடையணிந் தால்தான் நாட்டு மக்களின் உண்மையான பிரதிநிதியாக விளங்க முடியும் என்று அவர் நம்பினார். அவர் ஐரோப்பா முழுவதும் அந்த அரையாடையிலேயே சுற்றினார். அதே ஆடை யுடன் இங்கிலாந்து நாட்டு மன்னரையும் சந்தித்தார். ஒரு தடவை இங்கிலாந்து நாட்டிலிருந்து வந்த ஒரு முக்கியமான மனிதர் ரயில் நிலையத்திலிருந்து மாட்டு வண்டியில் பயணித்து காந்திஜியின் ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தார். காந்திஜியைக் காணவரும் எல்லோருமே தரையில் சம்மணமிட்டு அமர்ந்துதான் அவருடன் உரையாடி வந்தனர். ஆசிரம உணவைத்தான் அவர்கள் உட் கொண்டனர். அந்த சேவாக்ராம ஆசிரமத்து முனிவர் விருந் தோம்பலில் சிறந்தவர்தான். விருந்தாளிகளைப் பரிவுடன் கவனித்துக் கொள்வார். நாகூக்கான மேல்நாட்டு விருந்தாளி களுக்கு அங்கு நாட்டுப்புற பாணியில் அளிக்கப்பட்ட வசதிகள் பற்றி அந்த முனிவருக்கு சங்கடம் ஏதும் கிடையாது.ஒரு நாட்டின் பெருமை- அதிலும் ஏழ்மையான ஒரு நாட்டின் பெருமை -- தடபுட லான விருந்து உபசாரத்தில் அடங்கியுள்ளதாக அவர் நினைக்க வில்லை. மாறாக வீண் பெருமையும், பகட்டும், ஏழ்மையை மறைக்கும் முயற்சிகளும் அவருக்கு வருத்தம் அளித்தன. அவரது கிராமத்திலிருந்து அடிக்கடி டில்லி, சிம்லா, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களுக்கு கவர்னர் ஜெனரலையும் ஏனைய ஆங்கில அதிகாரிகளையும் சந்திப்பதற்காக அடிக்கடி பயணம் மேற்கொள்ள வேண்டி வந்தது. தனது எண்ணங்களை மக்களிடையே எடுத்துச் சொல்வதற்காகவும், அவர்களுடன் தொடர்பு கொள்வதற்காகவும் பலமுறைகள் அவர்

நாடளாவிய பயணங்களை மேற்கொண்டுள்ளார். இருப்பினும் ஒரு தடவைகூட ஆகாய விமானத்தில் பறக்கவில்லை. ரயிலில் மூன்றாம் வகுப்பில்தான் பயணம் செய்தார். சுதந்திரத்திற்கு முன்பு மற்ற தலைவர்களும் அவருடைய உதாரணத்தைப் பின்பற்றினர். காந்திஜி நிர்வாக எந்திரத்தையே மாற்றி அமைக்க விரும்பினார். "மக்களாட்சியில் விவசாயிதான் அரசாள வேண்டும். ஒரு விவசாயி பிரதம மந்திரியாக இருந்தால்தான் வசிப்பதற்கு ஒரு அரண்மனை வேண்டும் என்று கேட்க மாட்டார். அவர் ஒரு மண்குடிசையில் வசிப்பார். திறந்தவெளியில் உறங்குவார். நேரம் கிடைக்கும்போதெல்லாம் வயலில் இறங்கி வேலை செய்வார்."

வசதியான செல்வந்தச் சூழ்நிலையில் வளர்ந்தவர்களுக்கு புதிய பாதையில் செல்வதற்கான துணிச்சல் இருக்காது என்பது காந்திஜிக்குத் தெரிந்திருந்தது. ஆரம்பமுதலே சிறுவர்களுக்குப் புதிய முறையில் கல்வி கற்பித்தால் சமூகத்தில் மாற்றம் கொண்டு வரலாம். கல்வித்துறையில் வல்லுநர்கள் பலரது யோசனைகளையும் தனது சிந்தனையையும் ஒருங்கிணைத்து ஒரு புதிய ஆதாரக் கல்வி முறையை அவர் உருவாக்கினார். அதற்கு 'நயிதாலீம்' 'புதியகல்வி' அல்லது 'ஆதாரக்கல்வி' என்று பெயர். அதில் எழுதுவதற்கும் படிப்பதற்கும் அதிக முக்கியத்துவம் தரப்படவில்லை. கல்லாமையை அகற்றுவதைவிட அறியாமையை அகற்றுவதற்கு முக்கியத்துவம் தரப்பட்டது. தொழில் கல்வி அளிப்பதன் மூலம் மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை வளரும் என்று அவர் நம்பினார். மாணவர்களுக்கு எல்லா மதங்களையும் மதிப் பதற்கும், எல்லா இனமக்கள் மீதும் அன்பு செலுத்துவதற்கும் எல்லாவிதப் பணிகளையும் சமமாக ஏற்றுக் கொள்வதற்கும் தெரிய வேண்டும் என்று அவர் விரும்பினார்.

பெரிய பிரார்த்தனைக் கூட்டங்களில் பலமதங்களிலிருந்து பாடல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பாடப்பட்டன. காந்திஜி தனது எண்ணங்களை ஓயாமல் ஒழியாமல் நூற்றுக்கணக்கான கூட்டங்களில் பரப்பி வந்தார். தனது பத்திரிகைகளில் எண்ணற்ற கட்டுரைகளை எழுதினார் அவர் வெற்றிகரமாக நடத்திய பல பத்திரிகைகளில் வருமானம் ஈட்டிய விளம்பரங் களைப் புறக்கணித்தார். பணத்தின் மீது அவருக்கு ஆசை கிடையாது. ஆனால், பணத்தை வீணாக விரயம் செய்வது அவருக்குப் பிடிக்காது. ஒரு தடவை அவர் பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்களிடம் அலங்காரத்திற்காகப் பணத்தை விரயம் செய்யாதீர்கள் என்று அறிவுறுத்தினார் :

"பூக்களை உபயோகிப்பதைத் தவிர்த்து சிட்ட மாலையைப் பயன்படுத்துங்கள். நூலில் நிறைய முடிச்சுகளைப் போட்டு பாழடிக்காதீர்கள். கொடிகளைப் பயன்படுத்தலாம். அலங்காரத்திற்கு வீணாகிப் போன கதர்த்துணியை பயன்படுத்தலாம். பேச்சாளர்களின் பேச்சுக்களை அச்சடிப்பதைத் தவிர்த்தால் நிறைய பணம் மிச்சமாகும். நல்ல கையெழுத்து உடையவர்கள் பேச்சுக்களை கையினால் தயாரித்த காகிதத்தில் எழுதலாம். முக்கியமானவர்களின் பேச்சுக்களைக் கொண்ட காகிதங்களை கதர்த் துணியில் இணைத்து அழகாகத் தைத்து வைக்கலாம்."

வீடுகளின் உட்புறம் செய்யப்படும் அலங்காரம் பற்றி அவருக்குத் தனியான எண்ணங்கள் இருந்தன. அறைகளில் தரை முழுவதும் கம்பளத்தை விரித்து அறைகளை சோபாக்களால் நிரப்பி சுவர்களில் எல்லாம் அலங்காரப் பொருள்களைத் தொங்கவிடுவது அவருக்குப் பிடிக்காத ஒன்று. ஜன்னலிலிருந்து தொங்கும் திரைச்சீலைகளும் அவருக்கு பிடிக்காதவை. ஒரு தடவை ஒரு பணக்கார தென் இந்திய வியாபாரியின் வீட்டில் தங்கி இருந்தார். அங்கு குவித்து வைக்கப்பட்டிருந்த அலங்காரப் பொருள்கள் அவருக்குப் பிடிக்கவில்லை. வாய் திறந்து சொல்லியும் விட்டார்: "இங்கு நிறைக்கப் பட்டுள்ள சோபா நாற்காலிகள் என்னை மூச்சுத் திணற வைக்கின்றன. காற்றோட்டமே இல்லை போன்ற உணர்வு ஏற்படுகிறது. நீங்கள் மாட்டி வைத்துள்ள சில படங்கள் அருவருப்புத் தருகின்றன. செட்டிநாட்டிலுள்ள எல்லா அரண்மனைகளையும் அலங்கரிக்கும் பணி எனக்குத் தரப்பட்டால் நீங்கள் செலவழித்துள்ள பணத்தில் பத்தில் ஒரு பங்கு செலவில் அதைச் செய்து முடிப்பேன். அறைகள் அழகாகவும் காற்றோட்டத்துடனும் விளங்கி நாட்டின் தலைசிறந்த கட்டிடக் கலை நிபுணர்கள் எனது அலங்காரத் திறனுக்குச் சான்றிதழ் அளிப்பார்கள்." நாட்டின் பிரசித்தி பெற்ற கலைஞர்களுள் ஒருவராகிய நந்தலால் போஸ் அவர்கள் காந்திஜியின் கலைத்திறனைப் பாராட்டியுள்ளதால் அவரது இந்தத் தற்பெருமை நியாயமாகவே படுகிறது. சேவாக்ராம் பற்றி போஸ் இவ்வாறு குறிப்பிடுகிறார்: "தரையும் சுவர்களும் பசுஞ்சாணத்தினால் மெழுகப்பட்டிருந்தன. அறையில் படங்களோ, போட்டோக்களோ சிலை உருவங்களோ இல்லை. ஒரு மூலையில் பாய் விரிக்கப்பட்டிருந்தது. ஒரு கதர்த்துணி உட்காருவதற்காக விரிக்கப்பட்டிருந்தது. கூடவே ஒரு சிறிய திண்டு இருந்தது. கதர்த்துணி நிரம்பிய மூட்டை ஒன்று சாய்வு மேஜையாகப் பயன்படுத்தப் பட்டது. ஒரு வெண்கல லோட்டாவும் இருந்தது. அரச இலை வடிவத்தில் இருந்த ஒரு இரும்புத் துண்டினால் அந்த லோட்டா மூடப்பட்டிருந்தது. அந்த அறையில் அமைதி நிலவியது. சுத்தம் இருந்தது. பொருள்கள் சீராக வைக்கப் பட்டிருந்தன. அழகு மிளிர்ந்தது. இடுப்பில் அரையாடையுடன் அவர் ஒரு மூலையில் அமர்ந்திருந்தார். அவர் முகத்தில் மாறாத புன்சிரிப்பு. எனக்கென்னவோ அவரது தோற்றம் உரையிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட கூர்மையான வாளை நினைவுக்குக் கொண்டு வந்தது. அந்த வாளிடம் ஹிம்சை ஒன்றைத்தவிர மற்ற எல்லா குணங்களும் இருந்தன."

ஏராளமான மக்களுக்கு எவ்வளவோ ஓய்வு நேரம் இருக்கிறது. இத்தகைய நிலை நம் நாட்டின் அழிவுக்கே அடிகோலும். வேலையில்லாத நிர்ப்பந்தத்தினாலோ; வேண்டுமென்றே சோம்பலாலோ மக்கள் தங்கள் நேரத்தை வீணாக்கும் வரை, அயல் நாட்டினரும், நம் நாட்டினரில் சிலரும், அவர்களைச் சுரண்ட முடியும் என்பதையும், மக்கள் சுயராஜ்யம் அடைய முடியாது என்பதையும் உணர்ந்தேன். அவர்களைச் சுரண்டுவோர், அயல் நாட்டினராயிருந்தாலும் சரி, இந்திய நகரவாசியாயினும் சரி, அவர்கள் சுயராஜ்யம் அடைய முடியாது என்பது மட்டும் நிச்சயம்: ஆகவே, அவர்கள் கதர்வேலை செய்யாவிடினும், நம் முன்னோர்கள் பயின்று வந்ததும், இன்று மறைந்துள்ளதுமான தொழில் எதையாவது செய்வது அவசியம்.

— யங் இந்தியா 30-3-1926

26

காந்திஜி ஒரு பாம்பாட்டி

சிறு பையனாக இருந்தபோது காந்திஜி பாம்புகளைக் கண்டு பயப்படுவார். இருளில் தனியாகச் செல்லவும் அச்சம்தான் திருடர்களும், பேய்களும், பாம்புகளும் அவரைத் தாக்கக்கூடும் என்று அவர் அஞ்சினார்.

அவர் துறவிபோல் வாழ்ந்து வந்தார். தனது 35-வது வயதிலிருந்து ஆசிரமங்களில் வசிக்கத் தொடங்கினார். அவரது ஆசிரமம் ஒரு சிறு குடிசை அல்ல. காம்பவுண்டு சுவரால் சூழப் பட்ட கிணறுகளுடன் கூடிய பெரியதோர் பழத்தோட்டம். டவுன் பகுதியிலிருந்து தூரத்தில் அமைந்திருந்தது. காந்திஜி பணக்காரர் அல்ல. மலிவான விலையில் தரிசு நிலத்தை வாங்கி ஆசிரமத்தைத் தொடங்கி இருந்தார். ஃபீனிக்ஸ் குடியிருப்பு, டால்ஸ்டாய் பண்ணை, சபர்மதி ஆசிரமம், வார்தா ஆசிரமம் மற்றும் சேவாக்ராம் ஆகிய எல்லா ஆசிரமங்களிலும் நிறைய பாம்புகள் நடமாடின. குடில்கள் கட்டப்படுவதற்கு முன் ஆசிரமவாசிகள் கூடாரங்களில் வசித்தனர். குழந்தைகளுடன் அச்சூழ்நிலையில் கூடாரங்களில் வசிப்பதில் அபாயம் இருந்தது. ஒரு நாள் பாம்பு ஒன்று கூரையில் காணப்படும். மற்றொரு நாள் ஜோடிப் பாம்புகள் ஒரு சைக்கிளுக்கு முன்பாகக் காணப்படும். சில சமயம் படுக்கை அறைக்குள்ளும் அவை நுழைந்துவிடும். அப் பாம்புகளை என்ன செய்வது என்பது பிரச்சினையாக இருந்தது.

காந்திஜி ஒரு பக்தி நிறைந்த வைஷ்ணவர் என்ற முறையில் அஹிம்சையில் நம்பிக்கை வைத்திருந்தார். தனது உயிருக்கோ, தனது மகன் அல்லது மனைவியின் உயிருக்கோ அபாயம் ஏற்பட்டு, டாக்டர்கள் புலால் சூப் சாப்பிட்டால்தான் உயிர் பிழைக்கலாம் என்று கூறிய சூல்நிலையில்கூட புலாலை மறுத்தவர். பசுக்களும் எருமைகளும் பால்காரர்கள் பாலை ஒட்டக் கறந்து விடுவது காரணமாகத் துன்பத்திற்கு ஆளா- கின்றன என்பதைக் கண்டு பசும்பால் மற்றும் எருமைப் பால் சாப்பிடுவதை நிறுத்தியவர் அவர். அப்படிப்பட்டவரால் பாம்பை எப்படி அடிக்க இயலும்? விஷப் பாம்புகளைக் கூட அடிக்கக் கூடாது. என்ற கட்டுப்பாடு ஆசிரமத்தில் இருந்தது. கயிறுகளைக் கொண்டு பாம்புகளைப் பிடிப்பதற்கான கருவி ஒன்று தயாரிக்கப் பட்டிருந்தது. பாம்புகள் பிடிக்கப்பட்டு ஆசிரமத்திலிருந்து தொலைவான இடத்தில் விடப்பட்டன. சில சமயங்களில்

பாம்புகள் காணப்பட்ட இடத்தில் அவற்றைப் பிடிக்க இயலாத சூழ்நிலை இருந்தது அல்லது சிலர் பாம்புகளின் அருகே சென்று அவற்றைப் பிடிக்க அஞ்சினர். அவ்வாறான சூழ்நிலையில் என்ன செய்வது? காந்திஜிக்கு ஹிம்சை வழி தவிர்க்கமுடியாத ஒன்று என்று புரிந்து விட்டது. காய்கறிகளை உண்பதன் மூலம் செடி கொடிகளுக்கு நாம் வன்முறை இழைக்கிறோம். வருத்தத்துடன் பாம்புகளை அடிக்க அவர் ஒப்புதல் அளித்தார்: "ஒரு பாம்பு கொல்லப்படுவது பாம்புக் கடியினால் ஏற்படக்கூடிய ஒரு குழந்தையின் சாவின் அளவிற்கு துயரம் தரக்கூடியது அல்ல. எனக்கு இன்னமும் பாம்பைக் கண்டால் பயமாகவே இருக்கிறது. அப்படி இருக்கும்போது நான் வேறு யாரையும் அஞ்சாமல் இருக்கும்படி எப்படிக் கூறமுடியும்?" பாம்புகளை விரட்டவோ பிடிக்கவோ வழி ஏதும் இல்லை என்றால் அவற்றைக் கொல்ல காந்திஜி அனுமதித்தார்.

பாம்புகளைப் பற்றி அறிய அவர் ஆவலாக இருந்தார். நண்பரும் ஆசிரம வாசியுமாகிய காலன்பாக்கின் உதவியுடன் விஷமுள்ள மற்றும் விஷமற்ற பாம்புகளிடையே உள்ள வேறுபாட்டை அவர் அறிந்துகொண்டார். செயல்முறை விளக் கத்திற்காக காலன் பாக் ஒரு நல்ல பாம்பைப் பிடித்து கூண்டில் வைத்திருந்தார். அப்பாம்பிற்கு அவர் தம் கைகளால் உணவு வழங்குவார். யாரும் அப்பாம்பைத் தொந்தரவு செய்யவில்லை. காந்திஜிக்கு அது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. காலன் பாக்கிடம் அவர் கூறுவார்: "அதனுடைய பழக்க வழக்கங்களை அறிந்து கொள்வதற்காக நாம் அதைச் சிறையில் அடைத்து விட்டோம். நல்ல பாம்பிற்கு நம்முடைய நட்புணர்வு புரியாது. உங்களுக்கோ எனக்கோ அத்துடன் விளையாடுவதற்கான துணிச்சல் கிடையாது. நீங்கள் அதனுடன் நட்புடன் பழகினா- லும்கூட பயமும் உங்களிடம் உள்ளது. நல்ல பாம்பை அடக்கி வைப்பதில் அன்புக்கு இடம் இல்லை". அந்தப் பாம்பிற்கும் மனித நட்பின் மீது சந்தேகம் வந்துவிட்டது போலும். அது கூண்டிலிருந்து தப்பி ஓடிவிட்டது.

ஆசிரமத்தில் இருந்த இன்னொரு ஜெர்மனி நாட்டவரும் பாம்புகளைக் கையாள்வதில் வல்லவராக இருந்தார். குட்டிப் பாம்புகளைப் பிடித்து தனது கைகளில் ஓட வைப்பார். அது போன்ற துணிச்சலான செயலை காந்திஜி வரவேற்றார். அவர் ஒரு பாம்பைத் தொடும்போது, நட்புணர்வுடன்தான் தொடு கிறோம் என்பதை அப்பாம்பு உணரவேண்டும் என்று அவர் விரும்பினார். ராமநாமத்தை ஜெபித்தபடி பாம்பின் வாய்க்குள் விரலை விடுவது பெரியதோர் சாதனையாக அமையும் என்று அவர் நம்பினார். ஆனால், அவரது வாழ்வின் இறுதி நாள்வரை

ஒரு பாம்பையோ தேளையோ அவர் கையில் எடுக்கவில்லை. அதுபற்றி அவருக்கு சற்று வெட்கம்தான்.

பல முக்கியமான அலுவல்களுக்கிடையேயும் கூட பாம்புகளைப் பற்றி அறிந்து கொள்வதில் அவருக்கிருந்த ஆர்வம் குறையவில்லை. ஒரு தடவை அவரிடம் ஆலோசனை செய்வதற்கு வந்த தலைவர்கள் அவரது கழுத்தில் ஒரு பாம்பு மாலையாகக் கிடப்பதைப் பார்த்து வியப்புற்றார்கள். காந்திஜி ஒரு பாம்பாட்டியுடன் பாம்புகளைக் கையாள்வது பற்றியும் பாம்பு கடிக்கு வைத்தியம் செய்வது பற்றியும் ஆர்வத்துடன் பேசிக்கொண்டிருந்தார். காந்திஜி தானே பாம்பினால் கடியுண்டு தன்னை சோதனைக்குட்படுத்திக் கொள்ளத் தயாராக இருந்தார். ஆனால் அவருடன் இருந்த நண்பர்கள் அவ்விஷப் பரீட்சையை மேற்கொள்ள காந்திஜியை அனுமதிக்கவில்லை. தனது 70-வது வயதில் ஒரு பாம்பாட்டியின் சீடராகும் வாய்ப்பை அவர் இழந்துவிட்டார்.

தென் ஆப்பிரிக்க சிறை வாசத்தின்போது ஒரு சமயத்தில் அவரது ஈறுகளிலிருந்து ரத்தம் வந்தது. ஒரு நீக்ரோ அவருக்கு உதவியாக இருந்தார். ஒருவர் பேசுவது மற்றவருக்குப் புரியாததால் சைகைகளினாலேயே பேசிக்கொண்டார். ஒருநாள் அந்த நீக்ரோ அவரிடம் ஓடிவந்து காயமுற்ற தனது விரலைக் காண்பித்தார். அவரது சைகையிலிருந்து ஏதோ ஒரு பிராணி அவரைக் கடித்துவிட்டது என்று காந்திஜி புரிந்துகொண்டார். உடனடியாகச் சிறை மருத்துவமனைக்கு ஒரு குறிப்பு அனுப்பினார். விஷம் ஏறியுள்ள ரத்தத்தை வெளியேற்றி விட்டால் அவருக்கு வலி குறைந்துவிடும் என்பதை காந்திஜி அறிவார். ஆனால் சுத்தமான கத்தி எதுவும் கிடைக்கவில்லை. தனது வாயினால் அவரது விரலைஉறிஞ்சி சிறிது சிறிதாக விஷ ரத்தத்தை அவர் வெளியேற்றினார். அவரது ஈறுகளில் ரத்தம் வடியும் நிலையில் விஷம் அடங்கிய ரத்தத்தை உறிஞ்சுவது அபாயகரமானதுதான். இருப்பினும் அந்த நீக்ரோ வலியினால் துடிப்பதைப் பார்த்து அவரால் சும்மா இருக்க முடியவில்லை.

எல்லா பாம்புகளிலும் விஷம் கிடையாது என்பதும் பாம்பு கடித்துவிட்டால் எல்லா சமயங்களிலும் மரணம் நேர்ந்துவிடாது என்பதையும் அவர் அறிவார். 12 சதவீதம் பாம்புகளே விஷமுள்ளவை. நாட்டு மக்களுக்கு, குறிப்பாக கிராமத்தினருக்கு பாம்புகளைப் பற்றிய விஷயங்களை எடுத்துக் கூற அவர் விரும்பினார். பாம்புகளைப் பற்றி படங்களுடன் அவர் பல கட்டுரைகள் எழுதினார். ஒருமுறை 'ஹரிஜன்' பத்திரிகையில் அவர் இவ்வாறு எழுதினார்: ''நமக்கு எந்தப் பாம்பு விஷம்

கொண்டது எது விஷமற்றது என்று தெரிவதில்லை. அதனால் எல்லாவித பாம்புகளையும் அடித்துக் கொன்று விடுகிறோம். நிறைய சந்தர்ப்பங்களில் பாம்பினால் கடியுற்றவர் பயத்தின் காரணமாகவே இறந்துபோகிறார். விஷப் பாம்புகள்கூட நாம் அவற்றை மிதித்து விட்டாலோ, சீண்டினாலோ ஒழிய நம்மைக் கடிப்பதில்லை. பாம்புகள்தான் எலிகளையும் கேடு விளைவிக்கும் பூச்சிகளை அழித்து கட்டுப்பாட்டினுள் வைக்கின்றன. இதன் காரணமாகவே அவை 'வயல்களின் ரட்சகன்' என்று அழைக்கப்படுகின்றன. நாகபஞ்சமி அன்று தாய்மார்கள் பாம்புப் புற்றுகளுக்கு வெளியே கிண்ணத்தில் பால் வைக்கின்றனர். இதன் மூலம் பாம்புகளிடம் தங்களது நட்பை வெளிப்படுத்துகின்றனர். ஏழு தலைகளுடன் கூடிய ஆதிசேஷன் பாம்பின் மீது விஷ்ணு படுத்திருக்கும் காட்சி எனக்குப் பிடித்தமானது. கடவுள் எப்படி பயமின்றி படம் விரித்த ஏழு தலைப் பாம்பின் மடியில் படுத்துள்ளார் என்பதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் பாடம் பாம்பைக் கண்டு நாம் அஞ்சக் கூடாது என்பதுதான்''.

ஒரு முறை காந்திஜியின் குடிசைக்கு வெளியே அரைடிராயர் அணிந்த சிறுவர்கள் கூட்டமாக நின்றிருந்தனர். அவர்களது கண்கள் கண்ணாடி ஜாடியில் வைக்கப்பட்டிருந்த பாம்பின் மீது இருந்தன. காந்திஜி அதை ஒரு டாக்டரிடம் அனுப்பி வைத்தார். அது ஒரு விரியன் பாம்பு என்று தெரிய வந்தது. டாக்டர் அதன் தலையை உடைத்து காந்திஜிக்குத் திருப்பி அனுப்பினார். அதன் தண்டுவடம் பாதிப்பு அடையாமல் இருந்ததால் பாம்பு மேலும் மூன்று நாட்களுக்கு உயிருடன் இருந்தது. இருப்பினும் பொறுக்க இயலாத துன்பத்திலிருந்து விடுவிப்பதற்காக அது கொல்லப்பட்டு ஆல்கஹால் நிரம்பிய ஜாடியில் வைக்கப்பட்டது. காந்திஜி எப்போதுமே உயிருள்ள மற்றும் உயிரற்ற பாம்புகளை மக்களுக்குக் காட்டுவார். உயிருள்ள பாம்புகளுக்கான கூண்டு ஒன்றும் ஆசிரமத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

ஒரு தத்துவ ஞானி நண்பரிடம் காந்திஜி இவ்வாறு கேட்டார்: ''ஒரு பாம்பு நம்மைக் கடிக்க வந்தால் நாம் என்ன செய்ய வேண்டும்?'' அந்த தத்துவ ஞானி கூறிய பதில்: ''நாம் அதை அடிக்கக் கூடாது நம்மை அது கடித்தால் அதையும் நாம் ஏற்க வேண்டும்.'' காந்திஜி எந்தப் பாம்பையும் அடிக்கவில்லை. பாம்புகளும் அவருக்கோ மற்ற ஆசிரம வாசிகளுக்கோ எந்தத் தீங்கையும் விளைவிக்கவில்லை. அவருடைய ஆசிரம வாசிகள் யாருமே பாம்பினால் கடிபட்டு இறக்கவில்லை. காந்திஜி பாம்புகளின் ஸ்பரிசத்தை அறிவார். விஷப் பற்கள் அவர் உடலைத் தீண்டியதில்லை.

ஒரு நாள் மாலை நேரத்தில் நண்பருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது ஒரு பாம்பு அவரது மேலாடை மீது படம் எடுத்த வண்ணம் நெளிந்து கொண்டிருந்தது. அந்த நண்பர் காந்திஜியை அசையாமல் இருக்கும்படி கூறினார். காந்திஜி பதட்டம் அடையவில்லை- நண்பரை பயப்படாமல் இருக்கும்படி சொன்னார். நண்பர் காந்திஜியின் மேலாடையைச் சட்டென்று கழற்றி விசிறி எறிந்து விட்டார். மற்றொரு சமயம் காந்திஜி உணவருந்திவிட்டு ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த போது அவரது மார்பின் மீது ஒரு பாம்பு நெளிந்து கொண்டிருந்தது. காந்திஜி சிறிதும் பதற்றம் அடையவில்லை. மற்றொரு சமயம் நன்கு படித்த பாம்பாட்டி ஒருவர் காந்திஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது அவரைக் காண வந்தார் தன்னால் பாம்புகளை அடக்க முடியும் என்பதைக் காட்டுவதற்காக அவர் சில விஷப் பாம்புகளை காந்திஜியின் படுக்கை மீது விட்டார். அவை காந்திஜியின் போர்வை மீது ஆடத் தொடங்கின. காந்திஜி அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார். சற்றும் பதட்டம் அடையவில்லை.

மற்றொரு சமயம் காந்திஜி மௌனவிரதம் அனுஷ்டித்த தினத்தில் நடந்த பிரார்த்தனையின் போது பாதை தவறி வந்த ஒரு பாம்பு காந்திஜியின் பக்கமாக வரத் தொடங்கியது. காந்திஜியின் உடன் இருந்தவர்கள் பதற்றம் அடைந்தனர். பாம்பு பயந்து போய் காந்திஜியின் மடியில் வந்தமர்ந்து விட்டது. காந்திஜி எல்லோரையும் அமைதியாக இருக்கும்படி சைகை செய்தார். பிரார்த்தனை தொடர்ந்தது. பாம்பும் மெல்ல அவர் மடியிலிருந்து இறங்கிச் சென்று விட்டது. காந்திஜியிடம் அந்த சமயத்தில் அவரது உணர்வு எப்படி இருந்தது என்று ஒரு அன்பர் கேட்டதற்கு காந்திஜி கூறுவார் : ''ஒருகணம் எனக்கு பதற்றம் ஏற்பட்டது. பிறகு நான் நிதானத்திற்கு வந்து விட்டேன், அந்தப் பாம்பு என்னைக் கடித்தாலும்கூட நான் உங்களிடம் அப்பாம்பைக் கொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருப்பேன். அதை யாரும் பயமுறுத்தக் கூடாது. அதை ஓடிச் செல்ல அனுமதிக்க வேண்டும்.''

27

காந்திஜி ஒரு புரோகிதர்

காந்திஜி பிரம்மச்சரிய விரதத்தையும் தானாகவே விரும்பி எளிய வாழ்வையும் மேற்கொண்டபோது இவ்வாறு கூறினார். ''மனித சமுதாயத்திற்கு சேவை செய்ய முன்வருபவர்கள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது.''

இந்த எண்ணம் வருவதற்கு முன்பாக தனது பல பிரம்மச்சாரி நண்பர்களின் திருமணத்தை நடத்தி வைத்துள்ளார். எல்லோரும் ஒரே குடும்பத்து அங்கத்தினர்கள் போல் சேர்ந்து வாழ வேண்டும் என்றும் கூறுவார். தனது இந்திய நண்பர் களைத் தங்கள் மனைவிமார்களுடன் தென்ஆப்பிரிக்காவுக்கு வரும்படி அழைத்தார். தனது ஐரோப்பிய நண்பர்களாகிய வெஸ்டையும் போலாக்கையும் விரைவில் திருமணம் செய்து கொள்ளும்படி யோசனை கூறினார். போலாக்கிற்குப் பணப் பிரச்சனை இருந்ததால் சற்றுத் தயக்கம் காட்டினார். இதயங் கள் ஒன்றை ஒன்று விரும்பிய நிலையில் திருமணத்தைத் தள்ளிப் போடக் கூடாது என்று காந்திஜி கூறினார். அடுத்து இங்கிலாந்தி லிருந்து அம்மணப்பெண் தென்ஆப்பிரிக்கா வந்த சமயத்தில் போலாக்கின் திருமணம் நடைபெற்றது. கல்யாணத்திற்கான எல்லா ஏற்பாடுகளையும் காந்திஜி தாமே செய்ததுடன் மாப்பிள்ளை தோழனாகவும் செயல்பட்டார்.

அவரது ஆசிரமங்களில் சில சமயங்களில் அவர் புரோகித ராகப் பணியாற்றியுள்ளார். அவர் ஜோடிகளைச் சேர்த்த விதமும், புரோகிதம் செய்த விதமும் அசாதாரணமானவை. இந்துக்களின் திருமண முறைகளை அவர் முற்றிலுமாக மாற்ற விரும்பினார். வரதட்சணை, செல்வம் பெரிய படிப்பு, உயர்ந்த ஜாதி போன்ற தகுதிகளை அவர் அவசியம் என்று எண்ண வில்லை. நல்ல நடத்தை, ஆரோக்யமான உழைப்பிற்கேற்ற உடல்வாகு ஆகிய இரண்டையுமே அவர் முக்கியமான தகுதி களாகக் கருதினார். அவர் நடத்தி வைத்த ஒரு திருமணத்தில் மணமகன் கையினால் நூற்று, கையினால் நெய்த கதர் உடையை அணிந்திருந்தார். கதர் சிட்டத்தினாலான மாலையைத் தவிர வேறு எந்த மாலையையும் நகையையும் அவர் அணியவில்லை. அம்மாலைகளை அக்கினியின் முன்பாக மணமகனும், மணமகளும் மாற்றிக் கொண்டனர். வேத மந்திரங்கள்

ஒதுப்பட்டன. விலையுயர்ந்த பரிசோ வரதட்சணையோ மணமகனுக்குத் தரப்படவில்லை.

வரதட்சணை முறையை அவர் வலிமையாகக் கண்டித்தார். கல்லூரி மாணவர்களிடம் பெண்களை அடிமை போல் நடத்தக் கூடாது என்று அறிவுறுத்தினார். மனைவியரைத் தம் வீட்டிலும் இதயத்திலும் அரசியைப் போல் வைத்திருங்கள். விலைக்கு வாங்கி விற்கக் கூடிய அடிமைப் போல் வைக்காதீர்கள் என்றார் அவர். பெண்களை அர்த்தாங்கினி – உடலில்பாதி, அதிலும் மேம்பட்ட பாதி என்றெல்லாம் வர்ணிக்கிறோம். "என் பொறுப்பில் ஒரு பெண் இருந்தால் அவருக்கு ஒரு பைசா கூட வரதட்சணை கொடுத்து திருமணம் செய்து கொடுக்க இசைய மாட்டேன். அவள் என் பொறுப்பில் கன்னியாகவே வாழலாம்."

திருமண விருந்துகளுக்காக ஆடம்பரமாகச் செலவு செய்யப்படுவது அவருக்கு பிடிக்காத ஒன்று. ஜனநாயக யுகத்தில் சம்பிரதாயச் சடங்குகளுக்கு பத்து ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்படக் கூடாது என்று கூறுவார். முக்கியமான சடங்கு தவிர வேறு எதுவும் திருமணத்தின் போது செய்யவேண்டியதில்லை என்றும் அவர் கூறினார். நாட்டின் பரம ஏழையான குடிமகனுக்குக் கூட காந்திஜியின் இக்கட்டளையை நிறைவேற்றுவது சாத்தியமாக இருந்திராது. கிராமத்து மக்கள் திருமணம் மற்றும் கருமாதி போன்ற சடங்குகளுக்கு பெரும் அளவில் பணம் செலவு செய்து கடனாளியாகி விடுகின்றனர். அவர்களுக்கு காந்திஜி கூறுவார். ''நான் உங்களுக்கு புரோகிதம் செய்கிறேன். கலியாணத்திற்கோ கருமாதிக்கோ பணத்தை விரயம் செய்ய வேண்டாம்.'' கருமாதி அல்லது திதி (திவசம்) அனுசரிக்கப்படும் முறையை அவர் ஆதரிக்கவில்லை. நம் முன்னோர்களுக்கு திதி அனுசரிக்க வேண்டும் என்றால் நாம் அவர்களது நற்பண்புகளை நினைவு கூர்ந்து நம் வாழ்விலும் ஏற்று நடப்பதுதான் சரியான முறை. பூணூல் அணிவதிலும் ஏதோ விசேஷமான அர்த்தம் இருப்பதாக அவர் ஒப்புக் கொள்ளவில்லை. ''அதை அணிவதில் எந்தப் பயனும் கிடையாது. பண்டைக் காலத்தில் ஆரியர்கள் தங்களை ஆரியரல்லாதவர்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டிக் கொள்வதற்காக அதை அணிந்தனர். மேல் ஜாதியினரையும் கீழ் ஜாதியினரையும் பாகுபடுத்திக் காட்டும் சின்னம் தான் அப்பூணூல் என்றால் அது துறக்கப்படவேண்டும். நற்பண்புகளை நாம் அனுசரிப்பதுதான் நல்லதோர் பூணூல் அணிவது போன்றது.''

இந்தப் புரோகிதர் தட்சிணை கேட்கமாட்டார். சில சமயம் ஹரிஜன நலநிதிக்கு நன்கொடை வசூலிப்பார். ஒரு கப்பு

திருமணத்தை நடத்தி வைத்தபோது ஹரிஜனங்களுக்குக் கிணறு வெட்டுவதற்காக 5000 ரூபாய் நன்கொடை வசூலித்துவிட்டார். ஆசிரமத்தில் நடந்த வேறொரு திருமணத்தில் பிராமண மணமகளுக்கும் மணமகனுக்கும் ஹரிஜன கிறிஸ்தவர் புரோகிதராகச் செயல்பட்டார்.

திருமணச் சடங்குகள் முடிந்ததும் ஆறணாவுக்கு (40 பைசா) வெல்லம் வாங்கி எல்லோருக்கும் விநியோகித்தார். ஒரு மணமகனுக்கு இவ்வாறு எழுதினார். ''நீ இங்கே தனியாக வா, நான் உனக்கு திருமணம் செய்து அனுப்பி வைக்கிறேன்." மணமகனுடன் நண்பர்களோ உறவினர்களோ திருமணத்திற்கு வரத் தேவையில்லை என்றே அவர் கருதினார். திருமணத்தில் ஏழு பேர்களைப் பார்த்து விட்டாலே "சப்த ரிஷிகளும் வந்து விட்டனர்" என்பார். ''இதோ அருந்ததியும் (மணமகளின் தாய்) இங்குதான் இருக்கிறாள்" என்பார்.

தனது மூன்றாவது மகனின் திருமணத்தின்போது தம்பதிகளுக்கு அவர் கீதை மற்றும் ஆசிரம பஜனாவளி புத்தகம், ஒரு மாலை மற்றும் தக்கிளி ஆகியவற்றைப் பரிசாக வழங்கினார். தன்மகனிடம் கூறினார் ''நீ உன் மனைவியின் மானத்தைக் காக்கவேண்டும். அவளுக்கு எஜமானனாக இராதே. நண்பனாக இரு. உங்களது வாழ்க்கை தாய்நாட்டிற்காக அர்ப்பணிக்கப் படட்டும். நீங்கள் இருவருமே உடல் உழைப்பு மூலம் வாழ்க்கை நடத்தவேண்டும்''. மணமகளின் தாய் மணமகனுக்கு ராட்டை ஒன்றைப் பரிசாக வழங்கினார். சடங்குக்கு முன்னதாக மணமக்கள் உபவாசம் இருந்து கிணற்றடியையும், மாட்டுத் தொழுவத்தையும் கழுவினர். மரங்களுக்கும் செடிகளுக்கும் நீர் பாய்ச்சி தாங்கள் இயற்கையுடன் ஒன்றி இருப்பதைக் காட்டிக் கொண்டனர். அவர்கள் நூல் நூற்றனர், கீதையும் படித்தனர். இவை எல்லாம் காந்திஜியின் கண்ணோட்டத்தில் சம்பிரதாயச் சடங்காகிய சப்த பதி அல்லது ஏழு காலடிகளுக்கு பதிலாக செய்யப்படவேண்டிய சடங்காகும். திருமணம் முன்பே நிச்சயிக்கப்பட்டிருந்தும் கூட நிச்சயதார்த்தம் இரண்டாண்டுகளுக்குத் தள்ளிப் போடப்பட்டது. ஏனெனில் அப்போதுதான் மணப்பெண்ணுக்கு 18 வயது பூர்த்தி அடைந்தது. காந்திஜி பால்ய விவாகத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். ''13 வயது நிரம்பிய சிறுவர்களைக் காணும் போதெல்லாம் எனக்கு எனது திருமணம் நினைவுக்கு வருகிறது. எனக்கு என்மீதே பரிதாபமும் ஏற்படுகிறது. மடிமீது அமரக்கூடிய சிறுமியை மணமகளாக்குவதை எந்த மதமும் அனுமதிக்காது. பெண்ணின் விருப்பத்தை அறியாமல் பெற்றோர்களால் திருமணம் செய்து வைக்கப்பட்ட

எந்தப் பெண்ணையும் நான் திருமணமானவளாகக் கருத வில்லை. பதினைந்து வயதுப் பெண் ஒருத்தியை விதவையாகப் பார்ப்பதை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. மனைவியை இழந்த கணவன்மார்களுக்கு எப்படி மறுமணம் செய்துகொள்ளும் உரிமை உள்ளதோ அதே போல் விதவை களுக்கும் மறுமணம் செய்து கொள்ளும் உரிமை உண்டு.'' சில சந்தர்ப்பங்களில் விவாகரத்தையும் அவர் ஆமோதித்தார். ஒரு தடவை சிறையில் இருந்தபடியே தனது முதல் கணவன் உயிருடன் இருக்கும்போதே வேறொருவரை மணந்த ஒரு பெண்மணிக்கு தனது ஆசிகளை வழங்கினார்.

தன்னை ஒரு சனாதன ஹிந்து என்று சொல்லிக் கொண்டா லும் கூட கலப்பு-ஜாதி, கலப்பு-மத, கலப்பு-மாநிலத் திருமணங் களை அவர் ஆதரித்தார். ஒவ்வொரு கலப்புத் திருமணமும் ஒற்றுமையை வளர்க்கும் என்று அவர் நம்பினார். அவருடைய கடைசிப் பையன், ஒரு குஜராத்தி பனியா ஒரு தென் இந்திய பிராமணப் பெண்ணையல்லவா மணந்தார்! (காந்திஜியின் மகன் தேவதாசுக்கும் ராஜாஜியின் மகள் லட்சுமிக்கும் நடந்த திருமணம் இது).

காந்திஜியின் பெற்றோர்கள் வைஷ்ணவ சம்பிரதாயத் தினர். அவர்களது பாதிப்பு காந்திஜியிடம் இருந்தது. பனிரெண் டாவது வயது முதலே தீண்டாமையைப் பாவம் என்று கருதினார். தனது பதினேழாவது வயதில் ஜாதி, மத, இன வேறுபாடின்றி எல்லா மனிதர்களுடனும் பழக கற்றுக் கொண்டார். இருபத்தி ஓராவது வயதில் கீதை, பைபிள் மற்றும் ஏனைய மதங்களின் நூல்களைக் கற்றார். எந்த ஒரு மதத்தைச் சார்ந்தவரும் தனது மதம்தான் உண்மையானது என்றும் மற்ற மதங்கள் பொய் யானவை என்றும், கூறுவது முட்டாள்தனம் என்பார் அவர். கீதையையும் உபநிஷதுகளையும் அவர் நன்கு கற்றிருந்தார். வேதத்தின் சில பகுதிகளையும் கற்றிருந்தார். இருப்பினும் அப்புத்தகங்களிலிருந்து அவர் அடிக்கடி மேற்கோள் காட்டுவ தில்லை. மாறாக அப்புத்தகங்களிலிருந்து கற்ற விஷயங்களைத் தம் வாழ்வில் கடைப்பிடிக்க முயற்சித்தார். பல மதங்களையும் பற்றி அவர் அறிந்திருந்ததால் எந்தத் துயரத்தையும் துணிவுடன் எதிர்நோக்க அவரால் முடிந்தது. உடல் வலிமையை மட்டும் நம்பி இருக்கும் மனிதன் மதங்களுக்கு எதிரான கருத்துக்களை பரப்புகிறான் என்றும், மனோபலம் பொருந்தியவன் மதத்தைப் புரிந்து கொண்டவன் என்றும் அவர் கூறுவார். மதமாற்றம் தேவையற்றது என்பார். இந்து மதம், சீக்கிய மதம், புத்த மதம், இஸ்லாம் மற்றும் கிறிஸ்துவ மதங்களின் அடிப்படைக் கோட்பாடுகளை அவரால் எளிதில் எடுத்துக் கூற முடியும்.

சர்ச்சுகளில் நடக்கும் பிரார்த்தனைக் கூட்டங்களில் அவர் கலந்து கொள்வதுண்டு. ஒரு சமயத்தில் அவர் இந்து மதத்தைப் பற்றி நான்கு பிரசங்கங்கள் நிகழ்த்தினார். அப்போது இந்து மதத்தை மற்ற மதங்களுடன் ஒப்பிட்டு அவர் பேசினார்.

ஏசுநாதரின் கருத்துக்களை அவர் எளிதாக அவ்வப்போது எடுத்துக் கூறுவதைப் பார்த்த சில ஐரோப்பியர்கள் அவரைப் பிறப்பால் ஒரு கிறிஸ்தவர் என்று எண்ணினர். ஒரு கப்பல் பயணத்தின்போது கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முதல் நாள் மாலையில் ஏசுவின் போதனைகளைப் பற்றி பேசும்படி அவரை சகபயணிகள் கேட்டுக் கொண்டனர். பிரார்த்தனைக் கூட்டங் களில் அவர் குர்-ஆன்-லிருந்து வாசகங்களை எடுத்துரைப்பார். அதற்கு இந்துக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். முஸ்லீம்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்துமதம் பற்றி துணிச்சலான கருத்துக்களை அவர் வெளியிடுவார். ஜாதி அடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகளை அவர் எதிர்த்தார். சனாதன இந்துக்கள் இதன் காரணமாக கோபமுற்றனர். அவருக்குக் கறுப்புக் கொடி காட்டி செருப்பு மாலை அணிவித்தனர் அவரைக் கொல்லவும் முயற்சித்தனர். அப்போதும் அவர் சொல்லுவார்: "தீண்டாமை மதத்தின் அங்கம் என்றால் நான் ஒரு இந்து அல்ல. மனித இனத்திற்கே களங்கம் விளைவிக்கும் தீண்டாமையை அகற்ற முடியாவிட்டால் இந்து மதம் அழிந்து போக வேண்டும். நமது மதம் அஹிம்சை அடிப்படையிலானது. அதில் அன்பிற்கு மட்டுமே இடம் உண்டு. அக்கம்பக்கத்தினர், மற்றும் நண்பர் களுக்கு மட்டுமல்லாது எதிராளிகள் மீதும் நாம் அன்பு செலுத்த வேண்டும்'' எல்லா ஜாதியினரையும் அனுமதிக்காத எந்தக் கோயிலுக்கும் அவர் செல்வதில்லை. பல ஆண்டுகள் போராட் டத்திற்குப் பின் சில கோயில்கள் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டன.

அவரைப் பொருத்தவரை சத்தியமே கடவுள். வாழ்க்கை நெறியே மதம். கடவுள் நீர்த்துளிகளிலும் உள்ளார், தூசி துரும்பிலும் உள்ளார். உருவமற்ற கடவுளை வழிபடவே அவர் விரும்பினார். ஆனால் உருவ ஆராதனையை அவர் எதிர்க்க வில்லை. "உருவத்தை வழிபடுபவர்களும் வெறும் கல்லையோ உலோகத்தையோ வழிபடவில்லை-அதற்குள் அடங்கியுள்ள தெய்வத்தைத்தான் வழிபடுகிறார்கள்"-என்பார் அவர். உருவ வழிபாட்டை ஆதரித்து தாகூரிடம் பேசியபோது அவர் இவ்வாறு கூறினார்: ஹரிஜனங்கள் மரத்தடியில் வைத்து வழிபடும் சிந்தூரம் பூசப்பட்ட கல்லுக்கும் மகத்துவம் உண்டு. அதன்மூலம் தான் அவன் கடவுளுடன் தொடர்பு கொள்கிறான். ஒரு முடவனுக்கு நாம் நடக்கக் கற்றுக் கொடுப்பதற்கு முன்பாக அவர் பயன்

படுத்தும் ஊன்றுகோலைப் பிடுங்கிக் கொள்ளக்கூடாது.'' அதே போல் மரங்களை வழிபடுவதையும் தவறு என்றோ தீமை என்றோ அவர் கருதவில்லை. ''அதில் ஒரு இரக்கமும் கவிநயமும் இருக்கிறது. மரங்களை வழிபடுவதன் வாயிலாக கடவுளின் பெருமையையும் அவர் சர்வ வியாபி என்பதையும் உணர்த்தும் தாவர உலகத்திற்கே நாம் அஞ்சலி செலுத்துகிறோம்.''

அவருக்கே கோயில் கட்ட சிலர் முயன்ற போது அதை அவர் எதிர்த்தார். யாரையுமே தனது பாதங்களைத் தொட்டுக் கும்பிடவும் அவர் அனுமதிக்கவில்லை.

இந்தத் துறவி நாட்டு மக்களுக்குப் புதியதோர் தாரக மந்திரத்தைக் கற்பித்தார். அதுதான் தாய்நாட்டிற்குச் சேவை செய்வது மற்றும் ஏழைகளுக்கு உதவுவது. அப்படிச் செய்வதன் மூலம்தான் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற கோட்பாடுகள் வேரூன்றி நமது மனங்களிலிருந்து பயமும் அடிமை மனோபாவமும் அகலும். வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தைரியத்துடனும் தியாக உணர்வுடனும் எப்படி வாழ வேண்டும் என்பதை வாழ்ந்து காட்டியவர் அவர். ஓயாமல் ஒழியாமல் மனித இனம் வன்முறையை, அஹிம்சையைக் கொண்டுதான் வெல்லமுடியும் என்றும், வெறுப்பை அன்பினால் தான் வெல்ல முடியும் என்றும் கூறி வந்தார்.

காந்திஜியின் வாழ்க்கை சுறுசுறுப்பானது. தினமும் கர்மயக்ஞம் அதாவது உடல் உழைப்பு இன்றி வாழும் ஒவ்வொரு மனிதனும் தனது உணவைத் திருடுகிறான் என்ற கீதையின் கோட்பாட்டை அவர் முற்றிலுமாக ஏற்று நடந்தார். உடல் உழைப்பை அவர் கர்மயக்ஞமாகக் கருதினார். ஒரு நாள் கூட அவர் சிறிதளவாவது உடலுழைப்பின்றி கழித்ததில்லை. அவர் ஒருபோதும் பொய் சொன்னதில்லை. எந்த உயிருக்கும் தீங்கு விளைவிக்கவில்லை. யாரைப் பற்றியும் அவதூறாகப் பேசியதில்லை. சூரியோதயத்திற்கு முன்பாக அவர் எழுந்துவிடுவார். காலையிலும் மாலையிலும் பிரார்த்தனை செய்வார். தினசரிப் பிரார்த்தனையில் கீதை, உபநிஷத்து, குர்ஆன் மற்றும் ஜிந்த் அவஸ்தா (பார்சி மத நூல்) ஆகியவற்றிலிருந்து சில பகுதிகள் படிக்கப்படும். அவர் தரையில் இருந்தபோதும் சரி, கடலில் இருந்தபோதும் சரி, ரயில் பயணமானாலும் சரி, பஸ் பயணமானாலும் சரி, முஸ்லீம் வீடானாலும் சரி, கிறிஸ்துவ வீடானாலும் சரி, தாழ்த்தப்பட்டவர் வீடானாலும் சரி, ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு நடந்து சென்று கொண்டிருந்தாலும் சரி, பிரார்த்தனை செய்வதில் எவ்வித மாற்றமும் இருக்காது. சிறைவாசத்தின் போதும் அவ்வாறே. 21 நாட்

களுக்கு உணவைத் துறந்திருக்கிறார். ஆனால் பிரார்த்தனையைத் துறக்கவில்லை. பிரார்த்தனை என்பது உதடுகளினால் கடவுளின் பெயரை உச்சரிப்பது அல்ல. மனதில் நம்பிக்கையை வளர்ப்பது தான் பிரார்த்தனை ஆகும். கடவுளைத் திருப்திப்படுத்துவதற்காக செய்யப்படுவது பிரார்த்தனை அல்ல. நம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதுதான் பிரார்த்தனையின் நோக்கம். தனது 36வது வயதில் பிரம்மச்சரியத்தை மேற்கொண்ட அவர் ஃபீனிக்ஸ் குடியிருப்பில் கூட்டுப் பிரார்த்தனையையும் தொடங்கினார். ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் பஜனைப் பாடல்களும் கிறிஸ்துவ கீதங்களும் பாடப்பட்டன. வாழ்வின் பிற்பகுதியில் சில ஆண்டுகளில் பிரார்த்தனைக் கூட்டங்களில் எல்லோரையும் ராமதூன் பாடும்படி கேட்பார். கைகளைக் கொட்டியபடி அப்பாடல் பாடப்படும். நாடு முழுவதும் அதுபோல் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடைபெறவேண்டும் என்று அவர் விரும்பினார்.

காந்திஜிக்கு ஏமாற்று வேலை சுத்தமாகப் பிடிக்காது. இருப்பினும் மற்றவர்கள் அத் தவறைச் செய்தபோது அவர்களை அவர் தண்டிக்கவில்லை, யாராவது பொய் பேசினாலோ, தவறு செய்தாலோ பிராயச்சித்தமாக தானே உபவாசம் மேற்கொள்வார்.

இந்த புரோகிதர் சில சமயங்களில் கோயில்களில் விக்கிரங்களைப் பிரதிஷ்டை செய்து பூஜையையும் துவக்கி வைத்துள்ளார். பள்ளிகளுக்கும் மருத்துவமனைகளுக்கும் அடிக்கல் நாட்டியுள்ளார். நவகாளியில் முஸ்லீம்களால் களங்கப்படுத்தப்பட்ட விக்ரகத்தை மீண்டும் பிரதிஷ்டை செய்தார். டில்லியிலுள்ள லக்ஷ்மி நாராயணர் கோயிலையும் (இப்போது இது பிர்லா மந்திர் என்று அழைக்கப்படுகிறது) வாரணாசியிலுள்ள பாரதமாதா கோயிலையும் சேலு என்கிற இடத்தில் ஹரிஜனங்களுக்காக ஒரு கோயிலையும் ரத்ன கிரியில் ஒரு அனுமார் கோயிலையும் காந்திஜி தான் திறந்துவைத்தார். ரத்னகிரியில் அவர் இவ்வாறு உரையாற்றினார்: ''மாருதிக்கு (அனுமாருக்கு) ராஷச பலம் இருந்தது என்ற காரணத்திற்காக மட்டும் நான் அவர் உருவத்தை பிரதிஷ்டை செய்யவில்லை. ராவணனுக்கும் அப்படி ஒரு பலம் இருந்தது. ஆனால், மாருதியிடம் மனோபலமும் ஆத்ம பலமும் இருந்தன. அதன் காரணம் அவரது பிரம்மச்சரிய விரதமும் ராமபக்தியும் தான்.''

ராமநாமத்தின் மீது காந்திஜிக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. பிரார்த்தனை கூட்டத்தில் கலந்துகொள்ள அவர் சென்று கொண்டிருந்தபோது தான் அவர் மீது ஒரு வெறியனின் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்தன. அவரது மூச்சு பிரியும்போதும் அவரது உதடுகள் ராமநாமத்தை உச்சரித்தன.

காந்திஜி வாழ்க்கைக் குறிப்புகள்

1. அக்டோபர் 2, 1869 ... போர்பந்தரில் காந்திஜி பிறந்தார்
2. 1881 ... கஸ்தூர்பாவை மணந்தார்
3. நவம்பர் 1887 ... பத்தாவது வகுப்பில் (மெட்ரிகுலேஷனில்) தேறினார்
4. அக்டோபர் 1888 ... மேல்படிப்பிற்காக லண்டனுக்குச் சென்றார்
5. ஜுன் 1891 ... பாரீஸ்டராகப் (வக்கீல்) பதிவு செய்து கொண்டார்
6. ஜுன் 1891 ... இந்தியா திரும்பினார்
7. ஏப்ரல் 1893 ... தென் ஆப்பிரிக்காவுக்குக் கப்பல் பயணமாகச் சென்றார்
8. 1896, 1901 ... இந்தியாவுக்கு விஜயம் செய்தார்
9. 1901 ... முதன்முறையாக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் கூட்டத்தில் பங்கேற்றார்

0. 1903 ... 'இந்தியர்களின் எண்ணங்கள்' பத்திரிகைக்குப் பொறுப்பு ஏற்றார்

1. 1904 ... ஃபீனிக்ஸ் குடியிருப்பை நிறுவினார்

2. 1899, 1906 ... முதலில் போயர் யுத்தத்தின் போதும் பிறகு ஜுலு யுத்தத்தின் போதும் இந்திய ஆம்புலன்ஸ் சேவையை நிறுவிப் பணியாற்றினார்

3. 1906 ... பிரம்மச்சரிய விரதத்தை மேற்கொண்டு ஆயுள் முழுவதும் கடைபிடித்தார்

4. 1906, 1909 ... இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றார்

5. 1908 ... தென் ஆப்பிரிக்க நாட்டில் முதல் சிறைவாசம்

6. 1910 ... டால்ஸ்டாய் பண்ணை நிறுவப்பட்டது

7. 1913 ... தென் ஆப்பிரிக்காவில் சத்தியாக் கிரஹிகளின் ஆர்ப்பாட்டம்

8. 1914, 1915 ... தென் ஆப்பிரிக்காவிலிருந்து புறப்பட்டு ஜனவரி 1915ல் இந்தியாவுக்குத் திரும்பினார்

9. 1915, 1933, 1936 ... 1915 சபர்மதி ஆசிரமும், 1933ல் வார்தா ஆசிரமமும் 1936ல் சேவாக்ராம ஆசிரமமும் நிறுவப்பட்டன

20. 1917 ... சம்பாரன் சத்யாக்ரகம் துவங்கப்பட்டது
21. 1918 ... முதல் வரிகொடா இயக்கம் கேடாவில் (குஜராத்) துவங்கியது
22. 1919 ... அமிருதசரஸில் ஜாலியான் வாலாபாக் படுகொலை
23. 1919 ... 'இளைய பாரதம்' மற்றும் 'புதுவாழ்வு' பத்திரிகைகளின் ஆசிரியரானார்
24. 1921 ... ஒத்துழையாமை இயக்கம் துவங்கப் பட்டது
25. 1922 ... இந்தியாவில் முதல் சிறைவாசம்
26. 1927 ... கதருக்காக நாடு தழுவிய சுற்றுப் பயணம்
27. 1930 ... தண்டியாத்திரை மற்றும் உப்பு சத்தியாக்ரகம்
28. 1931 ... லண்டனில் நடந்த வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொண்டபின் ஐரோப்பிய பயணம்
29. 1933 ... ஹரிஜனங்களுக்காக யாத்திரை துவங்கப் பட்டது
30. 1933 ... 'ஹரிஜன்' பத்திரிகை துவங்கப்பட்டது
31. 1937 ... ஆதாரக் கல்வி திட்டம் துவக்கப்பட்டது
32. 1942 ... 'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் துவங்கியது
33. 1942-44 ... ஆகாக்கான் அரண்மனையில் கடைசி சிறைவாசம்
34. 30.1.1948 ... ஒரு வெறியனின் துப்பாக்கி குண்டிற்கு இரையாகி அமரர் ஆனார்